# இந்துப் பண்பாட்டு மரபுகள்

கலாநிதி ப. கோபாலகிருஷ்ண ஐயர்

# இந்துப் பண்பாட்டு மரபுகள்

○

கலாநிதி ப. கோபாலகிருஷ்ண ஐயர்
B. A. (Hons.) (Cey.) Ph. D. (Jaffna),
இந்துநாகரிகத்துறை
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

○

வித்தியா வெளியீடு - 1
யாழ்ப்பாணம்.
1992.

முதற்பதிப்பு: 1992

உரிமை: நூலாசிரியர்

Title: **Intup Panpattu Marapukal**
(The Hindu Cultural Heritage)

Author: **Dr. P. Gopalakrishna Iyer,**
B. A. (Hons), (Cey.) Ph. D. (Jaffna)
Dept. of Hindu Civilization
University of Jaffna.

Subject: **Hindu Civilization**

Language: **Tamil**

Copyright: **The Author**

Edition: **1st Edition, May 1992**

Pages: **I — VIII, 1 — 144**

Publishers: **Vithiya Publication I**
New No. 6, Odai Lane,
Vannarponnai, Jaffna.

Printers: **Sri Luxmi Press,**
37, Kandy Road,
Chundikuli,
Jaffna.

Price: **Rs. 90/-**

# சமர்ப்பணம்

எனது ஆசானும் இந்துப் பண்பாட்டு மரபினைப் பேணுவதில் ஓர் உதாரண புருஷராகத் திகழ்பவரும் சமஸ்கிருத அறிஞரும் யாழ்ப்பாணப் பல்கலைக் கழக இந்து நாகரிகத் துறையின் முதற் பேராசிரியராகவும் தலைவராகவும் விளங்கி அரிய பணியாற்றி ஓய்வுபெற் றுள்ளவரும் என் அன்பிற்கும் மதிப் புக்குமுரியவருமாகிய

பேராசிரியர் கா. கைலாசநாதக் குருக்கள்

அவர்களுக்கு மனமுவந்து விநயத் துடன் இச்சிறுநூலைச் சமர்ப்பிக் கின்றேன்.

ப. கோ.

# உள்ளுறை


பக்கம்

சமர்ப்பணம்

முகவுரை

அறிமுகம்

வேத மரபு

1. வேதங்கள் வழிவந்த இந்துப்பண்பாட்டு மரபுகள் ... 1

ஆகம மரபு

2. சிவாகமங்கள் ... 14

3. சிவாகம நெறியில் கும்பாபிஷேகக் கிரியை ... 36

4. காலந்தோறும் விநாயகர் வழிபாடு ... 49

புராண மரபு

5. இந்துப் பண்பாட்டின் கருவூலமான பதினெண் புராணங்கள் ... 60

6. திருக்கோயில் வழிபாட்டில் மூர்த்தி தல தீர்த்த மரபு ... 71

கலை மரபு

7. விக்கிரகக் கலை மரபில் சிவலிங்கம் ... 77

8. சிற்பக்கலைமரபு பேணும் சிற்பக்கலைஞன் ... 87

ஆத்மீக மரபு

9. குரு பாரம்பரியம் ... 96

10. இந்து சமயம் காட்டும் ஆன்மீக வாழ்வு ... 114

11. இறப்பிற்கு முன்னும் பின்னும் ... 132

# முகவுரை

காலந்தோறும் எழுந்த சமய இலக்கியங்களின் ஊடே இந்துப் பண்பாட்டு மரபு பற்றிய சிந்தனைகள் இழையோடி நிற்கின்றன. சமய நூல்களாகிய வேதம், ஆகமம் ஆகிய இரண்டும் முதனூல்களெனப் போற்றப்படுகின்றன. வேதங்கள் தொடர்பான ஆய்வுகள் பல்வேறு நிலைகளில் மேற்கொள்ளப்பட்டதைப் போன்று ஆகமங்கள் தொடர்பான ஆய்வுகள் மேலும் விரிவாக நடைபெறவேண்டியது இன்றியமையாத தேவையாகும். வேதம் ஆகமம், இதிகாசங்கள், புராணங்கள், தர்மசாத்திரங்கள், திருமுறைகள், திவ்விய பிரபந்தம் ஆகிய சமய நூல்களிலே பரந்து காணப்படும் எமது பண்பாட்டு விழுமியங்களை உணர்ந்து நயக்கலாம். இவற்றைக் கற்குந்தோறும் கற்குந்தோறும் புதுப்புதுச் சிந்தனைகள் ஊற்றெடுக்கின்றன.

இறைவனோடு மனிதன் ஏற்படுத்திக் கொள்ளும் இடைவிடாத தொடர்புதான் சமய வாழ்க்கைக்கு அடிப்படை. இத்தகைய வாழ்க்கை முறைக்கு மனிதனுக்குத் தேவையான சில பண்புகளை இவ்விலக்கியங்கள் உணர்த்தி நிற்கின்றன. மனித சமுதாயத்தை ஒரு கட்டுக் கோப்புக்குள் வளர்ச்சியுறச் செய்வதற்கு இத்தகைய இலக்கியங்கள் தரும் பண்பாட்டுச் சிந்தனைகள் பெரிதும் உதவியுள்ளன. தத்தமது சிந்தனைகளை வெளியிட்ட ஞானிகளிற் பலர் தமது காலத்தில் உறுதியான முடிபுகளைக் காணாமலேயே மறைந்து போயிருப்பினும் அத்தகைய சிந்தனைகள் இந்துப் பண்பாட்டின் ஆணிவேராக அமைந்து பிற்காலத்துப் பண்பாட்டுச் சிந்தனையாளர்க்குப் பெரிதும் பயன்படலாயின.

பண்புள்ள தனிமனிதனால் ஒரு சமுதாயமே நலன்பெற்று விடுகின்றது. மக்களிடையே நிலவும் பண்பாட்டு மரபுகள் பல்வேறு பரிமாணங்களைக் கொண்டவை. மரபு என்பது ஒரு சமூகத்திலே நீண்டகாலமாக நிலவி வருவது. இத்தகைய மரபுகள் மக்கள் வாழ்க்கையைப் பண்புள்ளதாக மாற்றுவதால் இவற்றுக்கு மக்கள் மிகுந்த முக்கியத்துவம் அளித்ததோடு அவற்றை உரியவாறு கடைப்பிடிப்பதில் கூடிய கவனமும் செலுத்தினர். இந்துப் பண்பாட்டு மரபுகளை வேதமரபு, ஆகமமரபு, புராணமரபு, கலைமரபு,

ஆத்மீக மரபு ஆகிய தலைப்புகளில் வகைப்படுத்தி, அவற்றோடு தொடர்புடைய சில முக்கியமான சிந்தனைகள் இந்நூலில் இடம் பெறும் பதினொரு கட்டுரைகளில் விளக்கம் பெறுகின்றன.

தென்னாசியா, தென்கிழக்காசியா உள்ளிட்ட, நாடுகளில் சிறப்படைந்த இந்துப் பண்பாடு, இற்றை நிலையில் உலகளாவிய தாக மேலைநாடுகளில் எம்மக்கள் சென்று குடியேறிவரும் காரணத்தால் அந்நாடுகளிலும் சிறப்படையும் வாய்ப்புப் பெறுகின்றது. மேலை நாடுகளில் வாழ்ந்தாலும் எமது பண்பாட்டு விழுமியங்களிலிருந்து விடுபடாமல் தொடர்ந்தும் அவற்றைப் பேணும் பக்குவத்தையும் அனுபவத்தையும் எம்மக்கள் பெற வேண்டும் என்பதே எம் அனைவரதும் எதிர்பார்ப்பாகும். எமது பண்பாட்டின் அடிப்படை அம்சங்களைத் தெளிவாக அறிந்து பேணும் வகையில் சமய இலக்கியங்கள் தரும் கருத்துக்களைப் பல்வேறு நிலைகளில் தெளிவுபடுத்தவேண்டிய தேவையும் இற்றைக் காலத்தில் ஏற்பட்டுள்ளது.

இதற்கு மேலாக, பல்கலைக்கழகத்தில் உள்வாரி, வெளிவாரி நிலைகளில் இந்து நாகரிகத்தினை ஒரு பாடமாகக் கொண்டு பயிற்சி பெறும் மாணவர்களுக்கும் கல்லூரிகளில் உயர் வகுப்புகளில் இந்து சமயம், இந்து நாகரிகம் ஆகிய பாடங்களைப் பயிலும் மாணவர்களுக்கும் பயன்படத்தக்க பல அம்சங்கள் இவ் விலக்கியப் பரப்பில் செறிந்துள்ளன. எமது பண்பாட்டு வரலாற்றை முறையாக விளங்கவும் அறியவும் அவை பற்றிய பல்வேறுநிலைப் பட்ட ஆய்வுகள் பெரிதும் வேண்டற்பாலன. எமது பண்பாட்டு மரபுகளை அறிவதற்குத் துணைபுரியும் இலக்கியங்களில் உள்ள சில சிந்தனைகளை உள்ளடக்கியதாக இக்கட்டுரைத் தொகுப்பு வெளிவருகின்றது பல்வேறு சந்தர்ப்பங்களில் எழுதப் பெற்ற இக்கட்டுரைகளுக்கு மெருகூட்டி மாணவ சமுதாயத்தின் நன்மைக் காக வெளியிடுதல் வேண்டும் எனப் பல அன்பர்களும் இந்து சமய நிறுவனங்களும் அடிக்கடி விடுத்த வேண்டுகோளின் பயனாய் இந்நூலைத் தொகுத்து வெளியிடுவதில் பெருமகிழ்ச்சியடைகின்றோம். இந்நூலில் இடம்பெறும் கட்டுரைகள் பரந்துபட்ட இந்துப் பண்பாட்டு மரபுகளை அறிவதற்கு ஓரளவு தூண்டுகோலாக அமைவன. இத்துறை சார்ந்த ஆய்வுகள் மேலும் வளர இவை துணைபுரியக்கூடியவை என்பது எமது நம்பிக்கை. இந்துப் பண்பாட்டின் மரபு வழி சார்ந்த பல்வேறு விடயங்களை மேலும் விரிவாக ஆராய்ந்து வெளியிடுவதற்குரிய முன்னோடி முயற்

சியே இதுவாகும். தற்காலத்தில் நிலவும் அசாதாரண சூழ்நிலை காரணமாக அச்சுவேலைகள் தொடர்பான பொருட்கள், வசதி கள், சேவைகள் மிகவும் மட்டுப்படுத்தப்பட்ட நிலையில் இந் நூல் சுருங்கியவடிவில் வெளியிடுவது தவிர்க்கமுடியாததொன் றாகும். எமது பண்பாட்டு விழுமியங்களை யாவரும் உணர்ந்து நயக்கத்தக்க வகையில் இந்நூல் விரிவு பெறும் வாய்ப்புண்டு.

இக்கட்டுரைகளில் இடம்பெறும் சில சமஸ்கிருத மேற்கோள் கள் தமிழ் எழுத்துக்களில் தரப்பட்டுள்ளன. வேறுசில மொழி பெயர்ப்பாகவும் தரப்பட்டுள்ளன. இந்நூலில் ஆங்காங்கே சில அச்சுப்பிழைகள் எதிர்பாராத வகையில் ஏற்பட்டுள்ளன. இதனை வாசகர்கள் பொறுப்பார்களாக. வாசகரின் வசதிக்காக அவற்றின் திருத்தம் இறுதியில் தரப்பட்டுள்ளன. மரபு சார்ந்த சிந்தனைகளை வற்புறுத்தும் நோக்கில் ஒருசில கருத்துக்கள் சந்தர்ப்பம் கருதி சில கட்டுரைகளில் மீண்டும் கூறப்பட்டுள்ளன.

இந்நூல் உருவாவதற்குத் தேவையான ஊக்கம் அளித்த எம் அன்புக்குரிய யாழ் பல்கலைக்கழக பேராசிரியர்களுக்கும் சக விரிவுரையாளர்க்கும் எமது அன்புகலந்த நன்றிகள். குறிப்பாக, தமிழ்த்துறைப் பேராசிரியர் ஆ. வேலுப்பிள்ளை, சம்ஸ்கிருதத் துறைப் பேராசிரியர் வி. சிவசாமி, வரலாற்றுத்துறைத் தலைவர் கலாநிதி சி. க. சிற்றம்பலம், இந்து நாகரிகத் துறைத் தலைவர் திருமதி நா. செல்வநாயகம் ஆகியோர் தந்த உற்சாகத்திற்கு எமது மனமுவந்த நன்றிகள் உரித்தாகுக.

எமது பண்பாட்டு விழுமியங்களைப் பேணுவதில் உறுதியா கச் செயற்பட்டு வரும் யாழ். மாவட்ட இந்து இளைஞர் பேரவைத் தலைவர் திரு. வே. கெ. தனபாலன் அவர்கள் இந்நூலை அச்சிடு வதற்கு ஏற்ற ஒழுங்குகளைச் செய்ததோடு நூலை உரிய காலத் தில் வெளிக்கொணர்வதில் பெரும் ஆர்வத்துடன் எமக்கு உத வியவராவர். அவருக்கு எம் மளங்கனிந்த நன்றிகளைத் தெரிவித் துக் கொள்கின்றோம்.

இந்து நாகரிகத்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் திரு. மா. வேதநாதன் இந்நூல் உருவாகும்போது ஏற்ற பல ஆலோசனை களை வழங்கி உதவினார். மற்றும் எமது துறைசார்ந்த விரிவுரை யாளர் திரு ப. கணேசலிங்கம் இந்நூலினை அச்சிடுவதற்குத் தேவையான பொருட்களைப் பெறுவதற்கும் மற்றும் பல்வேறு நிலைகளிலும் உடனிருந்து உதவினார். அவர்களுக்கு எமது உளங் கனிந்த நன்றிகள். நூலமைப்பு மற்றும் அச்சுப் பிழைதிருத்தம்,

ஒப்பு நோக்குதல் ஆகிய முக்கிய விடயங்களில் எமக்குப் பக்கத் துணையாக நின்று செயற்பட்டவர் எம் அன்புக்குரிய மயிலங் கூடலூர் பி. நடராசன் அவர்கள். இன்முகத்துடன் பயன்கருதா இவ்வுதவிகளை நல்கிய திரு. நடராசனுக்கு எம் அன்பு கலந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம். இந்நூல் உருவாகும் பொழுது குடும்பப் பொறுப்புக்களில் இருந்து விடுவித்து நூல் தொடர்பான சகல வேலைகளிலும் பேருதவியாயிருந்த எனது மனைவிக்கும் மக்களுக்கும் மனமுவந்த நன்றிகள்.

இந்நூலைக் குறுகிய காலத்தில் பல சிரமங்களின் மத்தியில் திறம்பட அச்சிட்டுத் தந்த யாழ்ப்பாணம் ஸ்ரீ லக்ஷ்மி அச்சகத் தினர்க்கும், சூழ்நிலைக்கேற்ப உற்சாகத்துடன் பணியாற்றிய ஊழியர்க்கும் எமது உளங்கனிந்த நன்றிகள் உரித்தாகுக.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் இந்து நாகரிகத்துறைப் பேராசிரியராக விளங்கி அரிய சேவையாற்றி ஓய்வுபெற்றவரும் எமது அன்புக்கும் மதிப்புக்கும் உரிய ஆசானும் ஆகிய பேரா சிரியர் கா. கைலாசநாதக் குருக்கள் அவர்களுக்கு இந்நூலைச் சமர்ப்பிப்பதில் பெருமகிழ்ச்சியடைகின்றோம்.

பேராசிரியர் அவர்கள் பண்பாட்டு மரபுகளைப் பேணுவதில் கண்ணுங் கருத்துமாக விளங்குபவர். அவர் சேவையிலிருந்து ஓய்வு பெற்ற பின்னரும் யாழ்ப்பாணத்தில் ஸ்ரீ வித்தியா குருகுல மொன்றினை நிறுவி, குருமாராக விளங்கவிருக்கும் இளம் அந்தணச் சிறார்களுக்குத் தேவையான வேத, ஆகம பயிற்சிகளையும் வேதாத் தியயனத்தையும் மரபு வழி தவறாது நடத்தி வந்தமை குறிப் பிடத்தக்கது. இந்துப்பண்பாட்டு மரபினைக் கற்றோரும் மற்றோரும் அறிந்து பயன்பெறத் தக்க வகையில் தலைநகரில் தற்பொழுது தொடங்கப் பெற்றுள்ள ஸ்ரீ முத்து விநாயகர் வேத ஆகம ஆராய்ச்சி நிறுவனத்தின் தலைவராக விளங்கி, அருஞ்சேவையாற்றி வருவது எமக்கு உற்சாகத்தையளிப்பதாக உள்ளது.

ப. கோபாலகிருஷ்ண ஐயர்

இந்து நாகரிகத்துறை,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.
27-05-1992

# வேதங்களின் வழிவந்த இந்துப் பண்பாட்டு மரபுகள்

# 1

பாரதத்தில் ஆன்மிக சிந்தனை வளர்ச்சிக்கு அடிப்படையாகத் திகழும் வேதங்கள் இந்துப் பண்பாட்டு மரபுகளின் ஊற்றாகவும் விளங்குகின்றன. வேதங்கள் இந்துசமயத் திருநூல்கள் வரிசையில் முதனூல்கள் எனப் போற்றப்படுவன. அவை அறிவின் கருவூலம். உயர்ஞானச் சிந்தனைகளை உள்ளடக்கமாகக் கொண்டிருப்பதால் சமய தத்துவ சிந்தனைகளின் வளர்ச்சிக்கும் வளத்திற்கும் அவை அடிப்படையாக விளங்குகின்றன. இந்து சமயத் திருநூல்களின் வரிசையில் முதன்மை வாய்ந்த நூல்களாகிய வேதங்கள் இந்துப் பண்பாட்டினை வளம்படுத்திய வரலாற்றை ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கம்.

இந்துப் பண்பாடுபற்றி நாம் சிறப்பாக ஆராயும் முன்பு, பண்பாடு பற்றிய விளக்கங்களையும் சிறப்பியல்புகளையும் முதற்கண் அறிதல் அவசியமாகின்றது. மனிதனின் கைவண்ணத்தைக் காட்டுவதே பண்பாடு என்ற விளக்கம் தரப்படுகின்றது. இதற்குரிய வேறு விளக்கங்களில், மனிதன் தன் தேவைகளை நிறைவு செய்துகொள்ள உருவாக்கிக் கொண்டதுதான் பண்பாடு என்பதும் குறிப்பிடத்தக்கது. ஓர் இனத்தின் பண்பாடு அந்நாட்டின் இலக்கியம், வரலாறு, சமயம், சமுதாயம், கலை, அறிவியல் முதலியனவற்றின் மூலம் விளக்கமுறுகின்றது.[1] பண்

பாடு உடலைப்பற்றியதா அன்றி உயிரைப்பற்றியதா அன்றி உள்ளத்தைப் பற்றியதா அல்லது அகப்பொலிவா என்பன போன்ற வினாக்களுக்கு உறுதியான விடையளிப்பதும் சற்றுக் கடினமே. நிலத்தை நல்ல வகையில் மற்றவர்களுக்கும் பயன் கொடுக்கும் வகையாகப் பண்படுத்துதல் போல மனதை மற்றவர்களுக்கு உதவும் வகையில், மற்றவர்களை வாழ்விக்கும் நெறியில், நலம் பேணும் வகையில் சிந்தனையைப் பயன்படுத்தி நம்மை நாம் பண்படுத்திக் கொள்வது பண்பாடு ஆகும். பண்பாடு மனிதனின் தன்மையை இயல்பாக வெளிப்படுத்துவதாகும். பண்பாட்டின் வகைகளும் வெளிப்பாடுகளும் சூழ்நிலை, சமூகம், உள்ளம் ஆகியவற்றைச் சார்ந்து உருவானவை. பண்பாடு புறத்தில் இவ்வாறு எனக் காட்டமுடியாதது. ஆனால், உள்ளத்தால் செயல்வழி காட்டும் ஒப்பற்ற ஒன்றாகும். தனிமனிதன் சமூகத்திற்குத் தருவதும் சமூகம் தனிமனிதனுக்கு உணர்த்துவதும் பண்பாடு. மனிதனை மனிதனாக வாழவைப்பது பண்பாடு. பண்பாடும் பண்பாட்டின் வழி அமையும் நல்லியல்பும் உலகை வாழவைக்கின்றன. பண்பாட்டு உணர்வு தனிமனிதன் தொடங்கி. வீடு, நாடு, சமூகம், உலகம் என விரிந்துகொண்டே செல்லும் சிறப்புடையது. பண்பாடு பற்றிய இத்தகைய பொது விளக்கத்தின் பின்னணியில் இந்துப் பண்பாடு பற்றி நோக்குவதும் பொருத்தமாகும். இந்துப் பண்பாட்டின் நுட்பமான இயல்புகளைச் சமயத்தின் வழியாகத் தத்துவமரபின் வழியாக, கலை வழியாக, மொழி வழியாக நாம் அறியமுடிகின்றது. சமயம், தத்துவம், மொழி ஆகியவற்றின் அடிப்படையில் இந்துப் பண்பாட்டை வேதங்கள் வளம்படுத்தியுள்ளன. இந்துப் பண்பாட்டின் மூலாதாரம் தர்மமாகும். எனவே, இந்து மதம் சனாதன தர்மம், வைதிக தர்மம் ஆகிய பெயர்களால் சுட்டப்பட்டது. இத்தகைய தர்மங்கள் அனைத்துக்கும் வேதங்களே அடிப்படை. இக்கருத்துக் காலங்காலமாக உணரப்பட்டு வந்துள்ளது. வைதிக தர்மம் அல்லது வேதம் போதிக்கும் சமயத்தில் ஆன்மநேயம் ஆன்மீக ஒருமைப்பாடு பெரிதும் வற்புறுத்தப்பட்டுள்ளது.

வேதங்கள் சமயத்திற்கும் தத்துவத்திற்குமிடையே நெருங்கிய உறவினை ஏற்படுத்துவதில் வெற்றி பெற்றுள்ளன. இந்து மரபில் வாழ்க்கையின் மையக் கருத்து யாது என்பதை ஆராயும் நோக்கம் இறுதியில் இரண்டிற்கும் ஒன்றேயாதலால் இவை

ஒரே மூலத்தில் ஒன்ருகவே தொடங்குகின்றன. ஆனுல், அவை தமக்கேயுரிய வகையில் வளர்ச்சிபெற்றபோதும் இத்தகைய வேறுபட்ட வளர்ச்சி அவற்றிடையே எத்தகைய முரண்பாட்டையும் உணர்த்துவதாக இல்லை. இவ்விரண்டுக்குமிடையிலான நெருங்கிய உறவினை நாம் பகவத்கீதையிலும் சைவசித்தாந்தத்திலும் காண முடிகின்றது. இந்தியாவில் தத்துவம் என்பது வாழ்க்கைநெறியாக ஆன்மீக உணர்வைப் பெறுவதற்குரிய ஒரு பாதையாக ஏற்றுக்கொள்ளப்படுகின்றது. தத்துவ விசாரம் அல்லது சத்தியத்தைப் பற்றியதான ஆராய்ச்சி என்பது ஆன்மீக விடுதலைக்குரிய வழியாகக் கொள்ளப்படுகின்றது இதற்கு மூலமாக அமைபவை வேதங்களேயாகும்.

இத்தகைய ஆழ்ந்த அகன்ற நுண்ணிய கருத்துச் செறிவுகொண்ட வேதங்கள் மிகவும் பரந்துபட்ட பகுதிகளைத் தன்னகத்தே கொண்டுள்ளன. வேதங்களுக்குரிய சிறப்பான பெயர்களில் ஒன்று சுருதி என்பதாகும். சுருதி என்ருல் 'காதால் கேட்கப்படுவது' என்று பொருள்படும். இவை தவிர்ந்த அல்லது இவற்றை அடிப்படையாகக் கொண்டெழுந்த ஏனைய நூல்கள் ஸ்மிருதி எனப்படுகின்றன. ஸ்மிருதி என்பதன் பொருள் 'நினைவிற் கொள்ளப்படுவது' என்பதாகும். சுருதி முதன்மையானது. ஏனெனில், அது நேரடியான இறையனுபவத்தினுல் கிடைக்கப்பெற்றது என்ற பெருமைக்குரியது. ஸ்மிருதி இரண்டாந்தரமானது. ஏனெனில் வேதங்களிலிருந்து பெறப்பட்ட அனுபவங்களையும் உட்கருத்துக்களையும் நினைத்துச் செய்யப்பட்டது. வேதங் கூறும் நெறிகளை நடைமுறைக்குக் கொண்டுவரும் சிறப்பு இவற்றுக்கேயுரியன. ஸ்மிருதிகளால் பல்வேறு மாற்றங்கள் ஏற்பட்டாலும் சுருதிகளாகிய வேதங்கள் தந்த ஆத்மிகப்பண்பு என்றும் மாருமல் இத்தகைய மாற்றங்களுடே இழையோடி இன்னும் தொடர்ந்தும் நிலவுவது இந்து சமய வரலாற்றில் நாம் அவதானிக்கக்கூடிய முக்கிய அம்சமாகும். இந்துக்கள் தமது சமய மரபுகளுக்கு வேதங்களையே பிரமாணமாகக் கொள்வதோடு அவற்றை எழுதாமறை எனப் போற்றுகின்றனர். வேதங்கள் என்றுமுள்ளவை என்ற காரணத்தால் நித்தியம் என்ற சிறப்புப் பெயரைப் பெறுகின்றன. தனி மனித சார்பற்றவை என்பதினுல் அபௌருஷேயம் என்ற பெயரால் சுட்டப்படுகின்றன. ரிஷிகளுக்கு உணர்த்தப்பட்ட உண்மைகளாக அவை விளங்குகின்றன.

'ரிஷி' என்ற சொல்லும் சிந்தனைக்குரியதொன்றாகும். சமஸ்கிருதத்தில் 'திருஷ்' என்ற வினையடி 'பார்' என்ற பொருளைத் தரும். இதனையடிப்படையாகக் கொண்டு பிறந்த சொல்லே 'ரிஷி' ஆகும். எனவே ரிஷி என்ற சொல் 'காண்பவன்' என்ற சிறப்புப் பொருளையும் உணர்த்தும். ரிஷிகள் ஆழ்ந்த உண்மைகளைத் தம் உள்ளத்தினால் கண்டு உணர்ந்தவர்கள். இக்காரணத்தினால் ஒவ்வொரு பாடலுக்கும் ஒவ்வொரு ரிஷியின் பெயர் வழங்கப்பட்டுள்ளது. இவர்கள் மந்திரங்களை உள்ளொளியால் கண்டவர்கள் எனப் போற்றப்படுவர். மந்திரங்களைச் செய்தவர்கள் அல்லர் என்பது மரபுவழி நம்பிக்கையாகும்.[2] தாம்பெற்ற தெய்வ அனுபவத்தைத் தலைமுறையாக வாயால் ஓதி வழங்கி வர, அதனை ஏனையோர் கேட்டு உணர்ந்தனர். எனவே, வேதங்கள் இந்திய நாட்டின் பழம்பெரும் ஞானிகளின் அனுபவங்களைக் கொண்டுள்ளன.

இந்துப் பண்பாட்டை உருவாக்குவதில் வேதகால ரிஷிகளினதும் பரம்பரையாக வாழ்ந்த ரிஷிகளினதும் பங்கு அளப்பரியது. இந்தியாவில் ஞானிகளாகவும் ஆசார அனுஷ்டானங்களிற் சிறந்தவர்களாகவும் பேரறிவும் பரந்த உள்ளமும் படைத்தவர்களாகவும் சீரிய கருத்துக்கள் உள்ளவர்களாகவும் இருந்தவர்கள் ரிஷிகள் எனப்பட்டனர். உயர்ந்த கருத்துக்களைத் தாங்கி எளிய வாழ்க்கையை நடத்தி வந்தவர்கள் அவர்கள். தர்மத்தின் நுணுக்கமான விடயங்கள் குறித்துச் சிந்தித்தும் எளிய முறையில் தூய வாழ்க்கை நடத்தியும் சமுதாயத்திற்கு நேரிய வழியைக் காட்டிக்கொண்டு இருந்தவர்களாவர். வைதிக இலக்கியம் முழுவதும் இந்த ரிஷி முனிவர்கள் படைத்து அளித்ததே. அவர்கள் விட்டுச்சென்ற வைதிகச் செல்வம் பல்லாயிரமாண்டுகளுக்கு முன்போலக் காலந்தோறும் மக்களுக்குப் பண்பாட்டுக்குரிய வழி விளக்காய் இருந்து உதவிவருகின்றது.[3] இந்துப்பண்பாட்டை உருவாக்குவதில் வேத ரிஷிகள் கொண்ட பங்கினைப் பற்றி பாரதியார் குறிப்பிடுமிடத்து,

'மரணமில்லாத இந்த ஹிந்து நாகரிகமாகிய கற்பக விருக்ஷத்திற்கு ஆதியிலே விதை யூன்றியவர்கள் வேத ரிஷிகள். அவர்கள் எக்காலத்திலே, எத்தனை நூற்றாண்டுகளின் முன்னே இருந்தார்களென்பதைக் கணக்கிட்டுச் சொல்ல நவீன

ஆராய்ச்சி யாதொரு கருவியுமில்லாதிருக்கிறது. ஹிமவத் பதர்வும் எப்போதுண்டாயிற்று? யாருக்குத் தெரியும்? வேத ரிஷிகள் எக்காலத்தில் வாழ்ந்தனர்? எப்படிச் சொல்வது?[4] எனக் கேள்வி எழுப்புகின்றார்.

வேதங்கள் காலத்தால் தொன்மையானவை என்ற காரணத்தால் அவற்றிலிருந்து பெறப்படும் சமய தத்துவ சிந்தனைகளை நாம் பழைமை என்று ஒதுக்கிவிட முடியாது. வேதங்களின் தொன்மைபற்றி நாம் குறிப்பிடும்போது சில விடயங்களைக் கவனிக்க வேண்டும். வேதங்கள் இயற்றப்பட்ட மந்திரகாலம் வேறு. அவை தொகுத்த சம்ஹிதைக் காலம் வேறு. இச்சம்ஹிதைகள் பல ரிஷிகள் குடும்பங்களிலே பேணப்பட்டன. இதனால் பல கிளைகள் சாகைகள் என்ற பெயரில் எழுந்தன. சம்ஹிதை என்றால் 'தொகுக்கப்பட்டவை' என்று பொருள். வேதங்கள் தொகுக்கப்பட்ட நிலையிலும் எத்தகைய இடைச் செருகல்களும் ஏற்படாதவாறு ஸ்வரங்கள் மூலம் வழிவகைகள் மேற்கொள்ளப்பட்டன. உதாத்த, அனுதாத்த, ஸ்வரித ஸ்வரங்கள் முறையே ஓசையை உயர்த்தியும் தாழ்த்தியும் சமநிலையிலும் பேண உதவியதோடு வேதங்களை எளிதில் மனதில் பதியச்செய்யவும் துணைபுரிந்தன.

வேதங்களில் புரோகித மண்டல வேதங்களாக இருக்கு, யசுர், சாமம் ஆகிய மூன்றும் திரயிவித்யா என்ற நிலையிற் சிறப்பிக்கப்பட்டன. இவை எடுத்துக்கூறிய கருத்து உயரிய தெய்வக் கொள்கையாகும். தெய்வீக வழிபாட்டை அடிப்படையாகக் கொண்டு மக்களின் நல்வாழ்வுக்குரிய ஆற்றல் வழிபாட்டின் வழி கிட்டியது. பூரண வாழ்வுக்கும் ஆன்ம ஈடேற்றத்திற்கும் இவை உதவின. மக்கள் பண்புடன் வாழ்வதற்கேற்ற உயர்ந்த அறவுரைகள் வேதங்களில் இடம்பெற்றுள்ளன. இருக்கு வேதம் இறுதியாகக் கூறும் ஒரு பாடலில் உயர்ந்த பண்பாட்டுச் சிந்தனைகள் உள்ளடங்கியுள்ளன:

'எல்லா மாந்தரும் இணக்கமாய் வாழ்ந்து வருவார்களாக. எல்லோரும் அன்புடன் உரையாடட்டும். அனைவர் உள்ளங்களிலும் ஒற்றுமை உணர்வு நிலவட்டும். எல்லோரும் பகைமையை வளர்க்காத அறிவைப் பெறட்டும். மூதறிஞரான பெரியோர் எந்தக் காலத்திலும் கடவுள் அறிவுபெற்று அவரை

வழிபடுவதிலேயே தம் காலத்தைக் கழித்ததுபோல நீங்களும் நல்லறிவு பெற்று கடவுள் வழிபாட்டில் முனைந்திருங்கள்; உங்கள் அனைவர் உள்ளங்களிலும் ஒரே வகையான உயர்ந்த பாவனை இருந்து வரட்டும். நீங்கள் அனைவரும் ஒருவர் மற்றவருக்கு உதவிக்கொண்டு தத்தம் காரியங்களைச் சிறப்பாகச் செய்து முடியுங்கள்,[5]

மக்களிடையே அன்பு வளர வேண்டுமென்ற பண்பாட்டு உணர்வை வேதங்கள் அறிவுறுத்தியமை குறிப்பிடத்தக்கது. யசுர் வேதத்திலும் இத்தகைய சிந்தனைகள் காணப்படுகின்றன:

'எல்லா உயிர்களும் என்னை நண்பனாகக் கருதட்டும். நானும் எல்லா உயிர்களையும் என் நண்பனாகவே கருதுவேனாக,[6]

இம் மூன்று வேதங்களைவிட நான்காவது வேதமாகிய அதர்வ வேதம் தெய்வங்களைவிட வேறான சக்திகளுக்கும் முக்கியத்துவம் அளித்தது. பெரும்பாலும் உலகியல் விருப்பங்களைப் பூர்த்தி செய்ய மந்திரங்களை உச்சாடனஞ் செய்தனர். அதர்வவேதம் கூறும் சமயத்தின் முக்கிய நோக்கங்கள் சாந்தப்படுத்தல், ஆசீர்வாதம் பண்ணுதல், துதித்தல், சபித்தல் ஆகியவையாகும். மாந்திரீகக் கிரியைகள் முக்கியம் பெற்றன. எனினும், வேதங்களில் ஒன்றாக வைத்தெண்ணப்படத்தக்க பல சிறந்த சமய தத்துவப் பாடல்களும் இதில் உள்ளன. இங்கு மக்களின் சமய நம்பிக்கைகள் பற்றி நன்கு அறியக்கூடிய வகையில் பல பகுதிகள் காணப்படுகின்றன. இந்துக்கள் தமது நல்வாழ்வுக்காக இல்லறங்களில் மேற்கொள்ளும் கிரியை மரபுகளுக்குரிய கிருஹ்ய சூத்திரங்களையொத்த மந்திரங்கள் அதர்வ வேதத்தில் காணப்படுகின்றன. மக்களின் நம்பிக்கை பற்றிய விடயங்களில் குறிப்பாக சோதிடம், வைத்தியம் பற்றியும் இவ்வேதம் கூறுகின்றது. சமூகத்தில் மன்னருக்குப் பயன்படும் மந்திரங்கள், பெண்களின் நன்மைக்குரிய மந்திரங்கள், மக்களுக்கு நீண்ட வாழ்வை அளிக்க வல்ல மந்திரங்கள், நோய் நீக்கும் மந்திரங்கள், நாட்டின் செழிப்புக்குரிய மந்திரங்கள் போன்றவை குறிப்பிடத்தக்கன. இயற்கைச் சக்திகளைப் பெற்றோராகக் கொண்டு சமத்துவ உணர்வை வற்புறுத்துவதில் அதர்வவேதம் சிறப்படைகின்றது:

'பூமி நமது தாய். நாம் பூமியின் பிள்ளைகள். மேகம் நம் தந்தை. அவை நம்மைப் புனிதமாக்கி நமக்குத் தென்பு ஊட்டுகின்றன,[7]

யாகங்களில் கடமையாற்றும் பலவகைப் புரோகிதர்களின் தேவையை ஒட்டி எழுந்ததே யசுர்வேதம். யாகங்களில் ஓத வேண்டிய மந்திரங்களை விட வேள்வியுடன் தொடர்புடைய பல்வேறு கிரியைகளைச் செய்யும் முறையையும் இவை பற்றிய விளக்கங்களையும் விவாதங்களையும் காண முடிகின்றது. இந்து சமய மரபில் கிரியைகளின் விளக்கமான நடைமுறைகளை எடுத்துக் கூறிய சிறப்பு யசுர் வேதத்திற்கே உரியது. மந்திரங்களின் புனித நிலை இவ்வேதத்தில் சிறப்பாகக் காணப்படுகின்றது. பிற்காலத்தில் இந்துக்களின் பண்பாட்டு மரபுக்கு வழிவகுத்த நூல்களிற் சிறப்புடையது பகவத்கீதையாகும். இது பிரஸ்தானத்திரயத்தில் ஒன்று. இது வற்புறுத்தும் உயர்ந்த சிந்தனை கர்ம சந்நியாசம் ஆகும். பலனில் பற்றுவைக்காத மனப் பக்குவத்தோடு ஒருவன் கடமையைச் செய்தல் வேண்டும் என்ற உயர்ந்த கருத்தை வற்புறுத்தியது கீதை. இந்தச் சிந்தனைக்கு முன்னோடியாக யசுர் வேதத்தில் பல கருத்துக்கள் வற்புறுத்தப்பட்டுள்ளன. வாழ்க்கை வளமாக அமைய இக்கருத்துப் பெரிதும் துணைபுரியும் என்பது யசுர் வேதத்தின் கோட்பாடாகும்:

> 'இந்த உலகத்தில் கர்மம் அல்லது செயல் புரிந்தவாறே நூறு ஆண்டுகள் வாழ விரும்பு. இவ்வாறு பயன் கருதாது பணிபுரிகையில் உனது செயல்கள் உன்னைப் பற்றமாட்டா. விடுதலை பெறுவதற்கு உள்ள வழி இதுவே'[8]

இவ்வாறு தனிமனித மேம்பாட்டுக்கு மாத்திரமின்றி வழிபாட்டு மரபிலும் பல புதிய மாற்றங்களை ஏற்படுத்துவதில் இவ்வேதம் சிறப்படைகின்றது. வேத காலத்திலே சிறப்புற்ற யாகத்தையே இவ்வேதம் வற்புறுத்தியபோதும் வேறு வழிபாட்டு மரபையும் எடுத்துக்கூறியுள்ளது. வழிபடப்படும் தெய்வத்தைக் குறித்துப் பல பெயர்களைக் கூறும் புதியமுறை யசுர் வேதத்தில் முதன் முதலாக இடம்பெறுவதைக் காண்கின்றோம். இம்மரபு பிற்காலத்துத் தெய்வ வழிபாட்டு முறையில் உயரிடத்தைப் பெறுகின்றது. இம்மரபைப் பின்பற்றிய நிலையில் புராணங்கள் வழிபடப்படும் தெய்வங்களுக்கெனப் பெயர்களை நூறாகவும் ஆயிரமாகவும் தொகுத்துக் கூறுகின்றன. சிவாகம வழிபாட்டு நெறியில் இவ்வழிபாட்டு மரபு சிறப்படைந்தது. தென்னாட்டு ஆலயங்களில் நித்திய வழிபாட்டில் இத்தகைய பல பெயர்களைக் கூறி இறைவனைச் சிறப்பித்து வழிபடும் முறை இடம்

பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. பெயர்கள் பல கூறி வழிபடும் முறையினை யசுர் வேதத்தில் வரும் சதருத்திரியம் என்ற பகுதியில் முதன்முதலாகக் காணமுடிகின்றது. இங்கு உருத்திரன் என்ற தெய்வத்தின் நூறு பெயர்கள் கூறப்படுகின்றன. அத்துடன் சைவ சமயத்தில் சிறப்பிடம் பெறும் 'நமச்சிவாய' என்ற ஐந்தெழுத்து மந்திரம் இங்கு இடம்பெறுவதும் குறிப்பிடத்தக்கது.[9] சதருத்திரியம் இருவகையில் முக்கியத்துவம் பெறுகின்றது. உருத்திரன் இதிகாச காலச் சிவனோடு இனங்கண்டு கொள்வதற்கு ஏதுவான பல்வேறு பொதுப் பெயர்களைக் கொண்டு விளங்குகின்றான். இந்து விக்கிரகவியல் பற்றிய விளக்கத்திற்கும் சிவனது தெய்வ வரலாற்றில் (*Mythology*) பற்றிய கருத்துக்களை அறியவும் யசுர்வேத சதருத்திரியம் முக்கியத்துவமுடையது.

வேத வரிசையில் முதன்மைபெறும் இருக்குவேதம், பக்தி நெறி, தோத்திரமரபு ஆகியவற்றுக்கு முன்னோடியாக விளங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது. பக்தியின் ஆரம்பக் கருவை வருணனது பாடல்களில் காண்கின்றோம்.[10] வழிபடுவோருக்கும் வருணனுக்கும் இடையே நெருங்கிய நட்பு நிலவியது. தோழமை பாராட்டிய சிறப்பைக் காண முடிகின்றது. பக்தி நெறியில் இறைவனைத் தந்தையாக, தாயாக, சகோதரனாக, நண்பனாகக் கருதி வழிபடுவது சிறப்பம்சமாகும். இத்தகைய பக்தி நிலைபற்றிய சில குறிப்புகள் இருக்கு வேதத்திலும் ஏனைய வேதங்களிலும் காணப்படுகின்றன. 'இறைவன் எங்கள் தந்தையாக எம்மைப் படைத்தவனாக எமது நண்பனாக உள்ளான்,[11] என்ற கருத்து அதர்வவேதத்தில் இடம்பெறுகின்றது. இதே கருத்து யசுர்வேதத்தில் சற்று வேறுபட்டு வருகின்றது:

> 'இறைவன் எங்கள் நண்பன், எங்கள் தந்தை; எம்மைப் படைத்தவன்; அவன் எல்லா நிலைகளையும் அறிந்தவன்; அனைத்துப் படைப்புக்களையும் அறிந்தவன்,[12]

இருக்கு வேதத்தில் 'இறைவனே! நீயே எங்கள் தந்தை; எங்கள் சகோதரன்; எங்கள் நண்பன்.' என்று கூறப்பட்டுள்ளது இவ்வாறு வேதங்களில் பக்தியின் பல்வேறு நிலைகள் இடம்பெறுகின்றன.

இறைவனை இத்தகைய நிலைகளில் வழிபடுவதற்குரிய சாதனங்களாக அமைந்தவை தோத்திரங்கள் ஆகும். இந்துசமய மரபிலே தோத்திரங்கள் வேதங்களிலேயே தமது ஆரம்பத்தைக் கொண்டுள்ளன எனலாம்.

'பிரபஞ்சத்தின் தந்தையாகிய இறைவனை நாம் இரவும் பகலும் பாடல்களால் போற்றுவோமாக'

என்று இருக்குவேதம் கூறும். இங்கு 'கிர்' என்ற பதத்தால் தோத்திரம் குறிக்கப்படுகின்றது.[13] வழிபாட்டின் நோக்கம் இறைவனது திருவருளைப் பெறுவதாகும். இக்கருத்துக்கமையவும் இருக்குவேதப் பாடல்கள் உள்ளன.

'வரையாது வழங்குபவனே! நீயே எங்கள் தந்தையும் தாயுமாக விளங்குகின்றாய். உனது அருளை வேண்டி வழிபடுகின்றோம்.'[14]

'தூய்மையான இறைவனைத் தூய பாடல்களால் போற்றுவோமாக' என்ற பொருளில் வரும் பாடலில் தோத்திரத்தின் சிறப்புக் கூறப்படுகிறது.[15] பிறிதோர் பாடலில் வரும் கருத்து, இந்துசமய மரபில் தோத்திரங்களால் வழிபடும் முறையை நன்கு இடம்பெறச் செய்துள்ளதோடு அம்மரபுக்கு முன்னோடியாகவும் விளங்கியுள்ளது 'இசைப் பிரியனே! எனது தோத்திரப் பாடல் உன்னைச் சுற்றிலும் சிறந்து விளங்குவதாக' என்ற இருக்குவேதம் தரும் பாடல் இங்கு பொருத்தமாக அமைகின்றது.[16] இவ்வாறு சிறப்புப் பெறும் வழிபாட்டுக்குரிய தோத்திரங்கள் வேதங்களில் ரிக் (பாடல்), சூக்தம் (நன்கு சொல்லப்பட்டது), கிர் (புகழ்மாலை), ஸ்தோம் (புகழ்மாலை), ஸ்தோத்திரம் (புகழ்மாலை), பிரமன் (வழிபாடு) போன்ற சொற்களால் சிறப்பாகச் சுட்டப்படுகின்றன. இறைவனைப் புகழும் பாடல்கள் இருக்குவேதத்தில் பிரமன் என்று குறிக்கப்பட்டன. இச்சொல் மந்திரங்களைக் குறித்தது வழிபாட்டில் இறைவனையும் வழிபடுவோனையும் இணைக்கும் சாதனங்களில் தெய்வீகப் பாடல்களாகிய தோத்திரங்கள் முக்கியத்துவம் பெறுகின்றன. அம்மரபு பிற்காலத்துச் சமய மரபில் பக்தி உணர்வை வளர்ப்பதற்குரிய சிறந்த சாதனமாக அமைந்தது. வட இந்திய பக்தி நெறியிலும் தென்னிந்தியாவில், சிறப்புற்றோங்கிய பக்திநெறியிலும் அருளாளர்கள், சிவனடியார்கள், ஆழ்வார்கள் ஆகியோரது பாடல்களில்

இம்மரபின் ஆழத்தை நாம் காணமுடிகின்றது. தோத்திர லட்சணங்கள் பின்வருமாறு வரையறுக்கப்படுகின்றன:

நமஸ்காரஸ் ததாசீச்ச ஸீத்தாந்தோக்தி: பராக்ரம:

விபூதி: ப்ரார்த்தநா சேதி ஷட்விதம் ஸ்தோத்ர லக்ஷணம் ||

வணக்க ரூபமாகவுள்ள தோத்திரம், வாழ்த்து ரூபத் துதி, சித்தாந்த பரமான கூற்றுத் துதி, பராக்கிரமத் துதி, மகிமைகளைக் கூறித் துதித்தல், பிரார்த்தனைக் கூற்றுத் துதி ஆகிய ஆறும் தோத்திரத்தின் இயல்பு. இதற்கேற்ப வேதகாலத் தெய்வங்கள் போற்றித் துதிக்கப்பட்டனர்.

பிற்காலச் சமய வழிபாட்டு மரபில் இறைவன் வழிபாட்டின் கண்ணே தேவார திருவாசகமாதி பன்னிரு திருமுறைத் தோத்திரப் பாடல்களையும் ஆழ்வார்களின் திவ்வியப் பிரபந்தப் பாடல்களையும் திருவருட் செல்வர்களாகிய அருணகிரிநாதர், குமரகுருபரர், தாயுமான சுவாமிகள் போன்ற பெரியார்கள் பாடிய தோத்திரப் பாடல்களையும் பாடித் துதித்தல் விசேட அம்சமாயுள்ளது ஆன்மார்த்த பூசை, பரார்த்த பூசையாகிய கோயிற் பூசை, கடவுட் பிரார்த்தனை, ஆலய வழிபாடு முதலிய நியமங்களில் ஈடுபடும்போது தோத்திரப் பாடல்கள் பாடித் துதித்தல் பெருமைவாய்ந்த நெறிமுறையாகும். வடமொழியில் உள்ள சகஸ்ர நாமங்கள். ஸ்ரீருத்ரம் முதலிய வேதப்பகுதிகள், புராண இதிகாசங்கள், சௌந்தர்யலஹரி, மகிஷாசுரமர்த்தனி ஸ்தோத்திரம், ஸ்ரீதேவி மஹாத்மியம் முதலியவையும் பாராயண நியம ஸ்தோத்திரங்களாகப் போற்றி அனுசரிக்கப்பட்டு வருகின்றமை மரபாகும்.

இத்தகைய தோத்திரங்களை இசையுடன் பாடுதல் எமது மரபாகும். வேதப்பாடல்களை இசையுடன் பாட வழிவகுத்தது சாமவேதம். வேதங்களை ஸ்வரத்தோடும் தேவாரங்களைப் பண்ணோடும் பாடுவதே எமது சமய மரபாகும். இறைவனுக்குரிய பூசையில் உபசாரங்களில் ஒன்றாக இது அமைகின்றது. சாம வேதத்தில் பாடல்களுக்குரிய இராகங்கள் முக்கியத்துவம் பெறுகின்றன. இந்தியாவில் எழுச்சிபெற்ற இசைபற்றியும் அதன் வரலாறு பற்றியும் ஆராயச் சாமவேதம் பெரிதும் துணைபுரிவதாகும். இசைத்துறை வளம்பெற வேதங்கள் பெருமளவு உதவியுள்ளன.

பக்திநெறியுடன் கூடிய தோத்திரம், யாகம் ஆகியவற்ருல் இயற்கைச் சக்திகளைத் தெய்வீக நிலைப்படுத்தி வேதகாலத்தில் வழிபாடு நிகழ்ந்தவிடத்தும் இவற்றின் ஊடே இழையோடி நின்றது ஒரு தெய்வக் கோட்பாடு. 'சத்தியமான பரம்பொருள் ஒன்றே; அதனை அறிஞர் பலவாறு விதந்து போற்றுவர்.'[17] என்ற கருத்து ஒரே பரம்பொருட் கொள்கையை வற்புறுத்தியது. இப்பரம் பொருளை ஒளியாக வழிபடுவதனுல் பெறப்படும் அனுபவம் இறைவன் பற்றிய உணர்வாக விளங்கியது.

சாமவேதத்தில்,

அக்கினியே ஒளி; ஒளியே அக்கினி

''இந்திர ஒளி; ஒளியே இந்திரன்''

''சூரியனே ஒளி; ஒளியே சூரியன்.''[18] எனவரும் இக்கருத்து பிற்காலத்தில் பிருகதாரண்யக உபநிடதத்தில் சிறப்படைந்தது. 'இருளிலிருந்து என்னை ஒளிக்கு இட்டுச் செல்வாயாக' என்ற தொடரில் ஒளியே பிரமமாகக் குறிப்பிடப்படுகின்றது.[19]

இக்காலச் சமயத்தின் பிறிதோர் முக்கிய அம்சம் யாதெனில் பல தெய்வங்களில் ஒரே பரம்பொருள் தத்துவத்தைக் காணும் முறையாகும். வைதிக சமயத்தின் முக்கிய பண்பு ஒருமையிற் பன்மையையும் பன்மையில் ஒருமையையும் இனங்காணும் முயற்சியாகும். அக்கினியை ஏனைய தெய்வங்களாகிய இந்திரனுகவும் விஷ்ணுவாகவும் பிரம்மனுகவும் வருணனுகவும் மித்திரனுகவும் அதிதியாகவும் போற்றும் மரபு இதற்குச் சிறந்த உதாரணமாகும்.[20] ஆத்மீக சிந்தனைகளுக்கு வழிவகுத்த வேதப் பாடல்களில் பரம்பொருள் தத்துவம் சிறப்பாக இடம்பெறுகின்றது. உள்ளொளி பெருக்கி நின்ற வேதரிஷி ஒவ்வொரு தெய்வத்திற்குமிடையேயுள்ள பரம்பொருள் நிலையை உணரத் தவறவில்லை. பகவத் கீதையில் விபூதி யோகத்தில் சிறப்பிடம் பெறும் பரம்பொருள் தத்துவத்தோடும் கந்தபுராணத்தில் முருகனது திருப்பெரு வடிவத்தோடும் ஒத்த நிலையில் இருக்கு வேதம் கூறும் பரம்பொருளை நாம் உணரமுடிகின்றது. பகவத்கீதையில் மேம்பட்ட நிலையில் விரித்துக் கூறப்படும் பரம்பொருள் தத்துவச் சிறப்புக்கு வேதப்பாடல்கள் வகுத்துக் கூறும் கருக்கள் முன்னேடியாக விளங்கியவைபோற் காணப்படுகின்றன.

வேதங்கள் தெய்வங்களது வீரதீரச் செயல்களை விதந்து போற்றுகின்றன. இந்திரன், விஷ்ணு, உருத்திரன், புருஷன் பற்றிய பாடல்களில் வீரச்செயல்கள் சிறப்பிடம் பெறுகின்றன. இந்நிலை புராணங்கள் போற்றும் பரம்பொருள் தத்துவச் சிறப்புக்கும் முன்னோடியாக அமைந்திருக்கலாம். புராணங்களில் வழிபாட்டிற்குரிய பிரதான தெய்வங்களின் வீரத்திற்கே முதன்மையளிக்கப்பட்டுள்ளது. புராணங்கள் சித்திரிக்கும் சிவனது அட்ட வீரட்டங்களையும் விஷ்ணுவின் தசாவதாரச் சிறப்பினையும் ஸ்ரீதேவி மாஹாத்மியத்தையும் உதாரணங்களாகக் குறிப்பிடலாம். இவ்வகையில் இந்துசமயத் திருநூல்களிற் சிறப்பிக்கப் படும் பரம்பொருள் தத்துவ மரபிற்கு வழிவகுத்த பெருமை வேதங்களுக்கே உரியது. இருக்கு வேதத்தில் உள்ள பத்தாம் மண்டலப் பாடல்கள் கடவுட் கோட்பாடு பற்றிய சில அடிப் படைக் கருத்துக்களை உருவாக்கிக் கொள்ளப் பெரிதும் துணை புரிகின்றன.

இருக்கு வேதத்திற் காணப்பட்ட மறுமை பற்றிய சிந்தனைகளும் உபநிடத சிந்தனை வளர்ச்சிக்கு வித்திட்டுள்ளன எனலாம். வேதத்தில் இடம்பெறும் இறப்புப் பற்றிய பாடலும்[21] பிதிரர் பற்றிய பாடலும்[22] யமன் பற்றிய பாடலும்[23] இறப்புக்குப் பின் ஆன்மா பற்றிய கருத்துக்களைக் கொண்டுள்ளன. ஆன்ம விசாரணைக்குரிய மூலக் கருத்துக்கள் இப்பாடல்களிற் காணப் படுகின்றன. உபநிடதங்களுள் சிறந்ததாகிய கடோபநிடதம் ஆன்ம விசாரணைக்கு முக்கியத்துவம் அளித்துள்ளது. இறப்புக் கடவுளாகிய யமனே குரு. அவனிடம் சென்ற சீவனே சீடன். வேதகாலத்து மறுமை பற்றிய பாடல்கள் உபநிடத சிந்தனைகள் விரிவு பெற வழிகோலியுள்ளன எனலாம்.

இவ்வாறு வேதங்கள் இந்துப் பண்பாட்டின் பல்துறை சார்ந்த அம்சங்களை வளம்படுத்தியுள்ளன. சமயம், தத்துவம் ஆகிய இரு துறைகள் முக்கிய இடம் பெறுகின்றன. பரம் பொருட் கொள்கை, வழிபாட்டு மரபு, பக்தி நெறி, தோத்திர மரபு, இசை மரபு, தெய்வீக வரலாறு, உலகியல் நம்பிக்கைகள், மறுமைக் கோட்பாடு முதலிய இன்னோரன்ன பண்பாட்டுச் சிந்தனைகள் வளம்பெற வேதங்களே கருவூலமாக விளங்கியுள்ளன எனில் மிகையில்லை. இத்தகைய அம்சங்களை ஆராயுமிடத்து வேதங்களின் முதன்மையை நாம் நன்முக உணரமுடிகின்றது.

## அடிக்குறிப்புகள்

1. ஜெயராமன், இரா, பாட்டும் பண்பாடும் , 1978. ப.2
2. ஸ்ரீ காஞ்சி காமகோடி ஸ்ரீ சந்திரசேகரேந்திர ஸ்ரீ சரஸ்வதி சங்கராச்சாரிய சுவாமிகள், தெய்வத்தின் குரல்(1ஆம் பகுதி) வானதி பதிப்பகம், சென்னை. 1976. ப.128
3. ஸ்ரீ கிருஷ்ணதத்த பட், இந்துமதம், பாகம் 1, காந்திய இலக்கியச் சங்கம், மதுரை, (2ஆம் பகுதி.). 1986. ப.7
4. பாரதியார், வேத ரிஷிகள் கவிதை, பக். 2-3
5. இருக்கு வேதம் 10: 191: 2: 4
6. யசுர் வேதம் 36: 18
7. அதர்வ வேதம் 12: 1: 12
8. யசுர் வேதம் 40: 2
9. மேற்படி 4; 5: 1: 41
10. இருக்கு வேதம் 7: 86
11. அதர்வ வேதம் 2: 1: 3
12. யசுர் வேதம் 32: 10
13. இருக்கு வேதம் 4: 49; 10
14. மேற்படி 8; 96: 11
15. மேற்படி 7; 95: 7
16. மேற்படி 1: 10: 12
17. மேற்படி 1; 174
18. சாமவேதம் 1831
19. பிருகதாரண்யக உபநிடதம் 1; 3: 28
20. இருக்கு வேதம் 11: 1: 1-11
21. மேற்படி 10: 14
22. மேற்படி 10: 15
23. மேற்படி 10: 135

# சிவாகமங்கள்

# 2

இந்துப் பண்பாட்டிலே, சமயம், தத்துவம், கலை ஆகிய துறைகளை நெறிப்படுத்துவதில் சிவாகமங்கள் சிறப்புப் பெறுகின்றன. தொன்மையான காலம் முதல் சமயம், தத்துவம் ஆகிய இரு துறைகளும் வளம்பெற்று வந்துள்ளன. ஆரம்ப காலங்களில் காணப்பட்ட சமய நடைமுறைகளுக்கும் இற்றைக் காலச் சமய நடைமுறைகளுக்குமிடையே அடிப்படை ஒற்றுமைகளும் அதேசமயம் குறிப்பிடத் தக்க வேறுபாடுகளும் காணப் படத்தக்கன. தத்துவ சிந்தனைகளில் வளர்ச்சி ஏற்பட்டபோதும் மூல நூல்களாகிய வேதம், ஆகமம் ஆகியவை அவற்றின் அடிப் படையாக விளங்கியுள்ளன. சமயத்தின் மூல நூல்கள் தரும் விடயங்களைக் காலத்துக்குக் காலம் நடைமுறைப்படுத்துவதில் அதிக கவனம் செலுத்தப்பட்டு வந்துள்ளதை நாம் வரலாற்று ரீதியில் அவதானிக்க முடிகின்றது. நடைமுறைக்கு ஏற்ற வகையில் மூல நூல்களாகிய வேதம், ஆகமம் போன்றவற்றுக்குரிய விளக்க நூல்களும் காலத்துக்குக் காலம் எழுந்துள்ளன. வேதங்களின் விளக்கத்திற்குப் பிராமணங்கள், ஆரணியகங்கள், உபநிடதங்கள் துணை செய்வன. ஆகம நடைமுறைக்குப் பத்ததிகள் வழிவகுத்தன. இவ்விரு மூல நூல்களுள் வேதம் தொடர்பான விடயங்கள் இந்திய அறிஞர்களாலும் மேலைத்தேய அறிஞர்களாலும் ஓரளவு ஆய்வுக்குட்படுத்தப்பட்டுள்ளன.[1] வேதத்தையொத்த மூல நூற் சிறப்புப்பெறும் ஆகமங்கள் பற்றிய ஆய்வுகள் விரிவடையவேண்டியுள்ளன. ஆகமங் கூறும் சமய வாழ்க்கை, இலக்கியச் சிறப்பு, ஆத்மீக மரபு ஆகியவை பற்றி மேலும் விரிவாக உணரப்படவேண்டியுள்ளது.

இந்துக்களின் சமய நடைமுறைகளை ஒழுங்குபடுத்துவதில் ஆகமங்களின் பங்கு குறிப்பிடத்தக்கதாகும். பண்பாட்டின் முக்கிய கூறுகளாகிய சமயம், தத்துவம், கலைமரபு ஆகியவற்றை உள்ளடக்கிய நிலையில் இச்சமய இலக்கியம் இந்து சமூகத்தின் அடித்தளமாக அமைவது குறிப்பிடத்தக்கது. எனவே, ஆகமங்கள் இந்துப்பண்பாட்டை வளம் படுத்துவதில் கொண்டிருந்த பங்கினை மட்டிடுவதும் இன்றியமையாததாகும். சிவவழிபாட்டினை விதந்து போற்றும் சிவாகமங்கள் பற்றி ஆராய்வதே இக்கட்டுரையின் முக்கிய நோக்கமாகும்.

சைவசமயம் அநாதியானது; சிவ சம்பந்தமுடையது; ஆழமும் அகலமும் நுட்பமும் உடையது. இச்சமயத்திற்குரிய முதனூல்களாக விளங்குவன வேதம், ஆகமம் ஆகிய இரண்டுமாம். ஆன்மாக்கள் தம்மை வழிபட்டு உய்ந்து கடைத்தேறும்பொருட்டு இறைவனால் அருளிச்செய்யப்பட்ட முதல் நூல்களாக இவை சைவர்களாற் போற்றப்படுகின்றன.

வேதத்திற்கும் ஆகமத்திற்குமிடையே உள்ள நெருங்கிய பிணைப்பை வலியுறுத்தும் மரபுவழி விளக்கங்கள் குறிப்பிடற்பாலன. சிவபிரானுக்கு வேதம் அங்கமெனவும் சிவாகமம் அங்கியெனவும் சிறப்புப் பெறுகின்றன. வேதம் துதிநூலாகவும் ஆகமம் விதிநூலாகவும் ஏற்கப்படுகின்றன. வேதத்தை மந்திர சாத்திரமெனவும் ஆகமத்தைத் தந்திர சாத்திரமெனவும் கூறுவர். மந்திரம் என்பது 'நினைப்பவரைக் காப்பாற்றுவது' என்றும், தந்திரம் என்பது 'தன்னை அடைந்தோரைக் காப்பாற்றுவது என்றும் பொருள்படும் பத்தாந் திருமுறையாகிய திருமந்திரத்தைப் பாடிய திருமூலரின் கருத்து இங்கு குறிப்பிடற்பாலது:

வேதமோ டாகமம் மெய்யா மிறைவன்நூல்
ஓது பொதுவுஞ் சிறப்பு மென்றுள்ளன
நாத னுரையிவை நாடிலி ரண்டந்தம்
பேதம தென்பர் பெரியோர்க் கபேதமே[2]

வேதமும் ஆகமமும் மெய்யானவை அவை இறைவன் நூல்களாகும். வேதம் பொது நூலாகவும் ஆகமம் சிறப்பு நூலாகவும் விளங்குவன. இவை இறைவனால் அருளப்பட்டவை, இரு வேறுபாடான முடிவைக் கூறுமென்பர். ஆனால், நுணுகிப் பார்த்தால் பெரியோர்கள் இவை இரண்டிற்குமிடையே வேறுபாடு காணமாட்டார்கள் என்ற கருத்து இவை இரண்டுக்குமிடையேயுள்ள ஒற்றுமையை விளக்கும்.

ஆகமங்களின் தொன்மையை நிலைநாட்ட அவற்றை வேதங்களோடு ஒரே நிலையில் வைத்து வேறுபாடின்றிக் கொள்ளும் மரபு நெடுங்காலமாக இருந்து வந்துள்ளது. திருமூலர் 'ஆகுமனாதி கலை யாகம வேதம்'[3] என்ற குறிப்பில் வேதத்தையும் ஆகமத்தையும் அநாதி எனக் கொள்கின்றார். வேதமும் ஆகமமும் முதல்நூல்கள் எனக் கூறும் திருமூலர் அவற்றை நாதனுரை என்றும் தெய்வ நூல் என்றும் குறிப்பிடுகின்றார். வேதம் பொது; ஆகமம் சிறப்பு என்பது அவர் கொள்கை.[4] இதே கருத்தை அருணந்தி சிவாசாரியார் மேலும் விரிவாகக் கூறுவார். வேதங்கள் சூத்திரம் போன்றிருத்தலிற் பொதுநூல் என்றும் அவ்வேதங்களுக்குப் பாஷ்யம் போன்றிருத்தலால் சிவாகமங்கள் சிறப்புநூல் என்றும் குறிப்பிடுகின்றார்.[5] ஏனைய நூல்கள் இவற்றின் விரிந்த நூல்கள் எனவும் இவையே ஆதிநூல்கள் எனவும் குறிப்பிடும் கருத்துக் கவனித்தற்குரியது. வேதத்தைப் பசுவாகவும் அதன் பாலை மெய்யாகமமாகவும் உருவகப்படுத்தும் மரபு இவற்றிடையே உள்ள தொடர்பைக் காட்டி நிற்கின்றது. வேதங்களைப் போல ஆகமங்கள் தெய்வீக நிலையில் உணர்த்தப்பட்டவை எனச் சுட்டும் வகையில் திருமூலர் 'அண்ணலருளா லருளுஞ் சிவாகமம்' என்று குறிப்பிடுகின்றார். இக் கருத்தை வலியுறுத்தும் பொருட்டு, 'ஆகமச் சிறப்பு' என்ற பிரிவில் திருமூலர் பல இடங்களில் இதே தொடரைப் பயன்படுத்துவதும் குறிப்பிடத்தக்கது.[6] பெரியோர்கள் வேதத்தைதையும் ஆகமத்தையும் எத்தகைய வேறுபாடுமின்றி அபேதநிலையில் போற்றி வந்துள்ளதாகத் திருமூலர் குறிப்பிடுகின்றார். இதே கருத்தையே அருள்நந்தி சிவாசாரியார் தமது நூலிலும் கூறுவதைக் காணலாம். சைவத்திறன் உணர்ந்த பெரியார் ஸ்ரீகண்ட சிவாசாரியார் வேதாந்த சூத்திரத்திற்குரிய தமது பாடியத்தில் கூறும் பின்வரும் கருத்துக் குறிப்பிடத்தக்கது:

> 'வேத சிவாகமங்களுக்குப் பேதம் காண்கின்றிலம்; வேதமும் சிவாகமமும் ஒன்றே.'[7]

வேதாகம ஒருமைப்பாட்டினை வலியுறுத்த அறிஞர்கள் இக்கருத்தினை அடிக்கடி எடுத்தாள்வதைக் காணலாம்.

சுருதி என்ற பெயர் வேதங்களுக்குரிய சிறப்புப் பெயர்களில் ஒன்று. காதால் கேட்கப்பட்டு வந்த காரணத்தால் வேதங்களுக்கு இப்பெயர் ஏற்படலாயிற்று. ஆகமங்களும் பன்னெடுங்

காலம் குரு சிஷ்ய மரபில் பேணப்பட்டபடியால் ஆகமங்களுக்கும் இச்சிறப்புப் பெயர் ஏற்படலாயிற்று.'[8] வேதங்களில் மறை பொருளாகக் கூறப்பட்ட பஞ்சாட்சரம் போன்ற விடயங்கள் ஆகமங்களில் விரிவு பெறுவதால் இவற்றுக்குச் சிரௌதம் என்ற பெயரும் வழங்கப்படலாயிற்று. சுருதி சம்பந்தப்பட்டது சிரௌதம் ஆகும். சுருதியில் சுட்டப்படாத ஆலயவமைப்பு, பிரதிஷ்டை, உற்சவம் முதலியவற்றை ஆகமங்கள் தாமாகவே விரித்துக் கூறும் வகையால் அவற்றிற்கு சுவதந்திரம் என்ற பெயரும் உண்டாயிற்று. இங்கு குறிக்கப்படும் ஆலயம், பிரதிஷ்டை ஆகியவற்றுக்கு உள்ளங்கமாக விளங்குவது திருவுருவமாகும். எனவே, ஆகமங் கூறுஞ் சமயத்தின் முக்கிய அம்சம் திருவருவ வழிபாடு ஆகும்.

ஆகமம் என்ற பெயரை ஆராயும்போது பொதுவான விளக்கங்களும் சிறப்பான விளக்கங்களும் கூறப்படுவதைக் காணலாம். இப்பெயர் உணர்த்தும் பல்வேறு பொருள்களுள் 'தோற்றம்', 'வருகை', 'சாத்திரம்', 'சாத்திரஞானம்', 'ஆப்தவாக்கியம்' என்பன குறிப்பிடத்தக்கன. இப்பெயர் சுட்டும் சிறப்புப்பொருளை ஆராயுமிடத்து 'தொன்று தொட்டு வரும் அறிவு' என்னும் பொருளுடைத்தாய் அறிதற்குக் கருவியாகிய சமய நூல்களைக் குறிக்கும். அ, க, ம என்ற மூன்றெழுத்துக்களும் முறையே 'ஆ' என்பது பாசமெனவும் 'க' என்பது பசுவெனவும் 'ம' என்பது பதியெனவும் பொருள்படும். அவ்வாறு பொருள்கொள்ளுமிடத்து 'ஆகம' என்ற பெயர் சைவ சித்தாந்தம் சிறப்பித்துக் கூறும் திரிபதார்த்தங்களை உணர்த்துவதாகின்றது. இதற்கு இன்னுமொரு விளக்கமும் உண்டு. 'ஆ' என்பது சிவஞானமெனவும் 'க' என்பது மோட்ச சாதனம் எனவும் 'ம' என்பது மலநாசம் எனவும் பொருள் கொள்ளப்படுகிறது. ஆகவே, ஆன்மாக்களுக்கு மலத்தை நாசம்பண்ணி சிவஞானத்தை உதிப்பித்து மோட்சத்தைக் கொடுக்கும் என்ற சிறப்பான விளக்கம் உணரற்பாலது.

சிவாகமங்கள் இருபத்தெட்டாகும். இவ்வாகமங்கள் இருபத்தெட்டனுள் ஒரு சில மட்டுமே எமக்குக் கிடைக்கின்றன. இப்பொழுது எமக்குக் கிடைக்கும் ஆகமங்களுள் காரணமும் காமிகமும் மிக முக்கியமானவை. இவை கிரியைகளைப்பற்றிக் கூறுவனவாம். சிவாகமங்கள் காமிகம், யோகஜம், சிந்தியம்,

காரணம், அஜிதம், தீப்தம், சூக்குமம், சகசிரம், அம்சுமான், சுப் பிரபேதம், விஜயம், நிச்சுவாசம், சுவாயம்புவம், ஆக்நேயம், வீரம், இரௌரவம், மகுடம், விமலம், சந்திரஞானம், முகவிம்பம், புரோற் கதம், இலலிதம், சித்தம், சந்தானம், சர்வோத்தம், பாரமேஸ் வரம், கிரணம், வாதுளம் என இருபத்தெட்டாகும்.[9] திருமூலர் திருமந்திரத்தில் ஆகமச் சிறப்புப்பற்றிக் கூறவந்த இடத்தில்,

> அஞ்சன மேனி அரிவையோர் பாகத்தன்
> அஞ்சொ டிருபத்து மூன்றுள ஆகமம்.....

என்ற பாடலில் சிவபெருமான் இருபத்தெட்டு ஆகமங்களை அரு ளிச் செய்தனன் என்று கூறும் கருத்து நோக்கத்தக்கது.

இவ்விருபத்தெட்டு ஆகமங்களுக்கும் முறையான உபதேசக் கிரமம் கூறப்படுகிறது. காமிகம் முதல் அஜிதம் வரையுள்ள ஐந்தும் சத்தியோஜாத முகத்தினின்று கௌசிக முனிவர்க்காகவும் தீப்தம் முதல் சுப்ரபேதம் வரையுமுள்ளவை வாமதேவ முகத்தினின்று காசிப முனிவர்க்காகவும் விஜயம் முதல் வீரம் வரையுமுள்ள ஐந்தும் அகோர முகத்தினின்று பரத்துவாஜ முனிவர்க்காகவும் இரௌரவம் முதல் முகவிம்பம் வரையுள்ள ஐந்தும் தத்புருட முகத்தினின்று கௌதம முனிவர்க்காகவும், புரோற்கதம் முதல் வாதுளம் வரையுள்ள எட்டும் ஈசான முகத்தினின்று அகத்திய முனிவர்க்காகவும் தோன்றியதாக ஒரு மரபுண்டு.

இவ்வாகமங்களுள் முதற் பத்தும் விஞ்ஞானகலருட் பரம சிவன் அநுக்கிரகத்தைப் பெற்ற பிரணவர் முதலிய அணுசதா சிவர் பதின்மருக்கும் அருளிச்செய்யப்பட்டமையால் சிவபேதம் எனவும் ஏனைய பதினெட்டு ஆகமங்களும் அநாதிருத்ரர் முத லிய பதினெட்டு உருத்திரர்களுக்கும் அருளிச்செய்யப்பட்டமை யால் உருத்திரபேதம் எனவும் வழங்கப்படுகின்றன. இவ்வாறு மூலாகமங்களைக் கேட்டவர்கள் பிரணவராதி அறுபத்தறுவரா வர் எனவும் வழங்கப்படுகின்றது.[10] திருமந்திரத்தில் திருமூலர் இதனைக் கூறுவதும் நோக்கத்தக்கது.[11]

இவ்வாகமங்கள் உபதேச கிரமத்தின்படி ஒவ்வொரு தலை முறைக்கும் வழங்கப்பட்டு வந்துள்ளதை உணரமுடிகிறது. இந்த வகையில் ஆகமங்களோடு தொடர்புற்ற ஒரு ஞானகுரு பரம் பரையே உபதேச கிரமமாக உருவாகி வந்துள்ளதை உணர லாம். இந்த உபதேச கிரமத்தின்படி சதாசிவமூர்த்தி ஆகமங்

களை அனந்த தேவருக்கு உபதேசித்தருளியதாகவும் அனந்த தேவர் ஸ்ரீகண்டருத்திரருக்கும் ஸ்ரீகண்டருத்திரர் திருநந்திதேவருக்கும் திருநந்திதேவர் சனற்குமார முனிவருக்கும் முனிவர்களால் மனுடனுக்கும் மனுடரால் மனுடருக்கும் குருபரம்பரையாய் உபதேசிக்கப்பட்டு உலகத்திற் பரவுவனவாய் உள்ளன.

இவ்வகையில் சிவாகமம் தொன்றுதொட்டு ஆன்மாக்களிடத்தே சிவப்பண்பு நிறைவதற்காம் வழியாக ஆக்கும் நூலாக விளங்கிவந்துள்ளதெனக் கூறுவது பொருத்தமுடையதாகும். இறைவன் மெய்யடியார் தம் பொய்யில் திருவுள்ளத்திலேயே அருளுருவாய் நின்று உபதேசித்தருளுகின்ருர் என்பதும் உணரத்தக்கதாகும். குருவையே இறைவனுக வழிபடும் பாரம்பரியமான பின்வரும் சுலோகம் வடமொழியிலுள்ளது:

குருர் பிரும்மா குருர் விஷ்ணு குருர் தேவோ மகேஸ்வரா:
குரு சாக்ஷாத் பரப்பிரம்ம தஸ்மை ஸ்ரீ குரவே நம:

'குருவையே பிரம்மாவாகவும் விஷ்ணுவாகவும் மகேசுவரராகவும் பரப்பிரம்மமாகவும் கொண்டு குரு வணக்கம் செய்ய வேண்டுமெனக் குறிப்பிட்ட சுலோகம் வலியுறுத்துகிறது. திருமூலரும் திருமந்திரத்தில் முதல் தந்திரமாகிய உபதேசத்தில் 'தெளிவு குருவின் திருவார்த்தை கேட்டல்; தெளிவு குருவுருச் சிந்தித்தல் தானே' எனவருவதும் நோக்கத்தக்கது. தெளிவு என்பது இங்கு ஞானத்தைக் குறித்தது. சிவாகம மரபில் குருதத்துவம் முக்கியம் பெறுவதை உணரலாம் ஆத்ம ஞானத்தைப் பெறும் விஷயத்தில் குரு வழிகாட்டுவது இன்றியமையாததாகும். அறிவு ஒரே விதமாக இருந்தாலும் பக்குவத்திற்கேற்றபடி ஒவ்வொன்றிலும் பிரகாசிக்கின்றது. இந்த அறிவாகிய ஆத்ம ஒளியை முழுமையாகப் பிரகாசிக்கச் செய்யவும் துக்கமின்றி இருப்பதற்குரிய வழிவகைகளைக் கூறவும் நமக்குக் குருபரம்பரை இன்றியமையாததாகின்றது. இந்த அதிகாரம் பரம்பரையாக இடம்பெறும் வகையில்தான் ஒரு குருபரம்பரை இடம்பெறுகிறது. ஆன்மாவுக்கு ஞானத்தையும் செயலையும் வேதாகமங்கள் வழங்குகின்றன. அவ்வேதாகமங்கள் பிரமாதிகள் ஓதுவிக்க இருஷிகளாலே ஓதப்பட்டு, அவர்கள் வழியாகத் தொன்றுதொட்டு வருதலால் தவறின்றி உயர் அறிவுடையாராலே சொல்ல வேண்டும் என்ற உணர்வு ஆழமாக மக்களிடையே இருந்து வருகின்றது.

சிவாகமங்கள் கூறும் உள்ளடக்கத்தை நாம் ஆராய்வோமாகில் சரியாபாதம், கிரியாபாதம். யோகபாதம், ஞானபாதம் என நான்கு பாதங்கள் பற்றி அவை கூறுகின்றன. சிலவற்றில் ஞானம், கிரியை, யோகம், சரியை என மாறியும் கூறப்படுகின்றது. இவற்றில் ஒவ்வொன்றும் தனித்தனியேயும் கூறப்படுகின்கின்றது. ஒவ்வொரு ஆகமத்திலும் சிறப்புற்ற பாதங்கள் மட்டும் வழங்கி வருவதைக் காணலாம். காரணாகமத்திலும், காமிகத்திலும் கிரியாபாதம் மட்டுமே வழங்கப்படுகின்றது. சரியாபாதம் சமயாசாரங்களை எடுத்துக் கூறும். கிரியாபாதம் மந்திரங்களின் உத்தாரம், சந்தியாவந்தனம், பூஜை, ஜபம் செய்தல், ஓமம் என்பனவற்றை உபதேசிக்கும். யோகபாதம் பிராணாயாமம் முதலிய அங்கங்களோடு கூடிய சிவயோகத்தையும் ஞானபாதம் பதி. பசு, பாசம் ஆகிய முப்பொருள் பற்றியும் உபதேசிக்கும்.

சைவத்தில் முக்கியமாக இறைவன் சாந்நித்தியம் பெற்று ஆன்மாக்கள் உய்யும் பொருட்டு அருள்பாலிக்கும் இடமாகிய ஆலயம். ஆலய சேவை பற்றி விரிவாக அறிதற்குரிய ஆதார நூல்கள் சிவாகமங்களேயாம். இதுபற்றிக் கூறும் கிரியாபாதம், கர்ஷணம், பிரதிஷ்டை உற்சவம், பிராயச்சித்தம் என நான்கு பிரிவுகளில் விளக்குகின்றது. கர்ஷணம் என்றால் உழுதல் என்று பொருள்படும். அதாவது பூமியை உழுது சமப்படுத்தி அளந்து சதுரமாக்கி, பிரதிஷ்டை செய்வதற்குப் பக்குவப்படுத்துதலைக் குறிக்கும். இது பிரதிஷ்டை வரையுள்ள விஷயங்களை அடக்கும். பிரதிஷ்டை என்பது ஸ்தாபித்தல் அல்லது நிலைநிறுத்தல் எனப் பொருள்படும். இது இறைவனின் திருவுருவத்தை உரியவாறு ஆலயத்தில் சாந்நித்தியம் பெறச்செய்தலாகும். உற்சவம் என்ற பிரிவு திருக்கோவிலில் நிகழும் மகோற்சவ விதிகளைக் கூறும். பிராயச்சித்தம் என்றால் கெடுதியை விலக்கி மீட்டும் தெய்வீகமடையச் செய்தல் எனப் பொருள்படும். இத்தகைய பிரிவுகள் சில ஆகமங்களில் சற்று வேறுபாடான அமைப்புக்களைக்கொண்டும் விளங்கும். உதாரணமாக, கர்ஷணம் பிரதிஷ்டையோடு சேர்த்தும் பிராயச்சித்தம் உற்சவத்தோடு சேர்த்தும் கூறப்படுகின்றன. இந்நான்கு அம்சங்களும் ஆலயத்தோடு தொடர்புற்று விளங்குவன. இவற்றுள் வரும் விஷயங்களை நாம் வரிசைப் படுத்திக் கூறுவதாயின் ஆலய நிர்மாணம், மண்டபங்கள், பிரகாரங்கள் அமைப்பு, மூர்த்தி பிரதிஷ்டை, நித்திய நைமித்தி

கங்கள், மகோற்சவ விதிகள், செய்யப்படவேண்டிய பிராயச் சித்த வகைகள் என அமைவனவாகும்.

காமிகாகமத்தின் எழுபத்தோராவது பிரகார லக்ஷண விதிப் படலத்திலே ஆலயம் அமைக்கக்கூடிய இடம்பற்றி முதலிலும் பரிவாராலயங்கள். பரிவார தேவதைகள் என்பனவாகிய விடயங்கள் அதனைத் தொடர்ந்தும் கூறப்படுகின்றன. ஆலயப் பிரகாரங்களின் எண்ணிக்கை, ஆலயப் பிரமாணங்கள் என்பன பற்றியும் விளக்கப்படுகின்றன.

ஆலயத்தின் ஸ்தூல லிங்கமாகிய கோபுரத்தின் உத்தம உயரங்களும் துவார அகலங்கள், கோபுர நிலையங்களின் அகலங்கள் என்பனவும் விரிவாகக் கூறப்படுகின்றன.

இறைவனுடைய திருவுருவங்களை உருவாக்கும் சிற்ப நுணுக்கங்களைப் பற்றியும் சிவாகமங்கள் எடுத்துக்கூறுகின்றன. காரணாகமம், காமிகாகமம் ஆகியவற்றில் இவை தொடர்பான விதிமுறைகள் உண்டு. திருவுருவங்களின் தீர்மானங்களைப்பற்றி உத்தரகாரணாகமம் கூறுகின்றது. காமிகத்தில் அறுபத்தைந்தாம் படலத்தில் பிரதிமாலக்ஷணம் என்ற பிரிவில் திருவுருவங்களின் அமைப்பு முறை பற்றி விளக்கப்படுகின்றது.

ஆகமங்கள் தென்னாட்டிற்கே சிறப்பாக உரியன எனக் கூறின் மிகையில்லை. தென்னாட்டுக்கு அண்மையில் உள்ள இலங்கையில் விளங்குஞ் சைவமும் ஆகமங்களுடன் நெருங்கிய தொடர்பு கொண்டுள்ளதை நாம் அறியலாம். இங்கு எழுந்த பெரும்பாலான திருக்கோவில்கள் ஆகம விதிகளுக்கமைய எழுந்தவையே. இக்கோவில்களிற் பின்பற்றப்பட்டுவரும் வழிபாடு முறைகளும் ஏனைய விடயங்களும் ஆகமங்கள் கூறும் முறைகளேயாகும். ஆகம மரபின் சிறப்பைப்பற்றிக் கைலாசநாதக் குருக்கள் கூறும் கருத்து மனங்கொள்ளத் தக்கது:

> 'தென்னாட்டிலும் இலங்கையிலும் அமைந்து விளங்குந் திருக்கோயில்களிற் பெரும்பாலானவற்றில் நிகழும் கிரியைகளெல்லாம் ஆகமங் கூறும் முறையினுக்கமைய நிகழ்த்தப்படுவன. இவை மக்களின் தேவையையொட்டியோ மக்களுக்கு விளக்கம் ஏற்படுவதை மட்டும் குறிக்கோளாகக் கொண்டோ காலத்துக்குக் காலம், சூழ்நிலைக்கு ஏற்ப வேறுபடுத்தி அமைக்கப்படுவனவல்ல. எனவே, ஆகமங் கூறும்

முறைப்படி கிரியைகளை அவதானித்து, அவற்றை மக்கள் விளங்கிக் கொள்ள வேண்டுவதேயன்றிக் காலப்போக்கினை யொட்டி மக்கள் விளங்கும் வகையில் அவற்றை மாற்றிய மைக்க இந்தியப் பண்பாடு இடந்தராது.'[12]

கிரியைகள் யாவும் சிவஞானத்துக்கு அறிகுறிகளாகும். அக் கிரியைகளுள் இன்னது இன்னதற்கு அறிகுறி என்று ஆகமங்க ளில் தெளிவுறக் கூறப்பட்டுள்ளது.

ஆகமங்கள் எடுத்துக்கூறும் விதிகளனைத்தையும் பிரமாண மாகக் கொண்டு கிரியைகள் செய்யும் முறையினை ஒழுங்கு படுத்தி முறையாகக் கூறும் நூல்கள் பல இவ்வாகமங்களை அடுத் துத் தோன்றித் தனி நூல்களாக விளங்குகின்றன. இவற்றிற்குப் பத்ததிகள் என்ற பெயர் உண்டு. சிவாசாரியர்களால் வகுக்கப் பட்டு அவரவர் பெயர்களைத் தாங்கிய தனி நூல்களாக இப் பத்ததிகள் உருவாயின. 'பத்ததி' என்றால் 'மார்க்கம்' என்ற பொரு ளுண்டு. பதினெண் பத்ததித் தலைவர்கள் சைவத் தலைவர்களாக விளங்கிப் பதினெண் நூல்களை உருவாக்கியுள்ளனர். ஸ்ரீ அகோர சிவாசாரியாரின் பத்ததி குறிப்பிடத்தக்கதாகும்.

பதியுண்மையை உணர்த்தும் விடயத்தில் ஆகமம் உறுதுணை புரியும் காரணத்தினால் சைவசித்தாந்த மரபில் இதற்கு முக் கியத்துவம் வழங்கப்படுகின்றது. ஆகமம் 'உரை யளவை' என வும் 'ஆப்த வாக்கியம்' எனவும் 'ஆகமப் பிரமாணம்' எனவும் சுட் டப்படுகின்றது. கடவுள் பற்றிய மெய்ப்பொருளை உணர்த்தும் நூலாகிய ஆகமத்தைக் கொண்டறியும் அறிவே 'அகம அளவை' எனப்படும்.[13] இறை உண்மையைப் பொறுத்தமட்டில். பிரத் தியட்சப் பிரமாணம், அநுமானம் ஆகியவற்றை விட ஆகமப் பிரமாணமே முழுதும் பயன்படுவதாகும். ஆகமங்கள் உண் மைப் பொருளை உணர்த்தும் பிரமாண நூல் என ஏற்றுக் கொள்ளப்படுகின்றது. மணிமேகலையில் பிரமாணங்கள் பற்றிக் குறிப்பிடப்படுமிடத்து, ஆகம அளவையும் ஒன்றாக இடம்பெறு கின்றது.[14] சைவ சித்தாந்திகள் ஆகமத்தை ஆப்தவாக்கியம் என்ற நிலையில் பிரமாணமாகக் கொள்வர்.

ஆகமங்கள் சைவசித்தாந்த உயர்ஞானத்திற்கு ஆதார நூல் களாகத் திகழ்வதைப் பெரும்பாலான அறிஞர்கள் மரபு ரீதியா கவும் ஆராய்ச்சி மூலமாகவும் ஏற்றுக் கொண்டுள்ளனர். சைவ

சித்தாந்த சாத்திரத்திற்கே அவற்றின் அறிவு இன்றியமையாது வேண்டப்படுவது. சைவசித்தாந்தம் குறிப்பிட்டுப் பேசும் பதி, பசு, பாசம் ஆகிய முப்பொருள் திருக்கோவிலில் உள்ள அமைப்போடு தொடர்புபடுத்தப்படுகிறது.

"சிவலிங்கம் பதி எனவும் நந்தி பசு எனவும் பலிபீடம் பாசம் எனவும் கொள்ளப்படுகின்றன. வேதாகமங்களும் சித்தாந்த நூல்களும் குறிப்பிடும் இம் முப்பொருளைக் கோயில் இவ்வாறு உயர்த்தி நிற்கக் காண்கிறோம். விக்கிரகங்களைச் சூழ்ந்து வட்டமாக அமையுந் திருவாசி பிரணவமேயாகும். சிவனை மறைத்து நடுவே இடப்படும் திரைச்சீலை மாயையாகும். திருவருள் என்னும் சத்தியைத் துணை நாடி அதை அகற்றி அறிவு என்னுங் கண்கொண்டு பார்ப்பவர்கள் சிவ தரிசனப் பேறு பெற்றுப் பேரானந்தப் பெருவாழ்வெய்துவர்."

இதிலிருந்து அகமங்களின் உயர்தத்துவம் தெளிவாகின்றது. ஆகமங்கள் கூறும் ஞானபாதம் சைவசித்தாந்த சிந்தனைகளுக்கு உறுதுணையானவை.

பரஞ்சோதி முனிவரும் ஆகமங்களின் ஞானபாதப் பொருளை மெய்கண்டதேவருக்கு உபதேசித்தருள அவர் சிவஞானபோதப் பொருளைத் தமிழிலே சாத்திரமாக ஆக்கியுள்ளனர். மெய்கண்டார் சைவசித்தாந்த தத்துவத்தினை முறையாக நெறிப்படுத்தியவர்களுள் ஒருவராவர். அவரது நூலாகிய சிவஞானபோதம் சைவசித்தாந்த சிந்தனைக்கும் சைவசமயத்திற்கும் இன்றியமையாத தொன்றாகும். இவரது நூலிலே பன்னிரண்டு சூத்திரங்கள் உண்டு. முப்பொருள் பற்றியும் அவற்றிற்கிடையே உள்ள தொடர்பு, தன்மை ஆகியன பற்றியும் முத்தியடைதற்குரிய வழிவகை பற்றியும் முத்தியின் தன்மை பற்றியும் ஆராயப்படுகின்றன. இந்நூல் இரௌரவ ஆகமத்தின் எழுபத்து மூன்றும் படலமாகிய பாபவிமோசனப் படலத்தின் பன்னிரண்டாம் அத்தியாயத்தினை அடிப்படையாகக் கொண்டதாக அறிஞர் கூறுவர்.[15]

சிவஞானபோதத்தின் ஆசிரியர் மெய்கண்டார் தமது சீடராகிய அருள்நந்தி சிவாசாரியாரிடம் சிவஞானபோதத்தை விரிவுபடுத்தும்படி கூற, அந்நூலையே அடிப்படையாகக் கொண்டு அதிலுள்ள கருத்துக்களை மேலும் விரிவுபடுத்தி விளக்கும்பொருட்

டுத் தேவையான விஷயங்களை ஆகமங்களிலிருந்து திரட்டிக் கூறி, தமது நூலுக்குச் சிவஞானசித்தியார் என்ற பெயரையும் வழங்கியதாக அறியப்படுகிறது.

இவ்வாறாக, சிவாகமத்தின் ஞானகாண்டப்பொருளை உள்ளடக்கி விளக்கும் தமிழ்ச் சாத்திரங்கள் மெய்கண்டசாத்திரங்கள் என்ற பதினான்காகும். இவற்றுள் நடுநாயமாகத் திகழுவது சிவஞானபோதமாகும். வேதத்தின் ஞானகாண்டப் பொருளைச் சிவாகமத்திற்கு மாறுபடாவண்ணம் உள்ளபடி அறிவிக்கும் தமிழ் வேதங்களாகத் தேவாரம், திருவாசகம், திருவிசைப்பா முதலியவை சிறப்பிக்கப்படுகின்றன.

'வேதத்தின் முடிவான பொருளைச் சொல்லும் சிவாகமம் சித்தாந்தமாகும். வேதத்தின் சாரமாக விளங்குவதால் சித்தாந்தம்'

ஆகின்றது.[16] என்ற கருத்து கவனித்தற்குரியது. ''இந்த சித்தாந்தம் வேதசாரம்''[17] என்று மகுடாகமக் குறிப்புக் கூறும் இக்கருத்துக்களுக்கு உடன்பாடாகச் சித்தியார் கூறும் கருத்தும் கவனத்திற்குரியது;

நிகில்பொருள் கொண்டுரைக்கும் நூல்சைவம் பிறநூல்
திகழ்பூர்வம் சிவாகமங்கள் சித்தாந்த மாகும்[18]

ஆகமத்தின் சிறப்பைக் கூறவந்த உமாபதி சிவாசாரியார் சிவப்பிரகாசத்தின் பாயிரத்தில் நுதலிய பொருள் பற்றிக் கூறும் பொழுது ''பெருநூல் சொன்ன அறத்தினால் விளைவதாய்''[19] என்று கூறுவதன் மூலம் தமது நூலில் கூறிய சைவசித்தாந்தத்தின் உண்மை ஆகமங்களிற் கூறிய சரியை, கிரியை, யோக சிவ புண்ணிய முதிர்ச்சியாய் எய்தப்பெறும் எனக் குறிப்பிடுவதும் இங்கு நோக்கத்தக்கது. ஆகமங்கள் ''பெருநூல் சொன்ன அறம்'' எனச் சிறப்பிக்கப்படுகின்றன.

இவ்வேதாகமங்கள் சிவபிரானது திருவருளாற் செய்யப்பட்டமையின் அவரருளில் அடங்கும். இதனைப்பற்றிச் சித்தியார் கூறுமிடத்து,

'ஏனைய நூல்களில் கூறும் பொருளியல்புகளெல்லாம் முற்றுணர்வுடைய முதல்வனாற் செய்யப்பட்ட வேதாகமங்களிற் கூறும் பொருளியல்பின் ஏகதேசமாய்க் காணப்பட்டு அவற்றுள் அடங்கும். சிவபிரானாற் செய்யப்பட்டு அவனையே தமக்கு முதலாகக் கொண்டுரைக்கும் அவ்விருவகை நூலும் அவ்விறைவன் திருவடியிலடங்கும்'

என்ற கருத்தில் வரும் பாடல்[14] குறிப்பிடத்தக்கது. இக்கருத்து மணிவாசகரது திருவாசகத்தில் வரும் சிவபுராணத்தில் ஆகமம் ஆகி நின்று அண்ணிப்பான் தாள் வாழ்க என்ற தொடரோடு பொருத்தமுடையதாகிறது. இறைவன் ஆகமப்பொருளாகவே விளங்குகின்றான். சனகாதி நால்வர் தெளிவு பிறவாது மயங்கியதனாலேயே சிவபிரான் தென்முகக் கடவுளாகிய தக்ஷிணா மூர்த்தியாக எழுந்தருளியிருந்து சின்முத்திரையால் உயர் தத்துவத்தின் உண்மையை உணர்த்தியருளினாரென்று உணர முடிகிறது. கச்சியப்பசிவாசாரியார் கந்தபுராண மேருபடலத்தில்[20] இதனைப்பற்றிக் கூறும்வகை உய்த்துணரற்பாலது:

……முந்தாளை சனகராதி முனிவரர் தொழுது கேட்ப
அந்தமில் ஆகமத்தின் அரும்பதம் மூன்றுங் கூறப்
புந்திய தொடுங்கும் ஞான போதகம் போதி யென்றார்

இறைவன் அத்தத்துவத்தை மோனமுத்திரை காட்டி நிற்க அவர்கள் தத்தம் மனதில் அவனருளால் ஒடுக்கம் பெற்றனர் எனக்கூறும் கருத்து உணரற்பாலது. இவ்வாறு இறைவன் தக்ஷிணாமூர்த்தி வடிவில் சனகாதி முனிவர்களுக்கு ஆகமோபதேசத்தால் வேதப் பொருளின் தெளிவை உணர்த்துகின்றான். இத்தகைய உயர் தத்துவப் பொருள்கொண்டு விளங்கும் தக்ஷிணாமூர்த்தியின் திருவுருவ அமைப்பு, கிரியா விதிமுறை ஆகியவை பற்றி ஆகமங்கள் கூறி நிற்கின்றன. இம்மூர்த்தியின் உயர் தத்துவத்தை உணரும்போது அதுபற்றி விரிவாகக் கூறும் சிவாகமங்களின் தொன்மையையும் சிறப்பினையும் உய்த்துணர முடிகின்றது.

'சிவாகமங்களின்கண் சிவபிரான் அருளிச்செய்த மெய்ப்பொருள் உண்மை கைவரச் செய்யும் சிவவுணர்வுச் சிறப்பினை அறியாவிட்டால் அளவில்லாத அவை முற்றும் நீர்மேல் எழுத்துப்போல் பயன்தரா தொழியும்'

என்ற திருமந்திரக் கருத்துச் சிந்தனைக்குரியது.

சிவாகமங்களுக்கு உபபேதங்களாக இருநூற்றேழு உபாகமங்கள் உண்டு. இவற்றுள் சிவதருமோத்தரம், மிருகேந்திரம் என்பன குறிப்பிடத்தக்கன.

காலத்துக்குக் காலம் ஆகமத்தோடு தொடர்புடைய அறிவு விரிவடைந்து வந்துள்ளது. எனினும், நிறைவான அளவில் விரிவடைவதில் சில தடைகளும் இருந்துள்ளன. முதலில் ஆகமங்கள் நூல் வடிவு பெற்ற காலம் பற்றிச் சிந்திப்பது பொருத்தமாகும். இவ்விடயத்திலே பல பிரச்சினைகளை நாம் எதிர்நோக்க வேண்டியுள்ளது. இம்முயற்சி பற்றி அறிவதற்கான சான்றுகளும் குறைவாகும். ஆகமத்தைப் பேணியவர்கள் அவற்றை ஏடுகளில் எழுதி அவ்வேட்டுச் சுவடிகளைத் தம்மளவிலேயே வைத்திருந்தனர். அவை முறையாகப் பாதுகாக்கப்படாத காரணத்தினால் பல்வேறு சூழ்நிலைகளில் அழிவுற்றிருக்க இடமுண்டு.[21] ஆகமங்களைப் பெரும்பாலும் ஆலயத்தோடு தொடர்புடைய சிவாசாரியர்கள் பயன்படுத்தி வந்தமையினால், அவர்களே அவற்றைப் பேணியும் வந்தனர். ஆகமங்கூறும் விதிமுறைகள் சமயக் கிரியைகளிற் பக்தியுணர்வோடு பின்பற்றப்பட வேண்டிய சூழ்நிலையில் அவற்றைப் பற்றிய ஆய்வுகள் விரிவடையப்போதிய அவகாசம் இல்லாது போயிருக்க இடமுண்டு. அவை கூறும் விதிமுறைகள் உரிய இடங்களில் மேற்கொள்ளப்படும் கிரியைகளில் பிரயோகிக்கப்படுவன. காலத்துக்குக்காலம் அவை சூழ்நிலைக்கேற்ப மாற்றியமைக்கப் படுவனவல்ல. ஆகமமரபு அத்தகைய மாற்றத்திற்கு இடந்தருவதும் இல்லை. எனவே, ஆகமநூலவுறி குறிப்பிட்ட சமயச் சூழ்நிலைக்கு அப்பாற் பரந்து செல்ல முடியாமற் போனமைக்கு இதுவும் ஒரு காரணமாகலாம்

ஆகமங்களில் இடம்பெறும் மந்திர அவதாரப்படலம் மந்திரத்தின் பெருமைகூற, தந்திர அவதாரப்படலம் தந்திரங்களின் பெருமை கூறும். ஆகமங்களிற் பயிலப்படும் மந்திரம், தந்திரம் ஆகிய இரு பெயர்களையும் தமது நூலின் தலைப் பெயராகவும் கூறும் பொருளுக்குரிய இயலைக் குறிக்கும் பெயராகவும் திருமூலர் கையாளுகின்றார் ஆகமமரபில் நின்றே திருமூலர் திருமந்திரத்தைப் பாடியுள்ளமைக்கு இவை சான்றாக அமையலாம். திருமந்திரத்திலே ஆகமச் சிறப்புப் பற்றியும் வேதச்

சிறப்புப் பற்றியும் இரு பகுதிகள் கூறப்படுகின்றன. திருமந்திரத்திலே முறையே காரணம், காமிகம், வீரம், சிந்தியம், வாதுளம், யாமளம், காலாத்திரம், சுப்ரபேதம், மகுடாகமம் ஆகிய ஒன்பது ஆகமப் பெயர்களைத் திருமூலர் குறிப்பிடுகின்றார். ஆகமப் பொருளைத் தமிழில் தருமளவிற்கு அவரது காலத்தில் ஆகம மரபும் அவை தொடர்பான கருத்துக்களும் நடைமுறையில் இடம்பெற்றிருத்தல் வேண்டும்.

ஆகமங்கள் தொகுக்கப்பட்ட காலம் பற்றிய விடயம் இன்னும் ஆய்வுக்குரியது. ஆகமங்கள் நூல்வடிவு பெற்ற காலம் கிறிஸ்து சகாப்தத்திற்கு முன்பாக இருக்கலாம் என்று கருதுவோரும் உளர்.[22] ஆகம காலத்தை வரையறுக்க முயன்ற அறிஞர்கள் திருமூலரின் காலத்தையே பின்னெல்லையாகக் கொள்கின்றனர். திருமூலரின் காலம் பற்றிய கருத்து வேறுபாடுகள் அறிஞரிடத்தே காணப்படினும் நாராயண ஐயர் இவரது காலம் கி. பி. ஆறாம் நூற்றாண்டாகவோ அல்லது அதற்கும் முன்பாகவோ இருக்கலாமெனக் கூறுகின்றார்.[23] திருமூலர் கைலாயத்திலிருந்து தெற்கே வந்தவரென்ற கொள்கையும் நிலவுகின்றது. காஷ்மீருக்கு வடகிழக்கேயுள்ள கைலாயத்தில்தான் 'பிரத்யபிஞ்ஞான தரிசனம்' என்ற ஆகமாந்தம் தோற்றம் பெற்றதென்ற கருத்தும் உளது. ஆகமாந்தம் ஆகமங்களை அடிப்படையாகக் கொண்டது என்பர். ஆகமங்களும் காஷ்மீர் பள்ளத்தாக்கில் சமஸ்கிருதத்தில் எழுதும் சூழ்நிலை ஏற்பட்டதென்ற கருத்தும் நிலவுகின்றது. பிரத்யபிஞ்ஞானக் கருத்துக்கள் காஷ்மீரில் சிறப்புற்றிருந்த காலத்தில் திருமூலர் தெற்கே வந்திருக்கக் கூடுமென ரமண சாஸ்திரி கருதுகின்றார்.[24]

ஆகமத்தை அடிப்படையாகக் கொண்ட கோயில் வழிபாடு பற்றியும் கோயில் அமைப்புப்பற்றியும் திருமூலர் குறிப்பிடுகின்றார். கோயிற் பூசைகள் முறையாக நிறைவேறாதுவிடின் வரும் கெடுதல்கள் பற்றித் திருக்கோயிலிழிவு என்ற பகுதியிற் கூறுகின்றார். கோயிலில் பூசை தப்பினால் வரும் விளைவுகள் பற்றியும் கூறுகின்றார்.[25] கோயில் அமைப்புப் பற்றித் திருமூலரின் கருத்துக்கள் தெளிவாக உள்ளன.[26] தூலலிங்கம், சூக்குமலிங்கம், பத்திரலிங்கம் ஆகியவைபற்றியும் குறிப்பிடப்படுகின்றது. திருமூலர் தரும் இக்கருத்துக்களின் அடிப்படையிற் சில விடயங்கள் தெளிவாகின்றன. கோயில்கள் ஆகம மரபில் நடைபெற

வேண்டுமென்பதும் கோயிலில் கடமைபுரியும் சிவாசாரியர் அல்லது பூசகர் ஆகமத்தில் ஆழ்ந்த அறிவுடையோராயிருத்தல் வேண்டுமென்பதும் வற்புறுத்தப்பட்டுள்ளன.

ஆகம காலத்தை வரையறுக்க முயன்ற அறிஞருள் வின்டர் நிட்ஸ் (Winternitz), ஸ்கோமெரஸ்(Schomerus), ஃபார்குவார் (Farquhar) போன்றோர் குறிப்பிடத்தக்கவராவர். ஆகமங்களைப் பற்றி ஓரளவே அறியக் கூடியதாயினும் அதன் கால எல்லையை வரையறுப்பது முடியாததாகும் எனக்கூறும் வின்டர்நிட்ஸ் 27 ஏனைய ஆசிரியர்களின் கருத்துக்களின் அடிப்படையில் ஆகம காலத்தைக் குறிப்பிட முனைகின்றார். ஸ்கோமெரஸ் கி பி. 1ஆம் அல்லது 2ஆம் நூற்றாண்டுகளில் திருமூலரும் ஏனைய தமிழ்ப் புலவர்களும் ஆகமங்களைப் பெருமளவிற் பயன்படுத்தியிருப்பாரெனக் கொண்டு ஆகமங்கள் கிறிஸ்துவுக்கு முற்பட்ட காலங்களில் நிலவியிருக்கலாமென்பர்.[28] ஆனால் திருமூலர், மாணிக்கவாசகர் ஆகியோரது காலத்தை கி பி. 8ஆம், 9ஆம் நூற்றாண்டாகக் கொள்ளும் ஃபார்குவார், கி.பி. 7ஆம்,8ஆம் நூற்றாண்டை ஆகமத்தின் பின்னெல்லையாக் கொள்வர்.[29] இவ்விருவரது கருத்துக்களிலும் ஃபார்குவாரது கருத்தையே வின்டர்நிட்ஸ் ஏற்கின்றார் திருமூலர், மாணிக்கவாசகர் ஆகியோரது காலநிர்ணயத்தில் நிலவும் கருத்துவேறுபாடுகளுக்கு மத்தியில் இவ்விருவரது காலமும் ஆகம கால நிர்ணயத்திற்கு ஒரு மைல்கல்லாக அமைவதை நாம் மறுப்பதற்கில்லை. கர்மர்கார் என்ற அறிஞர் ஆகமங்களின் காலம் பற்றிக் குறிப்பிடுமிடத்து சுவேதாஸ்வதர உபநிடதமும் கீதையும் எழுதப்பட்ட ஓரிரு நூற்றாண்டுகளை அடுத்து ஆகமங்களும் இலக்கிய வடிவம் பெற்றிருக்கலாமென்பர். மகாபாரதத்தில் ஆகமங்கள் பற்றிய குறிப்புகளை எடுத்துக் காட்டி, அதனைச் சான்றாகக் கொண்டு, மகாபாரத முடிவில் அதாவது கிறிஸ்துவுக்கு முற்பட்ட இரண்டாம் நூற்றாண்டில் மகாபாரதம் முழு நூல் வடிவம் பெற்ற காலத்தில் ஆகமங்கள் எழுத்து வடிவம் பெற்றிருக்கலாமென்பதே இவரது கருத்தாகும்.[30]

தென்னாட்டில் வளர்ச்சி பெற்ற சைவத்திற்கு சிவாகமங்கள் பெருமளவில் உதவியுள்ளன. புராணங்கள் ஆகமங்கள் கூறும் திருவுருவங்களுக்குரிய தெய்விக விளக்கக் கதைகளையும் ஐதீகங்களையும் கூறுவன. வடமொழிப் புராணக் கருத்துக்களும் ஆகம மரபும் தென்னாட்டுச் சைவத்தில் முக்கிய இடம் பெற்றன.

தென்னாட்டில் ஆகமங்களும் அவற்றை அடிப்படையாகக் கொண்டெழுந்த நூல்களும் சமஸ்கிருத மொழியில் குறிப்பாகக் கிரந்த வடிவிலேயே எழுதப்பட்டமை குறிப்பிடத்தக்கது. இவ்வரி வடிவமுறையின் தொடக்க காலத்தைக் கொண்டும் ஆகமங்கள் தமிழ் நாட்டில் எழுத்து வடிவம் பெற்ற காலத்தை நாம் ஓரளவு ஊகிக்க முடியும். பல்லவர் காலத்தில் எழுதப்பட்ட லிபிக்கு 'பல்லவ கிரந்தம்' என்ற பெயர் வழங்கப்பட்டது.[31] பல்லவ மன்னர்களுக்கும் காஞ்சிபுரத்திற்கும் நெருங்கிய தொடர்பு இருந்துவந்துள்ளது. காமிகாகமத்தின் பாயிரம் காஞ்சி சதாசிவகுரு என்ற குருவணக்கம் பற்றிக் குறிப்பிடுகின்றது. குருவணக்கப் பாடல் பிற்காலத்து ஆன்றோர் வாக்காக இருந்திருப்பினும் ஆகமம் தொடர்பான இலக்கிய முயற்சிகள் காஞ்சிபுரத்தில் மேற்கொள்ளப் பட்டிருக்கலாம் என்பதற்கு இக்குறிப்புச் சான்றாகும்.

தென்னிந்தியாவில் பல்லவர் காலத்தில் இரண்டாம் நரசிம்மனின் (இராஜசிம்மன்) காலம் (கி. பி. 700—728) சைவசமயத்தைப் பொறுத்தமட்டிலும் ஆகம மரபு பேணப்பட்ட வகையிலும் குறிப்பிடத்தக்க காலமாகும். இம்மன்னன் சிறந்த சிவபக்தன்; சைவசித்தாந்த நெறியில் ஈடுபாடுடையவன்; காஞ்சி கைலாசநாதர் கோயில் உட்பட பல கோயில்களை எழுப்பியவன். இவன் பெற்ற பட்டங்கள் இவனது சமய உயர்வை வெளிப்படுத்துவன.[32] ஆகமங்களைப் பிரமாணமாக ஏற்று அம்மரபைப் பேணியமைக்கான அகச்சான்றுகளை அவனது கல்வெட்டுக்களில் காணலாம். "ஆகமத்தைப் பிரமாணமாகக் கொண்டவன்", (ஆகமப் பிரமாண:)[33], 'ஆகமத்தைப் பின்பற்றுபவன்' (ஆகமாநுசாரி)[34], "ஆகமம் கூறும் உயர் ஞானமாகிய சைவசித்தாந்தத்தையே தனது வழியாகக் கொண்டவன்" (சைவசித்தாந்த மார்க:)[35] ஆகிய பெயர்கள் பொருத்தமாக அமைகின்றன. இச்சான்றுகளிலிருந்து இம்மன்னன் காலத்தில் ஆகமமரபின் அமைந்த பண்பாட்டு நிலை சிறப்பாகக் காணப்பட்டிருக்கலாமென்பதை உணர முடிகிறது.

பல்லவர் காலத்தில் சைவ இயக்கத்திற்குத் தலைமையேற்ற நாயன்மாரும் ஆகமங்களைப் பற்றித் தமது பதிகங்களிற் பாடியுள்ளமை ஈண்டுக் குறிப்பிடத்தக்கது.[36] சிவனோடு தொடர்பு படுத்திய நிலையில் அவர்கள் ஆகமங்களைக் குறிப்பிடுகின்ற

படியால் அவர்களது காலத்தில் ஆகமக் கருத்துக்களும் மரபும் சமய இயக்கத்தில் அறிமுகமாகி இருந்தன எனக் கொள்ள இடமுண்டு. ஆகமங்கள் சிறப்பித்துப்பேசும் சிவன் உறையுமிடமாகிய சிவாலயமே இவர்களது சமய இயக்கத்திற்கு நிலைக்களனாக விளங்கியது. ஆகம மரபு பல்லவர் காலத்தில் கோயில்களை மையமாகக் கொண்டு வளர்ச்சிபெற்றது. பல்லவர் காலத்தில் தமிழ்நாட்டில் ஏற்பட்ட இந்நிலைக்குரிய சூழ்நிலை முன்னரே உருவாகத் தொடங்கியது. சங்கமருவியகாலப் பல்லவ மன்னர் சிலர் வேதாகமக் கல்வியை நாட்டில் விருத்தி செய்தமையும் ஒரு காரணமாக அமையலாம்.[37]

ஆகமத்தைத் தழுவிய இலக்கிய ஆக்கங்கள் எழுச்சிபெறுவதற்கு ஆமர்த்தக மடத்தை முதன்மையாகக் கொண்ட நான்கு மடங்கள் நிலைக்களனாக விளங்கியமை பற்றியும் குறிப்பிடப் படுகின்றது. கோதாவரி ஆற்றங்கரையில் மந்திரகாளி என்ற இடத்தில் மந்திரகாளீசுவரரின் ஆலயத்தைச் சுற்றி இம்மடங்கள் இருந்தன. இங்கு ஆகம சைவர் இருந்தனர். இம்மடத்தின் கிளைகள் இந்தியா எங்கும் பரவியிருந்தன. சோழர் காலத்திலும் சைவர்கள் சோழ மண்டலத்தில் பரவினர் இக்காலப்பகுதியில் ஆகமாந்தப் பிரிவுக்குரிய நூல்கள் இலக்கிய வடிவம் பெற்றதோடு ஆகம மரபைத் தழுவிய இலக்கிய ஆக்கங்களும் உருவாயின.[38]

இம்மடத்தைச் சேர்ந்தவர்களுள் பலர் ஆகம அறிஞராக விளங்கினர். அகோர சிவாசாரியார், திருலோசன சிவாசாரியார், நிகமஞானதேவர் முதலியோர் குறிப்பிடத்தக்கவர்கள். சோழர் காலத்தில் கோயில்களில் சிவாசாரியர்களும் அவர்களது சிஷ்யர்களும் நியமிக்கப்பட்டதையும் அறியலாம்.[39] ஆகம நூலறிவில் நன்கு பயிற்சி பெற்றவர்களுள் மெய்கண்டாரின் மாணவராகிய அருணந்தி சிவாசாரியர் குறிப்பிடத்தக்கவர். சகல ஆகமங்களிலும் நல்ல பயிற்சி பெற்றிருந்த காரணத்தால் 'சகலாகம பண்டிதர்' என்று அழைக்கப்பட்டமை தெரிய வருகின்றது.[40]

முன்னர் குறிக்கப்பட்ட இருபத்தெட்டு ஆகமங்களில் அனைத்தும் கிடைக்கவில்லை. ஒரு சில மட்டுமே கிடைக்கப் பெற்றுள்ளன. ஆகமங்களை அச்சிட்டோரில் சென்ற நூற்றாண்டின் பிற்பகுதியில் கொன்றைமாநகரம் சண்முகசுந்தர முதலியார் கிரந்த லிபியில் காமிகாகமம், காரணாகமம் ஆகியவற்றைப்

பதிப்பித்துள்ளார். காமிகாகமம் பூர்வபாகம் 1889இலும் உத்தரபாகம் 1899இலும் பதிப்பிக்கப்பட்டன. காரணாகமம் பூர்வபாகம் 1900இலும் உத்தரபாகம் 1902லும் பதிப்பிக்கப்பட்டுள்ளன. இவை நான்கும் சென்னையில் உள்ள சிவஞான போத யந்திரசாலையில் பதிப்பிக்கப்பட்டன. இவ்வாகமங்களின் கிரியா பாதம் மட்டுமே பதிப்பாகியுள்ளன. காமிகாகமத்தின் பூர்வ பாகத்திற்கு மட்டும் விரிவான தமிழ் உரையை சண்முகசுந்தர முதலியார் வெளியிட்டார். உரை எழுதி உதவியவர் திருவொற்றியூர் விசுவேசுவர சாஸ்திரிகள். காரணாகமத்திற்கு விரிந்த தமிழுரை இன்மையால் அதைப் பயின்றவர்கள் மிகக் குறைவாகும். இவ்வாகமங்களுக்குரிய ஏட்டுப்பிரதிகளைப் பலர் கொடுத்துதவியுள்ளனர். உத்கர காமிகாகமத்தின் நூல் விளக்கத்தில் பல பிரதிகளைப் பரிசோதனை செய்து வெளியிடப்பட்ட விபரம் கூறப்பட்டுள்ளது. ஆகமப் பிரதி உபகரித்தோரில் யாழ்ப்பாணம் நல்லூர் சதாசிவ பிள்ளையும் வட கோவை சபாபதி நாவலரும் குறிப்பிடப்படுகின்றனர். இந்தியாவில் ஐவர் பிரதிகளை உபகரித்துள்ளனர்.

நான்கு பாகங்களைக் கொண்ட சுப்ரபேதம் என்ற ஆகமத்தின் மூலம் மயிலை அழகப்ப முதலியாரால் பதிப்பிக்கப்பட்டது. பௌஷ்கர ஆகமம் சிதம்பரம் அம்பலவாண நாவலரால் 1925இல் அச்சிடப்பட்டுள்ளது.[41]

இந்த நூற்றாண்டின் தொடக்கத்தில் தேவகோட்டை சிவாகம சித்தாந்த பரிபாலன சங்கத்தார் சிலவற்றைக் கிரந்த லிபியிலும் சிலவற்றை நாகர லிபியிலும் அச்சிட்டனர். குறிப்பாக மதங்க பாரமேசுவர ஆகமத்தின் வித்தியாபாதம் அச்சிடப்பட்டுள்ளது ஆகமத்தின் கிரியாபாதத் தொகுப்பு காஞ்சிபுரம் ஸ்ரீ பஞ்சாக்ஷர யோகிகள் ஆக்கிய சைவபூஷணம் என்ற நூல் மூலம் வெளியாகியது கிரந்த லிபியில் அமைந்த இந்நூலினைத் தமிழுரையுடன் இச்சங்கத்தார் 1925இல் வெளியிட்டுள்ளனர்.

பதுச்சேரியில் உள்ள பிரான்ஸ் தேசத்தைச் சேர்ந்த இந்திய ஆராய்ச்சிக் கழகத்தார் ஆகமத் தொடர்பான ஆய்வில் கொண்டுள்ள தொடர்பு குறிப்பிடத்தக்கது. பிரெஞ்சு அறிஞரான பிலியோசா (Jean Filliozat) சைவக்கிரியை மரபுகளைச் சிவாகமங்களை மூலமாகக் கொண்டு மேற்கொண்டுள்ள ஆய்வுகள் குறிப்பிடத்தக்கவை. இவர் ஆகமங்கள், வேத மரபுகளிற் சிலவற்றையும் யோகமரபுகள் சிலவற்றையும் தம்முள் உள்ளடக்கி

உள்ள சிறப்பையும் தமது ஆய்வில் எடுத்துக்காட்டியுள்ளார்.[42] பிரெஞ்சு ஆய்வு நிறுவனத்தின் சமஸ்கிருதத்துறைத் தலைவரான என். ஆர். பட் என்பவரின் மேற்பார்வையில் ஆகமங்களின் ஏட்டுப்பிரதிகளையும் கையெழுத்துப் பிரதிகளையும் ஒப்பு நோக்கிப் பதிப்பிக்கும் முயற்சி மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இவ்வரிசையில் இரௌரவாகமம், மிருகேந்திரம், அஜிதாகமம், மதங்க பாரமேசுவராகமம், இரௌரவோத்தராகமம், சோமசம்புபத்ததி போன்றவைகள் பதிப்பிக்கப்பட்டுள்ளன. இவற்றுக்குப் பிரெஞ்சு மொழி மொழிபெயர்ப்பும் உரையும் உள்ளன. புதுச்சேரிக் கழகத்தார் மேலும் பல ஆகமங்களைச் சேகரித்துள்ளனர்.

இவ்வகையில் இந்தியாவில் ஆகமங்களை இயன்றவரை ஏட்டுப்பிரதிகளைக்கொண்டு அச்சிற் பதிப்பிக்கும் முயற்சிகளும் காலத்துக்குக் காலம் மேற்கொள்ளப்பட்டு வந்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

சிவாகமங்கள் அறிவுக் கருவூலங்களாக, சிற்ப நூல்களாக, ஆலயப் பிரமாண நூல்களாக, கிரியை நூல்களாக விளங்கி, சைவ சித்தாந்தச் செம்பொருளை விரிப்பனவாக அமைந்து ஆன்மாக்கள் ஆன்ம ஈடேற்றம்பெற உதவுகின்றன. சைவத்தின் ஆதார நூல்களாக விளங்கும் சிவாகமங்களின் சிறப்பையுணர்ந்து சைவ சமயிகள் யாவரும் ஆகம மரபைப் பேணிப் பாதுகாப்பது பயன்தரும் செயலாகும்.

### அடிக்குறிப்புகள்

1. Dandekar, R. N., **Vedic Bibliography I** Bombay, 1946 II, Poona, 1961, and III, Poona, 1973. Also see; Ganesh Thits, "Contribution of Western Scholars to the study of vedic Ritual, **Bharati - Bhanam**, Dr. K. V. Sarma Felicitation volume, Ed. S. B. Nair, Punjab University, Hoshiarpur, 1980 pp. 43-57.
2. திருமந்திரம், உலகநாத முதலியார் (பதி.) விவேகபோதினி காரியாலயம், சென்னை, 1924. 8:15. 35
3. மேற்படி, 8, 15. 10
4. மேற்படி, 8 15 28

5. சிவஞானசித்தியார், 2. 8. 15
6. திருமந்திரம், ஆகமச் சிறப்பு 2, 4, 8 பாடல்கள் பார்க்க
7. "வயம் து வேத சிவாகமயோர் பேதம் ந பச்யாம: வேதோபி சிவாகம: - ஸ்ரீ கண்ட பாஷ்யம்
8. Zvelebil, K. V. (Trans.) "Kumaratantra", **Brahma Vidya**, 42, 1978. p. 170
9. கைலாசநாதக் குருக்கள், கா., சைவத் திருக்கோயிற் கிரியை நெறி, கலாநிலையம், கொழும்பு. 1963. பக். 7
10. குமாரசுவாமிக் குருக்கள் ச., முப்பொருள் விளக்கம் 3ஆம் பதி., கலாதேவி யந்திரசாலை, சுன்னாகம். 1969. பக். 112.
11. திருமந்திரம், "அஞ்சலி கூப்பி யறுபத் தறுவரும் அஞ்சா முகத்தில் அரும்பொருள் கேட்டதே".
12. கைலாசநாதக் குருக்கள், கா., சைவத் திருக்கோயிற் கிரியை நெறி, 1963. பக். 5
13. காந்திமதிநாதபிள்ளை, வி. பி., சிவஞானச் சொற்பொழிவு நூல், கழக வெளியீடு, சென்னை. 1960. பக் 3.
14. மணிமேகலை, சாமிநாதையர், டாக்டர் உ. வே, (பதி) தியாகராச விலாசம், சென்னை. 1956, 27 ; 9.
15. Sivapadasundaram, S., **An Outline of Sivagnanabhodam**, Saiva Prakasa Press, Jaffna, 1951. p. 2.
16. "சித்தாந்த வேத சாரத்துவாத்," - சுப்பிரபேதாகமம்
17. "வேதசாரம் இதம் சாஸ்திரம்". - மகுடாகமம்
18. சிவஞான சித்தியார், சுபக்கம் 8, 15
19. உமாபதி சிவாச்சாரியார், சிவப்பிரகாசம், திருவிளங்கம் உரை, யாழ். கூ. த. நா. வி. கழகம், 1974. 7ஆம் பாடல் பக். 12.
20. கச்சியப்பசிவாசாரியார், கந்தபுராணம், மேருபடலம், பாடல் 10.
21. Shivapadasundaram, S., **An Outline of Shivagnana Bhodam**, Saiva Prakasa Press, Jaffna, 1951, p. 2.
22. லக்ஷ்மணன், கி., இந்திய தத்துவ ஞானம், பழநியப்பா பிரதர்ஸ், சென்னை. 1970. பக்: 359.

23. Narayana Ayyar, C. V., **Origin and Early History of Saivism in South India**, University of Madras, Madras. *1936.* p. *213.*

24. Ibid, pp. *206ff.*

25. திருமந்திரம், *2 : 19 : 4, 5, 6.*

26. மேற்படி, *7, 2, 7.*

27. Winternitz, M., **A History of Indian Literature**, Vol. I, Pt. I, University of Calcutta, Calcutta. *1963.* p. *515.*

28. **Ibid,** p. *516 (n. 1).*

29. Farquhar, J. N., **An Outline of the Religious Literature of India**, Oxford University Press, London. *1920.* p. *194.*

30. Karmakar, A. P., **The Religions of India**, Mlra Publishing House, Lonovla. *1950.* p. *278.*

31. சிவசாமி வி., ''வடமொழிச் சாசனமும் தமிழ்ச் சாசனமும்'', சிந்தனை, தொகுப்பு 1, இதழ் 1 (தை, 1978), பக். 30.

32. Durai Rangaswamy, M. A., **Religion and Philosophy of Tevaram**, Bk. I, University of Madras, Madras. *1958.* pp. *173—74.*

33. **South Indian Inscriptions,** Vol. I No. *25.*

34. **Ibid.**

35. **Ibid,** No. *24.*

36. கோபாலகிருஷ்ண ஐயர், ப, "சிவாகமங்களும் சிற்ப நூல்களும் சித்திரிக்கும் சிவ விக்கிரகவியல்," யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திற்கெனச் சமர்ப்பிக்கப்பட்ட கலாநிதிப் பட்ட ஆய்வேடு, 1981. பக். 56.

அ. சம்பந்தர் தேவாரம். III. 23.6.

"தொகுத்தவ னருமறை அங்கம் ஆகமம் வகுத்தவன்"

ஆ. சம்பந்தர் தேவாரம், III. 39.2.

''ஆகமத்தொடு மந்திரங்களமைந்த சங்கதம்''

இ. அப்பர் தேவாரம், V. *15.4.*
"பணியி லாகமஞ் சொல்லுந்தன் பாங்கிற்கே"

ஈ. சுந்தரர் தேவாரம், VII, *84.8.*
"அண்டர்தமக் காகமநூல் மொழியும் ஆதியை"
சுந்தரர் தேவாரம், VII, *96.6.*
"அம்மானே ஆகம சிலர்க்கருள் நல்கும்
பெம்மானே"

*37.* வேலுப்பிள்ளை, ஆ., தமிழ் இலக்கியத்தில் காலமும் கருத்தும், ராமகிருஷ்ணன், வ., சென்னை. *1969.* பக். *71;75,*

*38.* Gopinath Rao, T. A., **Elements of Hindu Iconography**, Vol II, Pt. I, Indological Book House, Delhi. *1971.* pp. *4-5.*

*39.* **Ibid** p. *6.*

*40.* Shivapadasundaram, S., **Op.cit.**, p.*3.*

*41.* அருணாசலம், மு., "காமிகாகமம்" திருவானைக்கா மகா கும்பாபிஷேக மலர், மண்டலாபிஷேக வெளியீடு, திருவானைக்கா. *1970* பக். *63-64.*

*42.* Jean Filliozat, "The Role of the Saivagamas in the Saiva Ritual System", **Experiencing Siva**, ed.: Fred. W. Clothey, J. Bruce Long, Ramesh Jain, New Delhi, *1983*, pp. *81—86.*

# சிவாகம நெறியில் கும்பாபிஷேகக் கிரியை

# 3

வேதங்களும் ஆகமங்களும் கிரியை மரபுபற்றி அறியப் பெரிதும் துணை புரிவன. சமயதத்துவ சிந்தனை வளர்ச்சிக்குப் பெருமளவில் முன்னோடியாக விளங்குபவை. வேதங்கள், ஆகமங்கள் சமயம், தத்துவம், கலை ஆகிய மூன்று அம்சங்களையும் இணைக்கும் சாதனங்களாக விளங்குகின்றன. சைவ வழிபாட்டு மரபின் வளர்ச்சிக்கு இவற்றின் பங்களிப்பு அளப்பரியது. வேதநெறி தழைத்தோங்கவும் மிகு சைவத்துறை விளங்கவும் இவ்விரு முதல் நூல்களும் உதவியுள்ளன. திருக்கோயிற் கிரியை மரபில் இவ்விரு நூல்கள் தரும் சமயக் கிரியை அம்சங்கள் சங்கமமாகின்றன. 'வேதமொடாகமம் மெய்யாமிறைவன் நூல்' என்ற திருமூலரின் கோட்பாட்டின்படி இவை சைவ பாரம்பரியத்திற்கு முதல்நூல்களாக விளங்குவதோடு கிரியை மரபுகளுக்கும் அடிப்படையாக உள்ளன.

சைவ சமயத்திற்கு இவ்விரு நூல்களி து முக்கியத்துவத்தினை உணர்த்தும் வகையில் சமயப் பெரியார்கள் வைதிக சைவம் என அழைப்பதும் இங்கு சிந்திக்கற்பாலது. இலக்கிய கலாநிதி பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை குறிப்பிடும் கருத்து இங்கு பொருத்தமாகும்:

> 'நமது சமயம் வைதிக சமயம். வைதிகம் வேத சம்பந்தம்; சைவம் சிவ சம்பந்தம் வைதிகம் அறிவு நெறி; வேத நெறி

எனவும் படும். சைவம் சிவநெறி; அருள்நெறி எனவும் படும், அறிவு நெறியாகிய வைதிகம் சைவத்திற் சென்று முற்ற வேண்டும். அங்ஙனம் சென்று முற்ருதவழி அவைதிகமாம். சைவம் வேத நெறியாகிய வைதிகத்தின் வழி வருவது. அங்ஙனம் வாராதேல் அது அசைவமாம்... வைதிகம் உடல்; சைவம் உயிர். உயிரைப் பிரிந்தவழி உடல் என்னும்? உடம்பாலாய பயனைப் பெருது உயிர் பிரிந்தவழி அவ்வுயிர் என்னும்?'

இக் கூற்றிலிருந்து வைதிக நெறியின் மூலமாகிய வேதங்களினதும் சைவ நெறியின் மூலமாகிய சிவாகமங்களினதும் முக்கியத்துவம் உணரற்பாலது.

இன்று நடைமுறையிலுள்ள திருக்கோயிற் கிரியைகளில் வேத மரபு, சைவ மரபு சார்ந்த சில கிரியைகள் இடம் பெறுவதை எடுத்துக்காட்டுவதே இக் கட்டுரையின் நோக்கமாகும். வேதங்கள் கூறும் சமயத்தின் முக்கிய நோக்கம் இயற்கைச் சக்திகளைத் தெய்விக நிலைப்படுத்தி வழிபடுதலாகும். யாகத்திலே உரிய தெய்வங்களைக் கூவி அழைத்து அத்தெய்வங்களுக்குரிய அவிர்ப் பாகங்களை அக்கினி மூலம் வழங்குவதே இவ்வழிபாட்டின் முக்கிய அம்சமாகும். அக்கினி, தெய்வத்தையும் வழிபடுவோனையும் இணைக்கும் நிலையில் சிறப்புற்ருன் எனவே, இத்தெய்வத்தோடு தொடர்புடைய வழிபாடு வேத காலத்தில் சிறப்படைந்தது. அக்கினியைத் தெய்வமாக வழிபடப் படும் பாடலில் இடம் பெறும் கருத்து இங்கு குறிப்பிடத்தக்கது.

'தீ வேள்வியின் முன்னிற்பவன். அவன் பருவங்களை வகுக்கும் தேவன்; அங்கு வானவரை அழைப்பவன். அவனை வேண்டுகின்றேன். தீயே நெறியிலோங்கும் வேள்வியதனை நீ எப்புறத்தும் சூழ்ந்து காக்கிருய் அஃதே வானவரிடம் சேரும். தீ, வானவரை அழைப்போன். புலமையுள்ள செய்கைத் திறமையோன்'

இக்குறிப்பு அக்கினி வழிபடப்படும் தெய்வத்தை அழைப்பவனுகச் சித்திரிக்கின்றது. அக்கினி தேவர்களில் முற்பட்டவனுகவும் முன்னேனுகவும் விளங்குபவன். அனைத்துச் செய்கைத் திறமை, உயிர், வலிமை, பொலிவு, ஒளி, மாட்சி ஆகிய அனைத்தும் அக்கினி தேவனுடைய விளக்கங்களாகத் திகழ்கின்றன.

வேதங்களில் இயற்கையோடு இயைந்த மூவகை நிலைகளில் தெய்வங்கள் வகுக்கப்பட்டன விண்ணைச் சார்ந்தவையெனவும் இடைவெளியைச் சார்ந்தவையெனவும் மண்ணைச் சார்ந்தவை யெனவும் வகுத்து வழிபடப்பட்டமை குறிப்பிடத்தக்கது 'பஞ்ச பூதங்கள் தெய்வங்களாக வழிபடப்பட்டன. விண்ணில் அதிதெய் வமான தியௌ, சூரியன் போன்றவையும் மண்ணுடன் தொடர் புடைய அக்கினி, சோமன், பிருதுவி போன்றவையும் ஆகாயத்துக் கும் பூமிக்கும் இடைப்பட்ட தெய்வங்களில் வாயு, பர்ஜன்யன், நீர்த்தெய்வமாகிய அப்பு ஆகியவையும் இவ்வகையில் குறிப்பிடத் தக்கன. இந்திரன், விஷ்ணு, உருத்திரன், வருணன். பிருகஸ்பதி போன்ற தெய்வங்களிலும் மேற்குறித்த தெய்வீகப் பண்புகள் ஏற் றிக் கூறப்பட்டன இவை யாவற்றுக்கும் மேலாகப் பரம் பொருளை ஒளிவடிவில் போற்றப்பட்ட சிறப்பும் வேதத்தில் காணப்படு கின்றது. அனைத்து வழியைக் காட்டவும் பேரொளி நிலைபேறு கொண்டுள்ள சிறப்பை இருக்குவேதம் கூறும். (இருக்கு வேதம் 6, 9.5). சாமவேதம் 'ஒளியே தெய்வம், தெய்வமே ஒளி' எனப் போற்றும். இவ்வைதிகப்பண்பு ஆகமம் வகுத்துக்கூறும் வழி பாட்டு மரபிலும் சுவறியுள்ளதை நாம் அவதானிக்கலாம். ஆக மம் வகுத்துக்கூறும் நைமித்திகக் கிரியைகளில் உயரிடம்பெறும் கும்பாபிஷேகக் கிரியையில் நாம் இச்சிறப்பமிசங்களை உணர லாம்

பிரதிஷ்டை என்ற சொல் குறிக்கும் பொருளை விளக்குவதன் மூலம் கும்பாபிஷேகத்தின் உட்பொருளை நாம் உணரலாம். 'பிர' என்னும் பகுதி, 'சிறப்பாக' என்றும் 'நன்கு புலனாகும்படி' என்றும் பொருள்படும். 'இஷ்ட' என்னும் பகுதிக்கு 'நிற்றல்' என்ற பொருளும் உண்டு. எனவே, பிரதிஷ்டை எனும்பொழுது ஏனைய இடங்களில் புலனாவதைக் காட்டிலும் 'சிறப்பாக நிலை நிற்றல்' என்றும் 'ஏனைய இடங்களில் நிற்பதைக் காட் டிலும் நன்கு புலனாகும்படி நிற்றல்' என்றும் பொருள்படுகின் றது இந்நிலையை வருவிக்கும் கிரியையே ஆகமங்கள் கூறும் பிரதிஷ்டை ஆகும். பாரெங்கணும் பரந்து விளங்கும் பரம் பொருளைப் பசுவின் முலைகளினூடே பாலைத் தோற்றுவிப்பது போன்று திருக்கோயிற் கிரியை வழிகளால் ஆகமம் எமக்கு உணரவைக்கின்றமை குறிப்பிடற்பாலது.

பிரதிஷ்டை என்று கூறப்படும் கும்பாபிஷேகக் கிரியையின் போது குடத்தில் நிரப்பப்படும் புனித நீரால் இறைவனின் திரு உருவத்துக்கு நிகழ்த்தப்படும் நீராட்டுதலே சிறப்பம்சமாகும். இக்கும்பாபிஷேகக் கிரியை, இறைவனை அகன்ற பரப்பினின் றும் வெளிக்கொணர்ந்து ஒருவழிப்படுத்தி எழுந்தருளி நிலைநிற் கச் செய்யும் செயலைச் சுட்டுகின்றது. பரம்பொருளை நாம் படிப் படியாக உணரமுடிகின்றது. இறைவன் சிறு அளவில் புலனுகும் வண்ணம் ஆகாயமாக வெளிப்படுகின்றான். ஆகாயந்தானும் புலன்களால் செவ்விதாகக் கிரகிக்கப்பட முடியாதது. ஆகா யத்தைவிட வாயு சிறிது அதிகமாக உணரப்படக்கூடியதெனி னும் கட்புலனாகாத தொன்றாகும். இதற்கு அடுத்த நிலை அக் கினியாகும். இது கட்புலனுக்கு உட்பட்டது. எமது வழிபாட்டு முறைகளில் அதிகம் இடம்பெற்று எம்மை ஈடேற்றவல்லது. அக் கினியைப் பேணிப் பாதுகாப்பதும் தொடர்ந்து வழிபடுவ தும் எளிதான காரியமல்ல. இந் நிலையிலிருந்து சற்று எளிமை யாக விளங்குவது நீர் எனினும், கிரகிக்கத்தக்கவாறு நீரை ஒரே நிலையில் நிலைபெற நிறுத்தி அங்கு இறைவனைக்கண்டு தொடர்ச்சியாக வழிபடுவது எளிதன்று. இதுவரை கூறியவற்றி னின்றும் வேறானது ஐந்தாவதாகிய மண். இதனிடத்து இறை வன் தெய்வீக அம்சங்களை நிலைநிறுத்திக் தொடர்ச்சியாகக் கண்டு அவனைக் கிரகித்தல் ஓரளவு எளிதில் கைகூடும் நிலையா கும். இவ்வாறு இறைவன் அருவ நிலையினின்றும் இழிந்து ஆகா யம், வாயு தீ, நீர். மண் ஆகிய ஐந்திலும் பரந்து விரிந்து விளங்கும் தன்மையைத் தைத்திரீய உபநிடதம்,

ப்ரஹ்மண ஆகாச: ஸம்பூத:
ஆகாசாத் வாயு:
வாயோரக்நி:
அக்நேராப:
அத்ப்ய: பிருதிவீ !

எனக் கூறும் இம்மரபினை ஆகமங்கூறும் கிரியை மரபில் நாம் அவதானிக்கலாம். இறைவனை வழிபட நிறுவப்படும் மண் அம் சம் வாய்ந்த விக்கிரகத்தில் எழுந்தருளச் செய்வதற்காக விண், காற்று, நெருப்பு, நீர், மண் ஆகிய ஐந்தினையும் அவாவி நிகழ்த் தும் கிரியைகளே கும்பாபிஷேகக் கிரியையின் உயர்நிலையைக் குறிக்கின்றன.

கும்பாபிஷேகக் கிரியை நிகழ்வதற்கு அமைக்கப்படும் யாக சாலை ஆகாய வெளியில் அமைவது குறிப்பிடத்தக்கது. இங்கு அமைக்கப்படும் குண்டங்களில் அக்கினியும் வாயுவும் ஒன்றிணைந்து விளங்குகின்றன. யாகசாலையின் மையத்தில் விளங்கும் வேதியில் அமையும் கும்பத்தில் இருப்பது நீர். இவ்வாறு பஞ்ச பூதங்களின் ஒடுக்கம் இறுதியில் பிருதிவியோடு தொடர்புடைய திருவுருவத்தில் நிறைவெய்துகிறது. அத்திருவுருவம் நிறைவேறியதும் நீரால் அபிஷேகிக்கப்பட்டவுடன் இறை அம்சத்துடன் தெய்வீகப் பொலிவு பெற்று வழிபாட்டுக்கும் உபசாரத்திற்கும் உரியதாக விளங்குகின்றது. பிரதிட்டையின் பின் பிம்பம் என்ற பெயர் நீங்கி இறைவனது திருநாமத்தைக் கொண்டு விளங்கும் நிலை ஏற்படுகின்றது. பிரபஞ்சத்தில் உள்ள பொருட்களில் இறைவன் விரவியுள்ள காரணத்தால் அட்ட மூர்த்தி எனச் சிறப்பிக்கப்படுகின்றான். மண், நீர், நெருப்பு, காற்று, வெளி எனப்படும் ஐம்பூதங்களும் இவற்றுக்குப் புறம்பாய் இருந்து இவை விளங்கவும் வாழவும் ஆற்றல் பெருக்கும் சூரியனும் சந்திரனும் இவ்வேழு அம்சங்களின் வேறாய் நின்று இவற்றை உணரும் எசமானனும் ஆகிய எட்டுமே இதில் அடங்குகின்றன. இவ்வெட்டு அம்சங்களில் இறைவனை உணர்ந்து வழிபடுதலே கும்பாபிஷேகக் கிரியையின் உயர் நோக்கமாகும். கிழக்கு முதலாய எட்டுக் குண்டங்களிலும் இந்த அட்டமூர்த்தியைப் பூசித்தலும் சிறப்பம்சமாகும். அக்கினி வழிபாடு வைதிக நெறியில் சிறப்புப் பெறுவது போல இங்கும் இறைவனை வழிபடுவதற்குச் சிறப்புப் பெறுகின்றது. ஆகம நெறியில் இது உயர்நிலை வகிக்கின்றது. நவ குண்டங்களில் அக்கினியைப் பல்வேறு நிலைகளில் பூசித்து அந்தந்தக் குண்டங்களுக்குரிய சமித்து வகைகள் விசேட ஓமங்கள், பூர்ணாகுதி முதலியன இடம் பெற்று யாகம் பூரண பொலிவு பெறுகின்றமை குறிப்பிடத்தக்கது.

கும்பாபிஷேகக் கிரியை அநாவர்த்தனம் ஆவர்த்தனம், புனராவர்த்தனம், அந்தரிதம் என நான்கு வகைப்படும். ஆலயம் இல்லாத ஓரிடத்திலே ஆகம விதிகளுக்கமையப் புதியதொரு ஆலயம் அமைத்து அங்கு இறைவனை எழுந்தருளச் செய்தல் அநாவர்த்தனம் எனப் பெயர்பெறும். பல காலத்திற்கு முன் அமைக்கப்பட்ட ஆலயத்தில் தொடர்ந்து நித்திய நைமித்திகங்கள் நிகழ்ந்துவரும் வேளை எதிர்பாராதவாறு தீயினால் பாதிப்

புறுதல் காடுபடர்தல், மண்மாரி ஆகியவற்றால் தடையேற்படு மிடத்து அதனை நிவர்த்திசெய்து நிகழ்த்தும் பிரதிஷ்டை ஆவர்த்தனம் எனப் பெயர்பெறும். நித்திய நைமித்திகங்கள் முறையாக நடைபெற்று வரும் ஆலயத்தில் விமானம், கருவறை, மண்டபம், கோபுரம், பிராகாரம், பரிவாரக் கோயில்கள், ஆலய வழிபாட்டிற்குரிய விக்கிரகங்கள் ஆகியவை பழுதடைந்தால் பாலஸ்தாபனம் செய்து, திருப்பணி மூலம் புனரமைத்து, பிரதிஷ்டை செய்தல் புனராவர்த்தனப் பிரதிஷ்டை எனப் பெயர் பெறும். திருடர் பிரவேசித்தல், எதிர்பாராத நிகழ்வுகள் போன்றவற்றினால் நித்திய பூசைகள் தடைப்படின் உடன் நிகழ்த்தப்படும் பிரதிஷ்டை அந்தரிதம் எனப் பெயர் பெறும்.

கும்பாபிஷேகம் நிகழ்வதற்கு முன்னோடியாக இடம்பெறுவது ஆலய நிர்மாணம் அல்லது புதுப்பித்தல் ஆகிய திருப்பணியாகும். இக் கைங்கரியத்தில் ஆலய அறங்காவலர்களுக்கும் ஆலயத்தில் வழிபடும் பக்தர்களுக்கும் பெரும்பங்குண்டு இதனைத் தொடர்ந்து இடம்பெறுவது கும்பாபிஷேகம் நிகழ்த்துவதற்கான முகூர்த்த நிர்ணயம் ஆகும். இக்கிரியைக்குரிய சுப முகூர்த்தம் மக்களுக்கும் கிராமத்திற்கும் நலத்தைத் தருவதாக அமைதல் வேண்டும். யாகசாலை அமைத்தல், குண்டங்களை நிர்மாணித்தல் அடுத்து இடம்பெறும் முக்கிய பணிகளாகும். ஐந்து குண்டங்கள் (பஞ்ச குண்டம்), ஒன்பது குண்டங்கள் (நவ குண்டம்), பதினேழு குண்டங்கள் (சப்ததச குண்டம்), இருபத்தைந்து குண்டங்கள் (பஞ்ச விம்ச குண்டம்), முப்பத்துமூன்று குண்டங்கள் (திரயஸ்திரிம்ச குண்டம்) என்ற எண்ணிக்கையில் வசதிக்கேற்பக் குண்டங்களை யாகசாலையில் அமைக்கலாம். குண்டங்களை நிர்மாணிப்பதற்குரிய அளவுப் பிரமாணங்களும் அமைப்புக்களும் கூறப்பட்டுள்ளன. சதுரம், யோனி, அர்த்த சந்திர, திரிகோண, விருத்த ஷடஸ்ர, பத்ம, அஷ்டாஸ்ர வடிவங்களில் குண்டங்கள் அமைக்கப்படும்.

கும்பாபிஷேகம் இடையூறின்றி நிகழ விநாயகப்பெருமானை நினைந்து நிகழ்வது கணபதி ஹோமம். இதனைத் தொடர்ந்து ஆச்சாரியவர்ணம் நிகழும். கும்பாபிஷேகத்தை நிகழ்த்தும் ஆசாரியரைத் தேர்ந்தெடுத்தலே இதன் நோக்கம். திரவிய பாகம், அனுஞ்ஞை, கிராமசாந்தி, பிரவேசபலி, ரக்ஷோக்ன ஹோமம், திசாஹோமம். சாந்திஹோமம், மூர்த்திஹோமம்,

வாஸ்துசாந்தி, நவக்கிரக மகம், மிருத்சங்கிரகணம், அங்குரார்ப்பணம், ரக்ஷாபந்தனம், ஜலாதிவாசம், (புதிய தெய்வ விக்கிரகங்களுக்காக) தான்யாதி வாசம், நயனோன்மீலனம், கிராமபிரதக்ஷிணம், சயனாரோபணம், அக்கினிகார்யம், நாமகரணம், பிம்பபிரதக்ஷிணம், பிம்பஸ்தாபனம், அஷ்டபந்தனம், எண்ணெய்க்காப்பு, பிம்பசுத்தி, ஷடத்துவநியாசம், ஸ்பர்சாகுதி, யாத்ராதானம், கும்பஉத்வாசனம், ஸ்தூபிஸ்தாபனம். இலிங்கத்திற்கு நவதநுகல்பனம், ஆவாகனம், கும்பாபிஷேகம், ஆசீர்வாதம், மகாபிஷேகம், தீபாராதனை, ஆசார்யோற்சவம், மண்டலபூசை மண்டலபூர்த்தி ஆகியவை கும்பாபிஷேகத்தின் முக்கிய கிரியைகளாகக் கொள்ளப்படுவன. யாகசாலையிலும் ஆலயத்திலும் நிகழும் பல்வேறு கிரியைகள், வைதிகசமய மரபினதும் ஆகமங்கூறும் சமய மரபினதும் இணைப்பை உணர்த்திநிற்கின்றன. கும்பாபிஷேகக் கிரியை நிகழும்போது வேதமோதுதல், திருமுறை ஓதுதல், நாத உபாசனை போன்றவை முக்கிய அம்சங்களாக இடம்பெறுபவை. கும்பாபிஷேகக் கிரியையினால் திருக்கோயிலும் சூழலும் புனிதமடைவதுபோன்று அதில் ஈடுபடும் அனைவரது உள்ளங்களும் நிறைவு பெறுவதும் குறிப்பிடத்தக்கது இக்கிரியை பக்தியுணர்வை ஏற்படுத்தவல்லதாகும்.

கும்பாபிஷேகக் கிரியைகள் நிறைவேறியபின்னர் இறைவன் ஆலயத்தில் சாந்நித்தியம் பெற்று அடியவர்களின் பக்திக்கு உரியவனாகின்றான் தெய்வீகப் பொலிவு பெற்று விளங்கும் இறைவனுக்குப் பல்வகை உபசாரங்களும் அபிஷேகம், அலங்காரம், நிவேதனம், அர்ச்சனை, தோத்திரம் போன்றவையும் முறையாக இடம்பெறுவன. ஆகம வழிபாட்டு மரபிற்கு யசுர் வேதமும் முன்னோடியாக விளங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது. யசுர் வேதத்தில் இடம்பெறும் சதருத்திரியம் இவ்வகையிற் குறிப்பிடத் தக்கதாகும். இம்மரபு ஆலய வழிபாட்டில் உயர் தனியிடத்தைப் பெறுவதோடு தென்னாட்டுத் திருக்கோயில் வழிபாட்டிலும் பெரிதும் கையாளப்படுகிறது. இவ்வழிபாட்டு முறை தெய்வங்களை வசீகரித்துத் தன் உள்ளத்தில் வயமாக்கும் முறையைச் சார்ந்து நிற்பதாகும். வழிபடப்படும் தெய்வத்தைக் குறித்துப் பல பெயர்களைக் கூறும் இப்புதியதொரு முறை யசுர் வேதத்தில் தான் முதன்முறையாகக் குறிப்பிடப்படுகின்றது. யசுர்வேதத்தில் சதருத்திரியம் என்ற பகுதியில் உருத்திரன் என்ற தெய்

வம் நூறு பெயர்கள் கொண்டு வழிபடப்படுகிறான். இப்பெயர்களில் சில சிறப்புப் பெயர்கள், சில தெய்வங்களின் காரணப் பெயர்கள், சில தெய்வங்களின் பண்பைச் சுட்டுவன. இத்தகைய பெயர்கள் நூறாகவும் ஆயிரமாகவும் தொகுக்கப்பட்டுப் புராணங்களில் காணப்படுகின்றன. ஆகம மரபில் தென்னாட்டு ஆலயங்களில் நிகழும் நித்திய வழிபாட்டில் இத்தகைய பல பெயர்களைக் கொண்டு இறைவனைச் சிறப்பித்து வழிபடும் முறை அர்ச்சனை எனப்படுவதாகும். அஷ்டோத்திரம், சஹஸ்ரநாமம், லட்சார்ச்சனை, கோடியர்ச்சனை என இவை விரிவுபெறுகின்றன. இம்மரபிலும், வைதீக, ஆகமக் கிரியை மரபுகளின் சங்கமத்தைக் காண்கின்றோம். மந்திரங்களை உச்சாடனம் செய்து வழிபடும் முறைகள் இரு சமய மரபுகளிலும் சிறப்புற்று விளங்குகின்றன. தோத்திரங்களைக் கூறி வழிபடும் முறையும் பொதுவாகவுள்ளது. ஆகம வழிபாட்டு மரபில் இசையுடன் பாடல்களைப் பாடும் மரபுக்குச் சாமவேதம் முன்னோடியாக விளங்கியிருக்கலாம்.

ஆகம மரபில் இறைவனுக்கு நிகழும் உபசாரங்களிலும் பஞ்சபூத அம்சங்கள் விரவியுள்ளன. திரவியங்கள், சந்தனம், கிழங்கு, பழம், புஷ்பம் இவைகளில் செய்யப்பெறுவன பார்த்திப உபசாரம். இவை மண்ணின் தொடர்பைக் காட்டுவன தீர்த்தம், பால், தயிர் போன்றவை நீரின் உபசாரமாக அமைவன. நவாக்தினம், தீபம் போன்றவை ஆக்னேய உபசாரம். அக்கினியின் தொடர்பைச் சுட்டுவன. தூபம் சாமரம், வாயு உபசாரங்களாகும். மணி, கானம் முதலியன ஆகாய சம்பந்தமான உபசாரம். எனவே, இறைவனுக்குச் செய்யப்படும் அனைத்து உபசாரங்களும் ஐம்பூத ஆக்கமாக விளங்குகின்றன். தென்னாட்டில் விளங்கும் பஞ்சபூதத் தலங்களும் இவ்வகையில் குறிப்பிடத்தக்கன. திருவாரூர் பிருதிவித்தலமாகவும் திருவானைக்கா அப்புத்தலமாகவும் திருவண்ணாமலை தேயுத்தலமாகவும் காளத்தி வாயுத் தலமாகவும் சிதம்பரம் ஆகாயத்தலமாகவும் சிறப்பிக்கப்படுகின்றன.

கும்பாபிஷேகம் முறையாக நிறைவேறியபின் அஷ்டபந்தனம் சாத்திய தோஷநிவாரணத்தின் பொருட்டும் கும்பாபிஷேகம் செய்த பயனை அடைவதன் பொருட்டும் அவசியம் செய்யப்படுவதே மண்டலாபிஷேகமாகும். ஒரு மண்டலம் 45 நாட்

களைக் கொண்டது. சிலர் 48 நாட்களாகவும் கொள்வர். இவற்றில் உத்தமமானது 45 நாட்களைக் கொண்ட மண்டலமாகும். 48, 45, 24, 15, 12, 10 என மண்டலாபிஷேகத்தை அரைவாசி கால் வாசி என்ற கணக்கிலும் செய்யலாமெனக் கூறப்பட்டுள்ளது. மண்டலாபிஷேகம் சங்காபிஷேகத்துடன் பூர்த்தியடையும்.

திருக்கோயில்களில் எழுந்தருளியுள்ள மூர்த்திகளுக்கு நிகழ்த் தப்படும் கிரியைகளின் உயிர்நாடியாக விளங்குவது மந்திரமா கும். கிரியைகளில் ஈடுபடும் ஒருவனுக்குப் புற அடக்கமும் அக அடக்கமும் படிப்படியாக ஏற்படும். முதலில் வெளி அடக்கம் உண்டானால்தான் படிப்படியாக உள்ளடக்கம் சித்திக்கும். இந்த அடிப்படைத் தத்துவமே ஆகமம் விதிக்கும் கிரியைகளில் விரவி நிற்பதைக் காணலாம். கிரியை நெறியில் தொடர்ந்து ஈடுபடுவதன் மூலம் ஏற்படும் முதிர்ச்சியின் விளைவாகக் கிரியை பற்றிய அறிவும் அனுபவமும் ஏற்படும். இவ்விரண்டினாற் பதி பக்குவமும் இறுதியில் சித்தசுத்தியும் உரிய வேளையில் ஏற்படும் பொழுது மறைபொருளாய் உணர்த்தப்படும் தத்துவங்கள் ஒவ் வொன்றாகத் தானே விளக்கம் பெறும். எமது உள்ளத்திலே சித்தசுத்தியை ஏற்படுத்த சமயக் கிரியைகள் பெருந்துணை நிற் பன. பக்தியுடன் நல்ல கிரியைகளில் மனம் ஈடுபாடு கொள்ளு மிடத்து உள்ளத்தில் ஓர் நிறைவான உணர்வு மேலிடுகின்றது. இவ்வுயர் நோக்கத்திற்காகவே சமயக் கிரியைகள் எம்மிடத்தே நிலைபெற்று விளங்குகின்றன.

கிரியைகளின் இத்தகைய சிறப்பினைக் கருத்திற் கொண்டே சைவசித்தாந்த சாத்திர நூல்களில் ஒன்றாகிய சிவப்பிரகாசம், அதனைப் பின்வருமாறு சிறப்பித்துக் கூறுகின்றது.

கிரியையென மருவுமவை யாவும்
ஞானம் கிடைத்தற்கு நிமித்தம்

அந் நூலின் பாயிரத்தில் வரும் இக் கருத்து இங்கு குறிப் பிடத்தக்கதொன்று. இதன்படி ஆகம நூல்களில் கிரியை எனச் சொல்லப்பட்டுப் பொருந்தியிருப்பனயாவும் ஞானம் கிடைப்பதற்குக் காரணமாக அமைவனவாகும். கிரியைகளின் இத்தகைய புனிதத்துவம் கருதியே திருக்கோயில்களில் பணி செய்பவர்களும், வழிபடுவோரும் தாம் மேற்கொள்ளும் பணிக ளும் வழிபாடும் பயன்பெறும் பொருட்டுத் தம் சிந்தனை, சொல், செயல் ஆகியவற்றைத் தூய்மை செய்து தம்மைப் பக்குவப் படுத்திக்கொள்ள வேண்டியவர்களாகின்றனர்.

திருக்கோயில்கள் ஆகம மரபு பேணப்படும் தூய்மையான இடங்களாகும். மந்திரசக்தி எங்கணும் பரவி, தெய்வீக உபாசனை நிகழும் இடமாகவும் அது விளங்குகின்றது. அங்கு இறைவனது திருவருட்சக்தி வெளிப்பட்டு நிற்கும். ஆகவேதான் கிரியைகள் நிகழும் இடமாகிய ஆலயம் தூய்மையாகவும் அமைதியாகவும் விளங்கவேண்டுமென வற்புறுத்தப்படுகின்றது.

ஆகமக் கிரியைகள் புலன்களைச் சிவநெறியிற் செலுத்துவன. கிரியைகட்கு உயிராகிய மந்திரமும் பாவனையும் புலன்களைச் சிவமயமாக்கும். இத்தகைய ஆற்றல் வாய்ந்த கிரியைகளில் மந்திர உச்சாடனங்கள் முறையாக இடம்பெறவேண்டியவை. வைதிக மரபிலும் ஆகம மரபிலும் நிகழும் கிரியைகளுக்குரிய பொது அம்சம் இந்த மந்திர உச்சாடனமேயாகும். கிரியைகளில் மந்திரம் பெறும் முக்கியத்துவத்தினையும் அதன் சிறப்பையும் அம்மந்திரத்தை உச்சாடனஞ் செய்வதனால் ஏற்படும் பயன்களையும் சிந்திப்பது பொருத்தமாகும்.

'மந்திரமின்றேல் கிரியைகளில்லை' எனக் கூறுமளவிற்குச் சிவாகம மரபில் மந்திரங்கள் சிறப்பிடம் பெறுகின்றன, மந்திரம் தெய்வீக அம்சம் பொருந்தியதோடு இறைவனையே மூலமாகக் கொண்டெழுந்ததெனப் பெரியோர் கூறுவர். மந்திரங்களை உபதேச முறையில் பெறுவதற்கும் அவற்றை உரியவாறு உச்சாடனம் செய்வதற்கும் பல்வேறு தகுதிப்பாடுகள் உண்டு. வேத மந்திரங்களைத் தமது உள்ளத்தில் உணர்ந்தவர்கள் இருஷிகள் எனப் போற்றுவர். உள்ளத்தில் தெய்வீக அனுபவத்தை ஏற்படுத்தவும் பெற்ற அந்த அனுபவத்தை பிறர் நன்மை பொருட்டு வெளிப்படுத்தவும் உள்ளத்தை இறைவன்பால் ஈடுபாடு கொள்ளச் செய்யவும் உயர்ந்த மன ஈடுபாட்டினால் இறைவனை உணரவும் தெய்வீக சக்தியை ஏற்படுத்தவும், மந்திரங்கள் உச்சரிக்கப்படுகின்றன எனக் கூறலாம். ஆகவேதான் மந்திரங்கள் தெய்வீக சக்திவாய்ந்தவை என நம்பப்படுகின்றன.

மந்திரங்கள் அட்சர வடிவமானவை. ஒவ்வொரு தெய்வத்திற்கும் மூல மந்திரம் உண்டு. மந்திரங்களுக்கு முக்கியமானது உச்சரிப்பு. வேத மந்திரங்களுக்கு உச்சரிப்போடு ஸ்வரமும் முக்கியமாகும். முறையான உச்சரிப்பே மந்திரங்களுக்குச் சக்தியைக் கொடுக்கக்கூடியது. ஆகவே, ஒரு மந்திரத்தை உச்சரிப்பவரின் தகுதியைப் பொறுத்தும் உச்சரிக்கவேண்டிய முறைகளின்

லுமே அந்த மந்திரத்தின் சக்தியால் பலன் ஏற்படுகின்றது. இம் மந்திரங்களைத் தெய்வீக சாந்நித்தியம் மிக்க இறைவன்சந்நிதியில் நிகழும் கிரியைகளின் போது உரிய முறையில் உச்சரிப்பதன் மூலம் புனிதத்துவமும் அமைதியும் ஏற்பட வழிபிறக்கும்.

மந்திர சப்தம் நித்தியமானது; அழிவில்லாதது. அத்தகைய மந்திர சப்தங்களே கிரியைகளுக்குரிய ஆதார சுருதியாகும். இக்காரணம் பற்றியே வேத மந்திரங்களின் உச்சாடனங்களை அறியவும் ஆகமக் கிரியைகளில் மந்திரப் பிரயோகங்களை உரியவாறு உணரவும் பயிற்சி இன்றியமையாததாக அமைகின்றது. சிவாசாரியர் என்ற ஆசாரிய தகுதிப்பாட்டினை ஒருவர் பெறுமுன்பு சற்குருவை நாடி மந்திரமரபு, உச்சாடனம் மற்றும் பிரயோக முறைகள், நுட்பங்கள் ஆகியவற்றை அறிந்து தம்மைத் தகுதியுடையவர்களாக ஆக்கிக் கொள்ளவேண்டியவராக உள்ளார். இத்தகைய பயிற்சி முறை குருகுல வாசத்தினுல் மரபு வழியாகப் பெறப்பட்டு வந்தது. தந்தை மைந்தனுக்குப் பயிற்றுவிப்பதன் மூலமாகவும் இப்பயிற்சி இடம் பெற்றது. 'குரு இல்லா வித்தை பாழ்' என்ற முதுமொழிக்கேற்ப ஆகமக் கிரியைகளைப் பொறுத்தவரை குருவின் வழிகாட்டல் இன்றியமையாத தொன்ருகக் கருதப்பட்டு வந்தது. இத்தகைய பயிற்சி முறையினுல் பெறப்பட்ட அநுபவமே ஆகமக் கிரியைகளை முறையாக இயற்றுவதற்கு உறுதுணையாக அமைந்தது.

தெய்விகசக்தி பொருந்திய வேதாகம மந்திரங்களைத் திருக்கோயிற் கிரியைகளின்போது உச்சரிக்கும் பொழுது கல்லினுலும் உலோகத்தினுலும் உருவாக்கப்பட்ட விக்கிரகங்கள் தெய்வீகப் பொலிவு பெறுகின்றன; கிரியை நிகழும் இடத்தைத் தூய்மைப் படுத்துகின்றன. கிரியைகளுடன் தொடர்புடையவர்களது அகத்தையும் புறத்தையுக் தூய்மைப்படுத்துகின்றன. கிரியைகளுக்குரிய பொருட்களைத் தூய்மைப்படுத்துகின்றன. சிவசின்னங்களில் ஒன்ருகிய திருநீற்றையே சம்பந்தர் 'மந்திரமாவது நீறு' எனப் போற்றுகின்றமை இங்கு சிந்தனைக்குரியது. திருநீற்றினை மந்திரத்தின் சத்தியாகவே கொள்கின்ருர். சிவாயநம என்பது சிவ மந்திரமாகும். 'சிவாயநமவென்று சிந்தித் திருப்போர்க்கு அபாயம் ஒருநாளும் இல்லை' என்றழைப்பது நல்வழி. இவ்வைந்தெழுத்துக்களும் சைவசமயத்தின் உட்கிடையினையும் விரிவினையும் விளக்கும் மூலமந்திரங்களாகும். நான்கு மறைகட்கும்

மெய்ப்பொருளாகவும் நற்றுணையாகவும் நிற்கும் நமச்சிவாய மந்திரத்தைத் திருமூலர் இவ்வுலகுக்கு ஒரு கனி என்பர். சிவாயநம என்னும் திருவைந்தெழுத்தே திருவடிவுணர்வாகும். இம்மூல மந்திரத்தால் திருவருட்பேறு சித்திக்கும்.

'ஓம்' என்ற பிரணவ ஒலி எழுப்பி மந்திரங்கள் உச்சரிக்கப்படுவதும் 'நம:' எனக் கூறி வழிபடுவதும் மந்திரங்களில் நாம் காணும் முக்கிய அம்சங்கள், அவ்வத் தெய்வங்களுக்குரிய மூல மந்திரங்களும் தியானமும் இக்கிரியையின் போது சிறப்பாக உச்சரிக்கப்படுவன.

இவ்வாறாக அமையும் மந்திரங்களின் சிறப்பினை உணர்ந்து கிரியைகளில் நாம் ஈடுபடுதல் வேண்டும். மந்திரங்கள் உயிரையும் உயிரின் உடம்பையும் செம்பொருளாக்கும் திறம் பெற்றவை. எனவே, அவற்றின் சிறப்பைச் சமயவழி நிற்கும் அனைவரும் உணர்ந்து நயத்தல் வேண்டும்.

இவ்வாறு மந்திரச் சிறப்புடன் கூடிய ஆலயக் கிரியைகளில் உன்னதமாக விளங்கும் கும்பாபிஷேகம் என்னும் பிரதிஷ்டைக் கிரியைகளில் வேத நெறியும் ஆகம நெறியும் கூறும் சமயமரபு சங்கமமாகின்ற உயர்நிலையை அவதானிக்க முடிகின்றது. இயற்கைச் சக்திகளைத் தெய்வீக நிலைப்படுத்தி வழிபடுதல், அக்கினி வழிபாடு, மந்திர உச்சாடனம், அருச்சனை, தோத்திரம் போன்ற அம்சங்களில் இவற்றின் சிறப்பினை நாம் உணரலாம். எனவே, ஆலயக் கிரியைகள் நீண்டகாலப் பாரம்பரிய உணர்வின் நிகழ்காலச் சின்னங்களாக அமைந்து பக்தி உணர்வை வளர்ப்பதோடு ஆன்மீக ஈடேற்றத்திற்கும் உதவுவனவாக உள்ளன. எமது சமயப் பாரம்பரியத்தில் உன்னத வழிமுறைகளாகவே ஆலயக் கிரியைகள் அமைந்து விளங்குகின்றன.

## அடிக்குறிப்புகள்

இரகுநாதக் குருக்கள், ச. ''வேதாகம சம்மேளன பிரதிஷ்டா கிரியா விளக்கம்'', ஸ்ரீமுன்னேஸ்வர கும்பாபிஷேக மலர், முன்னேஸ்வரம். 1983.

இருக்கு வேதம், தாமோதர பட்டர், ஸ்ரீபாதசர்மா (பதி). 1957.

கணபதிப்பிள்ளை, பண்டிதமணி சி., சிந்தனைக் களஞ்சியம், பாராட்டுவிழாச் சபை வெளியீடு 3, சுன்னுகம் 1978.

கைலாசநாதக் குருக்கள், கா., வடமொழி இலக்கிய வரலாறு, கலா நிலையம், கொழும்பு. 1962.

கைலாசநாதக் குருக்கள், கா., "கும்பாபிஷேகம்" பேராதனை முருகன் கும்பாபிஷேக மலர், இந்து தருமம், இந்து மாணவர் சங்கம், இலங்கைப் பல்கலைக்கழகம், பேராதனை. 1968.

சுப்பிரமணிய பாரதி, சி., பாரதி நூல்கள், வசனங்கள், வேத ரிஷிகளின் கவிதைகள்.

முத்துப்பிள்ளை, சி., சிறப்புமிக்க சிவாலயங்கள், பைலட் பப்ளி கேஷன்ஸ், சென்னை. 1978.

Bose, A. C., **Call of the Vedas**, Bharatiya Vidya Bhavan, Bombay. 1970.

Macdonell, A. A., **A Vedic Reader For Students,** Oxford University, 1968.

# காலந்தோறும் விநாயகர் வழிபாடு

## 4

ஆகமங்கள் வகுத்துக் கூறும் திருக்கோயில் வழிபாட்டிற்கு நிலைக்களனாக விளங்குபவை இறைவனது திருவுருவங்களாகும். இறைவனது தெய்விக சாந்நியத்தை ஏற்படுத்த வல்ல கிரியைகள் திருவுருவங்களிலேயே நடைபெறுவன. ஆகம வழிபாட்டில் இடம்பெறும் திருவுருவங்களில் முதன்மை பெறுபவர் விநாயகர். கிரியைகளிலும் விநாயகரே முதன்மையான வழிபாட்டிற்குரியவராவர். ஆகமங் கூறும் சமய வழிபாட்டில் விநாயகர் வழிபாடு முதன்மை பெற்று விளங்குகின்றது. விநாயகர் வழிபாட்டின் சிறப்பை வரலாற்று நோக்கில் ஆராய்வதே இக்கட்டுரையின் முக்கிய நோக்கமாகும்,

இந்து சமயம் பரவியுள்ள இடங்களில் இவ்வழிபாடு சிறப்படைந்துள்ளது. ஸ்ரீ சங்கரர் மீள நிறுவிய ஷண்மதங்களுள், காணுபத்தியம் ஒரு நெறியாக அமையினும் விநாயகரைத் தலைமைத் தெய்வமாகக் கொண்டு நிகழும் வழிபாடு, கோயில்களிலும் இல்லங்களிலும் காலங்காலமாக முதன்மை பெற்று வருகிறது. கணபதிக்குரிய வழிபாடு சாதாரணமாக ஆற்றோரங்களிலும் குளக்கரைகளிலும் புனிதமான மரங்களுக்கடியிலும் சந்திகளிலும் இடம்பெறுவதைக் கொண்டு, இவ்வழிபாடு எங்கணும் பரவிய தன்மையை நாம் உணர முடிகிறது. தமது நாளாந்த வாழ்க்கையில், மேற்கொள்ளும் ஒவ்வொரு முயற்சியும் இன்னல் இடையூறின்றி நிறைவு பெறவேண்டும் என்ற நோக்கத்தினை அடிப்படையாகக் கொண்டே இந்துக்கள் இத்தெய்வத்தை வழிபட்டு வருகின்றனர். விநாயகருக்குரிய திருநாமங்களில் பல

இதனையே உட்பொருளாகக் கொண்டு விளங்குவதும் குறிப்பிடத் தக்கதாகும். இத்தகைய சிறப்பு மிக்க விநாயக வழிபாட்டின் ஐதீகங்களும் சமயமரபில் முக்கியத்துவம் பெறுகின்றன.

இருக்கு வேதத்தில் இத்தெய்வம் பற்றிய குறிப்புக் காணப் படுவதைக் கொண்டு இவ்வழிபாட்டின் தொன்மை வேதகாலத் துக்குரியது எனக் கூறுவர். வேத காலத் தெய்வங்களாகிய இந்திரன், பிருகஸ்பதி, உருத்திரன், மருத்துக்கள் பற்றிய வருணனை களில் கணபதியின் மூலம் இருப்பதாகச் சிலர் கருதுவர். விநாய கரின் திருவவதாரம் பற்றி மகா புராணங்களாகிய சிவபுராணம், மச்சபுராணம், வராகபுராணம், கந்தபுராணம் முதலியவற்றில் கூறப் பட்டுள்ளது. புராணங்களின்படி விநாயகர் சிவனது தெய்வீகக் குடும்பத்தில், மூத்த புதல்வராகவும் பிள்ளையாராகவும் கந்த னுக்கு மூத்தவராகவும் விளங்குகின்றார். சில கதைகளின்படி, இவர் சிவனுக்கோ அல்லது பார்வதிக்கோ மட்டும் மகனாகப் பிறந்ததாயும் வேறு சில இவ்விருவருக்கும் இவர் மகனாய்ப் பிறந்ததாகவும் கூறுகின்றன. சிவனது நெற்றியிலிருந்து இவர் பிறந்ததாக வராகபுராணம் கூறும். சுப்ரபேதாகமத்தில் சிவனும் பார்வதியும் இரு யானைகளாய் உருமாறியிருந்தபோது, விநாயகர் தோன்றினர் எனக் காணப்படுகிறது. சிவபுராணம் பல படைப்புக் காலங்களில் பல்வேறு வகையாக விநாயகர் தோன்றினர் எனக் குறிப்பிடுகின்றது விண்ணவரும் மண்ணவரும் விநாயகரைப் போற்றி வழிபட்டு நலம் பல பெற்ற வரலாறுகள் உண்டு. விநாயகரின் வழிபாட்டுச் சிறப்பு இவ்வகையில் விண்ணகத் தோடும் தொடர்புடையது. இத்தகைய விண்ணகத்துத் தெய் வீகப் பெருமைகளை முன்வைத்து மண்ணகத்தாரும் தமது வாழ் வினை வளப்படுத்திக் கொள்வதில் விநாயக வழிபாட்டையே முதன்மையாகக் கொண்டதில் வியப்பில்லை.

'கணபதியே பரம்பொருள்' என்று கோட்பாட்டு ரீதியில் காணபத்திய நெறியினர் இதனைத் தனிச் சமய நெறியாகக் கொண்டபோதும், ஏனையோர் 'விநாயகரே முதற் பொருள்' என்று பிரணவப் பொருளின் வடிவமாக வழிபடுவது குறிப்பிடத் தக்கது. 'ஓம்' என்ற ஒலி உலக விந்தே விநாயகர் என்பது பதஞ்சலி யோக சூத்திரக் கருத்து 'பிரணவப் பொருளாம் பெருந்தகை ஐங்கரன்' என்பது வெற்றிவேற்கை தரும் காப்புச் செய்யுளாகும். எத்தகைய ஐதீகங்களையும்விட, 'பிரணவ ஸ்வரூபி'

என்ற நிலையிலும் அதன் தோற்றமாகவும் அமைவதே விநாயக வடிவம் என்பது சிறந்த விளக்கமாக அமைகிறது. தேவாரம் பாடிய மூவரும் திருமந்திரம் பாடிய திருமூலரும் விநாயகரைப் பாடிப் பரவியுள்ளனர். விநாயகர் உபாசகியாகிய ஔவையார் விநாயகர் அகவல் பாடி மகிழ்ந்துள்ளார். வடமொழியிலும் செந்தமிழிலும் எழுந்த இவருக்குரிய பாமாலைகள் எண்ணிறந் தவை. தெய்வீக அற்புதங்களின் பயனாய் இவருக்குரிய காரணப் பெயர்கள் அனந்தம். தல மகத்துவத்தினால் இவருக்குரிய சிறப் புப் பெயர்களும் எண்ணற்றவை. அரித்திர கணபதி, உச்சிஷ்ட மகாகணபதி, ஏரம்பகணபதி, கங்கை கொண்ட விநாயகர், கடுக் காய் விநாயகர், கற்பக விநாயகர், சங்கட சதுர்த்தி விநாயகர், சங்கடஹர கணபதி, நிருத்த கணபதி, வலஞ்சுழி விநாயகர், பொல்லாப் பிள்ளையார், விகட சக்கர கணபதி, வித்தக கணபதி, முக்குறுணி விநாயகர் போன்ற திருநாமங்களால் தமிழகத்தில் விநாயகர் சிறப்புப் பெறுகின்றார்.[1] இலங்கையிலும் இத்தகைய சிறப்புப் பெயர்களும் காரணப் பெயர்களும் விநாயகருக்கு உண்டு. வேத விநாயகர், அரசடி விநாயகர், கற்பக விநாயகர், சித்தி விநாயகர், கைலாயப் பிள்ளையார், மருதடி விநாயகர், பரராஜ சேகரப் பிள்ளையார். அரசகேசரிப் பிள்ளையார், முறிகண்டிப் பிள்ளையார், மாமாங்கேஸ்வரப் பிள்ளையார் போன்ற நாமங்கள் குறிப்பிடற்பாலன, காடுசூழ் பிரதேசங்களிலேயே விநாயக வழி பாடு பெருமளவில் தோற்றம் பெற்றுள்ளது. 'வண்ணார்பண்ணை யில் உள்ள காட்டுத்துறை என்னுமிடத்திலுள்ள பிள்ளையார் கோயில் இவ்வகைக்குச் சிறந்த உதாரணமாகும்.[2]

இவருக்குரிய கயமுகாசுர சம்கார மூர்த்தி என்ற பெயர் சிறப்புடைத்து கயமுகனால் தேவருக்கு ஏற்பட்ட துயர் தீர்க்க இறைவனால் தோற்றுவிக்கப்பட்டவராகவும் தனக்கு மேல் தலைவன் இல்லாததை உணர்த்தும் விநாயகர் என்ற திருநாமத்தை உடைய வராகவும் விளங்குபவர். தமது வலக்கொம்பை ஒடித்து கயமு கனை வதைத்து அடியவர் துயர் தீர்த்தவர். அவனைத் தம் வாகன மாகக் கொண்டு அருள்பாலித்தவர். சிவபெருமானுடைய திரிபுர தகனத்தின் போது தேரின் அச்சு முறித்த, பெருமை இவரது தெய்வீக முதன்மைக்குரிய விளக்கமாகும். 'அச்சிறுபாக்கம்' என்ற திருத்தலம் இத்தெய்வீக வரலாற்றின் நினைவாகும். சுந் தரரும் சேரமான் பெருமாள் நாயனாரும் கைலாசம் சேருமுன்

தமது உபாசகியாகிய ஔவையாரை உடன் கைலாசம் சேர்த்த பெருமை, திருவெண்ணெய் நல்லூரிலுள்ள சிவாலயத்தில் பொல்லாப் பிள்ளையாராக எழுந்தருளி மெய்கண்ட தேவருக்கு சூர்ணிகையைச் செவியறிவுறுத்தி அருளிய அற்புதம், திருநாரையூரில் பொல்லாப் பிள்ளையாராக எழுந்தருளியிருந்து, நம்பியாண்டார் நம்பிக்குத் திருமுறை இருக்குமிடம் தெரிவித்துத் திருமுறைகண்ட பிள்ளையாராகத் திருநாமம் கொண்ட அற்புதம், காஞ்சிப் புராணம் விதந்து கூறும் விஷ்ணுவினது பாஞ்சசன்னிய சங்கைப் பெற்றுக் கொடுத்த அற்புதம், மகாபாரதம் எழுதியருளிய அற்புதம், விகடசக்கர விநாயகர், அகத்தியருக்கு அநுக்கிரகம் செய்த விநாயகர் போன்றவை விநாயக மகிமைக்குச் சிறந்த எடுத்துக் காட்டுக்கள்.

தேவாரங்களிலும் விநாயகர் பற்றிய குறிப்புகள் அவர்தம் பெருமைக்குச் சிறந்த சான்றுகள். நாவுக்கரசரது திருவதிகை வீரட்டானத்தைப் பற்றிய பதிகத்தில் 'கலமலக்கிட்டுத் திரியும் கணபதி என்னும் களிறும்'[3] என்றும் திருவீழிமிழலையில் இறைவனைப் பாடுங்கால் 'கைவேழ முகத்தவனைப் படைத்தார் போலும் கயாசுரனை அவரால் கொல்வித்தார் போலும்'[4] ஆகிய குறிப்புகளால் அப்பர் விநாயகரைப் போற்றுவது நன்கு புலனாகின்றது. விநாயகரின் வழிபாட்டுப் பெருமைக்கு இவை சான்றாகின்றன. சம்பந்தர் 'கரியின் மாமுகமுடைய கணபதி' என்று குறிப்பிடுகிறார். இவர் 'பிடியதனுருவுமை கொளமிகு கரியது' என்று திருவலிவலத்திலுள்ள இறைவனைப் பாடும் போது குறிப்பிடும் கருத்து சுப்ரபேதாகமம் விநாயகர் தோற்றம் பற்றிக் கூறும் கருத்தை ஒத்ததாக அமைகின்றமை குறிப்பிடத்தக்கது.

தமிழகத்திலும் இந்தியாவின் ஏனைய இடங்களிலும் விநாயகர் வழிபாடு சிறப்புற்று விளங்கியது போல இந்திய எல்லைகளுக்கு அப்பாலுள்ள நாடுகளிலும் சிறப்புற்று விளங்கியது. தமிழகத்திலே உழவர் தெய்வம் என்றும் யானைகள் மிகுந்த பண்டைய தமிழ் நாட்டில் விலங்கின வழிபாட்டின் அடிப்படையில் கணேசர் வழிபாடு தோன்றிற்று என்றும் பல்வேறு கருத்துக்கள் உள்ளன[5]

வடஇந்தியாவிலும் தென்னிந்தியாவிலும் திருக்கோயில் மரபு வளர்ச்சி பெற்ற காலங்களில் விநாயகரின் சிற்பங்களும் பெருமளவில் இடம்பெற வாய்ப்பேற்பட்டது. விநாயகருக்கென்றே

தனி ஆலயங்களும் புகழடைந்தன. வடஇந்தியாவில் குப்தர் காலத்தில் எழுந்த கோயில்களுள் பிற்காலக் குப்தர்களால் கி.பி. 6ஆம் நூற்றுண்டில் கட்டப்பட்ட தசாவதாரக் கோயில் குறிப்பிடத்தக்கது. சாண்சி மாவட்டத்திலுள்ள தேவகர் என்னும் இடத்தில் உள்ளது இக்கோயில். இது பஞ்சயதன வகைக் கோயில். விநாயகர், சிவன், பார்வதி, விஷ்ணு, சூரியன் ஆகிய ஐந்து கடவுளர்களின் படிமங்களும் ஒரே கோயிலில் அமைக்கப்பட்டிருத்தலால் இக்கோயில்கள் பஞ்சயதனக் கோயில் என்ற பெயர் பெற்றன. இக்கோயில்களில் கருவறையில் மூலவராகச் சிவனும் பிராகாரத்திலுள்ள நான்கு மூலைகளிலும் தனித்தனி மேடைகளில் விநாயகர், பார்வதி, விஷ்ணு, சூரியன் ஆகிய நான்கு கடவுளரும் அமைக்கப்படுவர்.[6] இங்கு விநாயகரும் இடம்பெறுவது குறிப்பிடத்தக்கது.

இந்தியாவில் ஒட்டர நாட்டுக் கோயில்களில் (ஒரிசா) மிகப் பழைமை வாய்ந்த கோயிலான பரசுராமேசுவரன் கோயில் ஏறத்தாழ கி.பி. ஐந்து அல்லது ஆறும் நூற்றுண்டில் கட்டப்பட்டிருக்க வேண்டும். இக்கோயிலின் தோற்றக் காலம் பற்றி வரலாற்றுசிரியரிடையே கருத்து வேறுபாடு நிலவுகின்றது. எவ்வாருயினும் இக்கோயிலிலும் கணேசரது உருவங்கள் செதுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. கிழக்கிலும் தெற்கிலும் உள்ள சுவர்களில் இவை செதுக்கப்பட்டுள்ளன. மண்டபத்தின் சுவர்களில் மாடக்குழி வரிசையில் ஏனைய தெய்வங்களுடன் கணேசனின் உருவமும் காணப்படுகிறது.[7] வட இந்தியாவில் குப்தர் காலத்தில் காணபத்திய வழிபாட்டு நெறி முக்கியத்துவமடைந்தது எனலாம். விநாயகரைப் பிரபஞ்சத்தின் தலைவனுகவும் மகாகணபதியாகவும் வழிபடுவது அக்கால மரபாக இருந்தது.[8]

கணேசர் வழிபாடு சிறந்து விளங்கிய இடங்களில் நேபாளமும் குறிப்பிடத்தக்கது. இங்கு பெண்கள் செவ்வாய்க்கிழமைகளில் கணேசருக்கென விரதமும் அனுட்டிப்பர். கணேசர் வழிபாடு புத்தமதத்திலும் பிரபலம் அடைந்தது புத்தர் தமது சீடனுகிய ஆனந்தனுக்கு ராஜகிருகத்தில் கணேசரின் ஹ்ருதய அனுபூதி மந்திரத்தை அருளியதாகக் கூறப்படுகின்றது. இந்த மந்திரத்திற்குரிய கணேசரின் வடிவம் பின்வருமாறு அமையும்: முக்கண், பன்னிரு கரங்கள், அவற்றில் பல்வேறு ஆயுதங்கள், நடன நிலை ஆகியவையாகும். அந்த மந்திரம் 'நமோ பகவதே சூர்ய கணபதி

ஹ்ருதயாய' என்று அமையும்.[9] இம்மந்திரம் நேபாளத்தில் வழக்கில் உள்ளது. மகாயான பௌத்தரிடையே நேபாளத்தில் கணேசர் சிங்கத்தில் அமர்ந்தவராக ஹேரம்ப கணபதியாக விளங்கும் வடிவம் சிறப்பானதாகும். பௌத்தர்களின் கோட்பாட்டின்படி கணபதி யோக நிலையில் புத்தி தரும் தெய்வமாகவும் சித்தி தரும் சித்திதாதாவாகவும் காவற்றெய்வமாகவும் விளங்குகின்றார்.[10] புத்தமதம் மற்றைய நாடுகளில் பரவத் தொடங்கிய காலத்தில் அது கணபதி கோட்பாடு அடங்கிய சில இந்து மதக் கூறுபாடுகளையும் தன்னுடன் கொண்டு சென்றது எனக் கொள்வதில் தவறில்லை. சீனாவில் பௌத்த சந்நியாசிகள் தாந்திரிக அடிப்படையிலான செயல் முறைகளையும் மூலநூல்களையும் பரப்பிய போது அவற்றிலிருந்து சேர்க்கப்பட்ட பகுதிகளில் விநாயகருக்குரிய இடம் கொடுக்கப்பட்டுள்ளது.[11] திபெத், மங்கோலியா, கம்போடியா, சீனா, ஜப்பான் ஆகிய இடங்களில் விநாயக வழிபாடு காணப்பட்டுள்ளது. இந்தோனேஷியாவில் பஞ்சமுக கணபதியாகவும் திபெத்தில் நிருத்திய கணபதியாகவும் விளங்கும் நிலையுள்ளது.[12]

இலங்கை வரலாற்றில் அநுராதபுரக் காலம் எனப்படும் ஆதி காலகட்டத்தில் இந்துமதம் அழியாத ஒரு மதமாக இந்துக்கள் மத்தியில் மட்டுமல்லாது பௌத்தர்கள் மத்தியிலும் செல்வாக்குடன் இருந்து வந்தமை பற்றி வரலாற்றாய்வாளர்கள் எடுத்துக் காட்டியுள்ளனர். ஏழாம் நூற்றாண்டுக்கு முன்னர் கிடைப்பனவற்றுள் மிகிந்தலை சைத்தியத்தின் 'வாகல்கட' என்னும் வாசற்புறத் தூணில் இடம்பெறும் பிள்ளையார் (கணேசர்) சிற்பம் குறிப்பிடத்தக்கது. கி. பி. மூன்றாம் நூற்றாண்டளவில் இலங்கையில் பௌத்தர் மத்தியில் இத்தெய்வத்துக்கு இருந்த செல்வாக்கை மிகிந்தலையில் உள்ள புடைப்புச் சிற்பம் காட்டுவதாக அறிஞர் கருத்துத் தெரிவித்துள்ளனர்.[13]

இலக்கிய, சிற்பச் சான்றுகளின்படி விநாயகர் வழிபாடு பல்லவர் காலத்தில் தமிழகத்திற் பரவியமை தெரியவருகின்றது. முதலாம் நரசிம்ம பல்லவன் சாளுக்கிய நாட்டை வென்று வாதாபியிலிருந்து விநாயகர் சிற்பம் ஒன்றைத் தமிழகத்திற்குக் கொண்டு வந்தான் எனவும் இச்சிற்பம் தற்பொழுது திருச்செங்காட்டாங்குடியில் உள்ளது எனவும் கூறப்படுகின்றது. சாளுக்கிய நாட்டில் கி.பி. 6ஆம், 7ஆம் நூற்றாண்டிடுக்குரிய விநாயகர் சிற்பங்கள்

உள்ளன. இவற்றில் விநாயகரைச் சப்த கன்னியருடன் அமைத்தல் வழக்கமாகும். இராஜசிம்மனால் காஞ்சியில் கட்டப்பட்ட கைலாச நாதர் கோயிலிலும் இத்தகைய சிற்பம் இடம்பெற்றுள்ளமை குறிப் பிடத்தக்கது. காஞ்சியில் உள்ள கோயில்களாகிய திரிபுராந்த கேசுவரரின் கோயில், மாதங்கேஸ்வரன் கோயில் ஆகியவற்றில் அர்த்தமண்டபத்தில் தென்புறச் சுவர்களில் விநாயகர் சிற்பங் கள் செதுக்கப்பட்டுள்ளன. திரிபுராந்தகேசுவரர் கோயிலில் கருவறை, அர்த்தமண்டபம் முதலியவற்றின் மூன்று வெளிப்புறச் சுவர்களிலும் சிறிய அளவில் பல விநாயகர் சிற்பங்கள் இடம் பெற்றுள்ளன. பிற்காலப் பல்லவர் காலத்தில் கட்டப்பட்ட திருத்தணி வீரட்டானேசுவரர் கோயிலின் தென்புறச் சுவரிலும் கணேசர் சிற்பம் உள்ளது. பல்லவர் கால விநாயகர் சிற்பங்கள் அமர்ந்த நிலைச் சிற்பங்களாகும். நாற்கரங்கள் மேலிரு கரங்களில் பாசம், அங்குசம் ஆகியவை விளங்குவன. கீழ்ப்புற வலக்கையில் ஒடித்த தந்தம், கீழ்ப்புற இடக்கையில் மோதகம் ஆகியவை திகழ் கின்றன. முற்காலப் பாண்டியர், முத்தரையர்கள் காலக் குடை வரைக் கோயில்களுள், திருக்கோகரணம், குன்றாண்டார் கோயில் ஆகியவற்றில் கணேசர் சிற்பங்கள் செதுக்கப்பட்டுள்ளன. பாண் டிய நாட்டில் குன்றக்குடி, பிள்ளையார்பட்டி, திருப்பரங்குன்றம் ஆகிய இடங்களிலுள்ள குகைக் கோயில்களில் கணேசர் சிற்பங் கள் உண்டு. பிள்ளையார் பட்டியிலுள்ள சிற்பம் கி. பி. 6ஆம் நூற்றாண்டைச் சார்ந்தது என்றும் சிலர் கருதுவர்.[14]

சோழர் காலக் கோயில்களின் அர்த்தமண்டபத்தின் தென் புறத்தில் உள்ள தேவகோட்டத்தில், அமர்ந்த நிலையில் விநாய கரை நிறுவுதல் வழக்கமாக இருந்தது. முற்காலச் சோழர் கட் டிய கோயில்களில் பரிவாரக் கோயில்களுள் விநாயகருக்கென ஒன்று அமைக்கப்பட்டது. விநாயகரது செப்புத்திருமேனிகளும் சோழர் காலக் கோயில்களில் இடம்பெற்றன. இவை பெரும் பாலும் நின்ற நிலையில் உள்ளன. விசய நகர, நாயக்க மன்னர் காலத்திலும் கணேசனின் பல்வகைச் சிற்பங்களும் செப்புத் திரு மேனிகளும் கோயில்களில் இடம்பெற்றன. அவற்றுள் சக்தி கண பதி, நாட்டிய கணபதி, உச்சிஷ்ட கணபதி, ஏரம்ப கணபதி முதலியவை குறிப்பிடத்தக்கன.[15]

தஞ்சையில் திருவலஞ்சுழி என்னுமிடத்தில் துதிக்கை வலப் பக்கமாக அமைந்த விநாயகர் வடிவம் உள்ளது. சாதாரண

கடலை அளவு உள்ள பிள்ளையார் ஹம்பியில் உள்ளார். பவானி என்ற இடத்தில் கலைமகள் போன்று வீணையேந்திய நிலையிலும் ஆந்திரா மாநிலத்தில் உள்ள திருப்பருப்பதம் என்ற இடத்தில் குழலூதும் நிலையிலும் உள்ளார். சிங்கத்தின் மீது அமர்ந்து பஞ்ச முகங்களுடன் கூடியவராகத் திருவெற்றியூரில் காட்சி தருகின்றார் மகாராஷ்டிரத்தில் மார்கோவன் என்னுமிடத்தில் அஷ்ட விநாயகராகத் தோற்றமளிக்கின்றார். அம்மை அப்பரை வலம் வந்து மாம்பழம் பெற்ற ஐதீகத்தைக் குறிக்கும் நிலையில் வட ஆர்க்காடு திருவலம் என்ற இடத்தில்இவர் எழுந்தருளியுள்ளார்.[16]

தமிழகத்தில் விநாயகர் பெரும்பாலும் பிரமச்சாரியாக விளங்க வடநாட்டில் தேவியரோடு வழிபடப்படுவது குறிப்பிடத் தக்கது. பிள்ளையார் சித்தி, புத்தி என்னும் இரு சக்திகளோடு கூடியவராகவும் வழிபடப்படுகின்றார். அறிவிற்கும் வெற்றிக்கும் அவரே தலைவர் என்பது இதன் உட்பொருள். சக்தியோடு கூடிய பிள்ளையார் வடிவங்கள் ஐந்தாகும். உச்சிஷ்ட கணபதி, மகா கணபதி, ஊர்த்துவ கணபதி, பிங்கள கணபதி, இலட்சுமி கணபதி என்பவைகளே அவை.

நாட்டியங்களைத் தொடங்குவதற்கு முன் விநாயகப் பெருமான் முதலில் வணங்கப்பட வேண்டியவரென்றும் அவரே மகாக் கிரமணி என்றும் தமது நாட்டிய சாஸ்திரத்தில் பரதர் குறிப்பிடுகின்றார்.[17]

விநாயகருக்குரிய வழிபாட்டில் சுக்கிர வாரம், மாதந்தோறும் வரும் சதுர்த்தி விரதம், ஆவணி மாத விநாயகர் சதுர்த்தி விசேடமானவை, விநாயகர் ஆலயங்களில் இத்தினங்களில் அபிடேகம் ஆராதனை, திருவுலா போன்றவை நிகழும். விநாயக ஷஷ்டி விரதமும் மிகவும் சிறப்புடையது. ஷஷ்டி, விநாயகரையும் கந்தனையும் தியானஞ் செய்யும் நாளாகும். ஐப்பசி மாதத்தில் வருவது கந்த ஷஷ்டியாகும். திருக்கார்த்திகைக்கு மறு நாள் தொடங்கி இருபத்தொரு நாட்கள் கழிந்து வரும் ஷஷ்டியும் சதய நட்சத்திரமும் கூடிய தினத்தன்று வரை விநாயகரை வழிபடும் விரதம் 'விநாயக ஷஷ்டி விரதம்' என்று கூறப்படும். இக்காலங்களில் கோயில்களில் விநாயகருக்கு விசேட அபிடேக ஆராதனைகளும் விநாயகர் அவதாரஞ் செய்த கதை படிப்பதும் இருபத்தோராவது நாள் கஜமுகாசுர சம்ஹாரம் நடைபெறுத

லும் மறுநாள் இரவு குருட்டுப் பாம்பான விஷ்ணுவினது சாப விமோசனம் அளித்தலுமாகிய கிரியைகள் நடைபெறும். விநாயக ஷஷ்டி விரதத்தை அனுட்டிப்பதனுல் குருட்டுத்தன்மை, செவிட்டுத்தன்மை, சந்ததியின்மை, குடும்பச்சச்சரவு, நோய் யாவும் நீங்கிச் சுகம் பெறுவர் [18]

கோயில்களில் நைமித்திகக் கிரியைகள் நிகழ்வதற்குப் பூர்வாங்கமாக இடையூறு எதுவுமின்றி எடுத்த காரியம் நிறைவேற அருள் புரியவேண்டி நிகழ்த்தப்படும் கணபதி ஹோமமும் குறிப்பிடத்தக்கது. இதில் கணபதியை அக்கினி வடிவில் எழுந்தருளுவித்து ஹோம குண்டத்தில் உரிய அவிர்ப்பாகங்கள் வழங்கப்படுவது குறிப்பிடத்தக்கது. மோதகம், அவல், அரிசிமா, கரும்பு, வில்வம், அறுகு, வாழைப்பழம், தேங்காய் முதலிய விநாயகருக்கு உகந்த பொருட்கள் வழங்கப்படுவது சிறப்பம்சமாகும். அத்துடன் யானை ஒன்றுக்கு உரிய உபசாரங்கள் வழங்கி விநாயகராக ஆவாகனஞ் செய்து பூசை செய்து வழிபடுவதும் நிகழ்வதுண்டு விநாயகருக்கு விசேட அபிடேக ஆராதனைகள் நிகழ்த்தித் தேங்காய்கள் உடைத்து வழிபடுவதும் இடம்பெறும்.

யாழ்ப்பாணத்தில் உள்ள பெரும்பாலான ஆலயங்களில் பஞ்சமுக விநாயகர் வழிபாடு சிறப்பாக இடம்பெறுகின்றது. விநாயகப் பெருமானுக்கும் இறைவனுக்குரிய திருமுகங்கள் போல ஐந்து திருமுகங்கள் உள்ளன. பஞ்சமுகார்ச்சனை சிறப்பாக நிகழ்வதுண்டு.

விநாயகருக்குரிய காயத்திரி மந்திரம் சிறப்புடையது கணேச பஞ்சரத்தினம், விநாயகருக்குரிய சகஸ்ர நாமம் முதலியவை வழிபாட்டுக்குரியவை. வேழமுகம், விநாயகர் அஷ்டகம், விநாயக கவசம், விநாயகர் அகவல், விநாயகர் அனுபூதி போன்றவையும் விநாயகர் வழிபாட்டுக்குரிய சிறந்த தோத்திரங்களாகும். சோழர் காலத்தில் மூத்தநாயனுர் திருவிரட்டை மணிமாலை, மூத்த பிள்ளையார் மும்மணிக்கோவை, திருநாரையூர் விநாயகர் இரட்டை மணிமாலை முதலிய இலக்கியங்கள் விநாயகருடைய மகிமைகளைக் கூறுவனவாக அமைவதோடு அக்காலத்தில் விநாயகர் வழிபாடு சிறப்புற்றிருந்ததையும் அறிய உதவுகின்றன [19]

பாரதியாரின் 'விநாயகர் நான் மணிமாலை' விநாயகப் பெருமானின் திருவருளை வேண்டிப் போற்றும் சிறப்புடைய செஞ்

சொற் பாமாலையாகும். விநாயகர் மகிமையை அது எடுத்துக் கூறும். விநாயகரிடம் எத்தகைய வேண்டுதல்கள் செய்யவேண்டும் என்பதனைப் பின்வரும் அடிகள் விளக்குவனவாக உள்ளன:

தன்னை யாளும் சமர்த்தெனக் கருள்வாய்
தனைத்தான் ஆளும் தன்மைநான் பெற்றிடில்
எல்லாப் பயன்களும் தாமே எய்தும்:
ஒளி பெற்றுக்
கல்விபல தேர்ந்து, கடமையெல்லாம் நன்ருற்றித்
தொல்வினைக் கட்டு எல்லாம் துறந்து இங்குப்
பழியற்று வாழ்ந்திடக் கண் பார்ப்பாய்.[20]

இவ்வாறு காலந்தோறும் மகிமை பொருந்திய விநாயகர் வழிபாடு முதன்மை வழிபாடாகத் திகழ்கின்றமை குறிப்பிடத்தக்கது. தெய்வீகப் பொலிவு மிக்க விநாயகப் பெருமானுக்கு மக்கள் ஊர்தோறும் கோயில்கள் அமைத்து வழிபாடியற்றி வரும் மரபு இன்றளவும் சிறப்புடன் மிளிர்கின்றது.

## அடிக் குறிப்புகள்

1. நடராஜசிவம், சகலஸித்தி விநாயகர், நர்மதா பதிப்பகம், சென்னை. 1981. ப. 23.
2. கோபாலகிருஷ்ணன், ப., காட்டுத்துறைப் பிள்ளையார் கோவில் திருத்தல வரலாறு, வண்ணார்பண்ணை, 1988. ப. 28.
3. திருநாவுக்கரசர் தேவாரம், திருவதிகை வீரட்டானம், 4;5.
4. மேற்படி, திருத்தாண்டகம், திருவீழிமிழலை 6;4.
5. ஏகாம்பரநாதன், ஏ., கோயிலும் இறை வழிபாடும், கழக வெளியீடு, சென்னை. 1986. ப. 3.
6. தங்கவேலு, கோ., இந்தியக் கலை வரலாறு, (முதல் புத்தகம்) தமிழ்நாட்டுப் பாட நூல் நிறுவனம், சென்னை, 1976. ப. 135.
7. மேற்படி, ப. 148.

8. Ratna Ma Navaratnam, **Aum Ganesa**, Vidya Bhavan, Jaffna. 1978. P. 193.

9. **Ibid**, P. 192.

10. **Ibid**, P. 193.

11. மகாதேவன், டி. எம். பி., இந்து சமய தத்துவம், தமிழ் வெளியீட்டுக் கழகம், சென்னை. 1964. ப. 170.

12. Ratna Ma Navaratnam, **Aum Ganesa**, P. 192.

13. இந்திரபாலா, கா., "ஆதி இலங்கையில் இந்து மதம்" ஐயரத்தினம் உருவச்சிலை திறப்பு விழாச் சிறப்பு மலர், மகாஜனக் கல்லூரி, தெல்லிப்பழை. 1978. பக். 19--20.

14. ஏகாம்பரநாதன், ஏ., கோயிலும் இறைவழிபாடும், பக். 3-6.

15. மேற்படி, பக். 7.

16. நடராஜசிவம், சகலஸித்தி விநாயகர், பக் 21—22.

17. பாலசுந்தரக்குருக்கள், கு., 'விநாயக சுவரூபம்' நவாலியூர்ச் சிந்தாமணிப்பிள்ளையார் ஆலயக் கும்பாபிஷேக மலர், 1971. ப. 5.

18. சுப்பிரமணியன், கி., நியாயசிரோமணி, மேற்படி கும்பாபிஷேக மலர், பக். 42—45.

19. ஏகாம்பரநாதன், ஏ., விநாயகர் வழிபாடு, ப. 5.

20. புலியூர்க்கேசிகன், சௌபாக்கியத்திற்கு விநாயகர் வேலவர் வழிபாட்டு முறைகள், மாருதி பதிப்பகம், சென்னை. 1983. பக். 43—44.

# இந்துப் பண்பாட்டின் கருவூலமான பதினெண் புராணங்கள்

## 5

இந்து சமயம் பற்றிய விளக்கத்திற்குத் துணைபுரியும் சமய இலக்கிய வரிசையில் பதினெண் புராணங்கள் குறிப்பிடத்தக்க இடத்தைப் பெறுகின்றன. இவை இந்து சமய மரபு, வழிபாட்டு முறைகள், தெய்வஇயல், விரதமகிமை, தீர்த்தமகிமை முதலிய விடயங்களை உள்ளடக்கியனவாக விளங்கி, பக்தி நெறியை வளம் படுத்துவதில் பெரும் பங்கு வகிக்கின்றன. வேதங்களை அடுத்து முக்கியத்துவம் பெறுபவை புராணங்களே எனில் மிகையில்லை.

இந்து சமயத்தின் வளர்ச்சி நிலைகளை அறிந்துகொள்வதில் புராணங்கள் பெரிதும் உதவுகின்றன. சமயம், தத்துவம் பற்றியும் ஏனைய அம்சங்கள் பற்றியும் அவை அளப்பரிய விடயங்களை உள்ளடக்கியுள்ளன. இத்தகைய விடயங்கள் அனைத்தும் தனியொரு புராணத்தில் மட்டும் இடம் பெறுவதில்லை. புராணங்கள் அனைத்தையும் ஒன்றாகத் தொகுத்துப் பார்க்குமிடத்து அவை கலைக்களஞ்சியம்போற் காட்சிதருகின்றன. புராதன இந்துசமயம் பற்றியும் மத்திய கால இந்துசமய வளர்ச்சிபற்றியும் அறிய இவை துணைபுரிகின்றன. ஒருவகையில் இவை நூல்களைப் போன்றும் வடிவந்தாங்கியுள்ளன.

புராணம் என்ற சொல் குறிக்கும் பொருளை நாம் ஆராயுமிடத்து, வாயு புராணத்தின்படி 'புராதன காலத்திலிருந்து நடைமுறையில் இருந்து வருவது' என்ற பொருளைத் தருவதாக உள்ளது. 'கடந்தகால நிகழ்வுகளின் பதிவேடு' என்ற பொருளிலும்

புராணங்கள் விளக்கப்படுகின்றன. புராணம் என்பதைப் 'புராதனக் கதைகள்' எனவும் கூறலாம். புராணங்களுக்கு ஐவகைப் பண்புகள் கூறப்படுகின்றன. இவை பஞ்சலட்சணங்கள் எனக் குறிப்பிடப்படுகின்றன. சர்க்கம், பிரதிசர்க்கம், வம்சம், மன்வந்தரம், வம்சானுசரிதம் என்பனவே அவை படைத்தல், அழிந்து மீளவும் படைத்தல், வம்சபரம்பரை, மனுக்களின் காலம், வம்சங்களின் வரலாறு என அவற்றுக்குப் பொருள் கொள்ளலாம்.

இப்பொழுதுள்ள புராணங்களில் எவையும் இந்த வரைவிலக்கணத்தோடு ஒத்துள்ளதெனக் கூறமுடியாது. சிலவற்றிலே இவற்றைவிட மேலும் அதிகமான விடயங்கள் காணக்கிடக்கின்றன. பஞ்சலட்சணத்திற்குரிய விடயங்கள், புராணங்களில் அருகியே காணப்படுகின்றன. தானம், விரதம், தீர்த்தம், சிராத்தம் போன்ற விடயங்கள் இப்புராணங்களில் அதிகம் இடம் பெறுவதால் இந்த வரைவிலக்கணத்துள் வராத விடயங்களாக அவை உள்ளன. இந்தச் சிக்கலைத் தவிர்த்துக் கொள்ளும் வகையில், பஞ்சலட்சண வரைவிலக்கணம் உப புராணங்களுக்கேயுரியவை எனவும் மகாபுராணங்களுக்கு தசலட்சணங்கள் உண்டு எனவும் புராணங்களே விளக்கமளிக்க முற்பட்டன. இவ்வைவகை அம்சங்களோடு வாழ்க்கை பற்றி எடுத்துக் கூறும் விருத்தி, தெய்வங்களின் அவதாரம் பற்றிக் கூறும் ரக்ஷா, இறுதி இலட்சியத்தைக் கூறும் முக்தி, ஜீவனைப் பற்றிக் கூறும் ஹேது, பிரமத்தைப் பற்றிக் கூறும் அபாசிரய போன்றவையும் உள்ளன எனப் பாகவதபுராணம் குறிப்பிடுகின்றது. (XI 7.9.10) இந்தப் பண்புகள்கூடப் புராணங்கள் கொண்டு விளங்கும் பல விடயங்களைக் குறிப்பிடவில்லை. ஹரிபிரசாத் சாஸ்திரி என்பவர் மத்ஸ்ய புராணத்தில் வரும் விளக்கம் இத்தகைய வரைவிலக்கணங்களுக்கு மேலாக, புராணங்களின் உண்மைத் தன்மையை எடுத்துக் காட்டுவதாகக் குறிப்பிடுகின்றார். இதன்படி பத்துப் பண்புகள் கூறப்படுகின்றன. படைப்பு, படைப்பின் விபரங்கள், மனிதரின் கடமைகள், பக்தர்களின் பாதுகாப்பு, மனுவின் காலம், அரச, ரிஷிபரம்பரை, தனிமனித வாழ்க்கை, உலகின் அழிவு, படைப்புக்கான காரணம், பிரமன் ஆகிய விடயங்களைக் கூறுவதாகக் குறிப்பிடப்படுகின்றது. இப்பத்துப் பண்புகளைவிட பிரமன், விஷ்ணு, சூரியன், ருத்திரன் ஆகியோரைப் போற்றுதல், உலகத்தின் அழிவு, உலகத்தைத் தர்ம, அர்த்த, காம, மோட்சம் ஆகியவற்

ருல் பாதுகாத்தல் போன்ற விடயங்களும் கூறப்படுவதாக மத்ஸ்ய புராணம் குறிப்பிடுகின்றது.

இத்தகைய விரிவான வரைவிலக்கணத்துக்குள்ளும் புராணங்கள் எடுத்துக்கூறும் அனைத்து விடயங்களும் உள்ளடங்குவதாக இல்லை என்றே கூறத் தோன்றுகின்றது. புராண மரபு மகாபாரதத்தைப் போன்று காலத்துக்குக் காலம் மாற்றம் பெற்று வந்துள்ளது. பல விடயங்கள் மேன்மேலும் காலத்துக்குக் காலம் சேர்க்கப்பட்டமை, சில விடப்பட்டமை, மாற்றஞ் செய்யப்பட்டமை போலக் காணப்படுகின்றன. புராணங்களின் முக்கிய பண்புகளில் ஒன்று அவை புராதனமானவை என்பதாகும். புராதனமான எதுவும் புராணத்தின் பாற்படுவதோடு புராணம் வாழ்க்கையின் எல்லா அம்சங்களையும் உள்ளடக்கியுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

மரபுவழிக் கருத்தின்படி பதினெண் மகாபுராணங்களும் பதினெண் உபபுராணங்களும் காணப்படுகின்றன. பதினெண் புராணங்களின் வரிசை அனேகமாக எல்லாப் புராணங்களிலும் தரப்பட்டுள்ளன. பிரம, பத்ம, விஷ்ணு, வாயு, பாகவத, நாரதிய, மார்க்கண்டேய, அக்கினி, பவிஷ்ய, பிரமவைவர்த்த, வராக, லிங்க, ஸ்கந்த, வாமன, கூர்ம, மத்ஸ்ய, கருட, பிரமாண்ட புராணங்களே அவை. சில புராணங்கள் வாயு புராணத்திற்குப் பதிலாகச் சிவபுராணம் எனக் குறிப்பிடுகின்றன. உபபுராணங்களின் எண்ணிக்கையில் ஒரு சீரான ஒழுங்கு காணப்படவில்லை. உபபுராணங்கள் காலத்தால் பிற்பட்டவை. பல்வேறு அம்சங்கள் பற்றி எடுத்துக் கூறுகின்றன இவற்றில் வரலாற்று அம்சம், சற்றுக் குறைவாகவே உள்ளது. பதினெண் உபபுராணங்களாகப் பின்வருவன குறிப்பிடப்படுகின்றன. சனற்குமார, நரசிம்ம, நந்த, சிவதர்ம, துர்வாஸ, நாரதீய, கபில வாமன, உஷண, மானவ, வருண, கலி, மகேஸ்வர, சாம்ப, சௌர, பராசர, மரீச, பார்கவ என்பவையே உபபுராணங்களாகக் குறிப்பிடப்படுகின்றன.

காலத்தால் தொன்மை வாய்ந்த புராணங்களுள் வாயு, பிரமாண்ட, மத்ஸய, விஷ்ணு புராணங்கள் குறிப்பிடத்தக்கன. புராணங்கள் போற்றிக் கூறும் தெய்வங்களுக்கேற்ப அவை வகைப்படுத்தப்பட்டுள்ளன. அவை சாத்துவிக, தாமஸ, ராஜஸ புராணங்களாகவும் வகுக்கப்பட்டுள்ளன. பத்மபுராணத்தில்

வரும் குறிப்பின்படி (263, 81-84) அவை பின்வருமாறு வகுக்கப்பட்டுள்ளன:

அ) சாத்துவிக: விஷ்ணு, நாரதீய, பாகவத, கருட, பத்ம, வராக புராணங்கள்.

ஆ) தாமஸ: மத்ஸ்ய, கூர்ம, லிங்க, சிவ, அக்கினி, ஸ்கந்த புராணங்கள்.

இ) ராஜஸ: பிரமாண்ட, பிரம வைர்த்த, மார்க்கண்டேய, பிரம, வாமன, பவிஷ்ய புராணங்கள்.

ஸ்கந்த புராணத்தின்படி பத்துப் புராணங்கள் சிவனது மகிமைகளைக் கூறுவதாகவும் நான்கு பிரமனது பெருமைகளையும் இரண்டு புராணங்கள் தேவியின் சிறப்பையும் இரண்டு புராணங்கள் விஷ்ணுவின் பெருமைகளையும் போற்றுவனவாகவும் கூறப்படுகின்றது. வேறு சில அறிஞரின் கருத்துப்படி புராணங்கள் பின்வருமாறு வகைப்படுத்தப்பட்டுள்ளன:

அ) பிரமன்: பிரம, பத்ம புராணங்கள்.

ஆ) சூரியன்: பிரமவைவர்த்த புராணம்.

இ) அக்கினி: அக்கினி புராணம்.

ஈ) சிவன்: சிவ, ஸ்கந்த, லிங்க, கூர்ம, வாமன, வராக, பவிஷ்ய, மத்ஸ்ய, மார்க்கண்டேய, பிரமாண்ட புராணங்கள்.

உ) விஷ்ணு: நாரத, பாகவத, கருட, விஷ்ணு புராணங்கள்.

ஹரிபிரசாத் சாஸ்திரி ஓரளவு திருப்திகரமான முறையில் புராணங்களைப் பாகுபடுத்தியுள்ளார். புராணங்களின் உள்ளடக்கத்தை அடிப்படையாகக் கொண்டே இம் முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது. விடயங்களின் அடிப்படையில் இவை ஆறு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன:

1ஆம் பிரிவு: இப்பிரிவில் அடங்கும் புராணங்கள் கலைக்களஞ்சியப் பண்புவாய்ந்தவை. இவற்றுள் கருட, அக்கினி, நாரத போன்ற புராணங்கள் குறிப்பிடத்தக்கன. சமஸ்கிருத இலக்கியத்தில் வரும் கலைகள் மற்றும் அறிவியல் விடயங்களின் சுருக்கம் இவற்றில் காணப்படுகின்றது. புராணங்களுக்

குரிய விடயங்களுடன் மருத்துவம், இலக்கணம், நாடகம், இசை, சோதிடம் பற்றிய விடயங்களும் இவற்றில் கூறப்படுகின்றன.

2ஆம் பிரிவு: இப்பிரிவில் பத்ம, ஸ்கந்த, பவிஷ்ய புராணங்கள் அடங்குகின்றன. இவற்றில் தீர்த்தங்கள், விரதங்கள் ஆகியன பற்றிக் கூறப்படுகின்றன. காலத்துக்குக் காலம் ஏற்பட்ட மாற்றங்களினால் இப்புராணங்கள் தமது அடிப்படைப் பண்பை இழந்துவிட்டன.

3ஆம் பிரிவு: இப்பிரிவில் அடங்கும் பிரம, பாகவத, பிரமவைவர்த்த புராணங்கள் இரு பெரும் மாற்றங்களுக்குட்பட்ட நிலையைக் காட்டி நிற்கின்றன. இப் புராணங்களின் மூலப்பகுதியே புராணங்களின் மத்திய பகுதியாக அமைந்துள்ளது.

4ஆம் பிரிவு: இப்பிரிவில் பிரமாண்ட, வாயு புராணங்கள் அடங்குகின்றன. வரலாற்று முக்கியத்துவம் கொண்டவையாக இவை கருதப்படுவன. ஹரிப்பிரசாத் சாஸ்திரி மூல வாயு புராணம் அழிந்துவிட்டதாகக் குறிப்பிடுகின்றார்.

5ஆம் பிரிவு: இப்பிரிவில் லிங்க, வாமன, மார்க்கண்டேய புராணங்கள் உள்ளடங்குகின்றன. லிங்கபுராணத்தில் லிங்கபூஜை கூறப்படுகின்றது. வாமனபுராணம் சைவ வழிபாட்டு நெறிகளைக் கூறுகின்றது. மார்க்கண்டேய புராணம் தேவியின் மகிமைகளைக் கூறும்.

6ஆம் பிரிவு: இப்பிரிவில், வாரக, கூர்ம, மத்ஸ்ய புராணங்கள் அடங்குவன. இவை விஷ்ணுவின் அவதாரங்கள் பற்றிக் கூறுவன.

இவ்வகையில் பார்க்குமிடத்து, புராணங்கள் சமய முக்கியத்துவம் வாய்ந்த இலக்கியங்களாகவும் விளக்க நூல்களாகவும் காட்சி தருகின்றன. இந்துப் பண்பாட்டின் பல்வேறு அம்சங்களாகிய உலகப் படைப்பு, தெய்வங்களின் பெருமை, வரலாறு, வழிபாட்டு முறைகள், கிரியை நடைமுறைகள், தத்துவவிளக்கம், சமய அறிவுரைகள், தானம், விரதம், பக்தி, யோகம்,

விஷ்ணுவின் அவதார மகிமை, சிவனது பெருமை, மருத்துவம், இசை, காவியவியல், இலக்கணம், யாப்பியல், நாடகவியல், சோதிடக்கலை, வானவியல், கட்டிடக்கலை, சிற்பக்கலை, விக்கிரக வியல், அரசியல், அரச தர்மம் போன்ற இன்னோரன்ன விடயங் களைப் புராணங்கள் எடுத்துக் கூறுகின்றன.

இப்புராணங்களின் செல்வாக்குத் தென்னாட்டுச் சமய மரபி லும் பிரதிபலித்தது. இப்புராண மரபை அடியொற்றி எண் ணற்ற தல புராணங்கள் எழுச்சி பெற்றன, சிவனது அட்ட வீரட்டங்களைக் கூறும் புராண நிகழ்ச்சிகள் நிகழ்ந்த இடங்கள் என்ற வகையில் தென்னாட்டில் பல தலங்கள் எழுச்சி பெற்றன. பக்தியை மக்களிடையே பரப்புவதற்கு இத்தகைய புராணக் கதைகள் பெரிதும் உதவின. இப்புராண மரபின் தாக்கம் தென் னாட்டுச் சமய இலக்கியங்களிலும் காணப்படக்கூடியது. சமய உண்மைகளை நிறுவுவதற்குச் சைவ நூல்கள் புராணங்களைச் சான்றாகக் கொள்கின்றன. திருமுறைகளிலும் புராண சிந்தனை கள் காணப்படுகின்றன. தென்னாட்டுத் திருக்கோயில் வழிபாட்டு மரபிற்கும் புராணங்கள் பெரும் பங்களிப்பு நல்கியுள்ளன. தென்னாட்டிலே எழுச்சிபெற்ற கோயில்களில் உள்ள கோபுரம், விமானம் முதலியவற்றில் மிளிரும் சிற்பங்கள் புராணங்கள் கூறும் தெய்வீகக் கதைகளைச் சித்திரிக்கின்றன. புராண நிகழ்ச் சிகள் சிற்பங்களாக வடிக்கப்பட்டுள்ளன. மக்கள் மத்தியில் இறைவன் புகழையும் பக்தியையும் பரப்ப இம்முறை பெரிதும் உதவியது. இலக்கியம், கலை ஆகிய இரு துறைகளினின்றும் புராணங்களின் தொடர்பினை நீக்கிவிட்டால், அவற்றில் ஏற் படும் பள்ளங்களை நிறைவு செய்தல் மிகவும் கடினமாகும் எனக் கூறக்கூடிய வகையில் புராணங்கள் முக்கியத்துவம் பெற்று விளங்குகின்றன.

வடமொழி இதிகாச புராண மரபுகள் தமிழ்நாட்டுச் சமயத் துறையிலும் அவ்வப்போது படியத் தொடங்கியமையும் குறிப் பிடத்தக்கது. புராண மரபை அடியொற்றி எழுந்த தமிழ்ப் பேரிலக்கியங்களில் ஒன்றாகிய கந்தபுராணம் கந்தன் (ஸ்கந்த) என்ற கடவுளின் தெய்வீகப் பெருமைகளைக் கூறுவது. திருமுருகன் சிவபிரானின் ஓரம்சமே என்பதும் சிவனாகவே போற்றப்பட வேண்டியவன் என்பதும் கந்தபுராணம் முழுவதிலும் விரவிக் காணப்படும் உட்பொருளாகும். 'புராண நன்னயகம்' எனப் போற்றப்படும் கந்தபுராணம் ஒரு சைவ சமய தத்துவ நூல் என்பதோடன்றி, இந்துப் பண்பாடு சார்ந்த பல்வேறு விடயங்

களையும் உள்ளடக்கிய பண்பாட்டுக் கருவூலமாகவும் திகழ்கின்றது. சைவசித்தாந்த சிந்தனைகள், வழிபாட்டு முறைகள், அறவியற் சிந்தனைகள் ஆகிய அம்சங்கள் கொண்ட புராண நூல் என்ற வகையில் இதற்கொரு தனிச் சிறப்புண்டு. தென்னாட்டுப் புராண மரபிற்கு இந்நூல் சிறந்ததொரு எடுத்துக்காட்டு. இப் புராண இலக்கிய வடிவம் அவ்வப் பிரதேச பண்பாட்டு மரபுகளை வெளிக் கொணர்வதற்குச் சிறந்த சாதனமாக விளங்கியுள்ளது. இதே வரிசையில் பெரிய புராணம், திருவிளையாடற் புராணம் ஆகியவையும் குறிப்பிடத்தக்கவை. கந்தபுராணத்தினை நாம் சற்று விரிவாக ஆராய்வதன் மூலம் அப்புராண சிந்தனைகள் சைவ மக்களது வாழ்வில் ஏற்படுத்திய தாக்கத்தினை நாம் ஓரளவு உணரலாம்.

கந்தபுராணம் சுத்தாத்துவித சைவசித்தாந்தத்தை விளக்கிக் கூறும். அது சிந்தைக்கும் செவிக்கும் இனிய நல்மருந்தாகும். இருவினைபோக்கும் மாமருந்தாகவும் அமையும். தெளிவான அறிவுக்கு வழிவகுப்பது. நியமப்படி இதனைப் படிப்பதனால் இறைவன் திருவருட் சிந்தை கைகூடுகின்றது. வையத்து வாழ்வாங்கு வாழ வழிகாட்டுவது கந்தபுராணம். ஆறுமுகநாவலர் கந்தபுராணத்தின் சிறப்பினைக் கூறுமிடத்து:

'எத்துணைக் காலமும் திரும்பித் திரும்பிப் படிப்பினும்
கேட்பினும் எட்டுணையும் தெவிட்டாதது நித்தமமு
தூறும் அத்தியற்புத அதிமதுரத் திவ்விய வாக்காகிய
கந்தபுராணம்.'

— நாவலர் (யாழ்ப்பாணத்துச் சமயநிலை)

எனக் குறிப்பிடுகின்றார். இப்புராணத்தை மெய்யன்போடு விதிப்படி நியமமாகக் கேட்பவர்கள் நோய்நீக்கம், செல்வம், புத்திரபாக்கியம், சத்துருஜயம், இராசவசியம் முதலிய பயன்களைத் தாம் வேண்டியவாறே பெறுவார்கள் என்ற நம்பிக்கை நிலவுகின்றது.

ஈழத்தில் சைவப்பாரம்பரிய எழுச்சிக்குக் கந்தபுராணமே காரணமாக அமைந்தது எனில் மிகையில்லை. 'இந்தியாவிலோ சிவபுராணப் பிரசங்கஞ் செய்யப்படும் கோயில்கள் மிக அரியன. இத்தேசத்திலோ அது செய்யப்படாத கோயில்கள் இல்லை. இந்தியாவிலோ வித்துவான்கள் சைவ சமய குருமார் முதலியோருள்

ளுங் கந்தபுராண முதலியன அறிந்தவர் சிலர். இத்தேசத்திலோ பெண்களுள்ளும் அவையறியாதார் இலர்' என நாவலர் குறிப்பிடுகின்றார். அந்த அளவுக்கு ஆண்களும் பெண்களும் கோயிற் சந்நிதியில் புராணங்கேட்டுப் பயனடைந்து வந்துள்ளனர். கந்தபுராணத்தைச் சிறந்ததொரு சைவக் கருவூலமாகக் கொண்டு தமது காலத்தில் சைவசமயத்தைக் காக்கும் தெய்வீகப் படைக் கலமாகப் பயன்படுத்திய பெருமை நாவலர் அவர்களையே சாரும். 'ஆங்கில மோகம் அதிகரிப்பதையும் பல்வேறு சலுகைகள் வழங்கி மாற்றுச் சமயத்தவர் தூபம் இடுதலையும் கண்டு இம்மோகம் ஆண்களை விழுங்கிப் பெண்களிலும் தாவும், ''இத்தேசத்திலே பெண்களுள்ளும் புராணம் அறியாதார் இலர்'' என்ற காலம் போய் ''புராணம் அறிந்தார் இலர்'' என்ற காலம் வரலாம் என்ற எண்ணம் நாவலர் பெருமானை விழுங்கியது. கலக்கம் குடிகொண்டது' எனக் குறிப்பிடுகின்றார் இலக்கியக் கலாநிதி, பண்டிதமணி, சி. கணபதிப்பிள்ளை (கந்தபுராண வசனம், அணிந்துரை ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் சபை, மறுபதிப்பு-1981) 'மக்களை நல்வழிப்படுத்தவும் பிறவிப்பிணியைப் போக்கவும் கந்த புராணமே கைகண்ட பரம ஔஷதம் என நாவலர் உணர்ந்தார். அதனைக் கற்றோரும் மற்றோரும் ஆகிய வருங்காலத்தவர் யாவரும் எளிதிற் பயன்படுத்தற்கு ஏற்ற அநுபானம் யாதாம் என்ற சிந்தனையில் உதயமானது நாவலரது கந்தபுராண வசனம்' எனக் குறிப்பிடுகின்றார் பண்டிதமணி அவர்கள்.

'முருகக் கடவுளின் திருவருள் கைவந்த கச்சியப்பசிவாசாரிய சுவாமிகள் அருளிய பெருமையுடையது கந்தபுராணம். கந்த புராணத்திற்குப் பிறப்பிடம் கந்தசுவாமியின் திருவருள் பெருகுங் காஞ்சி மாநகரமேயாயினும் அதனைப் பிள்ளைப் பருவத்திலிருந்தே பேணும் முறையிற் பேணிவளர்த்தெடுக்கும் தலவிசேடம் படைத்தது ஈழம். சிறப்பாக யாழ்ப்பாணம்' எனக் குறிப்பிடுகின்றார் பண்டிதமணி. எமது மண்ணிலே கந்தபுராண கலாசாரம் நிலைபெறச் செய்யும் அளவிற்கு யாழ்ப்பாணத்திலே உள்ள கோயில்கள் தோறும் சுவாமி சந்நிதியில் மிக்க பக்தியுடன் புராண படனம் நிகழ்த்தும் முறை வேறு எங்கும் காணாத வகையில் சிறப்பாக நடந்தேறி வந்துள்ளது. இவ்வகையில் சமய நிலையில் மட்டுமன்றி சமூகநிலையிலும் கந்தபுராணம் பெருந்தாக்கத்தினை ஏற்படுத்தியமை புலனாகின்றது.

பதினெண் புராணங்களுள் சிவபுராணங்கள் பத்து. அவற்றுள் ஒன்று ஸ்காந்தபுராணம். சைவ சமயிக்கு, பொதுவான இலக்கணமும் இருபத்துமூன்று சிறப்பிலக்கணமும் கூறப்பட்டுள்ளன. இவை கந்தபுராண முகப்பில் சிவபுராணபடன விதியிற் காட்டப்பட்டுள்ளன. சிறப்பிலக்கணங்களுள் ஒன்று புராணபடனம். அது ஏனைய சிறப்பிலக்கணங்களையும் பொதுவிலக்கணங்களையும் வருவிக்க வல்லது. இவ்வகையில் கந்தபுராண படனம் தனிச்சிறப்பு வாய்ந்ததாகவுள்ளது. இச்சிறப்பின் காரணமாகவே திருக்கோயில், திருமடம், தீர்த்தக்கரை, யாகசாலை முதலிய புண்ணிய இடங்களிற் சிவபுராணத்தைப் பூசை செய்தலும் வாசித்துப் பொருள் சொல்லுதலும் கேட்டலும் பெரும் புண்ணியங்களென்று சாஸ்திரங்களில் விதிக்கப்பட்டுள்ளது. சைவ வாழ்வு வாழ வழிவகுப்பது கந்தபுராணம் என்பது இதனால் தெளிவாகின்றது.

கந்தபுராணம் கற்பகதரு; சைவசமயக் கருவூலம். அதற்குரிய அகச்சான்றைக் கந்தபுராணத்திலேயே நாம் காணலாம்:

இந்திர ராகிப் பார்மேல் இன்பமுற் றினிது மேவிச்
சிந்தையில் நினைந்த முற்றி சிவகதி அதனிற் சேர்வர்
அந்தமில் அவுணர் தங்கள் அடல்கெட முனிந்த செவ்வேள்
கந்தவேள் புராணந் தன்னைக் காதலித் தோது வோரே.

அசுரரின் வலிமையைக் கெடுத்து வாழ்வு கொடுத்த முருகப் பெருமானின் கந்தபுராணத்தை விரும்பிப் படிப்பவர்கள் இப்பூமியில் இந்திரர் போல் வாழ்வர்; நினைத்ததைப் பெற்று ஈற்றில் சிவகதியும் சித்திக்கும். இச் சிறப்பினாலேயே எம்மத்தியில் உள்ள கந்தன் ஆலயங்கள், சிவாலயங்கள், விநாயகராலயங்கள் ஆகியவற்றிலும் மடாலயங்களிலும் கந்தபுராணம் படித்துப் பொருள் சொல்லக் கேட்டுப் பயனடையும் மரபு நீண்டகாலமாக இருந்து வருகின்றது.

சைவப் பெரியார் சிவபாதசுந்தரனார் கந்தபுராணத்தின் சிறப்பைப் பின்வருமாறு குறிப்பிடுவார்: 'கந்தபுராணம் பெரிய புராணத்தைப் போல எம்பிரான் திருவருட் சிறப்பைக் காட்டும்; அடியாரின் அன்புத் திறத்தைக் கூறுவது; சிவஞான சித்தியாரைப் போலச் சைவசமய உண்மையைச் சொல்லித்தருவது; திருக்கோவையார் போலப் பொருளிலக்கணத்திற்கு இலக்கியமாக ஆன்ம ஈடேற்ற முறையைப் பேசுவது; மகாபாரதம் போலப் பழைய

வரலாறு கூறுவது; தேவார திருவாசகங்களைப் போலத் திவ்விய தோத்திரங்களைக் கொண்டது. அறம் நிலைபெறுதல், தவத்தின் தனிப்பெருமை, உபாசனையின் பெருமை, சிவநிந்தையின் கொடுமை, உயிர்கள் முத்திபெறும் முறை ஆகியன தெளிவாக எடுத்துக் கூறப்படுகின்றன.

சுருங்கக்கூறின் கந்தபுராணம் எமது சமயத்தின் காப்பாகும். அது எம்பண்பாட்டு மரபினை அறியப் பெரிதும் துணைபுரியும் இலக்கியமாகும்:

புன்னெறி யதனிற் செல்லும் போக்கினை விலக்கி மேலாம்
நன்னெறி யொழுகச் செய்து நவையறு காட்சி நல்கி
என்னையும் அடிய னாக்கி இருளினை நீக்கி யாண்ட
பன்னிரு தடந்தோள் வள்ளல் பாதபங் கயங்கள் போற்றி

எமது வாழ்வு அர்த்தமுள்ள சமய வாழ்வாக மலரக் கந்தபுராணம் துணை செய்யும் என்பதை இப்பாடல் சிறப்பாகக் காட்டுகின்றது.

இவ்வகையில் புராணங்கள் மக்கள் போற்றும் கலைகளுக்கும் அவர்களது சமய வாழ்க்கைக்கும் நிறைவு பயப்பனவாய், வாழ வழிகாட்டுவனவாய், வாழ்க்கையோடு பின்னிப் பிணைந்தனவாய் விளங்குகின்றன. ஆகமங்கள் சுருங்கக் கூறும் கருத்துக்களுக்குப் புராணங்கள் விளக்கங்களாக அமைந்துள்ளன. இவ்வாறு புராணங்கள் இந்துப் பண்பாட்டின் கருவூலமாக விளங்கி அதனைக் காலங்காலமாக வளம்படுத்தி வந்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

**உசாவியவை:**

ஆறுமுகநாவலர், கந்தபுராண வசனம், ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் சபை, சைவப்பிரகாச அச்சகம், யாழ்ப்பாணம். (மறுபதிப்பு), 1981.

கந்தபுராணம், (ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் பரிசோதித்தது) (8ஆம் பதி.) வித்தியாநுபாலன யந்திரசாலை, சென்னை. 1952.

**கணபதிப்பிள்ளை, பண்டிதமணி, சி., கந்தபுராண கலாசாரம், சண்முகநாத அச்சகம், யாழ்ப்பாணம். 1959.**

சிவபாதசுந்தரம், சு., கந்தபுராண விளக்கம், மெய்கண்டான் அச்சியந்திரசாலை, கொழும்பு. 1954.

சுப்பிரமணியன், நா., "கந்தபுராண ஆய்வுக்கு ஆற்றுப்படுத்தி நிற்கும் ஓர் ஆய்வு நோக்கு", கருத்தரங்குக் கட்டுரை 1989, ஈவ்லின் இரத்தினம் பல்லினப் பண்பாட்டு ஆய்வு நிறுவனம், திருநெல்வேலி. 1990. ப. 5

Pusalkar, A. D., **Studies in the Epics and Puranas**., Bombay. 1955.

**The Cultural Heritage of India**, Vol I, Ed. H. Bhattacharyya, Calcutta. 1975.

Winternitz, M., **A History of Indian Literature**, Vol. I, Part II, (Epics and Puranas), 2nd Ed. University of Calcutta, Calcutta. 1963.

# திருக்கோயில் வழிபாட்டில் மூர்த்தி தல தீர்த்த மரபு

# 6

எமது பண்பாட்டின் நிலைக்களனாக விளங்குபவை திருக்கோயில்கள். எனவே, காலங்காலமாக அவை பண்பாட்டின் உறைவிடமாகவும் சமய வாழ்க்கையின் கேந்திரமாகவும் விளங்கி வந்துள்ளன. திருக்கோயிலும் அங்கு எழுந்தருளியிருக்கும் மூர்த்தியும் தலப்பெருமைக்கு வழிவகுக்கின்றமை குறிப்பிடத்தக்கது, எனவே, திருக்கோயில் வழிபாட்டில் மூர்த்தி, தலம், தீர்த்தம் என்ற மரபு உருவாயிற்று. மூர்த்தியை வழிபடுவதற்கு ஓரிடத்திற்குச் செல்வது 'தலயாத்திரை' என்றும் 'தீர்த்தயாத்திரை' என்றும் குறிப்பிடப்படுகின்றது. இதனை 'க்ஷேத்திராடனம்' எனவும் குறிப்பிடுவர்.

புராணங்களில் இறைவனது பெருமை சிறப்பாகப் பேசப்படுகின்றது. எடுத்துக்காட்டாக விநாயகர் புராணம் விநாயகரின் மகிமைகளைக் கூறும். அதுபோன்று மகாபுராணங்கள் சிவனது அட்ட வீரட்டங்களையும் விஷ்ணுவின் தசாவதார மகிமைகளையும் கூறுகின்றன. இத்தகைய புராணமரபை அடியொற்றிப் பல தலங்கள் இந்தியாவில் எழுச்சியுற்றன. இதன் காரணமாக எண்ணற்ற தல புராணங்களும் எழலாயின. இத்தகைய தலங்கள், பல ஐதீகங்களைக் கொண்டு விளங்கியதோடு மக்கள் பக்தியுடன் யாத்திரை செய்து வழிபடும் இடங்களாகவும் திகழ்ந்தன. சிவாகமங்கள் சிறப்பித்துக் கூறும் திருவுருவ வழிபாட்

டிற்குப் புராணங்கள் கூறும் தெய்வீகக் கதைகளும் மரபுகளும் சிறந்த விளக்கமாக அமைந்தன. திருவுருவங்களுக்குரிய விளக்கங்களைப் புராணங்கள் கூற, மூர்த்தி எழுந்தருளியிருக்கும் இடத்தின் மகிமையைத் தல புராணங்கள் கூறின. புராணங்கூறும் தெய்வீகக் கதைகளுக்கேற்ற தலங்கள் சிறப்பாகத் தென்னாட்டில் எழுச்சி பெற்றன. இவற்றில் சிவமகிமைக்குரிய சிவத்தலங்களும் விஷ்ணுவின் பெருமைகூறும் வைணவத் தலங்களும் அடங்குகின்றன. விநாயகருக்குரிய தலங்களுள் திருச்சி உச்சிப் பிள்ளையார் ஆலயம் குறிப்பிடத்தக்கது.

அருளாளர்கள் சில அற்புதச் செயல்களைச் சில தலங்களில் நிகழ்த்தினர். இத்தகைய அற்புதம் நிகழ்ந்த தலங்கள் பின்னும் சிறப்பையடைந்தன. அற்புதம் நிகழ்ந்த தலங்களும் அருளாளர்களின் பாடல் பெற்ற தலங்களும் காலங்காலமாகச் சிறப்புப் பெற்று வருகின்றன. திருஞானசம்பந்தர் முதலிய நாயன்மார்களின் பாடல் பெற்ற தலங்களும் ஆழ்வார்களால் மங்களசாசனம் செய்யப்பட்ட திவ்யதேசங்களும் அருணகிரிநாதருடைய திருப்புகழைப் பெற்ற முருகனது திருப்பதிகளும் அடியவர்களது வழிபாட்டிற்கும் பக்திப் பெருக்கத்திற்கும் உரிய இடங்களாக விளங்கின. சிதம்பரம், மதுரை, திருவாரூர் போன்ற தலங்களுக்கு ஏனைய தலங்களைவிடப் பெருமை அதிகமாயிற்று. முனிவர்கள் பூசித்த தலங்கள் புராணங்களில் புகழப் பெற்றன. இவ்வாறு மூர்த்தி, தலம், தீர்த்தம் என்ற மூவகையாலும் சிறப்படைந்த 274 சிவத்தலங்கள் மிக முக்கியமானவையாகப் போற்றப்படுகின்றன. இந்தியாவிலும் இலங்கையிலும் உள்ள தலங்கள் இச்சிவத்தல எண்ணிக்கையில் இடம்பெறுகின்றன.

இந்தியாவில் தலங்களில் சிற்சில ஒவ்வொரு வகைச் சிறப்புக் காரணமாகத் தொகுதிகளாக வகுக்கப்பெற்றுப் போற்றப்படுகின்றன. எடுத்துக்காட்டாக, முத்தித் தலங்கள் என்றவகையில் காசி, காஞ்சி, வடமதுரை, அயோத்தி, பூரி, அவந்திகா, துவாரகை ஆகிய ஏழு தலங்களும் முக்கியமானவையாகும். இதேபோன்று பஞ்சபூதத் தலங்கள், தென்கைலாயத் தலங்கள், காசிக்குச் சமமான தலங்கள், பஞ்ச சபைத் தலங்கள், அட்ட வீரட்டத் தலங்கள், சப்த விடங்கத் தலங்கள் எனப் பல்வேறு வகையாகத் தலங்கள் வகுக்கப்பட்டுள்ளன. இத்தகைய தல

விசேடத்தின் பயனாய் யாத்திரிகர்கள் இவற்றைத் தரிசித்து வழி படுவது சமயச் சிறப்பு வாய்ந்த நிகழ்ச்சியாக அமைந்து விடுகின்றது.

திருக்கோயில்களில் நிகழும் கும்பாபிஷேகத்தின் போது மூன்று அம்சங்கள் மூர்த்தியில் நிலைபேறு கொள்கின்றன. திருவடிவம், யந்திரம், மந்திரம் ஆகியவையாகும். யந்திரத்தில் அமைக்கப் படும் பீஜமந்திரமும் தியான மந்திரங்களும் மூர்த்தியின் காரண சரீரமாகக் கொள்ளப்படுவன சிவாசாரியர் மந்திரம் முதலிய தியானத்தினாலும் மற்றைய கிரியைகளினாலும் இறைவனது மூர்த்தியில் ஆவாகனம் செய்யும் வகையால் அது மந்திர மூர்த்தி என்ற சிறப்பைப் பெறுகின்றது. இது மூர்த்தியின் சூக்கும நிலையாகும். மூர்த்திக்கு நிகழும் மந்திரம், பாவனை ஆகியவற்றால் அடியவர்களின் உள்ளத்தில் திருவருட் பிரகாசம் தோன்ற வழியேற்படுகின்றது. இறைவனது தூல சூக்கும நிலைகளுக்கு ஆதாரமாயுள்ளது யந்திரமாகிய காரண சரீரமாகும். மந்திரம், கிரியை, பாவனை ஆகிய மூன்றினாலும் இறைவனது திருவடிவத்தில் தெய்வ சாந்நித்தியம் ஏற்படுகின்றது. திருக்கோயில்களில் கருவறையில் இடம்பெறும் மூர்த்திக்குரிய இலக்கணங்களாக மேற்கூறப்பட்டவை சிறப்பாகப் பொருந்துவனவாகும். இத்தகைய சிறப்புடன் விளங்கும் மூர்த்திக்கு 'மூலமூர்த்தி' என்ற சிறப்புப் பெயர் உண்டு.

மூலமூர்த்தியிலிருந்தே உற்சவ மூர்த்திகளுக்குரிய சக்திகள் பெறப்படுகின்றன. மூலமூர்த்தி அசையாது நிலைபெற்றுக் கருவறையில் சாந்நித்தியம் கொண்டு விளங்குவதாகும். எனவே அதனை அசலமூர்த்தி எனச் சுட்டுவது மரபு. அகண்டமாய் அருவுருவாயிருக்கும் பரம்பொருளை மனத்தினால் தியானஞ் செய்து உடலினால் வழிபாடு செய்வதற்கு எமக்குத்துணை புரிபவையே இறைவனது திருவடிவங்கள். இறைவனின் தெய்வீக நிலையை எடுத்துக்கூறும் பெற்றி வாய்ந்தவை. எனவே, இவற்றை முறையாகவும் சாஸ்திர ரீதியாகவும் உருவாக்கும் வழிவகை பற்றிச் சிவாகமங்களும் சிற்பநூல்களும் எடுத்துக்கூறுகின்றன. மந்திர நியாசத்தின் பின்னர் தான் திருவுருவங்களில் இறைவனது சாந்நித்தியம் ஏற்படுகின்றது அதற்கு முன்னர் ஏற்படுவதில்லை. கும்பாபிஷேகக் கிரியைகள் மூலம் மந்திரங்கள்

வழியாக இறைவனைத் திருவுருவத்தில் சாந்நித்தியம் கொள்ளச் செய்த பின்னர் முறையாக நித்திய நைமித்திகக் கிரியைகள் நிகழும். திருவுருவமும் மூர்த்தி விசேடத்தைப் பெறும்.

மூர்த்தி விசேடத்தினால் ஓர் ஊர் சிறப்புப்பெறுமிடத்து, அது தலமாகச் சிறப்பிக்கப்படுகின்றது. இயற்கையாக மூர்த்தி எழுந்தருளும் இடம் தான்தோன்றி ஈச்சுவரமாகவும் மூர்த்தியானது 'சுயம்புமூர்த்தி' என்ற நிலையிலும் பெருமை பெறுகின்றன. இத்தகைய மூர்த்திக்குரிய தலங்களுக்குச் செல்வதே தலயாத்திரை. தலயாத்திரை திருக்கோயில் வழிபாட்டில் முக்கியத்துவம் பெறுகின்றது. புண்ணியத் தலங்கள் எம்முடைய உள்ளத்தைப் புனிதமாக்குவதோடு மனதை லயப்படுத்துவனவாகவும் உள்ளன. பக்தியை வளர்ப்பன. உள்ளத்தில் அமைதியையும் நிறைவையும் தருவன. இத்தகைய தலங்களில் தீர்த்த விசேடமுமுண்டு. தீர்த்தமும் தலமும் ஒன்றுக்கொன்று ஆதாரமாக அமைவன. மூர்த்தியினால் ஒருவனுக்கு அருட்பேறு கிட்டும். தலத்தினால் மனத்தூய்மையும் தீர்த்தத்தினால் உடற்றூய்மையும் கிட்டுவன. எனவேதான் எமது வழிபாட்டிற்குரிய தெய்வங்களை வழிபடுவதிலும் பக்தி உணர்வை வளர்ப்பதிலும் மூர்த்தி, தலம், தீர்த்தம் ஆகிய மூன்றும் ஒருங்கே அமைந்த தலங்கள் சிறப்புப்பெறுகின்றன. உண்மையான ஆத்மீக நலனுக்கு இவை பெரிதும் உதவுவன. பிரதிஷ்டை எனப்படும் கும்பாபிஷேகம் இவற்றின் திருவருட் சக்தியைப் புதுப்பித்துத் தருவதோடு இறைவனின் சாந்நித்தியத்தை நாம் மனதார உணர்வதற்கும் வழிவகுக்கின்றது.

இந்தியாவில் மூர்த்தி, தல, தீர்த்த விசேடத்தினால் சிறப்புப் பெற்றவை வடக்கில் காசியும் தெற்கில் இராமேஸ்வரமும் எனக் கூறலாம். 'காசிக்குப் போனால் புண்ணியமுண்டு' என்பதும் 'கங்கையில் மூழ்கி நீராடினால் செய்த வினைகள் அகலும்' என்பதும் ஆஸ்திகர்களின் நம்பிக்கையாகும். இவ்விரு தலங்களை எல்லையாகக் கொண்ட திவ்வியபூமி 'புண்ணிய பாரதம்' எனப் போற்றப்படுகின்றது. இந்துக்களின் புனிதத் தலங்களில் காசி, மூர்த்தி, தல விசேடமும் கங்கை தீர்த்த விசேடமும் கொண்டு விளங்குகின்றமை குறிப்பிடத்தக்கது. சோழர் காலத்தில் தென்னாட்டில் பெருமையுடன் விளங்கிய கங்கைகொண்ட சோழபுரம் கங்கையின் புனித மகிமையை நினைவுகூர்கின்றது.

காசிக்குச் செல்பவர்கள் தங்கள் யாத்திரையை இராமேஸ்வரத்திற்குச் சென்று நிறைவு செய்வது மரபாகும். இவ்விரு தல யாத்திரைகளும் ஆன்மீகத் துறையில் பல்வேறு பகுதிகளிலும் வாழும் மக்கள் ஒரே குறிக்கோளுடன் ஒன்றுபடும் நிலையை எடுத்துக் காட்டுவதாக உள்ளன. இவ்விரு தலங்களும் 'புண்ணிய ஆட்சித் தலங்கள்' எனவும் போற்றப்படுகின்றன. இவ்விரு தலங்களையும் தரிசித்தால் இவற்றின் இடைப்பட்ட அனைத்துத் தலங்களையும் தரிசித்தபேறு கிட்டும் என்பதும் மரபுவழி நம்பிக்கையாகும். காசிக்குரிய மற்றொரு பெயர் வாரணாசி என்பதாகும். கங்கைப் பெருநதியில் கலக்கும் இரு ஆறுகளுக்கிடையில் இத்தலம் விளங்குவதும் குறிப்பிடத்தக்கது. இங்கு தலப் பெருமையுடன் விளங்குபவர் 'விசுவநாதர்' என்ற திருநாமத்தினால் சிறப்பிக்கப்படுகின்றார். காசியில் ஒரே நாளில் வழிபட வேண்டிய சந்நிதிகளில் துண்டி ராஜ விநாயகப் பெருமானின் சந்நிதியும் முக்கியமானதாகும். இப்புண்ணிய தீர்த்தத்தின் சிறப்புக்கு மணிகர்ணிகை, ஞானவாவி, கங்கை ஆகிய மூன்றும் முக்கியத்துவமுடையன. புனித கங்கையில் அறுபத்துநான்கு நீராடற்றுறைகள் அமைந்துள்ளன. இவற்றைக் 'காட்' (கட்டம்) என்று கூறும் மரபுண்டு, அசிசங்கம கட்டம், தசாசுவமேத கட்டம், வருண சங்கம கட்டம், பஞ்ச கங்கா கட்டம், மணிகர்ணிகா கட்டம் ஆகிய பெயர்களை எடுத்துக்காட்டாகக் கூறலாம். இவற்றை உள்ளடக்கிய யாத்திரையும் இவ்வைந்து தீர்த்தங்களிலும் ஒரே நாளில் நீராடுவதும் 'பஞ்ச தீர்த்த யாத்திரை' என அழைக்கப்படுகின்றது.

காசி யாத்திரையின் பின்பு இராமேஸ்வரம் சென்று தனுஷ்கோடியில் தீர்த்தமாடி இராமேஸ்வர லிங்கத்தை வழிபடின் காசி யாத்திரையின் முழுப்பயனும் கிட்டுவதோடு யாத்திரையும் நிறைவுபெறும் என்பது நம்பிக்கை. இத்தலத்தில் அறுபத்து நான்கு தீர்த்தங்கள் இருப்பதாகக் கூறப்படுகின்றது. இவற்றுள் சேது தீர்த்தம் முக்கியத்துவம் உடையது. தனுஷ்கோடி 'கோடித் தீர்த்தம்' என்று வழங்கப்படுகின்றது. இத்தீர்த்த நீரை மக்கள் கலசங்களில் கொண்டு செல்வது மரபு. கங்கை நீரையும் மக்கள் கொண்டு செல்லும் மரபுண்டு. எக்காலத்திலும் இந்நீர் கெடாது என்பது ஐதீகமாகும். இத்தகைய தீர்த்தங்களில் நீராடுவதால் ஏற்படும் பயன்களும் கூறப்படுகின்றன.

புனிதமாகக் கருதப்படும் குளங்களும் கடற்பகுதிகளும் தீர்த்தமாடுவதற்கு உரியனவையாகின்றன. சிறப்பான நாட்களில் இந் நீர் நிலைகளில் தீர்த்தமாடுவதற்கு மக்கள் ஏராளமாகக் கூடுவர். இந்தியாவில் இவ்வகையில் 'கும்பமேளா' முக்கியத்துவம் பெறுகின்றது. ஹரித்துவார், பிரயாகை, உஜ்ஜயினி, கோதாவரி ஆகிய நான்கு இடங்களிலும் முறை வைத்து, இப்புனித நீராடும் விழா பன்னிரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை ஒவ்வோர் இடத்திலும் நடைபெறும். தெற்கில் பன்னிரண்டு ஆண்டிற்கு ஒரு முறை கும்பகோணத்தில் உள்ள புனித குளத்தில் நடைபெறும் நீராடும் விழா 'மகா மகம்' என்று வழங்கப்படுகின்றது. அனைத்துக் கோயில்களும் மகோற்சவ காலங்களில் இறுதி நிகழ்ச்சியாகிய 'தீர்த்தம்' முக்கியத்துவம் பெறுகின்றது. கொடியேற்றம், தேர், தீர்த்தம் என்பன திருக்கோயில் நைமித்திகங்களில் சிறப்புப் பெறுவன.

இவ்வாறாக மூர்த்தியின் பெருமையால் தலம், தீர்த்தம் சிறப்புற்று மக்களது ஆன்மீக வாழ்க்கை செம்மையுறப் பெரிதும் உதவுகின்றன. திருக்கோயில் வழிபாட்டில் சிறப்புப் பெறும் மூர்த்தி, தலம், தீர்த்தம் ஆகியவை பற்றித் தாயுமானவர்,

மூர்த்திதலம் தீர்த்தம் முறையாற் றொடங்கினர்க்கோர்
வார்த்தைசொலச் சற்குருவும் வாய்க்கும் பராபரமே

என உணர்த்தியுள்ளமை மனங்கொளத் தக்கதாகும். எனவே, திருக்கோயில் வழிபாட்டின் அடிப்படை உபாசனையாக இவை விளங்குகின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

உசாவியவை:

10 ஸ்ரீ வைஷ்ணவ திவ்ய தேச வைபவமும் புராண அபிமான ஸ்தலங்களும், தி லிட்டில் ப்ளவர் கம்பெனி சென்னை. 1986.

மகாலிங்கம், எஸ்., தலவரலாறு அருள்மிகு தாயுமான சுவாமி திருக்கோயில், திருச்சி. 1979.

முத்துப்பிள்ளை, சி., சிறப்பு மிக்க சிவாலயங்கள், பைலட் பப்ளிகேஷன்ஸ், சென்னை. 1978.

முத்தையா, கே. எஸ்., காசி அல்லது நமது புண்ணிய பூமி, முத்தையா பிரஸ், சென்னை. 1929.

# விக்கிரகக்கலை மரபில் சிவலிங்கம்

**7**

சைவத்தின் முதனூல்களெனச் சிறப்பிக்கப்படும் சிவாகமங்கள் சித்தாந்தக் கருத்துக்களுக்கு மாத்திரமன்றிச் சிவனது திருவுருவ அமைப்புக்கும் திருவுருவ வழிபாட்டு மரபுக்கும் பிரமாணமாக அமைவன. இவற்றில் சிவ வடிவங்கள் பற்றிய தனித்தனி விபரங்கள் ஒவ்வொரு மூர்த்தியினதும் பிரதிஷ்டைக்குரிய விதிமுறைகளுக்கு முன்னோடியாக அமைவன. சிவாகமங்கள் இருபத்தெட்டினுள் காமிகாகமமும் காரணாகமமும் முக்கியத்துவம் பெறுகின்றன.

சிவாகம வழிபாடு திருவுருவத்தை அடிப்படையாகக் கொண்டு நிகழ்வதாகும். திருவுருவங்கள் இறைவனை மனத்தாற் கிரகிப்பதற்கு உறுதுணையாக அமைவன. அத்துடன் இறைவனைப் பற்றிப் புராணங்கள் கூறும் தத்துவப் பொருள் செறிந்த தெய்வீக வரலாற்றை அறிவதற்கும் உணர்வதற்கும் பெருந்துணை புரிவன. திருவுருவங்களும் அவற்றுக்கு நிகழும் கிரியைகளும் வழிபடுவோனது உள்ளத்திலே படிப்படியாகப் பரம்பொருள் தத்துவச் சிறப்பினை உணரவைப்பன. சமய அனுபவத்தை வளர்ப்பதற்கும் அவை உதவுவன.

சிவனுக்கெனச் சிறப்பாகவுள்ள திருமேனிகள் மூன்று நிலைகளில் உள்ளன. அவை முறையே அருவம், உருவம், அருவுருவம் என்பனவாகும். அருவம் ஊனக்கண்களுக்குப் புலப்படாதவாறு

நுண்ணியது. அகக்கண் கொண்டு நோக்கும் யோகிகளுக்கு மட்டுமே புலப்படுவதாகும். உருவத்திருமேனி கை, கால், முகம் முதலிய உறுப்புக்களுடன் கூடியது. இதற்குரிய எடுத்துக் காட்டாகச் சிவனது சந்திரசேகரமூர்த்தியைக் குறிப்பிடலாம். இவ்விரண்டிற்கும் புறம்பானதாக உருவம் அருவம் கலந்த தனி நிலையில் உள்ளதே அருவுருவமாகும். இதில் உருவத்திற்கு வேண்டுவனவான கை, கால் முதலிய உறுப்புக்கள் இல்லாததனால் அருவமாகியும் கண்ணாற் பார்க்கும் பொழுதும் கையாலே தொடும் பொழுதும் உணரத்தக்கதாதலால் உருவமாகியும் இரு நிலைகளும் விரவப் பெற்றதே இந்நிலை. இவ்வுருவத் திருமேனி சிவனுக்கு மட்டுமே சிறப்போடமைந்தது. அதுவே சிவலிங்கமாகும்.

சிவனுக்குரிய திருவுருவங்களை அவற்றின் தன்மைக்கேற்ப மேலும் மூன்று வகையினுள் அடக்கலாம். அவற்றை முறையே சலம், அசலம், சலாசலம் எனக் காரணாகமம் வகுத்துக் கூறும். படிமங்கள் செய்த இடத்திலிருந்தோ அல்லது முறையாக வழிபாட்டுக்கு நிறுவப்பட்ட இடத்திலிருந்தோ அசைக்க இயலா வண்ணம் அல்லது அசைப்பது தவிர்க்கப்பட்ட நிலையில் இருப்பின் அவை அசலம் என்ற வகையில் அடங்குவன. படிமங்களை ஓரிடம் விட்டு வேறிடம் நகர்த்தக்கூடிய வண்ணம் இருப்பினும் அல்லது அத்தேவைக்காக உருவாக்கப்பட்டிருப்பினும் அவை சலம் என்ற பிரிவில் அடங்குவன. படிமங்களை இடம் விட்டு இடம் மாற்றக் கூடியதும் ஆனால், மாற்றக் கூடாதென்ற நோக்கிலும் நிறுவப் பெற்ற படிமங்கள் சலாசலம் என்ற வகையில் அடங்குவன. தாதுக்களாற் செய்யப்பட்டவை சலம் என்றும் கல்லாற் செதுக்கப்பட்டவை சலாசலம் என்றும் மண்ணினால் உருவானவையும் சுவரில் வரைந்தவையும் அசலமெனவும் ஆகமம் கூறும்.

அசலமெனக் கூறப்படும் படிமங்கள் ஆகம மரபின்படி நிறுவப்படும் இடம் கர்ப்பக்கிருகம் ஆகும். இதுவே கருவறை எனச் சுட்டப்படுவது. இதற்கு மூலஸ்தானம் என்ற பிறிதோர் பெயருமுண்டு. சிவாலயத்தில் சிவலிங்கம் அமைக்கப்பட்டுள்ள இடத்தையே இது குறிக்கும். சிதம்பரம் என்னும் தில்லைப் பெருங் கோயிலில் அருவுருவாகிய சிவலிங்கம் நிலைபெற்று விளங்கும் இடம் திருமூலட்டானம் எனச் சுட்டப்படுகின்றது. தென்னாட்டிலும் ஈழத்திலும் உள்ள சிவதலங்கள் யாவற்றிலும் கருவறையில் விளங்குவது சிவலிங்கத் திருமேனியாகும். வீதிக்கு எழுந்தருளும்

மூர்த்தம் அம்மூல லிங்கத்தின் படிமத்திருமேனியாக அமையும். இவ்வகையில் மூர்த்தி விசேடம் பெற்றுச் சிவலிங்கம் கருவறையில் மூலவிக்கிரகமாய் முதன்மை பெற்று விளங்கும். ஆகம முறைப் படி அமைந்த கோயில்களில் இலிங்க ஸ்தாபனம் இல்லாத கோயிலைக் காணலரிது.

அசலம் எனக் குறிக்கப்படும் பிரதிமை பற்றிய விளக்கத் தைப் பெறுவதற்கு ஆகமம் குறிப்பிடும் பிரதிஷ்டை என்ற கிரி யையுடன் தொடர்பு படுத்தி ஆராய்வதும் பொருத்தமாகும். திருவுருவங்களை உரியவாறு நிறுவும் கிரியையையே ஆகமங்கள் பிர திஷ்டை எனச் சுட்டுகின்றன. கும்பாபிஷேகத்தின்போது கோயி லில் உரிய கிரியைகளைக் கொண்டு நிகழ்த்தப்படும் பிம்பஸ்தாப னம் என்னுங் கிரியையின் போதே சிவலிங்கம் அசையாமல் கர்ப்பக்கிருகத்தில் நிறுவப்படுவதாகும். இலிங்கத்தை உரியவாறு நிறுவி, அஷ்டபந்தனம் என்னும் மருந்துக்கலவை, பிம்பம் அசை யாமலிருக்கும் பொருட்டுச் சாத்தப்படுவது குறிப்பிடத்தக்கது. இதனையடுத்து இடம்பெறுவது பிரதிஷ்டை என்னும் கும்பாபி ஷேகக் கிரியை. இக்கிரியையின் போது யாகசாலையில் உரியவாறு பூசிக்கப்பட்ட புனிதமான குட நீரினால் இலிங்கம் நீராட்டப்படு தல் முக்கிய அம்சமாகும். இக்கிரியையின் பின்னர் இலிங்கம் அசைக்கப்படாமல் நிறுவப்பட்ட இடமாகிய கர்ப்பக்கிருகத்தில் நிலைபெற்று இருத்தல் வேண்டும் என்பது விதி. இந்நிலையைத் தொடர்ந்து உரிய நித்திய நைமித்திகக் கிரியைகள் மூலம் வழி பாடு நிகழ்வதாகும். எனவே, அசலம் என்று குறிக்கப்படும் திரு மேனி பற்றிய விளக்கத்திற்கு ஆகமம் விதித்துக்கூறும் கும்பா பிஷேகம் பற்றிய விளக்கமும் துணை செய்கிறது. இக்கிரியையின் பின்னர் சிவனது நிறைவான தெய்வீக சாந்நித்தியம் இலிங்கத் தில் அமைந்து விளங்குவதாகும் என்பதே சைவரது உறுதியான நம்பிக்கை. அந்நம்பிக்கையின் அடிப்படையிலேயே அது நிறுவப் பட்டும் வழிபடப்பட்டும் வருவதைக் காணலாம். சுருங்கக்கூறின் சிவனது அடையாளமே இலிங்கம்.

சுவேதாஸ்வதர உபநிடதத்தில் யோனி, லிங்கம் என்ற சொற் கள் காணப்படுகின்றன. இங்கு இலிங்கம் என்பது 'அடையாளம்' அல்லது 'அம்சம்' என்ற பொருளில் பயன்படுத்தப்பட்டுள்ளது. தியானத்திற்குரிய அடையாளமாக விளங்கும் இலிங்கத்தில்

தேவையேற்படும் காலத்தில் இறைவன் தோற்றம் பெறுவன் என்ற கருத்தைப் புராணங்கள் தரும் விபரங்களிலிருந்து நாமறியலாம். சிவலிங்க வழிபாட்டின் தொன்மை பற்றிய கருத்துக்கு இலிங்க புராணத்தில் இடம்பெறும் பிரம்மா, விஷ்ணு அடிமுடி தேடிய கதை முக்கியத்துவமுடையதாகும். சிவபுராணம் இலிங்கத்தைப் பிரணவத்தோடு தொடர்புபடுத்துகின்றது. இவ்வாறு புராணங்கள் இலிங்கத்தைச் சிவனுக்குரிய அடையாளமாகவே குறிப்பிடுகின்றன. இராமன் தனக்கேற்பட்ட தோஷங்களிலிருந்து விடுபட இராமேசுவரத்தில் இலிங்கமொன்றினை நிறுவி வழிபாடு செய்தான் என்பது மரபு.

சிவலிங்கத்தின் அமைப்பு மிகவும் நுட்பமானது. அதன் அமைப்பு முறைபற்றி ஆகமங்களும் சிற்ப நூல்களும் மிக விரிவாகக் கூறுகின்றன. சிவனது ஏனைய வடிவங்களுக்கு அடிப்படையாக விளங்குவதோடு, கருவறையில் பிரதான மூர்த்தியாக நிறுவப்படும் காரணத்தாலும் இதன் அளவு முறை பற்றி இந்நூல்கள் விரிவான விளக்கங்களை உள்ளடக்கியுள்ளன. இலிங்கத்தினை உருவாக்குவதற்கு வேண்டிய கற்களைத் தேர்ந்தெடுக்கும் முறை பற்றியும் தெளிவான கருத்துக்கள் காணப்படுகின்றன. பூர்வ காரணாகமம், லிங்கலக்ஷண விதிப்படலத்தில் இதனோடு தொடர்புடைய பல விளக்கங்களைத் தருகின்றது. பூர்வகாமிகாகமமும் 'லிங்கலக்ஷண விதி'ப் படலத்தில் இதுபற்றி விரித்துரைக்கின்றது. மானசாரம் என்ற சிற்ப நூல் 'லிங்கவிதானம்' என்ற தலைப்பிலும் காசியப சில்பசாஸ்திரம் 'சிவலிங்க லக்ஷணம்' என்ற தலைப்பிலும் சில்பரத்தினம் 'லிங்க லக்ஷணம்' என்ற தலைப்பிலும் குறிப்பிடுகின்றன.

காரணாகமம் இருவகை இலிங்கங்களைக் குறிப்பிடுகின்றது. அவை முறையே ஸ்தாவரம், ஜங்கமம் எனப்படுவன. ஸ்தாவர இலிங்கம் கருவறையில் நிறுவப்பட்டு வழிபடப்படுவதாகும். ஜங்கமம் பூசைக்காகக் கொண்டு செல்வதற்குகந்தது.

இலிங்கம் அமைப்பதற்குரிய பொருட்களைப் பற்றியும் ஆகமங்கள் கூறுகின்றன. கல், உலோகம், மண், மரம், நவரத்தினம் ஆகிய பொருட்களே இதற்கு உகந்தவை. சிவலிங்கமானது அடியிலிருந்து மேல் நோக்கி பிரமபாகம், விஷ்ணுபாகம், உருத்திரபாகம் என மூன்று அங்கங்களாக ஒரே அமைப்பில் விளங்கும். இவற்றில் பிரமபாகம் கருவறையின் தரைமட்டத்திற்குக் கீழேயும் விஷ்ணுபா

கம் தரைமட்டத்திற்கு மேல் ஆவுடையாருள்ளும் மறைந்திருக்கும். மூன்றாவது கூறாகிய உருத்திரபாகம் ஆவுடையாருள்ளும் மேல் மட்டத்திலிருந்து ஓங்கியும் நிற்கும். இங்ஙனம் வெளியே தெரியும் பாகம் பூஜாபாகம் எனப்படும்.

இலிங்கம் அமைக்கப்படுவதற்குரிய பொருட்களைத் தேர்ந்தெடுக்கும் முறைகள் ஆகமங்களில் கூறப்பட்டுள்ளன. இலிங்கத்திற்குரிய கல்லைத் தேர்ந்தெடுப்பது "சிலாகிரகணம்" எனக் குறிப்பிடப்படுகின்றது. உரிய தகைமை வாய்ந்த சிற்பி ஆசாரியனுடன் நல்ல நிமித்தங்களை அனுசரித்து, கல்லைத் தேர்ந்தெடுக்கப் புறப்படுதல் வேண்டும். உரிய கல்லைத் தேர்ந்தெடுக்கும் நுட்பம் சிற்பிக்கு அனுபவ ரீதியிலும் சாத்திர ரீதியிலும் தெரிந்திருத்தல் அவசியமாகும். மலை, மலையையண்டிய பிரதேசம், வனம், உபவனம், ஆற்றங்கரை ஆகிய இடங்களிலிருந்து இலிங்கத்திற்குரிய பொருட்கள் சேகரிக்கப்படுகின்றன. குளிர்மையானதும் பசுமையானதுமான இடத்தில் கல் சேகரித்தால் அது தண்ணீர்ப் பசுமையுடன் கூடியதாக இருக்கும் ஆகவே, அவ்விடத்திலுள்ள கல் வாருணீ என அழைக்கப்படும். இது இலிங்கத்திற்குரியது. நெல்வயல், பால்மரம் வளரும் இடம் ஆகிய பிரதேசங்களிலிருந்து பெறப்படும் கல் மாஹேந்திரி எனப்படும். பலாசு, கருங்காலி, வேம்பு ஆகிய மரங்கள் உள்ள இடத்திலும் மலைகள் காணப்படும் இடத்திலும் நீர் குறைந்து காணப்படும் இடத்திலும் உள்ள கல் வாயு சிலா எனப்படும். இவைகளும் இலிங்கம் உருவாவதற்குகந்தவை. நாவல் மற்றும் கானல் நீர் உள்ள இடத்திலுள்ள கல் அக்கினிசிலா என்ற பெயரைப் பெறும். இவ்வகையைச் சார்ந்த கல் இலிங்கத்திற்கு உகந்ததல்ல. இலிங்கத்திற்குரிய கல் நல்ல நிறமுள்ளதாகவும் கனமுள்ளதாகவும் மழமழப்புள்ளதாகவும் ஆற்றுநீரில் அமிழ்ந்து அழுத்தம் பெற்றதாகவும் நல்ல அகலம் நீளம் கொண்டதாகவும் அமைதல் சிறப்பாகும். கற்களில் எழும் ஓசையைக் கொண்டு அவற்றின் பேதங்கள் நிர்ணயிக்கப்படுகின்றன. கற்கள் பாலை, யுவதி, விருந்தை என்றும் புருஷசிலை, ஸ்திரீசிலை, நபும்ஸகசிலை என்றும் பாகுபடுத்தப்படுகின்றன. ஆகமத்தில் புருஷ சிலையினால் இலிங்கத்தை உருவாக்க வேண்டுமெனவும் ஸ்திரீ சிலையினால் பீடமாகிய பிண்டிகையைச் செய்ய வேண்டுமெனவும் இலிங்கத்தின் அடித்தளத்தின் ஆதாரமாகிய பாதாதாரத்தை நபும்ஸகசிலையினால் செய்யவேண்டுமெனவும் விதிக்கப்பட்டுள்ளது.

இலிங்கம் அமைய வேண்டிய அளவு முறைகளின் நுட்பங்களேயும் ஆகமங்கள் கூறுகின்றன. கோயிற் கட்டிட அமைப்புக்கும் இலிங்க நிர்மாணத்திற்குமிடையே நெருங்கிய ஒற்றுமை உண்டு. இலிங்கத்தின் சில அளவு முறைகள் கோயிலின் அமைப்பினை அடிப்படையாகக் கொண்டு நிச்சயிக்கப்படுகின்றன. இலிங்க நீளத்திலிருந்து அகலத்தைக் கொள்ளும் முறையை அடிப்படையாகக் கொண்டு விளங்குபவையே நாகர, திராவிட, வேசர இலிங்கங்கள்.

கல்லிலே அமைந்த இலிங்கங்கள் ஆலய வழிபாட்டிற்கு ஏற்றவை. இலிங்கங்கள் பல வகைப்படுவன. சுவயம்பு, தைவிகம், மானுஷம், காணவம், ஆர்ஷிகம் ஆகிய இலிங்க வகைகள் குறிப்பிடத்தக்கன. மற்ற எவராலும் தாபிக்கப்படாமல் தானே தோன்றியது சுவயம்பு லிங்கம் என்று சிறப்பிக்கப்படுகின்றது.

சுவயம்பு லிங்கங்கள் பல வகையின. சில பழுதடைந்து காணப்படுவன. சில மெல்லிய தோற்றத்தவை. இவற்றுக்கு நீளம் அகலம், உயரம் முதலிய அளவைகளில் வரையறையில்லை. சில பீடத்துடன் காணப்படுவன. சிலவற்றுக்குப் பீடம் இருக்காது. சில கோயில்களிலும் காடு, மலை, ஆறு, புண்ணிய தீர்த்தம், தலங்கள் ஆகிய இடங்களிலும் விளங்குவன. அவை எந்நிலையில் உள்ளனவோ அந்நிலையிலேயே அவை பூசிப்பதற்கு உகந்தவை.

மகரிஷிகளால் நிறுவப்பட்டவை ஆர்ஷ இலிங்கமாகும். மனிதர்களால் தாபிக்கப்படுவது மானுஷ இலிங்கமாகும். கணதேவதைகளால் பூசிக்கப்படுவது காணவம் எனப் பெயர் பெறும். மானுஷ இலிங்கத்தை ஆகமங்களும் சிற்ப நூல்களும் மேலும் எட்டு வகையில் கூறுகின்றன. அவை சமகண்டம், வர்த்தமானம், சைவாதிகம், ஸ்வஸ்திகம், சர்வதோபத்ரம், சார்வதேசிகம், திரைராசிகம், தாரா என்பனவாகும்.

முகலிங்கம் இலிங்க வகைகளுள் குறிப்பிடத்தக்கது. இலிங்க நாளத்தின் உருத்திர பாகத்தில் புடைப்புச் சிற்பமாக மார்பளவிலான உருவங்கள் அமைக்கப்படுவன. இவை சதாசிவ மூர்த்தியின் முகங்களாகக் கொள்ளப்படுவன. இவ்வரிசையில் ஒரு முகங் கொண்ட ஏகமுகலிங்கம், நான்கு முகங்களேக் கொண்ட சதுர்முகலிங்கம் என்பவை குறிப்பிடத்தக்கவை,

இலிங்கங்களின் சிகரத்திற்கேற்ற வடிவம் கொண்டதாக இலிங்கபீடம் அமையும். நாகர இலிங்கத்திற்கு நாகர பீடமும் திராவிட இலிங்கத்திற்கு திராவிடபீடமும் வேஸர இலிங்கத்திற்கு வேஸர பீடமும் செய்யப்படவேண்டும். நாகரம் என்ற பீடம் நான்கு கோணங்களையுடையதாகவும் திராவிடம் என்ற பீடம் எட்டுக்கோணங்களையுடையதாகவும் வேஸரம் என்னும் பீடம் வட்டவடிவமானதாகவும் இருக்கவேண்டுமென சிற்பநூல்கள் கூறுகின்றன இலிங்கத்தின் பீடம் கோமுகத்துடன் இருக்கவேண்டுமென விதிக்கப்பட்டிருக்கிறது பீடத்தின்மேல் மட்டத்தில் அபிஷேகநீர் செல்வதற்கேற்றவாறு கரையோடுகூடிய நீர்த்தாரையும் அமையும். இலிங்கத்தின் பீடம் பல்வேறு அலங்கார முறைகளைக் கொண்டு விளங்குவன. பீடத்தில் இடம்பெறும் முக்கிய அம்சங்கள் உபானம், ஜகதி, குமுதம், பத்மம், கம்பம், கண்டம்; பட்டிகை, நிம்நம், கிருதவாரி என்பனவாகும். இப்பீடங்களுக்குரிய அளவு முறைகளும் உண்டு.

இலிங்கத்தையும் பீடத்தையும் கர்ப்பக் கிருகத்தில் அமைப்பதற்குமுன் கர்ப்பக்கிருக தரைமட்டத்தில் இலிங்க பீடத்தைத் தாங்குவதற்காக நான்கு கற்களை ஸ்வஸ்திகமாகப் பதித்தல் அவசியமாகும் இவற்றுக்கு பாதசிலை, ஆதாரசிலை, பிரம்மசிலை என்ற பெயர்கள் வழங்கப்படுகின்றன. இந்தப் பிரம்மசிலையின் நடுவில் இலிங்க நாளத்தின் பிரம்ம பாகம் பதிக்கப்படும். பாதசிலையும் பீடத்தைப்போன்று முக்கியத்துவமுடையது. எனவே இதற்கும் இலக்கண விதிகள் உண்டு.

இவ்வாறு சிற்பக்கலை மரபின்படி உருவாக்கப்பட்டு, கர்ப்பக் கிருகத்தில் நிறுவப்படும் சிவலிங்கம் சூக்கும லிங்கமாக விளங்கி, உலகில் உள்ள உயிர்கள் ஒடுங்கும் இடமாகவும் லயப்படுவதற்குரிய நிலைக்களனாகவும் அமையும் சிறப்பினைப் பெறுகின்றது. சிற்பத் திறனில் உருவாகிய இலிங்கத்திற்குப் பிரணவமாயமையுந் தத்துவ விளக்கமும் கொடுக்கப்படுகின்றது. நாதமாகிய அகரம் சிவத்தையும் விந்துவாகிய உகரம் சக்தியையும் கலையாகிய மகரம் பரத்தையும் குறிப்பதாகும். திருமூலர் திருமந்திரத்திலே, ஏழாந் தந்திரத்தில் ஓங்காரத்தைச் சிவனுருவாகிய தாபரலிங்கமாகச் சிறப்பித்துக் கூறுமிடத்து,

இலிங்க நற்பீடம் இசையும் ஓங்காரம்
இலிங்க நற்கண்ட நிறையு மகாரம்

இலிங்கத்துள் வட்ட நிறையும் உகாரம்
இலிங்கம் அகாரநிறை விந்து நாதமே

எனக் குறிப்பிடுகின்ருர்.

சிவன் மந்திரவடிவினன் என்ற நிலை இங்கு வற்புறுத்தப்படுகின்றது. திருமூலரது இக்கருத்துக்குப் பொருத்தமாக ஸ்ரீ காசியப சில்ப சாஸ்திரம் கூறும் கருத்தும் அமைகின்றது. சிற்ப மரபைக் கூறும் வகையால் தத்துவ விளக்கத்தையும் இந்நூல் தருவது குறிப்பிடத்தக்கது. இச்சிற்ப நூல் இலிங்கத்தைப் பற்றிக் குறிப்பிடுமிடத்து, நாதமே இலிங்க வடிவமென்றும் பிந்துவே அதன் பிடமென்றும் கூறும். இலிங்கமானது சிவஸ்வரூபமென்றும் பீடமாவது சக்திஸ்வரூபமென்றும் இலிங்கமும் பீடமும் சேர்ந்து ஒன்ருகவே இருப்பதால் நெருப்பும் வெப்பமும் ஒன்ருகச் சேர்ந்து இருப்பது போன்று சிவமும் சக்தியும் சேர்ந்து ஒன்ருகவே விளங்குவதாக இந்நூல் விளக்கி நிற்கின்றது.

இவ்வுலகனைத்தும் ஊடுருவி நிற்பது ஆனந்தமயமான சிவலிங்கமே என்ற கருத்தும் திருமந்திரத்தில் இடம் பெறுகின்றது. இதனைப் புறவுலகனைத்தையும் சிவவடிவில் காணும் ஞானக் காட்சி எனக் கொள்ளலாம். இந்நிலையில் சிவலிங்கத்தை அண்டலிங்கமாகப் போற்றுமிடத்துத் திருமூலர் தரையுற்ற சத்தி தனிலிங்கம் விண்ணும் எனக் குறிப்பிடுகின்ருர். இதன்படி நிலப்பகுதி சக்தியாகிய பீடம் என்றும் விண் இலிங்கம் என்றும் சிறப்பிக்கப்படுகின்றது.

இயற்கை அழகைச் சிவவடிவிற் காணுவதைப் போன்று ஐம்பெரும் பூதங்களையும் சிவலிங்கத்திற் காணும் மரபும் உண்டு. நிலம், நீர், தீ, காற்று, ஆகாயம் ஆகிய ஐம்பெரும் பூதங்களோடு சூரியன், சந்திரன், இயமானன் ஆகிய மூன்றுஞ் சேர்ந்து இறைவன் அட்டமூர்த்தியாகக் குறிக்கப்படுவன். தென்னுட்டில் பஞ்சபூதத் தலங்களில் இயற்கைச் சக்திகள் தெய்வீக நிலையிற் போற்றப்படுகின்றன. திருவாரூர் (அல்லது காஞ்சி) பிருதிவி தலமாகவும் திருவானைக்கா அப்புத்தலமாகவும் திருவண்ணுமலை தேயுத்தலமாகவும் காளத்தி வாயுத்தலமாகவும் சிதம்பரம் ஆகாயத்தலமாகவும் போற்றப்படுகின்றன. இத்தலங்களில் உள்ள சிவலிங்கங்கள் இவ்வகையிற் சிறப்புப் பெறுகின்றமை குறிப்பிடத்தக்கது.

திருக்கோயிலில் இடம்பெறும் பிரதிஷ்டையாகிய கும்பாபிஷேகத்திலும் இவ்வியற்கைத் தத்துவத்தினை உணர முடிகிறது. எங்கணும் வியாபித்து விளங்கும் இறைவன் இவ்வியற்கைச் சக்திகள் வழியே, அதாவது ஆகாயம், காற்று, தீ, நீர் என்ற வரிசையில் படிப்படியாக ஒடுங்கி பிருதிவி அம்சம் பொருந்திக் கர்ப்பக்கிருகத்தில் உறையும் சிவலிங்கத்தில் இறுதியில் நிறைவெய்துவதும் குறிப்பிடத்தக்கது. கும்பாபிஷேகக் கிரியையில் ஆகாய வெளியிலமைவது அக்கிரியை நிகழத்தேவைப்படும் யாகசாலை. அங்கு வளர்க்கப்படும் அக்கினியும் அதனோடு நெருங்கிய தோழமை பூண்ட வாயுவும் ஓமகுண்டங்களில் ஒருங்கு உறைவன. வேதியின் மீதுள்ள குடத்தில் இருப்பது நீர். கும்பாபிஷேகத்தின் பின்னர் இறைவன் இறுதியில் மண் அம்சம் வாய்ந்த சிவலிங்கத் திருவுருவில் நிலைபெறுகின்றான். இதனையே இக்கிரியை உட்பொருளாகக் கொண்டுள்ளது. இவ்வாறு பாரெங்கணும் நிறைந்து விளங்கும் இறைவனைச் சிவலிங்கத்தில் சிறப்பாகப் புலனாகும்படி செய்யும் கிரியையும் சிவலிங்க தத்துவத்தினை உணரத் துணைபுரிவதாகும். இவ்வகையில் உலகும் உயிர்களும் பூதங்களும் சிவனிடத்தே பொலிவு பெறும் காரணத்தால் "எல்லாம் சிவமயம்" எனச் சைவர் போற்றுவர்.

சிற்பக்கலைஞனது கைவண்ணத்தினாலன்றிச் சுயம்புவாக அதாவது தான்தோன்றியாகவுள்ள சிவலிங்கங்கள் உறையும் தலங்கள் "விடங்கத்தலங்கள்" எனத் தென்னகத்திற் போற்றப்படுகின்றன. இவ்வகையில் ஏழு தலங்கள் சிறப்படைகின்றன. 'விடங்க' என்பது உளியாற் செதுக்கப்படாமல் தான்தோன்றியாக, விளங்குவதைக் குறிக்கும்.

சிற்பக்கலை மரபில் உருவாகிய சிவலிங்கமும் தான்தோன்றியாகவுள்ள சிவத்திருமேனியும் உயர்ந்த தத்துவார்த்தச் சிறப்புடன் சைவரது வழிபாட்டுச் சின்னமாகப் போற்றப்பட்டு வருவதை நாம் வரலாற்று ரீதியிலும் அறியமுடிகின்றது. இவ்வாறு சிவாகம வழிபாட்டு மரபில் முதன்மை பெறும் இலிங்கத்தின் சிற்பவியல் நுட்பங்களைச் சிவாகமங்கள் பிரமாணமாக எடுத்துக் கூற, சிற்ப நூல்கள் நடைமுறை நோக்கத்தினை அடிப்படையாகக் கொண்டு மேலும் விளக்கிக்கூறுவதை அவதானிக்கலாம். அவற்றை ஒப்புநோக்கிப் பயன்படுத்துவதன் மூலம் சிவலிங்கத் திருமேனியின் அமைப்பினையும் தத்துவத்தினையும் சிறப்பாக அறியும் வாய்ப்புண்டு.

## உசாவியவை


காமிகாகமம் (பூர்வபாகம்), ஷண்முகசுந்தர முதலியார், கொ., (பதி) சென்னை. 1889.

சில்பரத்தினம், தேவநாதாச்சாரியார் (பதி.) சிவஞானபோத யந்த்ரசாலை, ஸரஸ்வதி மகால் தஞ்சை. 1961.

திருமந்திரம், உலகநாத முதலியார் வி. (பதி.) விவேக போதினி காரியாலயம், சென்னை. 1924.

பூர்வகாரணகமம், ஷண்முகசுந்தர முதலியார், கொ., (பதி.) சிவ ஞானபோத யந்த்ரசாலை, சென்னை. 1900.

மானசாரம் (பகுதி 1), வெங்கட சுப்ரஹ்மண்ய சாஸ்திரி, நீ., வை., (பதி.) தஞ்சை, 1963.

லிங்கபுராணம், லக்ஷ்மி வெங்கடேஸ்வரர் நீராவி அச்சகம், பம்பாய்.

ஸ்ரீ காசியபசில்ப சாஸ்திரம், சுப்ரஹ்மண்ய சாஸ்திரி, கே. எஸ்., (பதி.) ஸரஸ்வதி மகால், தஞ்சை. 1960.

அருணசலம், ப., திருமந்திரக்கோட்பாடு, சென்னை. 1982.

கணபதி ஸ்தபதி, வை., சிற்பச்செந்நூல், தொழில் நுட்பக்கல்வி இயக்கம், சென்னை. 1978.

கைலாசநாதக்குருக்கள், கா., சைவத்திருக்கோயிற் கிரியைநெறி, இந்து கலாபிவிருத்திக் கழகம், கொழும்பு. 1963.

**Svetasvataropanisad**, Swami Tyagisanand (ed.), Madras. 1971.

# சிற்பக் கலை மரவு பேணும் சிற்பக்கலைஞன்

# 8

இந்துக்கள் காலம் காலமாக வளர்த்து வந்த கலைகளின் உறைவிடங்களாக விளங்குபவை ஆலயங்கள். இந்து ஆலயங்கள் சிற்பக்கலையின் மூலமாகவே தெய்வீக உணர்வை வெளிப்படுத்தி நிற்கின்றன. விக்கிர ஆராதனை அல்லது உருவ வழிபாடு இந்து மதத்தின் முக்கிய அம்சமாக இருப்பதால் இந்த ஆலயங்களை உருவாக்கிய சிற்பிகள் சிற்பக்கலையின் உன்னத நிலைகளை எட்டிப் பிடித்தார்கள். சிற்பி வடித்த இறைவனது திருவுருவங்களை திருக்கோயில்களில் தெய்வீகப் பொலிவு பெற்று விளங்கச் செய்பவன் சிவாசாரியன். மந்திரம், கிரியை, பாவனை ஆகிய அம்சங்களால் சிற்பியின் கலைப்படைப்புக்கள் தெய்விகப் பொலிவு பெற்று வழிபாட்டுக்குரியவையாகின்றன. இவ்வகையில் சிற்பக் கலைஞனும் சிவாசாரியனும் ஆகமங்கள் வகுத்துக் கூறும் நெறி நின்று சமயப்பணி புரிவதில் முக்கியத்துவம் பெறுகின்றனர். இவ்விருவரது கைவண்ணத்தால் கலையும் வழிபாடும் இந்துமதத்தில் இரண்டறக் கலந்திருப்பதைப் போல வேறு எந்த மதத்திலும் நாம் காண்பதற்கில்லை. இந்துக்களைப் பொறுத்த வரையில் கலையில் தெய்விகத்தையும் தெய்விகத்தில் கலையினையும் கண்டு வழிபட்டவர்கள் ஆவார்கள். இதன் காரணமாக இந்துக்களின் சமய உணர்வோடு கலை உணர்வும் சேர்ந்து வளர்ச்சி பெற்றது.

இந்து சிற்பக்கலை மரபினைத் தலைமுறை தலைமுறையாகப் பாதுகாத்து வரும் பெருமைக்குரியவன் சிற்பக்கலைஞன். இந்தி

யாவிலும் அதனை அண்டியுள்ள இலங்கையிலும் உள்ள இந்து ஆலயங்களில் காணப் பெறும் எண்ணற்ற சிற்பங்களைச் சாஸ்திர பிரமாணங்களுக்கேற்பக் கலைநுட்பத்துடன் அமைத்துச் சிற்பக்கலை மரபினைப் பேணி வருபவனும் அவனே. இந்து விக்கிரகவியலைப் பொறுத்தமட்டில் சிற்பக் கலைஞன் பற்றிய கருத்துக்கள் ஒரு வகையில் விக்கிர அமைப்புப் பற்றிய விளக்கத்திற்கும் பின்னணி யாக அமைந்து துணை புரிவன. ஆகமங்களும் சிற்ப நூல்களும் சிற்பக்கலைஞன் பற்றிய விஷயங்களை விரித்துக் கூறும் வகையில் அவனது மரபு, தகைமை, ஒழுக்க விதிகள் ஆகியவற்றைக் கூறு கின்றன.

தொழில் நுட்பத் திறனோடு கூடிய சிற்பக் கலையிலே தேர்ச்சி பெற்ற கலைஞனே "சிற்பி" எனப்படுவன். சிற்பக்கலையையும் உள்ளடக்கிய ஏனைய கலை ஆக்கங்களை நெறிப்படுத்தும் மேல வனே ஸ்தபதி. ஆகம மரபு குறிக்கும் கோயில் நிர்மாணம், அக்கோயிலில் இடம்பெறும் விக்கிரகங்களை அமைக்கும் கலை ஆகியவற்றை நெறிப்படுத்தும் பாரிய பொறுப்பு ஸ்தபதியைச் சார்ந்ததாகும்.

சிற்பியோடு தொடர்பு படுத்தக் கூடிய தெய்விக மரபுக் கருத்துக்கள் இருக்குவேதத்தில் இடம் பெறுகின்றன. 'விஸ்வகர் மன்' என்ற பெயர் சிற்பவியற்றுறையோடு தொடர்புடையது. இப்பெயர் இருக்குவேதத்தில் உள்ளது. இவ்வேதத்தின் பத்தாம் மண்டலப் பாடல்களிற் சில விஸ்வகர்மன் என்ற தெய்வத்தின் மீது பாடற்பெற்றவை. அப்பாடல்களில் ஒன்றில் இவ்வுலகின் சிற்பி யாவன்? என்ற வினு வழிபடுவோனது உள்ளத்தில் எழு கின்றது. இதற்கான விடை இருக்குவேதத்தில் பத்தாம் மண் டலத்தில் வரும் ஹிரண்யகர்பன் பற்றிய பாடலில் வருகின்றது. பிரபஞ்சத்தைப் படைத்த சிற்பக்கலைஞனின் அம்சமாக பிரஜா பதி குறிப்பிடப்படுகின்ருன். இவ்வுலக சிருஷ்டிக்குக் காரணமான வன் அவனே. இருக்கு வேதம் குறிப்பிடும் விஸ்வகர்மன் என்ற தெய்வத்தின் மீதும் இக்கருத்துப் பிரதிபலிப்பதோடு சிற்பியின் தெய்விக மரபினையும் உணர்த்துகின்றது. நிறைவு பெற்ற கலை யம்சத்தோடு சிற்பங்களை வடிப்பதே தெய்விகக் கலைக்குரிய பண் பாக அமைகின்றது. 'தெய்விகத் தூண்டுதலால் மனிதனது உள் ளத்தில் ஏற்பட்ட எண்ணங்களைக் கலையாக வடிப்பதே இந்தியக்

கலையின் அடிப்படை அம்சமாகுமென' எரிக் கிரில் என்பார் கூறும் கருத்தும் இங்கு பொருத்தமுடையது.

சிற்பியின் தெய்விக மரபு பற்றியும் அவனுக்குரிய தகுதி பற்றியும் மானசாரம் என்ற நூலில் சில்பிலக்ஷணம் என்ற இயலில் கூறப்படுகின்றது. இங்கு பல்வேறு துறை சார்ந்த கலைஞர்களதும் மரபு குறிப்பிடப்படுகின்றது. படைப்புத் தொழில் புரியும் பிரமன் மகாவிஸ்வகர்மனாகக் குறிக்கப்படுகின்றான். இவனது நான்கு முகங்களும் நான்கு திக்குகளுக்குரியன. கிழக்கு முகம் 'விஸ்வபூ' என்றும் தென் திசைக்குரியது 'விஸ்வவித்' எனவும் வடதிசைக்குரியது 'விஸ்வஸ்த' என்றும் மேற்குத் திசைக்குரியது 'விஸ்வஸ்ரஷ்டா' என்றும் பெயர் பெற்றன. இந்நான்கு முகங்களிலிருந்தும் முறையே விஸ்வகர்மா, மயன், துவஷ்டா, மனு ஆகியோர் தோற்றம் பெற்று முறையே இந்திரன், சுரேந்திரன், வைஸ்ரவணன், நளன் ஆகியோரது புத்திரிகளை மணந்து நால்வரைப் புத்திரர்களாகப் பெற்றனர். ஸ்தபதி, சூத்திரகிராகி, வர்த்தகி, தக்ஷன் என்பவர்களே அவர்கள். இவர்களில் ஸ்தபதி கட்டட நிபுணன். சூத்திரகிராகி கட்டப் படவரைஞர். வர்த்தகி என்பவன் அளவுப் பிரமாண விதிகளையுணர்ந்தவனாகவும் ஓவியக் கலைஞனாகவும் விளங்குபவன். தக்ஷன் சிற்பியாவான்.

ஸ்தபதி என்பவன் ஏனைய மூவருக்கும் குரு. ஸ்தபதி என்ற பெயரே யாவற்றையும் உரியவாறு காண்பதற்குத் தகுதியுடையவன் என்பதைக் குறிக்கும். இவன் சாஸ்திரங்களைக் கற்றவன். சூத்திரகிராகியும் ஏனையோரும் அவனது வழிகாட்டலினால் வாஸ்து சாஸ்திர விதிகளைப் பின்பற்றினர். கலைநுட்பத்தோடு ஈடுபாடு கொண்ட யாவருக்கும் மேலவனாக விளங்கும் ஆசாரிய லட்சணங்களைக் கொண்டவன் ஸ்தபதிக்கு வேண்டிய தகுதிகளை மகாபாரதம் கூறும். 'ஸ்தபதி கல்வியிற் சிறந்தவனாகவும் அறிவுக் கூர்மை மிக்கவனாகவும் அமைதி கொண்ட உள்ளத்தினனாகவும் ஆண்மை மிக்கோனாகவும் கல்வி கேள்விகளிற் சிறந்தவனாகவும் நற்குணம் பொருந்தியவனாகவும் செயல்கள் யாவற்றிலும் தாம் பெற்ற அறிவையும் அனுபவத்தையும் திறம்படப் பிரயோகிக்கும் ஆற்றலுள்ளவனாகவும் விளங்க வேண்டியவனாவான்' என அந்நூல் கூறும்.

அடுத்து முக்கியத்துவம் பெறுபவன் சூத்திரகிராகி. இவன் ஏனைய இருவருக்கும் குரு. இவனும் சுருதி, சாஸ்திர நுட்பங்

கலேயும் நன்கு அறிந்தவன்; அளவைகளை மதிப்பிடுவதில் வல்ல வனுன மூன்ருமவன் சுருதி மற்றும் ஓவியம் பற்றிய அறிவிலும் சிறந்தவன். இறுதியிற் குறிப்பிடப்பட்ட தக்ஷணுகிய சிற்பியே செயற்றிறன் கொண்டவன்.

மகாபாரதத்தில் விஸ்வகர்மன், மயன் பற்றிய குறிப்புகள் உண்டு. இவர்கள் முறையே தெய்வங்களினதும் தானவர்களினதும் வாஸ்துவித்தை வல்லுனர்களாக விளங்கியவர்கள். விஸ்வகர்மன் ஆயிரக்கணக்கான கலைகளில் வல்லவன். தெய்வங்களுக்குத் தேவையான பொருட்களை உருவாக்கியவன் இவனே. மயன் என்பவன் தானவர்களின் விஸ்வகர்மனுகச் சுட்டப்படுகின்ருன். தெய்வங்களின் சிற்பக்கலை வல்லுனனுக விளங்கிய விஸ்வகர்மாவின் பெயர் பிற்காலத்தில் இத்துறையில் நிபுணர்களாக விளங்கியவர்களுக்கும் உரியதாயிற்று. தமது வழிமுறை தெய்விகம் வாய்ந்தது என்பதைக் காட்டுவதற்கு இப்பெயரைத் தமக்குரியதாகக் கொண்ட பலர் பிற்காலத்தில் இருந்திருக்க முடியும். தெற்கிலும் வடக்கிலும் எழுந்த இந்தியச் சிற்ப நூல்கள் வாஸ்து வித்தையின் குருவாக விஸ்வகர்மாவையே குறிப்பிடுகின்றன. இப்பெயரைக் கொண்ட சிற்ப நூல்கள் பல தென்னுட்டில் காணப்படுகின்ற படியால் இப்பெயருடன் விளங்கிய சிற்ப வல்லுனர்கள் தெற்கிலும் இருந்திருக்கலாம். தென்னுட்டிலுள்ள அத்தகைய நூல்களில் விஸ்வகர்மீயம், விஸ்வகர்மசில்பம், விஸ்வகர்மா வாஸ்துசாஸ்திரம் ஆகியவை குறிப்பிடத்தக்கன. மரபு வழியாக இப்பெயரைத் தாங்கிய சிற்பிகள் குடும்பம் தென்னுட்டில் விளங்கி வந்திருக்க முடியும். சிற்பக் கலையில் முதல்வனுகிய மயன் என்பவன் பற்றி இதிகாசங்கள் குறிப்பிடுகின்றன. இவன் பற்றிய மரபு தென்னிந்தியச் சிற்பக்கலை மரபோடு தொடர்புறுகின்றது. இவனது பெயரும் பிற்கால வாஸ்து வித்தைக்கு உரியவர்கள் தமக்கெனக் கொண்டுள்ளதை நாம் ஊகிக்க முடிகின்றது. மயமதம் என்ற வாஸ்துசாஸ்திரம் இங்கு குறிப்பிடத்தக்கது. இந்நூலிருந்து பல மேற்கோள்களை நூல்கள் எடுத்தாளுகின்றன. இக்குறிப்புக்களிலிருந்து விஸ்வகர்மன், மயன் ஆகியோரை முதன்மையாகக் கொண்ட மரபுகள் உருவாகி வந்துள்ளமை தெரிய வருகின்றது. இந்திய கட்டட சிற்பக்கலைக்குரிய ஆசிரியர்களாக மேலும் பலர் குறிப்பிடப்படுகின்றனர். பிருகு, அத்திரி, வசிட்டர், நாரதர், நக்னஜித், சௌனகர், கார்கர், அநிருத்தர், சுக்

கிரர், மனு, பராசரர், காசியபர் ஆகியோர் இத்தகையோரில் குறிப்பிடத்தக்கவர்கள். இவர்களை உள்ளடக்கிய குருசீட மரபொன்று உருவாகி வந்துள்ளதெனக் கொள்வதிலே தவறில்லை. இந்தியச் சிற்பக்கலை மரபுக்கு இவர்களே முன்னோடிகளாக விளங்கியிருக்க முடியும்.

இந்தியாவில் சிற்பக்கலைப் பயிற்சி பாரம்பரிய முறையிலேயே இடம்பெற்றது. இக்கலையிலே தேர்ச்சிபெறக் குருவின் வழிகாட்டல் இன்றியமையாததாகக் கருதப்பட்டது. அத்தகைய வழிகாட்டலின்றிப் பெறப்படும் கல்வி சித்திக்காது என்ற நம்பிக்கை நிலவியது. எனவே, சிற்பக் கலைஞன் இக்கலையிலே தேர்ச்சி பெறுவதற்கு முறைப்படி குருகுலவாசம் செய்வது அவசியமாக இருந்தது. பெரும்பாலும் சிற்பத் தொழில் பயில்பவனுக்கு ஆசாரியனாக விளங்கியவன் தந்தையே. சிற்பக்கலையைத் தந்தை தன் மைந்தனுக்குக் கற்பிக்க, பின்னர் அவன் அதனைத் தன் மைந்தனுக்கு வழங்கினான். இவ்வாறு தொன்றுதொட்டு வழிவழியாக இக்கலை பயிலப்பட்டு வந்தது. தந்தையின் தொழிற்கூடமே மகனது கலைபயில் சாலையாக இருந்தது. தொழிற்பயிற்சியும் நூற்பயிற்சியும் இணைந்தே சென்றன. இப்பயிற்சி நிலையின் பின்னர் சிற்பக் கலைஞன் கைதேர்ந்த கைவினைஞனாகவும் கணித அறிவு பெற்றவனாகவும் அளவிலக்கணம் அறிந்தவனாகவும் கலைவளம் தெரிந்தவனாகவும் பல்வேறு கலைமரபுகளை உணர்ந்தவனாகவும் வரலாற்று இலக்கியங்களைக் கற்றவனாகவும் தத்துவ அறிவு வாய்க்கப்பெற்றவனாகவும் இருத்தல் அவசியமாகவிருந்தது.

தெய்விக விக்கிரகங்களை வடிக்கும் காரணத்தால் சிற்பக் கலைஞன் தனது ஆன்மாவைத் தூய்மையுள்ளதாக வளர்த்துக் கொள்ள வேண்டியிருந்தது. ஆன்ம வளர்ச்சிக்கு ஒழுக்கமே உறுதுணை, எனவே, சிற்பக் கலைஞனைப் பொறுத்தவரை ஒழுக்கமே அடிப்படைப் பண்புகளில் ஒன்றாக விளங்கியது. தெய்வச் சிற்பங்கள் வெறும் கலைப்படைப்போ, காட்சிப்பொருளோ அல்ல. உருவின்றி. கண்ணால் காணமுடியாத ஒன்றை அறிவால் உணர்ந்து அவ்வுணர்வினைக் கலைவடிவாய்க் கண்முன் கொண்டு வந்து நிறுத்துவது இந்தியச் சிற்பக் கலைஞனது சிறப்பியல்பாகும். அவ்வுருவங்கள் வழிபடுவோனது உள்ளுணர்வோடு தொடர்பு கொள்வன. எனவே, ஒழுக்க சீலத்தினால் தூய்மையடைந்த சிற்பக் கலைஞனின் கைவண்ணத்தில் உருவாகிய கடவுட் படிமங்களில்

இறைத்தன்மை மிளிர்ந்தது. சிற்பக் கலைஞனுக்கு இத்தகைய தகுதியை உறுதி செய்வதற்கே பண்டைய பயிற்சிமுறையும் குரு குலவாச அடிப்படையில் அமைந்த கல்விமுறையும் ஒழுக்கக் கோட்பாடுகளும் உதவின.

சிற்பங்களை உருவாக்கும் பொழுது அவற்றில் தெய்விகப் பொலிவை விளங்கச் செய்வதற்குச் சிற்பி தியான மந்திரங்களைத் தனது உள்ளத்திலே தியானித்தல் வேண்டுமெனச் சிற்பநூல்கள் வலியுறுத்துகின்றன. சிற்பத்தை உருவாக்கும் முன்பு அவ்வாறு தியானஞ் செய்து அம்மந்திரங்கள் குறிக்கும் உருவத்தைத் தனது உள்ளக் காட்சியில் காணுதல் வேண்டும். தியானத்தின் பயனாய் உள்ளத்திலே தோன்றும் உருவத்தையே தனது கைவண்ணத் தின் மூலம் அவன் வெளிக்கொணர்ந்தான். இத்தெய்வ உருவங் களை ஆலயங்களில் பிரதிட்டித்து வழிபாடியற்றும் சிவாசாரியனும் அதே தியான மந்திரங்களையே தியானித்து வழிபடுவன். எனவே, அந்நோக்கத்தினை நிறைவு செய்யத்தக்க உருவங்களையே சிற்பி அம்மந்திரங்கள் கூறும்முறைப்படி உருவாக்குவது அவசியமாக விருந்தது. தியான சுலோகங்களை இவ்விரு நோக்கங்களை நிறை வேற்றப் பயன்படுத்தியதன் மூலம் சிந்தனைக்கும் செயலுக்கு மிடையே ஒருமைப்பாடு நிலவியது. தியான மந்திரங்களின் துணை யால் உள்ளத்திலே தோன்றும் உருவத்தைச் சிற்பி கல், மண், மரம், செம்பு, சுதை ஆகிய பொருட்களில் ஏதேனுமொன்றில் உருவங்களை உருவாக்கும் வல்லமை பெற்றிருந்தான்.

ஆகமங்கள் சிற்பக்கலைஞனைச் சிறப்பித்துக் கூறுகின்றன. யஜ மானன், சிவசாரியன், சிற்பக்கலைஞன் ஆகிய மூவரும் இணைந்து செயலாற்ற வேண்டிய தேவை பற்றி ஆகமங்கள் அடிக்கடி குறிப் பிடுகின்றன. சிவாசாரியனுக்கும் சிற்பிக்குமிடையேயுள்ள தொடர்பு சிறப்பாக வலியுறுத்தப்படுகின்றது. சிற்பியைக் கொண்டு இறைவனது திருவுருவத்தைச் செய்வித்ததன் பின்னர் யஜமானன் சிவாசாரியனையும் சிற்பியையும் பூசிக்க வேண்டுமெ னக் காமிகாகமம் கூறும். பிரதிமைக்குரிய பொருட்களைத் தேர்ந் தெடுக்கும் போது சிற்பி சிவாசாரியனுடன் இணைந்து செயல்பட வேண்டியிருந்தது. இத்தகைய சந்தர்ப்பங்களில் பல பூர்வாங்கக் கிரியைகள் இடம்பெற்றன. சிற்ப சாஸ்திர நூல்களும் சிற்பக் கலைஞன் பற்றிய பல விவரங்களைத் தருவதோடு சிற்பிக்கும் ஆசா ரியனுக்கும் உள்ள தொடர்பையும் இவை தெளிவாகக் கூறுகின் றன.

தமிழ் நாட்டில் நிலவிய சிற்பக்கலை மரபில் சிற்பக் கலைஞனது படைப்புக்கள் பொதுமையாகவே நோக்கப்பட்டன. தமது செயற்றிறன் அனைத்தையும் தெய்விகமாகக் கருதி, தாம் சார்ந்த சிற்பக்கலை மரபினுக்கே அர்ப்பணித்த பெருந்தன்மை தமிழ் நாட்டுச் சிற்பிகளுக்கே உரியதொன்று. சிற்பிகளுக்கென்று காணப் பட்ட விதிமுறைகளும் மரபுவழி ஓழுங்கு முறைகளும் அவர்களது கற்பனையோட்டத்தைத் தடை செய்தனவா என்பது பற்றியும் நாம் சிந்திப்பது அவசியமாகின்றது. இது பற்றி அறிஞரிடையே பல்வேறு கருத்துக்கள் நிலவுகின்றன. ஒரு நாட்டின் கலை மரபு அதன் தனித்த பண்பாட்டை நமக்கு நன்கு விளக்குகின்றது. கலையின் உட்பொருளுக்கு அது உறுதுணையாக அமைகின்றது. கலையின் நேர்மைக்காகவே வரம்புகள் தோன்றின. உள்ளத்தில் உண்மையொளி வீசிய கலைஞனுக்கு விதிமுறைகளும் மரபுகளும் ஒருபோதும் தளைகளாகவில்லை. அவனது கற்பனைக்கு உரிய இடம் கிடைக்கவே செய்தது. பல்லவர், சோழர், பாண்டியர் காலத்துக்குரிய நூற்றுக்கணக்கான திருமேனிகள் ஒவ்வொன்றும் தனித்தன்மை வாய்ந்தனவாகவும் அழகே உருவாகவும் கற்பனை நிறைந்த கலைச் செல்வமாகவும் விளங்குவதே இதற்குச் சான்றாகும்.

என்றோ ஒரு நாள் சிற்பக்கலைஞன் புரிந்த சாதனை காலத்தை வென்று தலைமுறை தலைமுறையாக மனித சமுதாயத்திற்கு இன்பத்தைக் கொடுத்துக் கொண்டிருக்கின்றது. சிற்பக்கலைஞன் ஒருவன் தான் காணும் கலைவடித்தைக் காண ஒட்டாமல் தடுத்து நிறுத்தும் பாறைப் பகுதிகளை உளிகொண்டு செதுக்கி, நீக்கி, தான் தரிசித்த கலைவடிவம் உருவாகும்படி செய்கிறான். அப் பாறையில் கண்ணையும் கருத்தையும் கவரும் சிற்பம் உருவாகி விடுகின்றது. சிற்பக்கலைஞன் எதைக் கொடுக்கவேண்டும் எதை விட்டு விடவேண்டும் எனத் தேர்வு செய்து கொள்ளுகின்றான். இந்தத் தேர்வில்தான் அவனது கற்பனைத்திறன் வெளிப்படுகின்றது.

கலைஞன் ஒருவனது படைப்பினை நாம் முழுமையாக ரசித்து மகிழ வேண்டுமென்றால் அந்தக் கலைஞனின் கற்பனை நிலையில் நாம் நின்று பார்த்தால் மட்டுமே இது சாத்தியமாகின்றது. கலைஞனது கலைமரபோடு நாம் தொடர்ந்து பழக்கத்தை ஏற்படுத்திக் கொள்ளும் போதுதான் அவர்களது கலைப்படைப்பில்

வெளிப்படும் கலைத்திறனையும் மனோதர்மத்தையும் நாம் உணர்ந்து கொள்ளமுடிகின்றது. இதனை நாம் ரசனைப்பயிற்சி என்று கூற லாம்.

இந்து சமய சாத்திரங்களிலும் புராண இதிகாசங்களிலும் வர்ணிக்கப்பட்ட கடவுளர்களுக்குச் சிற்பிகள் தங்கள் கற்பனை யில் கலைவடிவம் கொடுத்தனர். இந்தக் கலைவடிவங்களை வழி பாட்டுச் சின்னங்களாக ஏற்றுக்கொண்ட இந்துக்கள் பக்தியை யும் கலையையும் ஒன்றாக்கி உயர் அனுபவத்தைப் பெற முனைந் தனர். இந்து மதச் சிந்தனைகளே கலைவெளிப்பாடுகளாக உருப் பெற்றன. இவ்வகையில் ஓர் இந்துவின் வாழ்க்கை கலை உன்ன தத்தை வெளிப்படுத்தும் வாழ்க்கையாக அமைந்ததோடு கலை யுணர்வை வளர்த்துக் கொள்வதன் மூலம் அவன் தெய்விக உணர்வில் தன்னை ஐக்கியப்படுத்திக் கொண்டான். இவ்வகை யில் இந்து சமய மரபில் கலை உணர்வுக்கும் தெய்விக உணர் வுக்கும் இணைப்பு ஏற்படுத்துவதில் சிற்பக்கலைஞன் பெரும் பொறுப்பு மிக்கவனாக விளங்கினான்.

இது வரை கூறியவற்றிலிருந்து சிற்பக்கலைஞன் பற்றிய சில கருத்துக்களைத் தெளிவுபடுத்திக் கொள்ளலாம். இந்து சிற்பக் கலைஞன் தெய்விக மரபுடையவன் என்பதும் அவனது ஆக்கங் கள் தெய்விகம் வாய்ந்தவை என்பதும் குறிப்பிடத்தக்கன. சிற்பி உருவாக்கிய தெய்விகக் கலைப்படைப்புகள் திருக்கோயி லில் தெய்வங்களாகக் காட்சியளித்தன. சிவாசாரியன் அவற் றிற்கு வழிபாடியற்றி உபாசனை புரிந்தான். சிற்பக்கலைஞனது திறத்தால் கலை உணர்வும் தெய்விக உணர்வும் ஒன்றுடன் ஒன்று இணைந்து வளர்ச்சி பெற்றன.

## உசாவியவை

இராமசுவாமி, மே., தமிழ்நாட்டுச் செப்புத் திருமேனிகள், தமிழ் நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத் துறை, சென்னை. 1976.

இருக்கு வேதம், தாமோதரபட்டர், ஸ்ரீபாதசர்மா (பதி.), 1957.

கணபதிஸ்தபதி, வை., சிற்பச் செந்நூல், தொழில்நுட்பக் கல்வி இயக்ககம், சென்னை. 1978.

சில்பரத்தினம், தேவநாதாச்சாரியார் (பதி.) ஸரஸ்வதி மகால், தஞ்சை. 1961.

பூர்வகாமிகாகமம், ஷண்முகசுந்தர முதலியார், கொ., (பதி.), சிவஞானபோத யந்திரசாலை, சென்னை. 1889.

பூர்வகாரணாகமம், ஷண்முகசுந்தர முதலியார், கொ., (பதி.), சிவஞானபோத யந்திரசாலை, சென்னை. 1900.

மகாபாரதம், சுக்தங்கர், வி. எஸ்., பெல்வல்கார், எஸ். கே., (பதி.) பண்டார்கர் கீழைத்தேய ஆய்வு நிறுவனம், பூனா.

மானசாரம், வெங்கடசுப்ரஹ்மண்ய சாஸ்திரி, நீ. வை., (பதி.) ஸரஸ்வதி மகால், தஞ்சை, 1963.

ஸகளாதிகாரம், வாசுதேவ சாஸ்திரி கே. (பதி.), ஸரஸ்வதி மகால், தஞ்சை. 1961.

ஸ்ரீ காசியப சில்ப சாஸ்திரம், சுப்ரஹ்மண்ய சாஸ்திரி, கே. எஸ்., (பதி.) ஸரஸ்வதி மகால், தஞ்சை. 1960.

Banerjea, J. N., **The Development of Hindu Iconography**, Munshiram Manohar Lal, Pub. Pvt., Ltd., 1974.

Bhattacharyya Tarapade, **The Canons of Indian Art**, (The Study of Vastu Vidya), Firma K. L., Mukhopadhyay. 1963.

Coomaraswamy, A. K., **Visvakarma**, Munshiram Manohar Lal, Pub., Pvt., Ltd.. Delhi., 1978.

Coomaraswamy, A. K., **The Dance of Shiva**, The Noonday Press, New York. 1959.

Stella Kramrisch, **The Hindu Temple**, Vols. I & II., Motilal Benarsidas, Delhi. 1976.

# குரு பாரம்பரியம்

## 9

இந்து சமயம் உலக சமயங்களுள் மிகப் பழைமை வாய்ந்தது. இச்சமயம், காலங்காலமாக எழுந்த சமய சிந்தனைகளையும் கோட்பாடுகளையும் வழிபாட்டு முறைகளையும் உட்பொருளாகக் கொண்டுள்ளது. இதற்குத் நம்நாட்டில் வழங்கப்பட்ட பழைய பெயர் 'சனாதனதர்மம்' என்பதாகும். இது மரபு வழிப் பெயராக அமைந்தது. இதன் பொருள் 'என்றுமுள்ள சமயம்' என்பதாகும். இப்பெயர் இச்சமயத்திற்குத் தோற்றக் கால வரையறையில்லை என்பதை உணர்த்தும். தொன்மைவாய்ந்த சமய இலக்கியத்தை அடிப்படையாகக் கொண்டெழுந்த மதம் என்ற காரணத்தால் 'வைதிகதர்மம்' என்ற பெயர் வழங்கப் படலாயிற்று. இப்பெயர் இலக்கிய ஆதாரத்தைக் கொண்டெழுந்தது 'சிந்து நதி பாயும் பிரதேசத்தில் வாழ்ந்த மக்களால் பயிலப்பட்ட மதம் என்ற அடிப்படையில் 'இந்து' என்ற பெயர் இதற்கு அமைந்தது. 'இந்து' என்ற சொல் 'சிந்து' என்பதன், மரூஉ ஆகும். இப்பெயர் வரலாற்று அடிப்படையிலும் பிற நாட்டவரால் வழங்கப்பட்ட வகையிலும் அமைந்தது. எனினும் இந்துமதம் என்ற பெயர் இந்தியா முழுவதும் பயிலப்பட்ட மதத்திற்குரிய பெயராகவும் மற்றும் இந்திய எல்லைகளைக் கடந்து பிறநாடுகளிலும் பயிலப்பட்ட மதத்திற்குரிய பெயராகவும் அமைந்தமை குறிப்பிடத்தக்கது. மேற்கு நாடுகளிலும் இம் மதம் இப்பெயரினால் அறியப்படலாயிற்று. தென்னாசியப் பிராந்தியத்தில் இம்மதம் வரலாற்றுச் சிறப்பும் மரபு வழிப் பெருமையும் கொண்ட மதமாக விளங்கியது.

வேதகாலந் தொடக்கம் இற்றைக்காலம் வரை இம்மதம் தனது பழைமையைப் பேணி வரும் அதே சமயம் காலச் சூழ் நிலைக் கேற்பத் தன்னைத் தானே புதுப்பித்துக் கொண்டு வந்த மையும் குறிப்பிடத்தக்கது. பழைமை வாய்ந்த சிந்தனைகள் இம் மதத்தின் கருவாகவும் புதுமை வாய்ந்த சிந்தனைகளும் விளக் கங்களும் இம்மதத்திற்குரிய உருவாகவும் கொள்ளப்படத் தக்கன. இம்மதத்தின் ஆத்மீக சிந்தனைகள் வேதங்களிலேயே முதன்முதலாக ஊற்றெடுத்தன. காலத்துக்கு காலம் பல மெய்ஞ்ஞானிகளும் அனுபூதிமான்களும் சமயச் சான்றோர்களும் பழைமைவாய்ந்த சமயத்தின் மூலக்கருத்துக்களுக்கு விளக்கம் அளித்தனர்.

வேத காலத்தில் இருஷிகள் சமய குருவாக விளங்கி ஆத்மஞானம் பரவ உதவினர். உபநிடதங்களில் யஜ்ஞவல்கியர், நாரதர், யமன், பிரஜாபதி, உத்தாலகர் போன்றோர் ஞான குருவாக விளங்கினர். இவர்கள் மூலம் வேத மறைஞான ஊற்றுக்கள் உபநிடத சிந்தனைகளாக விரிவடைந்து பரவின. வியாசமகரிஷி எமது குருபாரம்பரியத்தின் ஆதர்ஷ புருஷராவர். எமது சமயத்தின் பிரமாண நூல்களை வகுத்தும் தொகுத்தும் அமைத்தவர் எனப் பாரம்பரியமாகப் போற்றப்படுபவராகவும் நிறைஞானத்தின் வடிவமாகவும் துதிக்கப்படுகின்றார். ஆதிசங் கரர் இந்துசமயத்தின் ஷண்மத பிரதிஸ்தாபகராகவும் அத்வைதக் கோட்பாட்டை நிறுவிய ஞானியாகவும் ஆத்மீக குருவாகவும் போற்றப்படுகின்றார். இவரது அடிச்சுவட்டில் ஸ்ரீ இராமானு ஜர், மத்வர் போன்றோர் சிறப்படைந்தனர். தென்னாட்டுச் சைவமரபில் நாயன்மார்கள் சமயாசாரியராகவும் ஆழ்வார்கள் வைணவ ஆசாரியராகவும் விளங்கிப் பக்திநெறியை வளம்படுத் தினர். சந்தானகுரவர் சைவசமய மரபைச் சாஸ்திரரீதியில் வளம் படுத்தினர். இவர்களது குருசீட பரம்பரை சிறப்புடையது. சித்தர்களும் மறைஞானிகளும் பிரமாணுநீத நிலையில் நின்று தமது அனுபவத்தினால் பெற்ற சமய உண்மைகளை உலகுக்கு உபதேசித்தனர்.

இறைவனே குருவாக வந்து சீடருக்கு உபதேசித்தருளிய அற்புதம் புராணங்களிலும் அடியார்களது வரலாறுகளிலும் காணக்கிடக்கின்றது. சைவ பாரம்பரியத்தில் இறைவனே தக்ஷிணாமூர்த்தியாக வீற்றிருந்து சனகாதி முனிவர்க்குக் குருவாக

அருள்பாலிக்கும் சிறப்பைக் கந்தபுராணம் போற்றுகின்றது. சிவாலயங்களில் கருவறையின் தெற்குப் புறத்தில் இவ்வடிவம் இடம் பெறுவது குறிப்பிடத் தக்கது. விநாயகப் பெருமான் வேதமுதல்வனுக விளங்கிப் பிரணவப் பொருளாக வழிபடப்படு கின்றான். கந்தன் பிரணவ முரைத்த பெரியோனுக, குருநாதனுக விளங்கிய சிறப்பைப் புராண வாயிலாகவும் தலப்பெருமையினுலும் நாம் உணரலாம். கிருஷ்ணன் அவதார புருஷனுகக் கீதையைப் பார்த்தனுக்கு உபதேசித்த பெருமையைப் பாரதம் கூறும். ஞானப் பனுவல்களைப் பாடி இறைவனைப் போற்றித் துதித்த அடிய வர்களுக்கு இறைவனே முதலடி எடுத்துக் கொடுத்த தெய்வீக வரலாறும் வழங்கிவருகின்றது. சுந்தரர், சேக்கிழார் பெருமான், கச்சியப்ப சிவாசாரியார், அருணகிரிநாதர் போன்றோர் இவ்வரிசையில் குறிப்பிடத்தக்கவர்கள்.

இந்துமத ஆத்மீக நெறியில் நவீன காலத்திலும் எத்தனையோ ஞானிகள் உருவாகினர். வாழும் இந்துமதத்தில் தொன்மையான ஆத்மஞான சிந்தனைகளை உரிய விளக்கங்களோடு பாரெங் கணும் பரப்புவதில் பலர் தலைசிறந்து விளங்கினர். இந்துமதத் தின் சிறந்த ஆன்மீகவாதிகளாக ஸ்ரீ இராமகிருஷ்ண பரம ஹம்ஸர், சுவாமி விவேகானந்தர், ஸ்ரீ அரவிந்தர், ஸ்ரீ ரமணர் போன்றோர் குறிப்பிடத்தக்கவர்கள். ஸ்ரீ காஞ்சிகாமகோடி சுவாமிகள், ஸ்ரீ சத்யசாயிபாபா போன்றோர் இன்றும் எமது ஞானப்பாதைக்கு வழிகாட்டிகளாக விளங்குகின்றனர். இவர்கள் அவதாரபுருஷர்கள் என்ற பெருமைக்குரியவர்கள். இந்தியாவிலும் இலங்கையிலும் உள்ள மடங்களிலும் ஆதீனங்களிலும் உள்ள குருமகாசந்நிதானங்கள், ஆதீனகர்த்தர் முதலியோர் குருசீட பாரம்பரியத்தில் குறிப்பிடத்தக்கவர்கள்.

இந்துசமய மரபில் இவ்வாறு தொன்மையான காலம் முதல் ஆத்மீக சிந்தனைகள் குருபாரம்பரியமாக ஒவ்வொரு தலைமுறைக்கும் வழங்கப்பட்டு வந்துள்ளன. எமது குருபாரம் பரியம் தெய்வ பாரம்பரியமாகும். ஆத்மீக நெறியை உலகுக்கு எடுத்துச்சொல்லும் இக்குரு பாரம்பரியத்திற்கு நீண்டகால வரலாற்றுச் சிறப்பு உண்டு. எனவேதான் இந்துசமய மரபில் அம்மதத்தை உருவாக்கியவராகத் தனிமனிதர் எவரையும் சுட்டிக் குறிப்பிடும் மரபு காணப்படவில்லை. அம்மதத்தின் சிறப்புக்கள் அனைத்தும் குருபாரம்பரியத்திற்கே அர்ப்பணிக்கப்பட்டுள்ளன.

இத்தகைய சிறப்பு வாய்ந்த ஆன்மீக மரபில் குருவின் உயர் நிலையையும் தத்துவத்தையும் ஆராய்வதே இக்கட்டுரையின் பிரதான நோக்கமாகும்.

இந்து சமயத்தில் ஆன்மீக நெறி நின்று உலகுக்கும் மக்களுக்கும் ஆன்மீக அறிவினைப் பரப்பதுப் பெரிதுந் துணை நின்றவரே குரு. குரு பாரம்பரியத்தின் சீரிய பணியினாலும் உபதேசங்களினாலும் போதனைகளாலும் மக்கள் கூட்டத்தினருள் கல்லாத பாமரரும் சமய உண்மைகளை உணர்ந்து அறிவுபெற வாய்ப்பு ஏற்பட்டது. இந்துக்களின் கல்வியறிவு சமயத்தோடு கூடிய தொடர்புடையதாக விருந்தது. சமயத்தையும் கல்வியை யும் இந்துக்கள் இரு கண்களாகக் கருதினர். இந்துக்கள் தமது சமய ஞான அறிவைக் குருவாயிலாகவே பெற்றுவந்தனர்.

'குரு' என்ற பெயர் 'அறியாமையை நீக்குபவர்' என்ற பொருளைத் தரும். அறிவும் ஆற்றலும் ஒருங்கே அமையப்பெற்ற ஆசிரியரை அடைவதே இறைவனின் திருவருள்தான் என்ற கருத்தினைத் திருவருட்பயன் எடுத்துக்கூறும்:

அறியாமை உள்நின் (று) அளித்ததே காணும்
குறிஆகி நீங்காத கோ[1].

ஆத்ம ஞானம் தானாக விளங்கமாட்டாது. அதைவிளங்கச் செய்வதற்கு ஞானாசாரியன் வேண்டும். ஆன்ம ஞானத்தை அடைதற்கு ஞானாசாரியன் இன்றியமையாதவன். 'எழுத்தறிவித் தவன் இறைவன்' என்ற நிலையில் குரு இந்துப் பாரம்பரியத்தில் தெய்வீக நிலைக்கு உயர்த்தப்படுகின்றான். அறியாமையில் சிக்குண்டு அல்லற்படும் ஆன்மாக்களுக்கு உரிய வழிகாட்டுவதற்கு இறைவனின் திருவருளே குருவாகத் தோன்றுகின்றதென்ற கருத்து இங்கு நோக்கத்தக்கது. மாணவர்கள் அவர் தம் தன் மைக்கேற்பச் சில குறைகளையும் சில நிறைகளையும் பெற்றிருப்பர். எனவே, ஒவ்வொரு மாணவருக்கும் அவருக்கேற்ற வகையில் உரிய அறிவுரையும் உபதேசமும் தேவைப்படும். அவ்வாறு அவரவர் தன்மைக்கேற்பத் தேவையானவற்றைச் சிறந்த முறையில் உருவாக்கி, அவர்தம் குறைகளைக் களைந்து நிறைவு பெறச் செய்யும் வகையில் அறிவு ஆற்றல் வளரத் துணைபுரிவதே குருவின் சிறப்பான பணியாக அமைகின்றது. மாணவரை ஒரு நோயாளியாகவும் குருவை நோய்தீர்க்கும் மருத்துவராகவும்

உவமித்து, மாணவரின் தேவைகளை ஆசிரியனே தெரிந்து கொள்ளவும் அதற்கு வேண்டியன செய்யவும் வல்லவர் என்னும் கருத்தும் வலியுறுத்தப்பட்டுள்ளது:

அகத்துறுநோய்க் குள்ளினர் அன்றி அதனைச்
சகத்தவரும் காண்பரோ தான்.[2]

அறியாமையிற் சிக்குண்டு அவதியுறும் ஆன்மாக்களுக்கு ஆதர வளித்துக் கடைத்தேற்றத் துணை செய்யக்கூடிய ஆற்றல் குரு ஒருவருக்கேயுண்டு என்ற கருத்துத் திருவருட்பயனில் கூறப் படுகின்றது. இறைவனின் திருவருள் மானிட உருவில் தோன்று வதே குரு என்பதும் அவ்வாறு தோன்றுவது மக்களின் நன்மைக் காகவே என்பதும் சமய நூல்களின் கருத்தாகும்.

சைவ மரபின்படி குருவினால் வழங்கப்படும் தீக்ஷை குறிப் பிடத்தக்கது. 'ஞானத்தைக் கொடுத்துப் பாசத்தைக் கெடுப்பது' என்ற பொருளை தீக்ஷை என்ற சொல்லின் மூலம் நாம் உணரலாம். ஆசாரியர் அருட்பார்வையால் சீடனின் ஆணவத்தைக் கெடுத்தல் நயனதீட்சை. கிரியாவதி, ஞானவதி ஆகியவகைகளால் ஓமத்துடன் கூடிய கிரியைகளைக் கொண்டு செய்யப்படுவது ஔத்திரி தீட்சை. பரிசதீட்சை ஆசாரியர் தமது கையைச் சீடனது தலையில் வைத்து அவனது மலத்தைக் கெடுத்தல், மானஸதீட்சை, யோகமார்க்கத்தால் ஆசாரியர் சீடனது மனத்திற் பிரவேசித்து ஆன்ம போதத்தை நீக்கிச் சிவபோதத்தை உண்டாக்குதல். சாத்திர தீட்சை, வேதம், ஆகமம் ஆகிய இறை வனருளிய நூல்களின் உண்மையைச் சுருக்கி விளக்குதல், வாசகதீட்சை திருவைந்தெழுத்தையும் ஏனைய மந்திரங்களையும் அந்தந்த எழுத்துக்களுக்குரிய மாத்திரைகளோடு உபதேசித்தல். யோகதீட்சை, ஆசாரியர் சீடனது இருதயத்திற் பிரவேசித்து ஆன்மாவைச் சிவத்தோடு சேர்த்தல். இத்தகைய தீட்சைகளின் நோக்கங்களை நாம் அவதானிக்கும் பொழுது குருவுக்குரிய சிறப்பு நன்கு புலனாகின்றது. சிறப்பாக, குரு சாத்திர தீட்சைக்கு இன்றியமையாதவர். ஞானாசிரியனில்லாமற் கற்கும் போது ஞானநூல்களின் பொருள் மாறுபாடாகவே தோன்றும் அல்லது தோன்றாமல் நிற்கும். குருவினால் எமக்கு என்ன பயன் என்று கேட்கும் கேள்வியை விடுத்து குருவின் தேவையை உணர்தல் வேண்டும் எனத் திருவருட்பயன் அழுத்திக்கூறும்.[3] இவ்வாறாக, குருவின் தத்துவத்தையும் அவனது தேவையையும் உணர்த்து வதோடு இறைவனே குரு என்றும் வற்புறுத்துகின்றது திரு வருட்பயன்.

குருவின் தத்துவம் பற்றியும் சிறப்புப்பற்றியும் திருக்களிற்றுப் பாடியாரில் கூறப்படும் கருத்தும் இங்கு பொருத்தமாகவுள்ளது. 'மனிதகுலத்திற்கே வழிகாட்டியாக அமைந்துள்ள சாத்திரங் களும் சம்பிரதாயங்களும் அவற்றின் உண்மைகளை விளக்கி உயிரினங்களை நல்வழிப்படுத்தும் குருவும் இறையருட் செயலே' என்னும் கருத்து வற்புறுத்தப்படுகின்றது.[4] *

குருவை அடைவதற்கு ஒருவனுக்குத் தெய்வத் திருவருள் கிட்டவேண்டும் என்ற கருத்தைச் சங்கராச்சாரியர் விவேகசூடாமணி என்ற நூலின் தொடக்கத்தில் குறிப்பிடுகின்றார்.[5] தெய்வ அருளால் ஒருவனுக்கு மூன்று வாய்ப்புகள் கிட்டுகின்றன. ஒன்று மனித வாழ்வு, மற்றையது உண்மையான பரம்பொருளைத் தெரிந்துகொள்ள வேண்டுமென்பதில் பிறக்கும் விருப்பம். மூன்றாவது சிறந்த நலம் பொருந்திய குரு கிடைப்பது. இவ் வகையில் குருவின் சிறப்பு உயர்த்திக் கூறப்படுகின்றது.

எம்மை வழிநடத்தும் குருவுக்கும் ஒரு குரு இருந்துள்ளபடி யால் தான் அவருக்கும் ஞானம் கிடைக்கும் வாய்ப்பு ஏற்படு கின்றது. குருவினது குருவுக்கும் அவரது குருவுக்கும் ஞானம் கிட்டும் வழியை நாம் ஆராயுமிடத்து, குரு பரம்பரை பற்றி நாம் அறிந்து கொள்ள முடிகின்றது. இந்துமதப் பாரம்பரியப் படி நாம் குரு பாரம்பரியத்தைத் தொடர்புபடுத்திச் சென்றால் ஆதிகுருவாக இறைவனே இருந்து உயர்ஞானத்தைத் தந்திருக்க வேண்டுமென உணரமுடிகின்றது.

குருகீதை என்னும் நூல் குருபக்தி மகிமையையும் தத்துவத் தையும் கூறுகின்றது. இது ஸ்காந்த புராணத்தில் பிரம்ம ஸம் ஹிதையில் உத்தர காண்டத்தில் உமாமகேசுவர ஸம்வாத முடிவில் மூன்று அத்தியாயங்களாக உள்ளது. ஜபம், தவம், விரதம், தீர்த்தம், யாகம், தானம் ஆகிய அனைத்தும் குருதத்து வத்தை அறியாதவிடத்துப் பயனளிக்கமாட்டா என்றும் குரு புத்தியல்லாது ஆன்மாவிற்கு வேறெதுவும் சத்தியமாகா தென்றும் புத்திமான்கள் சிறப்பாக அதை அடைவதற்கு முயற்சி செய்யவேண்டும் என்றும் பரமேசுவரன் பார்வதியிடம் கூறும் வகையில் அமையும் பகுதி இங்கு குறிப்பிடற்பாலது.[6] ஸ்ரீ குருவின் பாத சேவையால் அனைத்துப் பாவங்களிலிருந்தும் விடுபட்டுப் பரிசுத்தனாகின்றான்.[7] இதனால் அவன் பிரம்மன் ஆகின்றான். குருபாத தீர்த்தம், குருமூர்த்தியைத் தியானஞ்

செய்தல், குருநாமத்தை ஜபஞ் செய்தல், குரு நாமகீர்த்தனம், குரு நாம சிந்தனை போன்றவை ஒருவனுடைய அஞ்ஞான இருள் நீக்கும் சாதனங்களாகும். இவற்றின் சிறப்பும் இந்நூலில் கூறப்படுகின்றன.[8] குருவின் நாம கீர்த்தனம் சிவனுடைய கீர்த் தனமாகும். குருவின் வாசஸ்தானமே காசி சேத்திரம். அவரது பாத தீர்த்தமே கங்கை. குருவே உண்மையில் தாரகப் பிரம்மம் எனப் போற்றப்படுகின்றார் 'கு' என்னும் எழுத்து இருளைக் குறிக்கும். 'ரு' என்னும் எழுத்து ஒளியைக் குறிக்கும். இதன் மூலம் அஞ்ஞான இருளை நீக்குபவர் குரு என்பது பொருளாகின் றது.[9] எனவே, அவருக்கு இப்பெயர் சிறப்பாக அமைந்தது. குருவிற்கு மேலான தத்துவம் இல்லை என்பதை 'நாஸ்தி தத்வம் குரோ: பரம்' என ஸ்ரீ குருகீதை கூறும்.[10] 'குருவே பிரம்மா; குருவே விஷ்ணு; குருவே தேவ தேவராகிய மகேசுவரர்; குருவே பரப்பிரம்மம்; அந்தக் குருவிற்கு நமஸ்காரம்.[11] என்பது குரு வணக்கம். குரு வணக்கம் பற்றி இந்நூல் சிறப்பிக் கின்றது.[12] சமய வழிபாட்டுக்குக் குரு உபாசனையே முன்னோடி யாக விளங்குவது. 'தியானத்திற்கு மூலம் குருவின் மூர்த்தி; பூஜைக்கு மூலம் குருவின் பாதம்; மந்திரத்திற்கு மூலம் குருவின் வாக்கியம்; முக்திக்கு மூலம் குருவின் கிருபை' என ஸ்ரீ குருகீதை கூறும்.[13] சிவனுடைய கோபத்திற்குப் பாத்திரமானல் குரு காப்பாற்றுவார். குருவின் கோபத்திற்குப் பாத்திரமானல் எவரும் காப்பாற்ற இயலாது என்று கூறப்படும் கருத்து குரு மகிமையைச் சிறப்பிக்கப் போதுமானது.

நீண்டகால ஞானப்பாரம்பரியத்தின் நிகழ்கால வடிவமே குரு. குருவானவர் குலங்களையும் குலங்களின் கோடி எல்லைவரை ஒரு கணத்தில் காப்பவராகின்றார். ஆகையால் அந்த ஸத்குருவை அறிந்து முக்காலமும் வழிபட வேண்டும் என்பது எமது மரபாக அமைகின்றது.[14] ஞானம் இன்றியே குரு பக்தியால் மட்டும் முக்திநிலை அடையப்படும் என்பதால் குருமார்க்கத்திலிருப்பவர் களுக்கு குருவுக்குச் சமமான வேறு ஸாதனம் எதுவும் இல்லை எனச் சிறப்பிக்கப்படுகின்றது. குரு சேவை பற்றி ஸ்ரீ குருகீதை விரிவான கருத்துக்களைக் கூறும்.[15] குருவை சிந்தித்தல், சேவித்தல், பேசுதல், நமஸ்கரித்தல் ஆகியவை உயர்ந்த செயல்களாகும். குருவே தெய்வம், குருவே தர்மம், குருவிடம் நிலைத்தல் சிறந்த தவம் எனக் கூறப்பட்டுள்ளது.[16]

இறைவனே முதல் குரு என்பதும் உயிரினங்களின் நல்வாழ் விற்காக இறையருளால் தோன்றியவரே குரு எனவும் திருமூலர் கூறியுள்ள அரிய கருத்துக்கள் சிந்தனைக்குரியன:

குருவே சிவமெனக் கூறினன் நந்தி
குருவே சிவமென் பதுகுறித் தோரார்
குருவே சிவனுமாய்க் கோனுமாய் நிற்கும்
குருவே உரையுணர் வற்றதோர் கோவே[17]

இக்காரணத்தினாலேயே குருவாகிய இறைவனைச் சிவமென்று குறிப்பிட்டனர் சித்தாந்திகள். பேரின்பத்தை நாடி வரும் மாணவமணிகளை ஆலமரத்தடியில் அமரச்செய்து உண்மை விளக்கம் தருவது பண்டைய மரபாகும். இறைவன் தக்ஷிணா மூர்த்தியாகக் கல்லால விருட்சத்தின் கீழ் சனகாதி முனிவர் நால்வர்க்கும் உபதேசம் செய்தருளியமை இங்கு குறிப்பிடற் பாலது. இந்துப்பாரம்பரியத்தில் இறைவனது இவ்வடிவம் குருதத்துவச் சிறப்பினை உணர்த்தும். பக்குவப்பட்ட ஆன்மாக் களைக் குருமூர்த்தமாகவேதான் இறைவன் ஆட்கொள்ளும் சிறப்பால் குரு தத்துவம் இறை தத்துவத்துடன் இணைந்து விடுகின்றது. தக்ஷிணாமூர்த்தியின் அமைதியான யோகநிலை குரு தத்துவத்தை உணர்த்தி நிற்கின்றது. தனது வலது கையினால் சின்முத்திரையைக் காட்டி மோனநிலையில் உபதேசம் செய்யும் நிலை ஆழ்ந்து அகன்று நுண்ணியதாக விளங்கும் ஞானநிலையைச் சுட்டும். ''மோனம் என்பது ஞான வரம்பு'' என்ற முது மொழிக்கேற்ப இவ்வடிவம் அமைந்து விளங்குவதாகும். குரு வாகத் தோன்றித் தக்ஷிணாமூர்த்தி சனகாதி நால்வர்க்கும் உயர் சிவஞானத்தை மௌனத்தினாலும் சின்முத்திரையினாலும் உப தேசம் செய்தருளிய திறத்தினால் இம் முனிவர் பரம்பரை 'திருக்கைலாய குரு பரம்பரை' எனக் குறிப்பிடப்படுகின்றது. இறைவன் குருவாகத் தோன்றிக் குருந்த மரத்தடியில் அமர்ந்து யோகநிலையில் தமக்கு உண்மை உபதேசம் செய்தருளியமை பற்றிய மணிவாசகரின் அனுபவமும் குறிப்பிடற்பாலது.

குருவை உயர்ந்தவராகக் கருதவும் அவர்மீது பூரண நம் பிக்கை ஏற்படவும் அவரை ஈசுவரன் என்ற உயர்நிலையில் வைத் துப் பக்தி செய்ய வேண்டுமென இந்துப் பாரம்பரியத்தில் வலி யுறுத்தப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. குருதத்துவத்தை இறைவனோடு இணைத்துச் சமய இலக்கியங்கள் தரும் கருத்துக் கள் சிந்தனைக்குரியவை.

கணபதி குருவாக வந்து தமக்கு உபதேசித்த பெருமையை ஔவையார் விநாயகர் அகவலில் குறிப்பிடுவது நோக்கத்தக்கது

குருவடி வாகிக் குவலயம் தன்னில்
திருவடி வைத்துத் திறமிது பொருளென
வாடா வகைதான் மகிழ்ந்தெனக் கருளிக்
கோடா யுதத்தால் கொடுவினை களைந்து
உவட்டா உபதேசம் புகட்டிஎன் செவியில்

இந்த உலகி ல்விநாயகப் பெருமான் குருவடிவமாகி வந்து தன் தலைமேல் திருவடியை ஏற்றி இது ஒன்றுதான் மெய்ப்பொருள் எனத் தன்செவியில் உபதேசித்தமை பற்றி இவர் குறிப்பிடுகின்றார்.

முருகன் தனக்குக் குருவாக வந்து உபதேசித்த பெருமையை அருணகிரியார் கந்தரநுபூதியில் பின்வருமாறு அனுபவித்துக் கூறுகின்றார்:

செம்மான் மகளைத் திருடும் திருடன்
பெம்மான் முருகன் பிறவான் இறவான்
சும்மா இருசொல் லறஎன் றலுமே
அம்மா பொருள்ஒன் றும்அறி கிலனே.[18]

முருகன் அருட்குருவாகத் தோன்றி 'சும்மாஇரு' என உபதேசித்ததை இங்கு குறிப்பிடுகின்றார். குரு சீடனுக்குக் கூறும் வாசகமே உபதேசம். குரு உபதேசத்தால் அருட்கண் விழிப்படையும் என்ற காரணத்தால் திருமூலர் முதலாந் தந்திரத்தில் 'உபதேசம்' என்ற தலைப்பில் அதன் சிறப்பைக் கூறுகின்றார். அவரது வார்த்தைகளில்,

தெளிவு குருவின் திருமேனி காண்டல்
தெளிவு குருவின் திருநாமஞ் செப்பல்
தெளிவு குருவின் திருவார்த்தை கேட்டல்
தெளிவு குருவுருச் சிந்தித்தல் தானே[19]

என வரும் அடிகளில் சிவகுருநாதனின் அருளால் தெளிவு உண்டாகும் என்பது வற்புறுத்தப்படுகின்றது. தாயுமானவர், 'பசித்திரு; தனித்திரு; விழித்திரு' என உபதேசிக்கின்றார். பட்டினத்தார் இந்நிலையிலிருந்து சற்றே விலகித் தமது நெஞ்சை சிஷ்யனாக்கி அதற்குக் குருவாகத் தாமே இருந்து உபதேசம் செய்கின்றார். எடுத்துக்காட்டாக,

முன்னம்நீ செய்ததவம் முப்பாலும் சேருமன்றி
பொன்னும் பணிகளும் பூவையுமங்கே வருமோ
தன்னைச் சதமாகச் சற்குருவைப் போற்றுமல்
கண்ணற்ற அந்தகன்போல் காட்சியுற்றுய் நெஞ்சமே

என்ற பாடலிலிருந்து பட்டினத்தாரின் குருதத்துவம் புலனு கின்றது.

குருதத்துவத்தில் குருபக்தி மிகவும் முக்கியமானது. பாண் டவர்களின் குரு துரோணர் அவர்களுக்குச் சகல வித்தைகளை யும் அஸ்திரப் பிரயோகங்களையும் கற்றுக்கொடுத்தார். ஏக லைவன் என்ற வேடன் வில்வித்தை கற்கவேண்டுமென்ற பேரா வலில் துரோணரிடம் சீடனுகத் தன்னை ஏற்கும்படி கூற, அவர் மறுக்கவே தன்குடிசையில் துரோணரின் உரு ஒன்றைச் செய்து வைத்து மிகுந்த குருபக்தியுடன் அதன் முன்பு வில்வித்தைக ளைப் பயின்ருன். குருபக்திக்கு இக்கதை சிறந்த எடுத்துக் காட்டு.

மதுர கவியாழ்வார் தன் குருவான நம்மாழ்வாரையே தெய் வம் என மதித்தவர். இவர்பாடிய 'கண்ணிநுண் சிறுதாம்பு' என்று ஆரம்பமாகும் பத்துப் பாடல்கள் மிகவும் பிரசித்தி பெற் றவை. திருமாலைக்கூடப் பாடாமல் இவர் தன் குருவையே சிறப் பாகப் பாடினுர். பரமனுக்கும் ஆன்மாவுக்குமுள்ள பத்துவித மான சம்பந்தங்களையும் குருவிற்கும் சீடனுக்கும் உள்ளதெனப் பாவித்து குருபக்தியை நிலைநாட்டியவர் மதுரகவியாழ்வார்.

கபீர்தாஸ் மாற்றுச் சமயத்தவராக இருந்தவிடத்தும் ராம னிடம் அளவற்ற பக்தி பூண்டவர். ராமானந்தரிடம் நேரடி யாக உபதேசம் பெறமுயன்று முடியாமற் போகவே அவரது பாததூளி மூலம் திருவடி தீட்சை அளித்துத் தனக்கு உபதே சம் செய்ததாக எண்ணி கபீர்தாஸ் பக்திப் பரவசமடைந்தார். ராமானந்தரும் அவரைச் சிஷ்யராக ஏற்றுக் கொண்டமையும் இங்கு குறிப்பிடற்பாலது. இவ்வாறு குருதத்துவம் சிறப்பாக இறைவனுடன் தொடர்புற்று விளங்கும் அதேவேளை வேறு பல வழிகளிலும் அத்தத்துவம் உணரப்பட்டுள்ளமையை மேற்குறித்த எடுத்துக்காட்டுகள் மூலம் உணரமுடிகின்றது.

புராணங்களின் தேவ குருவாக பிரகஸ்பதி என்றவியாழ பக வானும் அசுர குருவாகச் சுக்கிரனும் முக்கியத்துவம் பெறுகின்

றனர். குருதத்துவம் பற்றிய விடயத்தில் வேதகாலத்தில் சிறப்பிக்கப்பட்ட 'ரிஷி' பற்றியும் அறிவது அவசியமாகும். வைதிக தர்மத்தை வளம்படுத்துவதில் வேதகால ரிஷிகளினதும் பரம்பரையாக வாழ்ந்த ரிஷிகளினதும் பங்கு அளப்பரியது. இந்தியாவில் ஞானிகளாகவும் ஆசார அனுஷ்டானங்களில் சிறந்தவர்களாகவும் பேரறிவும் பரந்த உள்ளமும் படைத்தவர்களாகவும் சீரிய கருத்துக்கள் உள்ளவர்களாகவும் விளங்கியவர்களே ரிஷிகள் எனப்பட்டனர். 'ரிஷி' என்ற சொல் சம்ஸ்கிருதத்தில் 'திருஷ்' என்ற வினையடியை அடிப்படையாகக் கொண்டு பிறந்ததென்பர். 'திருஷ்' என்றால் 'பார்' எனப் பொருள்படும். எனவே 'ரிஷி' என்ற சொல் 'காண்பவன்' என்ற சிறப்புப் பொருளை உணர்த்தும். ரிஷிகள் ஆழ்ந்த உண்மைகளைத் தம் உள்ளத்திலும் கண்டு உயர்ந்தவர்கள் உயர்ந்த கருத்துக்களைக் கொண்ட வேதங்களுக்கு அவர்களே பாதுகாவலர்களாக விளங்கினர். தர்மத்தின் நுணுக்கமான விடயங்கள் குறித்துச் சிந்தித்தும் எளிய முறையில் தூயவாழ்க்கை நடத்தியும் சமுதாயத்திற்கு நேரிய வழியைக் காட்டிக்கொண்டு இருந்தவர்கள். அவர்கள் பேணிவைத்த எமது அடுத்த தலைமுறையினருக்கென விட்டுச் சென்ற வைதிக செல்வம் பல்லாயிரம் ஆண்டுகளுக்குப் பின்னும் காலந்தோறும் மக்களுக்குப் பண்பாட்டுக்குரிய வழி விளக்காய் இருந்து உதவி வருகின்றது.[20] நல்வாக்கு எனப் போற்றப்படும் வேதத்தைக் குருமுகமாகவே கேட்டறிய வேண்டும் என்ற நியதி நிலவியது.

இந்துப்பண்பாட்டை உருவாக்குவதில் வேதரிஷிகள் கொண்டபங்கினைப் பற்றி பாரதியார் குறிப்பிடுகையில்,

> 'மரணமில்லாத இந்த ஹிந்து நாகரிகமாகிய கற்பகவிருக்ஷத்திற்கு ஆதியிலே விதையூன்றியவர்கள் வேதரிஷிகள். அவர்கள் காலத்திலே எத்தனை நூற்றாண்டுகளின் முன்னே - இருந்தார்களென்பதைக் கணக்கிட்டுச் சொல்ல நவீன ஆராய்ச்சி யாதொரு கருவியுமில்லாதிருக்கிறது. ஹிமவத் பர்வதம் எப்போதுண்டாயிற்று? யாருக்குத் தெரியும்? வேதரிஷிரிகள் எக்காலத்தில் வாழ்ந்தனர்? எப்படிச் சொல்வது?'[21]

என வியக்கின்றார். இக்கருத்துக்கள் வேதரிஷிகளின் சிறப்பினை எடுத்துக் கூறுவன வேதகால ரிஷிபரம்பரையில் வசிட்டர், விஸ்வாமித்திரர், வாமதேவர், பாரத்துவாசர், அத்திரி, கண்வர், கிரித்ஸமதர் ஆகியோர் முக்கியத்துவம் பெற்றவர்.

குருவிடம் தன்னை முழுமையாக ஒப்புவித்துக் கல்வி கற்கும்முறை குருகுலவாசம் எனப்பட்டது. இந்துக்களுக்குரிய நான்கு ஆச்சிரமங்களில் முதலாவதாக அமையும் பிரமச்சாரிய நிலை குறிப்பிடத்தக்கது. மாணவர் தமது கல்வியறிவை வளர்க்கவும் ஒழுக்கத்துடன் வாழப் பழகவும் ஆன்மீக நெறிபற்றி அறிவதற்கும் நிலைக்களனாக விளங்கிய இடம் ஆச்சிரமம் ஆகும். முனிவரின் ஆன்மீகப் போதனைகளை மாணவனுக்கு அளிக்கும் மத்திய நிலையமாக அக்காலத்தில் சிறப்படைந்தது. இயற்கையான, அமைதி நிரம்பிய சூழ்நிலையில் ஆச்சிரமம் அமைந்திருந்தது. மாணவன் குருவுடன் வாசஞ்செய்து கல்வி கற்றமையினால் குருவின் நேரடிக் கண்காணிப்பில் அவனது ஆன்மிகக் கல்வி விரிவடைந்தது. பிரமச்சாரி என்ற பெயர் 'ஆன்மீக அறிவை நாடிச்செல்பவன்' என்ற பொருளில் அமைந்தது. ஆச்சிரமத்தில் கல்வி கற்க விழையும் மாணவன் குருவை அணுகி அவருக்குரிய பணிவிடைகளைச் செய்து, கல்வி கற்றமை குருகுலக் கல்வி முறையின் முக்கிய அம்சமாக இருந்தது. பிரம்மச்சாரியின் ஆன்மிகக் கல்வியின் தொடக்கத்தைக் குறிப்பதே உபநயனச் சடங்கு, பிரம்மச்சாரியின் முதற்பிறப்பு பெற்றோர் தந்த உடம்புடன் கூடிய பிறப்பு. உபநயனத்தினால் இவனுக்குக் கிடைப்பது இரண்டாவது பிறப்பு. அதுவே அவனது ஆன்மீகப் பிறப்பாகும். இதனால் அவனது உள்ளமும் ஆன்மீக உணர்வு பெற்று விழிப்படைந்தது. இருக்கு வேதத்தில் பிரமச்சாரி பற்றியும் உபநயனச் சடங்கு பற்றியும் பாடல் உள்ளது.[22] பிரம்மச்சாரி குருவுக்கென ஆற்றவேண்டிய கடமைகளும் இருந்தன. உபநயனத்தின் பின்னர் பிரம்மச்சாரி பின்வரும் ஒழுக்காறுகளைக் கொண்டு விளங்கினான். இல்லத்து அக்கினிக்குரிய சமித்தைச் சேகரித்தல், யாசித்தல், தினமும் இருமுறை வழிபடும் அக்கினிக்கு சமிதாதானம் செய்தல், புலன்களை அடக்குதல், தபம் செய்தல், கல்விக்கெனத் தன்னை அர்ப்பணித்தல், குருவுக்குரிய தானங்கள் கொடுத்தல், பணிவிடை செய்தல் ஆகியனவாகும். பிரமச்சரிய வாழ்க்கை முறைக்குரிய சில ஒழுக்கங்கள் யசுர் வேதத்திலும் குறிப்பிடப்படுகின்றன.[23] அதர்வவேதத்தில் மாணவர் நிலை பற்றிய நீண்ட சூக்தம் உள்ளது. பிரம்மச்சாரி அடைய விரும்பும் கல்வியறிவு பற்றியும் அவரது ஆற்றல் போன்றனபற்றியும் பாடல்கள் உண்டு.[24] பிரம்மச்சரியத்தினால் மனிதப்பண்பு, மனித ஆளுமைத்திறன் அடைவதாக இப்பாடல்கள் தெரிவிக்கின்றன.

ஆன்மிகக் கல்வியின் ஊற்ருக அமைந்தது ஆச்சிரம வாழ்க்கை. இருக்குவேதத்தில் வரும் ஒரு பாடல் இந்திரனேயே ஆசாரியனுகக் குறிப்பிடுகின்றது.[25] குருகுலத்தின் தலைவர் குலபதியாவார். குருகுலங்கள் பற்றிய விபரங்கள் மகாபாரதத்திலும் உள்ளன. நைமிசாரண்யம் என்ற குருகுலத்தின் தலைவராக இருந்தவர் சௌநகர். சகுந்தலையின் வளர்ப்புத் தந்தையாகிய கண்வரிஷியும் ஒரு குலபதியாவர்.

குரு, தான் மரபுவழிப் பெருமையும் பாரம்பரியச் சிறப்பும் பொருந்தியவர் என்பதைச் சீடனுக்கு உணர்த்த இந்த ஆச்சிரமக் கல்வி சிறந்த சந்தர்ப்பத்தை அவருக்கு அளித்தது. 'குரு' என்ற சொல்லும் 'ஆசிரியர்' என்ற சொல்லும் ஒரே பொருளில் வழங்கப்படுகின்றன. 'ஆசாரியர்' என்ற சொல் 'ஒழுக்கத்தில் சிறந்து விளங்குபவர்' என்ற பொருளை அடிப்படையாகக் கொண்டது. ஒழுக்கமுறையில் நடந்து காட்டுவது ஆசாரியனுக்குரிய பண்பாக அமைந்தது. குருகுல பாரம்பரியத்தில் இது மிகவும் தேவையானது. 'ஆசார்ய' என்ற பதத்திற்குரிய வரைவிலக்கணத்தை நாம் ஆராய்வதும் பொருத்தமாகும். சாத்திரப் பொருளை ஆராய்ந்து, பிறருக்கு உரியபடி கற்பித்து, பிறரை அந்த நெறிப்படி நடக்கச் செய்விக்கின்றவரும் தானே அந்த வழிப்படி நடந்து காட்டுகின்றவரும் ஆசாரியன் என்ற சிறப்புக்கும் பெயருக்கும் உரியவராகின்ருர். சமயக் கல்வியறிவு, கிரியைகளில் பயிற்சி ஆகியவை பெற்ற ஆசாரியராகத் திகழும் சமயகுருமாருக்கும் இத்தகைய இலக்கணங்கள் சிறப்பாகப் பொருந்துவனவாக உள்ளன. சமயநெறி நின்று சமயவாழ்வை நெறிப்படுத்த இந்நிலை மிகவும் தேவைப்படுவதாகும்.

உபநிடதங்கள் குருதத்துவம் பற்றி அறிந்து கொள்வதற்குச் சிறந்த மூலங்களாக விளங்குகின்றன. ஆசானும் மாணவனும் சேர்ந்து கூறுவதாக அமையும் சுலோகம் மகாநாராயண உபநிடதத்தில் சாந்தி சுலோகத்தில் காணப்படுகின்றது:[26]

> 'நாமிருவரும் (குருவும் சீடனும்) மிகுந்த வலிமையுடன்
> (கல்வி)ப் பணி செய்வோமாக. எமது கல்வி பயனுள்ள
> தாகவும் உத்வேகமுடையதாகவும் இருப்பதாக.'

என்ற பொருளையுடையது அச்சுலோகம். உயர்ந்த இலட்சியத்தையடையவும் வாழ்க்கை வளமுள்ளதாக அமையவும் நல்

லொழுக்கமுள்ள மாணவர்களாக உருவாகவும் மனிதனை அடிமைப்படுத்தும் தீய எண்ணங்களைப் போக்கவும் குருவினால் வழங்கப்பட்ட கல்வி மாணவனுக்கு உதவியது. சுவேதாஸ்வதர உபநிடதத்தில் காணப்படும் சாந்தி சுலோகம் நல்லதொரு சிந்தனையை வெளிப்படுத்துகின்றது:[27]

'எமது காதுகளினால் நல்லனவற்றையே கேட்போமாக.
எமக்குத் தெய்வங்களால் அருளப்பட்ட வாழ்நாளில்
வலுப்பொருந்திய உறுப்புக்களோடு தெய்வங்களுக்கு
ஏற்றதைச் செய்வோமாக.'

உபநிடதத்தில் குருவின் துணையால் வழங்கப்பட்ட ஆன்மீக போதனை மனிதனை நிறைமனிதனாக்குவதற்குப் பெருந்துணை புரிந்தது. மனிதன் முழுமை பெறவேண்டின் தன்னை ஆட்கொண்டிருக்கும் அறியாமையென்னும் இருளிலிருந்து ஞானமாகிய ஒளிக்குப் பிரவேசிக்க வேண்டும். 'என்னை இருளிலிருந்து ஒளிக்கு இட்டுச் செல்வாயாக'[28] என்று உபநிடதச் சான்றோர் குறிப்பிடுகையில் உயர் ஞானத்தைப் பெற அவர்கள் கொண்டிருந்த நாட்டம் தெளிவாகின்றது. உபநிடதம் தரும் சான்றுகளிலிருந்து கல்வித் தாகம் கொண்ட மாணாக்கர் தமக்கேற்ற குருவையே நாடிச் சென்றனர். சத்திய காம ஜாபாலன் கௌதமனிடமும் இந்திரனும் விரோசனனும் பிரஜாபதியிடமும் சென்றமை குறிப்பிடத்தக்கன. குருவிடமிருந்து நேரடியாகப் பெற்ற கல்வியே உயர்ந்த பலனைத்தரும் என்பதை 'இக்கடலாற் சூழப்பட்டதும் செல்வம் நிறைந்ததுமான இவ்வுலகம் ஆசிரியரிடமிருந்து நேரடியாகப் பெறும் கல்விக்கு ஈடாகாது' என சாந்தோக்கிய உபநிடத வாக்கியத்தால் அறியலாம். உபநிடத காலத்தின் சிறந்த குருசிஷ்ய உறவைக் கடோபநிடதம் தெளிவாக எடுத்துக் காட்டுகின்றது. யமன் குருவாகவும் நசிகேதன் அறிவைப் பெற விரும்பும் சீடனாகவும் திகழ்ந்தனர். சீடனை உரியவாறு பரீட்சித்தே தனது சீடனாகக் குரு ஏற்றார். தைத்திரிய உபநிடதத்தின் முதலாம் அத்தியாயத்திற் காணப்படும் அறிவுறுத்தலின் மூலம் உபநிடத கால குருதத்துவத்தினை நாமுணர முடிகின்றது.

சீடர்களின் அறிவை வளர்ப்பதோடு அவர்களது ஒழுக்கத்தையும் பேணி, அவர்களை நல்வாழ்வுக் கேற்றவர்களாகவும் பயிற்றுவிக்கும் பொறுப்புக் குருவுக்கு இருந்தது. அறவழி நிற்றல், உண்மைபேசுதல், பெற்றோர் ஆசிரியரிடத்தில் பக்தி வைத்து மரி

யாதை செலுத்துதல், இரக்கமுடைமை, பழிவாங்கலுக்கு அஞ்சுதல் போன்ற நற்குணங்களை மாணவரின் மனத்தில் பதிய வைத்தல் குருவின் பணியாக அமைந்தது. குருவின் இல்லமே குருகுலமாக விளங்கியமையினால் இங்கு கற்ற மாணவனுக்கு 'ஆசார்ய குல வாசின்' என்ற பெயர் ஏற்படலாயிற்று. குருவுடன் ஒரு சேர வசிக்கும் காரணத்தினால் 'அந்தே வாஸி' என்ற பெயரையும் பெற்றான். இதற்குப் பொருள் 'உடன் வசிப்பவன்' என்பதாகும். குருதக்ஷிணைபற்றி உபநிடதம் சிறப்பித்துக் கூறுகின்றது. குருவுக்குச் சமித்துப் பெரிய காணிக்கையாக அமைந்தது. அவரது சமய அனுஷ்டானத்திற்கு இது மிகவும் தேவைப்பட்டது. மாணவனைப் பொறுத்தமட்டில் குருகுலவாசத்தின் இறுதிப் பயன்பாடு, அறிவு, கல்வியின் நேர்த்தி, சாந்தம், மனஅமைதி, விநயமாகிய பணிவு, ஒழுக்கம், அறநெறி நிற்றல் ஆகியனவாகும். குரு வழங்கும் ஞானோபதேசத்தின் உயர்நிலையைக் காட்டி நிற்பது பகவத் கீதையாகும். 'கடமையைச் செய்; பலனை எதிர்பாராதே' என்ற கர்ம சந்நியாச உபதேசம் குருவின் தாரக மந்திரமாக அமைகின்றது. ஆன்மீக வாழ்வில் நிறைவு பெற்று உய்வுபெறவேண்டிய வழிமுறைகள் இங்கு குருவின் உபதேசங்களாகப் பெருகுகின்றன.

தைத்திரிய உபநிடதம் குருகுலத்தை விட்டுச் செல்லும் மாணவன் உலகில் நடந்துகொள்ளவேண்டிய நெறிமுறையினைக் குருவாயிலாகப் போதிக்கின்றது.[29] குருசீடனுக்குப் பின்வருமாறு அறிவுறுத்துகின்றார்;

'உண்மைபேசு: தருமவழியில் நட: தற்கல்வி முறையினின்றும் (ஸ்வாத்தியயனம்) நழுவிவிடாதே; குருவுக்கு விருப்பமான தக்ஷிணையைக் கொணர்ந்து கொடுத்து (அவரிடம் விடை பெற்றுக் கொண்ட பின்னர்) சந்ததியாகிற நூலை அறுத்து விடாதே: சத்தியத்திலிருந்து மறந்தும் நழுவுதல் கூடாது; (ஆத்ம ஞானத்தை வளர்க்கும்) நன்முயற்சிகளினின்று மறந்தும் நழுவுதல் கூடாது; பெருமையுள்ளவற்றைப் போற்றுவதினின்று மறந்தும் நழுவுதல் கூடாது. தேவர்களையும் பிதிரர்களையும் வழிபடும் காரியங்களிலிருந்து நழுவுதல் கூடாது. தாயைத் தெய்வமாகக் கொண்டிரு. தந்தையைத் தெய்வமாகக் கொண்டிரு. அதிதியைத் தெய்வமாகக் கொண்டிரு. குற்றமற்ற கருமங்கள் எவையோ அவையே சேவிக்

கத்தக்கன. மற்றவை அன்று. எங்களிடம் நன்னடத்தைகள் எவையோ அவையே உன்னால் பின்பற்றத் தக்கன. மற்றவை அன்று.'

இத்தொடரிலிருந்து நாம் அறியக்கூடியது யாதெனில் உபநிடத காலக் குரு சிறந்ததொரு குருசிஷ்ய பாரம்பரியத்தை உருவாக்கித் தருவதில் பெரும் பங்கு வகித்துள்ளான் என்பதாகும். சிறந்த ஞான பாரம்பரியம் உருவாக வழி மேற்கொள்ளப்பட்டது.

இவ்வாறு காலங்காலமாக வளம்பெற்று வந்த குருபாரம்பரியத்தின் வடிவமாகத் திகழ்ந்தவர்களுள் ஸ்ரீ இராமகிருஷ்ண பரமஹம்ஸர் குறிப்பிடத்தக்கவராவர். ஸ்ரீ இராமகிருஷ்ணரின் உபதேசங்களில் குரு பற்றிய அவரது சிந்தனைகள் தெளிவாக உள்ளன:

'தன் குருவை வெறும் மானுடனாகக் கருதுபவன் ஆத்ம சாதனத்தில் முன்னேற்றம் அடையான். சச்சிதானந்தப் பொருள் ஒருவனுடைய குரு என்னும் மேனியின் மூலமாக இலங்கி, மந்திரோபதேசம் செய்கிறது. ஆதலால் தன் குருவையே சச்சிதானந்தமாகக் கருதுபவன்தான் முன்னேற்றம் அடைகின்றான்.'30

இவ்வாறு கூறும் ஸ்ரீ இராமகிருஷ்ணர், வாழும் இந்துமதத்தின் சீரிய சிந்தனைகளை உலகுக்குத் தெளிவாக உபதேசிக்கும் ஞான குருவாக விளங்கியவர். குருதத்துவத்திற்கு ஓர் இலக்கணமாக விளங்கியவர். ஆத்மீக மரபின் ஊற்றுக்களைக் கண்டறிந்து அம் மரபு உலகெங்கும் பாய்ந்தோட வழிவகுத்தவர். இச்சீரிய பணிக்கு உரியவராகத் திகழ்ந்தவர் சுவாமி விவேகானந்தர். தூய்மையான குருசிஷ்ய பாரம்பரியத்திற்கு இவ்விரு மகான்களும் சிறந்த உதாரண புருஷர்கள் ஆவர். சுவாமி விவேகானந்தர் சிறந்த சீடனாகவும் அதேசமயம் தனது குருநாதனின் சீரிய சிந்தனைகளைப் பாரெங்கும் இராமகிருஷ்ண இயக்கம் மூலம் பரப்ப வல்ல சிறந்த ஆற்றல் வாய்ந்த சமயஞானியாகவும் திகழ்ந்தவர். இத்தகை சிறப்பு வாய்ந்த குரு பாரம்பரியத்தின் வழியாக இந்துப்பண்பாடு வளம்பெற்று வருவது குறிப்பிடத்தக்கதாகும்.

## அடிக்குறிப்பு

1. திருவருட்பயன், 41.
2. மேற்படி, 42.
3. மேற்படி, 46.
4. திருக்களிற்றுப் பாடியார், 5.
5. ஸ்ரீ சங்கராச்சாரியார், விவேக சூடாமணி, 6.
6. ஸ்ரீ குருகீதை, 'அண்ணா' உரை, ஸ்ரீ ராமகிருஷ்ண மடம், சென்னை. 1976: 1–13–14.

ஜபஸ்தபோ வ்ரதம் தீர்த்தம் யஜ்ஞோ தானம் ததைவச /
குருதத்வவிஜ்ஞாய ஸர்வம் வ்யர்த்தம் பவேத் ப்ரியே //
குரு புத்த்யாத்மனோ நான்யத் ஸத்யம் ஸத்யம் வரானனே /
தல்லாபார்த்தம் ப்ரயத்னஸ்து கர்த்தவ்யச்ச மனீஷிபி: //

7. மேற்படி, 1–17
8. மேற்படி, 1–18–22.
9. மேற்படி, 1-32.
10. மேற்படி, 1-37.
11. மேற்படி, 1-46.

குருர் ப்ரஹ்மா குருர் விஷ்ணுர் குருர் தேவோ மஹேச்வர: /
குருரேவ பரம் ப்ரஹ்ம தஸ்மை ஸ்ரீ குரவே நம: //

12. மேற்படி, 1–47-73
13. மேற்படி, 1-74.
14. மேற்படி, 1-83.
15. மேற்படி, 1–90-92.
16. மேற்படி, 3-22.

17. திருமந்திரம்: 6-9.
18. கந்தரனுபூதி; 12.
19. திருமந்திரம்: 1: 139.
20. ஸ்ரீ கிருஷ்ண தத்த பட், இந்துமதம், காந்திய இலக்கிய சங்கம், மதுரை, 1986. பக். 07.
21. சுப்பிரமணிய பாரதி, சி., பாரதி நூல்கள் - வசனங்கள், 2ஆவது தொகுதி, 2-வேதரிஷிகளின் கவிதை, பக். 2-3.
22. இருக்கு வேதம், x: 109.
23. Mookerji, R.A., **Ancient Indian Education**, Delhi: Motilal Banarsidas, 1974. p.3.
24. Bose, A.C., **The Call of the Vedas**, Bombay: Bharatiya Vidya Bhavan, 1970. pp. 43ff.
25. Ibid, p. 121.
26. மகா நாரயண உபநிடதம்: சாந்தி சுலோகம்.
27. சுவேதாஸ்வர உபநிடதம்: சாந்தி சுலோகம்.
28. பிருக தாரண்யக உபநிடதம்: I–38.
29. தைத்திரிய உபநிடதம்: I-1-11.
30. ஸ்ரீ ராமகிருஷ்ணர் உபதேச மஞ்ஜரீ, ஸ்ரீ ராமகிருஷ்ண தபோவனம், திருச்சி. 1975. பக். 214.

# இந்து சமயம் காட்டும் ஆன்மீக வாழ்வு

# 10

நீங்கள் முதலில் கேட்கவேண்டியது இந்த ஆன்மாவைப் பற்றிய உண்மை. நீங்கள் கேட்டிருந்தால் அதைப்பற்றிச் சிந்தியுங்கள். பிறகு அதைப்பற்றித் தியானம் செய்யுங்கள். வீண்வாதங்கள் இனி வேண்டாம்! நீங்கள் எல்லையற்ற ஆன்மாதானு என்று உங்களைத் திருப்திசெய்து கொள்ளுங்கள். அது உண்மையானுல் நீங்கள் உடல் என்று நினைப்பது பொய். நீங்கள் ஆன்மா, அதை உணரவேண்டும். ஆன்மா தன்னை ஆன்மாவாகப் பார்க்க வேண்டும். இப்பொழுதோ ஆன்மா தன்னை உடலாகப் பார்க்கிறது. அது நிற்கவேண்டும். இந்த உணர்வு வந்தவுடனேயே உங்களுக்கு முத்தி கிடைத்து விட்டது.'

ஆன்மீக வாழ்வு பற்றி சுவாமி விவேகானந்தர் கூறிய அனுபவ வார்த்தைகளே இவை. மனிதர்களாகிய எமது வாழ்க்கையின் குறிக்கோள் என்ன? இந்த உலகந்தானு வாழ்க்கையின் குறிக்கோள்? மனிதன் அனுபவித்துக்கொண்டிருக்கும் தொல்லைக்குமேல் வேறு ஒன்றும் கிடையாதா? அன்றி தொல்லை நீங்கி இன்பமாக இருப்பதுதான் வாழ்க்கையின் குறிக்கோளா? பிறப்பு என்பது என்ன? பிறவியின் நோக்கம் யாது? பிறப்பெடுத்து மனிதர்களாக வாழும் நாம் வாழ்க்கையில் காண்பவையும் அனுபவிப்பவையும் நிலையற்றவை; அநித்தியமானவை; இவற்றையெல்லாம் விஞ்சி நிற்கும் மெய்ப்பொருள் உண்டா? இறப்பு என்பது என்ன? என்பன போன்ற பல ஐயங்கள் மனித

னது வாழ்க்கையில் காலத்துக்குக் காலம் எழுந்துள்ளன. காலத் துக்குக்காலம் தோன்றிய ஞானிகளும் அநுபூதிமான்களும் தத்துவ சிந்தனையாளர்களும் இத்தகைய சந்தேகங்களுக்கு விடைகண்டு விளக்கமளித்துள்ளனர். இத்தகைய வினுக்களுக்குரிய தெளி வான விடைகளே மனிதனின் ஆன்மீக வாழ்வுக்கு உரமூட்டு பவையாக அமைவன. உலகத்து மக்கள் யாக்கையைப் பெற் றோர் அந்த யாக்கையைப் பெற்றதனுலாகிய பயனைப்பெற முந் துதல் வேண்டும். வாழ்வாங்கு வாழ வேண்டும். வாழும் வகை யறிந்து வாழவேண்டும் எனச் சமய நூல்கள் இயம்புகின்றன.

இந்துசமயத் திருநூல்களிலே இத்தகைய ஆன்மீக விடயங் கள் மிக விரிவாக எடுத்துக் கூறப்பட்டுள்ளன. மனிதனது ஆன் மீக விடயங்கள் பற்றிப் பொருள் கொள்வதிலோ அத்தத்து வங்களுக்கு விளக்கம் காண்பதிலோ ஞானியர்களிடையே வேறு பாடு இருக்கலாம். எனினும், இவை யாவற்றுக்கும் அடிப்படை யாக சமயத் திருநூல்கள் விளங்குகின்றன. புனிதம் நிறைந்த அழிவற்ற வேதங்கள் எமது வாழ்க்கையின் உயர் லட்சியத்தின் அம்சங்களுக்கும் நன்மை பயக்கும் கொள்கைகளுக்கும் தோற்று வாயாக உள்ளன.

மனிதன் தூல சரீரத்தில் மாத்திரம் அடங்கியிருப்பவன் அல் லன். அவனுடைய இச்சரீரத்தினுள் சூட்சுமமான மனது உள்ள தென்றும் அதற்கும் மேலாக அதனை இயக்கும் ஒரு பொருள் உண்டு என்றும் நாம் நம்புகின்றேம். இதனையே ஆத்மா என் பர். இது மாறுபாடு இல்லாதது. ஆதியும் அந்தமும் அற்றது. மரணமில்லாத பெருவாழ்வில் அவ்வாத்ம சொரூபம் உள்ளது. இவ்வாத்மா பற்றி இந்துக்களிடையே நிலவும் கொள்கை கவ னத்திற்குரியது. அது இவ்வாத்மா பல சரீரங்களை எடுத்துச் சரீ ரத்திலுள்ள விருப்புத் தீரும்வரை அதில் தங்கியிருந்து விருப்புத் தீர்ந்தவுடன் விடுதலைப்பேறு அடைகின்றது என்ற கொள்கை யாகும். ஜீவாத்மாவுக்கும் பரமாத்மாவுக்கும் இடையே உள்ள தொடர்பு பற்றி பல்வேறு கொள்கைகள் இந்துக்களிடையே காணப்படுகின்றன. இவை இரண்டும் என்றைக்குமே வெவ் வேறு பொருள்கள் என்பது ஒரு பிரிவினரின் கொள்கை. பிறி தோர் பிரிவினர், பரமாத்மாவே ஜீவாத்மாவாக உள்ளதென் றும் உள்ளது. பரமாத்மாவாகிய ஒரு பொருள் தான் என்றும் கூறுவர். இவ்வாறு பல கொள்கை வேறுபாடுகள் காணப்படு

மிடத்தும், ஆத்மா எல்லையிலடங்காதது. பிறப்பும் இறப்பும் அற்றது; பல சரீரங்களை எடுத்து இறுதியில் மனித சரீரத்திலிருந்து பூரணத்துவமாகிய விடுதலையை அடைகின்றது என்ற அடிப்படைக் கொள்கையில் இந்துக்கள் உறுதியாக உள்ளனர்.

எண்ணரிய பிறவிகளில் மானுடப் பிறவிதான் யாதினும் அரிதிலும் அரிது என்ற வாக்கின்படி பிறப்பில் உயர்ந்தது மனிதப் பிறவியாகும் என்பது பெறப்படுகின்றது. இப்பிறவியின் நோக்கத்தைச் சரிவர அறிந்து அதற்கேற்ப வாழ்பவனே நிறை மனிதனுக விளங்குவான். மனிதன் நிறைமனிதனுக வாழ்வதற்கேற்ற வழிமுறைகளை ஞானிகள் எடுத்துக்கூறியுள்ளனர். மனித வடிவத்தில் பிறப்பெடுத்திருந்தால் மட்டும் போதாது மனிதனுகப் பிறந்தவனிடத்திலே மனிதத் தன்மை பொருந்தியிருத்தல் வேண்டும்.

மனித வடிவில் வாழ்ந்திருந்தால் மட்டும் போதாது. எவ்வெவ் வகைகளில் மனிதன் தன்னை மேலோனுக மாற்றியமைத்துக் கொள்ள வேண்டும் என்பதையும் அறிந்திருத்தல் வேண்டும். இவ்வகையில் எல்லா நிலைகளிலும் நிறைவு பெற்றவனே ஆத்மீக சாதனையிலும் வெற்றிபெறக் கூடியவனுவான். ஆத்மீக நிலைக்கு உயர்ந்துவரும் உயிர் மானிடவடிவத்தை எட்டுகின்றது என்பது அறிஞர் கருத்தாகும். மனிதன் பெற்றுள்ள உடம்பு நிறை வாழ்வு பெற உதவியாகவுள்ளது. மனிதன் தனது மனதைப் பெருநிலை எய்தத் தகுதியுடையதாக ஆக்கிக் கொள்ளுதல் வேண்டும். இதற்கு மேலும் வழிவகுப்பது மனிதனுடைய ஒழுக்கமாகும்.

நெறியான வாழ்க்கைக்கும் ஒழுக்கமுடமைக்கும் நெருங்கிய தொடர்புண்டு. மனிதன் ஏன் ஒழுக்கமுடையவனுக இருக்கடும்? தனது உள்ளத்தில் எழும் சிந்தனைகளுக்கேற்ப எப்படியும் நடந்து கொள்ளலாமே என எண்ணத் தூண்டுவது இயல்பே. இந்துக்களின் ஆத்மீக வாழ்வைப் பொறுத்தவரை ஒழுக்கம் சமய வாழ்வுக்குப் பக்கபலமாக அமைகின்றது. மனித மனம் தனக்குத் தானே உருவாக்கிக்கொண்ட செயல்களையே சிந்தனை என்கின்ரேம், சில சிந்தனைகள் ஒழுக்கங்களைத் தனதாக்கிக் கொள்ளும் போது அது ஞானமாக நிறைவு பெறுகின்றது.

வாழ்வின் வளர்ச்சி, நீடித்த மகிழ்ச்சி ஆகியவற்றிற்கு மாத்திரமன்றி ஆன்மீக வாழ்வுக்கும் ஞானம் வழி செய்கின்றது.

இக்காரணத்தினால் தான் இந்துசமயத் திருநூல்கள் ஞானத்திற் திற்குச் சிறப்பிடம் வழங்கியுள்ளன. உபநிடதங்கள் ஞானத் தையே பிரதான பொருளாகக் கொண்டுள்ளன. பகவத் கீதை ஞானயோகமாக உபதேசிக்கின்றது. ஆகமங்கள் ஞானபாத மெனச் சிறப்பிக்கின்றன. ஞானநிலையில் ஒருவன் கடவுள் திரு வுளத்துக்கு ஒப்ப ஒழுகவேண்டும் என்பதை மனிதன் உணரத் தவறுவதில்லை. ஒழுக்கத்துடன் கூடிய வாழ்க்கையின் வாயிலாக மனிதன் தனது விழுப்பத்தை வெளிப்படுத்த வேண்டும் என் பதை வள்ளுவர்,

ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம்
உயிரினும் ஓம்பப் படும்

என்று வலியுறுத்திக் கூறுவது குறிப்பிடத்தக்கது. மலரா னது தன்னிடத்தேயுள்ள அழகையும் நறுமணத்தையும் இயல் பாகவே வெளிப்படுத்துதல் போல மனிதனும் தன்னிடத்தே யுள்ள புனிதத் தன்மையையும் பேரன்பையும் பண்பையும் புலப் படுத்தக் கடமைப்பட்டுள்ளான் எனவும் அதற்காகவே மானிடப் பிறவி ஏற்பட்டுள்ளது எனவும் கொள்வதில் தவறில்லை. தனது மேலான இயல்பைத் தோற்றுவிப்பதற்கு ஒழுக்கம் ஒன்றே அவ னுக்குரிய வழி என்பதும் குறிப்பிடத்தக்கது. மனிதனுக்கு ஒழுக் கம் விழுப்பம் தரும் காரணத்தால் ஒழுக்கம் 'மனிதனால் உயிரி னும் ஓம்பப்படும் எனக் குறள் அறிவுறுத்துகின்றது. ஒழுக்க மானது நாளடைவில் மனிதனைத் தெய்வ சந்நிதியில் கொண்டு சேர்த்துவிடுகின்றது.

மக்களது சிந்தனையின் தன்மைக்கேற்ப வாழ்க்கையின் நோக் கங்களும் வேறுபடுகின்றன. ஒரு சிலர் உலகியல் வாழ்க்கையில் இன்பமுற்று இருப்பதையே வாழ்க்கையின் நோக்கமாகக் கருது வர். மனித வாழ்க்கையின் நோக்கம் பலவிதமான அனுபவங் களைப் பெறுவதும் அதற்குண்டான வழிகளைத் தேடுவதுமே எனச் சிலர் கருதுவர். அனுபவத்தைப் பெறத் துடிக்கும் ஒவ் வொரு மனிதனும் தனக்குள் ஓர் அளவுகோலை வைத்திருக்கின் றான். இந்த அளவுகோல் தரும் விமர்சனங்களே நல்லன - தீயன வென்றும், உயர்ந்தவை - தாழ்ந்தவை என்றும் விருப்பு - வெறுப்பு என்றும் கொள்ளத்தக்கவை - தள்ளத்தக்கவை என் றும் பல்வேறு மனோ விகாரங்களாகவும் அதன் அடிப்படையில் செயல்களாகவும் தோன்றுகின்றன. வாழ்க்கையின் நோக்கங்கள் மனிதர்க்கு மனிதர் வேறுபடுவதற்கு இதுவே அடிப்படையாகும்.

அனுபவத்தைத் தேடிப்பிடிப்பதிலும் அதற்குரிய பொருளை நாடுவதிலும் இந்த அளவுகோல்கள் தனித்தன்மை பெற்றிருப்பினும் அடிப்படையில் இதனிடத்தில் ஒரு பொதுமைக் குணம் காணக்கிடக்கின்றது. மனிதன் தெளிவைத் தேடவேண்டிய தேவையும் இங்குதான் தோன்றுகின்றது. எல்லோரிடத்திலும் மாறுமல் காணப்படும் இந்தப் பொதுமைக் குணத்தை ஒருவன் தனது வாழ்விலே கண்டறிய முயலவேண்டும்.

ஞானத்தின் நோக்கம் வாழ்வின் அடிப்படை இலட்சியத்தையும் அதனை அடைவதற்கான வழிகளையும் சுட்டிக் காண்பிப்பதாக அமைய வேண்டும். இந்நிலையில் செயல்படத் தொடங்கிய ஒவ்வொரு முயற்சியும் சமயம் என்ற பெயர் பெறுகின்றது. மனிதன் பெறவிரும்பும் மனோநிலைதான் என்ன என்ற வினவுக்கு ஏற்பட்ட விடைகளே ஆன்மீகம் என்றும் பொதுவாகக் குறிப்பிடப் படுகின்றன.

ஒரு தனிமனிதனின் வளர்ச்சி அவன் அனுபவிக்கும் அமைதியைப் பொறுத்தது என அறிஞர் கருதுவர். அமைதி கூடும் பொழுது வாழ்வின் நிலை கூடுகின்றது. ஞானத்தின் இயல்பு மோனத்தின் எல்லையைக் காட்டுவதாய் அமையும். இந்த அமைதியின் தன்மையைப்பற்றி ஆராய்வதே சமயத்தின் முக்கிய பணியாக அமைந்தது. வேதங்களும் உபநிடதங்களும் கீதையும் வேறு பல ஞான நூல்களும் இதுபற்றி விளக்கிக் கூறுகின்றன. இந்த அமைதிக்கு உரிய மறுபெயரே ஆத்மா என்பதாகும். இதனைப் பற்றிய தெளிவான ஞானமே ஆத்மஞானம் எனப்படும். எது சாந்த வடிவாகவும் தன் சுய அமைதியைத் தானே உணரும் அறிவு ரூபமாகவும் இருக்கிறதோ அதுதான் ஒவ்வொரு மனிதனின் இயல்பான, என்றுமுள்ள பிறப்பு இறப்பு அற்ற சுயநிலை என ஞானிகள் அறிவுறுத்தியுள்ளனர். இந்தச் சுய நிலை தற்காலிகமாக மறைக்கப்பட்டு அது எட்டாத ஒரு பொருள் போன்றும் அதை அடைய ஆயிரமாயிரம் முயற்சிகள் தேவை என்பது போன்றும் மனதுக்குத் தோன்றுகின்றது. இந்த நிலையில் மனிதனுக்கு ''ஜீவன்'' என்ற பெயர் கிடைக்கின்றது.

இந்த ஜீவனே ஆத்மஞானத்திற்கு உரியவனுவான். தனக்கும் தான் விரும்பும் அமைதிக்கும் இடைவெளி இல்லை என உணர்த்துவதே ஞானமாகும். இதற்காக மனிதன் எடுத்துக் கொள்ளும் ஒவ்வொரு முயற்சியும் ஞானமார்க்கம், சாதனை,

ஆன்மீக வளர்ச்சி, தவம் போன்ற பல பெயர்களால் குறிக்கப் படுகின்றது. எனவே, ஆத்மீக சாதனைகள் பற்றி மனிதன் தனது வாழ்க்கையில் தெரிந்துகொள்ளக் கடமைப்பட்டவனாகின்றான். ஆத்மீக சாதனைகளுக்குத் தடையாக அமைவது அறியாமையே ஆகும். இந்த அறியாமையைத் திருத்துவதற்கான முயற்சி களுக்கே பக்தி, தியானம், யோகம் ஆகிய பெயர்கள் தரப்பட் டுள்ளன. அறியாமையை நீக்குவதற்குரிய மற்றொரு மாற்று மருந்து ஒழுக்கங்கள் ஆகும். ஆத்ம சாதனை உள்ளத்தைப் பற் றிய தெளிவை நிச்சயப்படுத்தும் முயற்சியாகவே அமைகின்றது.

மனிதனைப் பொறுத்தவரை மரணம் நிகழ்ந்தே தீரும். அத னைத் தவிர்க்க முடியாது. எமக்கு முன் வாழ்ந்த எத்தனையோ பெரிய மகான்களும் இறந்துள்ளனர். சாதாரண எளிய மக்க ளும் இறந்துள்ளனர். ஒருவகையில் இந்த உலகம் எல்லையற்ற இறந்தகாலத்தின் இருப்பிடமாக உள்ளதுபோலத் தோன்றுகின் றது. அவ்வாறிருந்தும் நாம் இந்த உடலுடன் ஒட்டிக்கொள் கிறோம். ''நான் என்றும் இறக்கமாட்டேன்'' என்ற நினைப்பில் பல காரியங்களைச் செய்கின்றோம். உடல் இறந்துதான் ஆக வேண்டுமென்று தெரிந்துங்கூட நாம் அதனையே பெரிதாகக் கருதி ஒட்டிக் கொள்வதோடு உடல்தான் நாம் என நினைக்கின் றோம். எமது உடலை ஆத்ம சாதனைக்குரிய பொருளாக மாற் றிக் கொள்ளவேண்டும் என்பது அனுபூதிமான்களின் கருத்தாகும்.

இருக்குவேதம் தரும் ஆன்மீகக் கருத்துக்களை நாம் ஆராயு மிடத்து அவ்வேதம் இறப்புப் பற்றியும் இறப்புக்குப் பின் உள்ள வாழ்வு பற்றியும் விளக்கும் பல கருத்துள்ள பாடல்களைக் கொண் டுள்ளமை குறிப்பிடத்தக்கது. இருக்குவேதத்தில் பத்தாம் மண் டலத்தில் வரும் நாசதிய சூக்தத்தில் (X-129) இறப்பு நிகழ்ந் ததா? என்ற கேள்வி எழுப்பப்படுகின்றது. இறப்புக்குப்பின் ஆன்மா வேறோர் உலகத்தில் பிறப்பதாக நம்பப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது. பிராமணங்களில் வரும் பகுதியில் மறுபிறப்புப் பற்றிய குறிப்பு உள்ளது.

ஒழுக்கத்திற்கும் சமயப்பற்றுக்கும் உள்ள பரிசு விண்ணுல கில் இன்பம் துய்ப்பதாகும் என்ற நம்பிக்கையும் காணப்பட்டது. இருக்குவேதத்தில் இறப்புப்பற்றிய பாடல் (X-14) இறப்போடு தொடர்புடைய பல நம்பிக்கைகளைக் கூறுகின்றது. இறந்த

உடலை அக்கினியே பிதிரரும் தேவரும் உறையும் மறு உலகுக்கு எடுத்துச் செல்வதாக இப்பாடல் குறிப்பிடுகின்றது. இருக்கு வேதத்தில் யமனே இறப்புக்குரிய தெய்வமாகச் சித்திரிக்கப்படு கின்றான். இறந்தோருக்குரிய பாதையை வகுத்தவனும் அவனே யாவன். யமனோடு சேருவதற்கு இறந்தவர் நல்வினைப் பயன்க ளோடு செல்லவேண்டுமென வற்புறுத்தப்படுகின்றது. ஒருவ னது நல்வினைத் தேட்டமே இறப்பின் பின் மறு உலகில் உயர்ந்த பேற்றினை நல்கும் என்ற ஆழ்ந்த நம்பிக்கை இருக்குவேதப் பாடல் மூலம் வெளிப்படுத்தப்படுகின்றது.

இறப்பின் பின் உள்ள நிலைபற்றி இருக்குவேதம் கூறும் சிந் தனையின் வளர்ச்சியாகவே உபநிடத சிந்தனைகள் அமைகின்றன எனக் கொள்ளலாம். இம்மண்ணுலக வாழ்வுக்குப் பின் மனி தன் எங்கே செல்கின்றான்? மரணத்துக்குப் பின் ஆத்மாவின் நிலை என்ன என்பது போன்ற வினாக்களுக்கு உபநிடதங்கள் விடையளிக்கின்றன. அநாதியாகிய ஆன்மா இவ்வுலகில் தான் செய்த நல்வினை தீவினைகளுக்கேற்பப் பல்வேறு பிறப்புக்களுக்கு உட்படும் நியதியை உள்ளடக்கியதே கருமக்கோட்பாடு ஆகும். ''வினை விதைத்தவன் வினையறுப்பான்; தினை விதைத்தவன் தினை யறுப்பான்'' என்ற நியதிக்கேற்பச் சிந்தனை, சொல், செயல் ஆகிய மூன்றும் பிறவியைத் தீர்மானிக்கின்றன. நாம் இப்போது இருக்கும் நிலைக்கு நமது முன்னைய கருமங்களே காரணமாக அமைகின்றன எனவும். எதிர்காலத்தில் எமது நிலையை இன்று நாம் ஆற்றுகின்ற கருமங்களே தீர்மானிக்கும் எனவும் இக் கோட்பாடு விளக்கி நிற்கின்றது. மனிதரிடையேயுள்ள பிறவிக் கும் ஏற்றத் தாழ்வுகளுக்கும் உரிய விளக்கமாக இது அமை கின்றது.

சைவசித்தாந்தத்தில் வினை பற்றிய கருத்துக்கள் மிகத்தெளி வாக எடுத்துக் கூறப்பட்டுள்ளன. உயிர்கள் அறிவோடும் அறி யாமையோடும் கூடியிருக்கின்றன. உலக வாழ்வால் உயிர் அறிவு விளக்கம் பெறுவதால் உயிருக்கு அறியாமை செயற்கையாகவே இருத்தல் வேண்டும். இவ்வறியாமையைப் பேரறிவுப் பொரு ளாகிய இறைவன் விளைவித்திருக்க மாட்டான். வேறொரு பொருளே இதற்குக் காரணமாக இருத்தல் வேண்டும். இப் பொருளையே சைவசித்தாந்தம் ஆணவ மலம் என்று குறிப்பிடு கின்றது. இப்பொருளை இறைவன் உண்டாக்கியிருக்க மாட்டா னதலால் இதுவும் எவராலும் உண்டாக்கப்படாதது என்றும்,

உள்ள பொருள் என்றும் உயிர்கள் தம் எளிய இயல்பால் மயக்குந் தன்மையுடைய இப்பொருளை அநாதியே பற்றி அறியாமைக்குள்ளாயின என்றும் இம்மலத்தை நீக்குவதற்காகவே தனக்கென ஒரு தேவையும் இல்லாத இறைவன் கருணை ஒன்றே காரணமாக உயிர்களுக்கு இயற்கையிலிருந்து உலகையும் உடல்களையும் படைத்தருளியிருக்கின்றான் என்றும் சைவசித்தாந்தம் கூறுகிறது. அறிவுடைய பொருட்கள் தம் அனுபவத்தாலேயே பயன் பெறுதல் வேண்டும். எனவே, உயிர்கள் அனுபவம் பெறும் பொருட்டே இறைவன் உலகையும் உடல்களையும் படைத்தருளியுள்ளான். உயிர்கள் உடல்களைக் கொண்டு உலகில் வினைகளைச் செய்து அனுபவம் பெற்று அவ்வனுபவத்தால் ஆணவ மலக் கட்டிலிருந்து விடுதலை அடைகின்றன. எனவே வினை, சைவசித்தாந்தத்தில் முக்கிய இடத்தினைப் பெறுகின்றது.

'நன்மை செய்தால் நன்மை விளையவேண்டும். தீமை செய்தால் தீமை விளையவேண்டும்' என்ற நியதி அறிவுக்குப் பொருத்தமான ஒன்றாகும். ஆனால் உலக வாழ்க்கையில் நல்லவர்கள் துயருறுவதும் தீயவர் பலர் செழிப்புடன் வாழ்வதும் நாம் காணக்கூடிய விடயங்களாகும். அறிவியல் வாதிகள் இதற்குரிய விளக்கங்களை அளித்துள்ளபோதும் நியதி தப்பாமல் வினைப் பயன்கள் வரவேண்டும் என்பதில் சைவசித்தாந்தம் உறுதியாகவுள்ளது. நடுநிலையாளனாகிய இறைவன் உலகை நடத்தும்போது ஒருவர் ஏழையாக, மற்றொருவர் செல்வந்தராக, பிறிதொருவர் நோயாளியாகவெவ்வேறு நிலைகளில் இருக்கக் காரணம் என்ன என்பது சிந்திக்கற்பாலதாகும்.

உயிர்கள் வினைகளைச் செய்து ஆணவமலப்பற்றை நீக்கிக் கொள்ள வேண்டுமென்பதற்காகவே இறைவன் உலகைப் படைத்துள்ளான். தமக்குக் கிடைத்த வாய்ப்பைக் கொண்டு திருத்தம் பெறாது இறந்து போகும் உயிர்கள், வினையாற்றி ஆணவ மல நீக்கம் பெற மீண்டும் வாய்ப்பளிக்க வேண்டுமென்ற காரணத்தால் அவை மீண்டும் பிறக்கும் எனக் கூறப்படுதல் பொருத்தமாகவேயுள்ளது. இதனால் உயிர்களுக்கு அடுத்த பிறவியுண்டென நம்பவேண்டியுள்ளது. எனவே, அதற்கு முற்பிறவியும் இருந்திருக்க வேண்டுமென்பதும் பெறப்படுகின்றது. இப்பிறவியில் செய்யும் நல்வினைக்குப் பயன் நமக்குக் கிடைக்கவில்லையென்றால் இறைவன் அடுத்த பிறவியிலாவது நமக்கு அப்பயனைத் தரு

வான் என்ற நம்பிக்கை நிலவுகின்றது. எனவே, ஒவ்வொரு பிறவியிலும் செய்த வினைகளுக்கேற்பவே பிறவிப்பயன் கிட்டுகின்றது. முற்பிறவியிலே செய்த வினைகளுக்கேற்றவாறே இப்பிறவியின் வாழ்க்கை அமையுமாதலால் மக்கள் வாழ்க்கையில் ஏற்றத் தாழ்வுகள் காணப்படுகின்றன எனச் சைவசித்தாந்தம் கூறுகின்றது.

சமண, பௌத்த சமயங்கள் வினைபற்றிய உண்மையை ஒப்புக்கொள்ளுமிடத்தும் வினைப்பயன்கள் தாமே வருமென்று அவை கூறுகின்றன. நியதி தப்பாமல் அவ்வுயிர்க்குப் பயனை ஊட்ட வினைக்கு அறிவில்லை. எனவே, பேரறிவுப் பொருளாகிய இறைவனே உயிர்களின் நிலையினை அறிந்து நியதி பிறழாமல் வினைப் பயனை ஊட்டவேண்டும் எனச் சைவசித்தாந்தம் கூறும். உயிர்களின் நன்மைக்காக இறைவன் காலமறிந்து அளவறிந்து பல்வேறு நிலைகளில் வினைகளுக்குரிய பயனை ஊட்டுகின்றான்.

இப்பொழுது நல்வினை செய்யும் உயிர், அதன் பயனை நுகராமல் முன்னைய தீவினைப் பயனை இப்பிறவியில் நுகர்வதால் அதன் அறிவிலே பல திருத்தங்கள் உண்டாகின்றன. அதுபோன்றே தீவினையைச் செய்யும் உயிர் நல்வினைப்பயனை நுகர்வதால் பல திருத்தங்களை அடைகின்றது. இதனால் நியதியை மாற்றாமல் ஏனையவற்றை இறைவன் மாற்றுகின்றான். உடலை மாற்றினாலும் காலம் இடத்தை மாற்றினாலும் செய்த வினைக்குரிய பயனை நியதி தப்பாமல் செய்த உயிரே அனுபவிப்பதால் பயன்கிட்டுகின்றது. ஆணவமல நீக்கத்திற்காகவே இறைவன் வினைப்பயன்களை ஊட்டுகிறானேயன்றி, செய்த வினையின் பயனை அனுபவித்தே ஆக வேண்டும் என்பதற்காகவன்று. வினைப்பயனால் உயிர்கள் திருத்தம் பெறுகின்றன.

சைவசித்தாந்தம் மூவகை வினைகளைக் குறிப்பிடுகின்றது. சஞ்சிதம் என்பது முற்பிறப்புக்களில் செய்து அனுபவிக்கப்படாமல் எஞ்சிநிற்கும் வினைத்தொகுதியாகும். பிராரத்தம் அத்தொகுதியிலிருந்து எடுக்கப்பட்டு, இப்பிறவியில் அனுபவத்திற்கு வரும் வினைப்பகுதியாகும். இதனையே ஊழ்வினை எனக் கூறுவர். ஆகாமியம் இப்பிறவியில் செய்யப்படும் வினைகளாகும். முற்பிறவியில் நாம் என்னவினை செய்திருக்கிறோம் என்பதை நாம் அறியவொட்டாமல் இறைவனின் திரோதான சத்தி மறைத்துவிடுகின்றது.

அப்படி மறைத்தால்தான் நாம் ஊக்கத்தோடு மேல்வினை செய்வோம். ஆனால் செய்த வினையின் வாசனைமட்டும் நம்மிடையே இருந்து இப்பிறவியில் நாம் செய்யும் முயற்சிக்குத் தூண்டுகோலாகவுள்ளது. நாம் முற்பிறப்புக்களில் செய்துள்ள வினைகளுக்குரிய பயன்களில் என்னென்ன பயன்களை ஊட்டினால் இப்பிறவியில் நமக்கு ஆணவமல நெகிழ்ச்சி ஏற்படுமென்பதை அறிந்து இறைவன் அவற்றை ஊழாக அமைக்கின்றான். எனவே, பிராரத்தமாகிய ஊழ், நாம் இப்பிறவியில் அனுபவிக்கும் இன்ப துன்பங்களுக்கும் அவற்றைப் பெறுதற்குரிய காலம், அளவு, இடம், சந்தர்ப்பம், சூழ்நிலை ஆகியவற்றுக்கும் ஏதுவாக அமைகின்றது. ஊழுக்கும் முயற்சிக்கும் இடையில் நடைபெறும் போராட்டத்தின் வாயிலாகத்தான் உயிர்கள் ஆணவமலக் கட்டினின்றும் விடுபடுகின்றன. இப்போராட்டம் இல்லாவிடில் உயிர்கள் முன்னேற இடமில்லாது போய்விடும். நாம் உய்வுபெறவும் இதுவே உதவுகின்றது. மிகவும் முனைந்து செய்யும் முயற்சிக்கு இம்மையிலேயே பயன் உண்டு.

அறவாழ்க்கையால் ஆணவ நெகிழ்ச்சி உண்டாகும். எந்த அளவுக்கு நெகிழ்ச்சி உண்டாகின்றதோ அந்த அளவுக்கு ஊழ் வினையின் தாக்குதல் குறையும். நல்லொழுக்கம், நற்சிந்தனை, பிறர்நலம் பேணல் உயிர்களிடத்து அன்புகொள்ளல் ஆகியவற்றால் ஆணவமலம் நெகிழும் வாய்ப்புண்டு. இறைவழிபாடும் இதற்கு மிகுந்த துணைசெய்யும். சைவசித்தாந்தத்தில் சரியை, கிரியை, யோகம் ஆகிய மூன்று மார்க்கங்களும் நான்காவதாகிய ஞானத்திற்கு வழியமைத்துக் கொடுக்கின்றன. உண்மையான பக்திபூர்வமான இறைவழிபாடு ஊழ்வினையின் தாக்கத்தைக் குறைத்துக்கொள்வதற்கும் ஒருசில ஊழ்வினைப் பயனை முழுதும் வெல்வதற்கும் சிறந்த சாதனமாகும்.

வினைகளை ஆற்றி, ஆற்றி இன்பதுன்ப அனுபவங்களைப் பெற்று வரும் உயிர் சிறிது சிறிதாகப் பயன்கருதாது வினையாற்றும் பக்குவத்தினைப் பெறும். பகவத்கீதை கர்மயோகத்தின் வழி எடுத்துக்கூறும் கர்மசந்நியாசம் இத்தகையதே. பயன்கருதாது வினையாற்றும் திறத்தினால் ஆணவமல நெகிழ்ச்சி ஏற்பட்டு, நல்வினை தீவினை இரண்டையுமே ஒப்புநோக்கி அவற்றால்வரும் இன்பதுன்பங்கள் இரண்டையுமே பொருட்படுத்தாமல் பற்றற்று இறையருளை நாடிநிற்கும் நிலையுண்டாகும். உயிர் தன் அறிவில்

இரு வினைகளையும் ஒப்பநோக்கி, பற்றின்றி வாழ்தலையே 'இரு வினையொப்பு' எனக் கூறுவர். இருவினையையும் ஒப்பநோக்கி இறையருளை நாடிநிற்கும் உயிரின் பக்குவம் கண்டு இறைவனே குருவாக வந்து காட்சி கொடுத்து அதற்கு ஞானத்தை உணர்த்துவான். சமயாசாரியரின் வாழ்க்கை அனுபவங்கள் இதற்குச் சிறந்த எடுத்துக்காட்டு. ஒவ்வொரு உயிரும் பிறவிதோறும் பக்குவமடைந்து மும்மல நீக்கம் பெற்றுப் பிறவாப் பெருநிலை எய்துவதே நோக்கம் என்பதைச் சைவசித்தாந்தம் தனிப்பெருங் கொள்கையாக எடுத்துக் கூறுகின்றது.

உபநிடதங்களில் பிறவி பற்றி வரும் கருத்துக்களும் சிந்தனைக்குரியன. இவ்வுலகில் சரீரந்தோறும் தம்மால் செய்யப்பட்ட கருமத்தின் பலனை அனுபவிப்பவர்களாய் இருதய குகையில் இருவர் புகுந்துறைகின்றனர். அவரவர் கருமத்துக்கும் ஞானத்துக்கும் தக்கவாறே வேறு உடல்களையோ தாவர நிலையையோ அடைகின்றனர். மனிதன் பூண்டுபோல் அழிகின்றான்; மீண்டும் பூண்டுபோல் உண்டாகின்றான். 'ஒருவன் தனது சரீரம் விழுவதற்கு முன்பே ஆத்மப் பொருளை அறிவதற்கு முடியாதவனாகப் போவானாகில் பின்னர் மீண்டும் சரீரத்தை அடைந்தவனாகின்றான்' எனக் கடோபநிடதம் தெளிவாகக் குறிப்பிடுகின்றது. பிறப்பின் நியதியைக் கூறும் உபநிடதங்கள் பிறப்பற்ற நிலையை அடைவதற்குரிய வழிவகைகளையும் கூறுகின்றன:

> 'எப்போதும் அடக்கப்பட்ட மனதுடனும் விவேகமுள்ள புத்தியுடனும் கூடியவன் எவனோ அவனுக்குச் சாரதிக்கடங்கிய நல்ல குதிரைகள்போன்று ஐம்புலன்கள் வசப்பட்டவையாகின்றன. எப்போதும் விவேகமற்றவனாகவும் அடங்காத மனதுடையவனாயும் அழுக்குடையவனாயும் உள்ளவன் எவனோ அவன் சேரவேண்டிய பரமபதத்தைச் சேரமாட்டான். மீண்டும் மீண்டும் பிறவிப் பாதையிலேயே சென்று கொண்டிருப்பான். எப்போதும் விவேகத்துடனும் அடங்கிய மனத்துடனும் கூடியவனாகவும் பரிசுத்தமானவனாகவும் உள்ளவன் எவனோ அவன் மீண்டும் மீண்டும் பிறப்பதில்லை. அவன் பரமபதத்தை அடைகின்றான். எப்போது ஒருவனுடைய உள்ளத்திலே பொதிந்துள்ள ஆசைகள் யாவும் ஒழிகின்றனவோ அப்போது சாகும் இயல்புடைய மனிதன் சாகாதவனாகின்றான். எப்போது இருதயத்தில் அறியாமை

அகங்காரம் ஆகியவற்றின் காரணமாய் உண்டான முடிச் சுககள் எல்லாம் இங்கேயே அவிழ்ந்துபோகின்றனவோ அப் போது சாகும் இயல்புடைய மனிதன் சாகாதவனுகின்ருன்.'

(கடோபநிடதம்: 3.6: 6.14)

உபநிடதம் தரும் இத்தகைய சிந்தனைகள் ஒருவனது ஆன் மீக வாழ்க்கைக்குப் பெரிதும் வேண்டற்பாலன.

ஆன்மா அழிவற்றது; உடல்கள் அழியக்கூடியவை என் பதைப் பகவத்கீதை தெளிவாகக் கூறுகின்றது. நித்தியமாய், அழி வற்றதாய், அளப்பரியதாய் உள்ள ஆன்மாவின் இவ்வுடல்கள் யாவும் அழியுந்தன்மையுடையவை. (கீதை 2 18) பிறத்தல், இருத்தல், வளர்த்தல், மாறுதல், தேய்தல், மாய்தல் ஆகிய ஆறுவித பாப விகாரங்கள் உடலுக்கு உண்டு. ஆனல், ஆத்மா வுக்கு விகாரம் இல்லை (கீதை 2.20). பிறப்புப்பற்றியும் கீதை தெளிவாகக் குறிப்பிடுகின்றது. 'பழுதுபட்ட துணிகளைக் களைந்து விட்டு மனிதன் புதியவைகளைப் போட்டுக்கொள்வது போன்று ஆத்மா பழைய உடல்களை நீத்துப் புதியனவற்றுள் புகுகின்றது. இவ்வாறு புதிய பிறப்புக்கு ஏதுவாக அமைவன வினைகளேயாம்.' (கீதை 2.22). 'பிறந்தவன் இறப்பதும் இறந்தவன் பிறப்பதும் உறுதியெனின் விலக்கமுடியாத இவ்விடயத்தில் மக்கள் வருந் துவது பொருத்தமாகாது' எனக் கீதை உபதேசிக்கின்றது. (2.27). ஒருவன் முத்தியடையும் வரை இந்நிலை தொடரும். பற் றுக்கு ஆளாயிருக்கும் வரை பிறப்பதும் இறப்பதும் இயல்பு என் பதும் வினையின்படி வருகின்ற மரணத்தைத் தடுக்க யாருக்கும் இயலாது என்பதும் உணர்த்தப்படுகின்றது. ஆத்ம தத்துவத் தைப்பற்றிக் கூறிய கீதை ஆத்ம விமோசனத்திற்கும் வழிகூறி நிற்கின்றது. உள்ளத்திலே நடுவு நிலையோடு நிற்கும் ஞானிகள் வினைப்பயனை விட்டொழித்துப் பிறவித்தளை நீங்கிக் கேடில்லாத பெருநிலை அடைகின்றனர். (கீதை 2.51). மனத்தில் எழுகின்ற ஆசைகளை அகற்றி, ஆத்மாவில் ஆத்மதிருப்தி அடைந்திருப்ப வன் ஸ்திதப்பிரக்ஞன் என்று கீதை குறிப்பிடுகின்றது (கீதை 2,55). நலமும் கேடும் கலந்துள்ளது உலகம். பற்றுடையார்க்கு அது இன்பதுன்பத்தை விளைவிக்கிறது. பற்றற்ற ஞானி அத்த கைய விளைவுகளுக்கு ஆட்படுவதில்லை. எவன் பற்றற்றவனுய் நலம் வரும்போது மகிழாமலும் கேடுவரும்போது துயரடையா மலும் இருக்கின்ருனே அவனுடைய அறிவு உறுதிபெறுகின்றது' என்பது கீதையின் போதனையாகும் (2.57).

யாகத்தில் எஞ்சியதை உண்ணும் நல்லோர் எல்லாப் பாபங்களிலிருந்தும் விடுபடுகின்றனர். ஆனால், தங்கள் பொருட்டே உணவைச் சமைக்கும் பாபிகள் பாபத்தை உண்கின்றனர். (கீதை 3 13). எச்செயலைச் செய்தாலும் அதன்மூலம் உலக நன்மையும் இறைவனது பெருமையும் முன்னணியில் நிற்றல்வேண்டும். தான், தனது என்னும் செருக்குப் பின்னணிக்குப் போகுமளவு அது புண்ணியச் செயலாகக் கருதப்படுகின்றது. நித்திய கடமையில் இதற்குரிய உதாரணத்தைக் குறிப்பிடுமிடத்து, அன்றாடம் சமைத்து உணவை மற்றவர்களுக்கு முதலில் வழங்கிவிட்டு எஞ்சியதை உண்பவன் மேலோன். இல்வாழ்வான் ஒருவன் ஐம்பெரும் வேள்விகளைச் செய்யக் கடமைப்பட்டவன். தேவயக்ஞம் என்பது கடவுள் வழிபாடு. அடுத்து பிரமயக்ஞம் என்பது உலக நன்மையின் பொருட்டுச் சான்றோர் அமைத்த தெய்வநெறி நூல்களை முறையாக ஆராய்வதும் அவற்றை மற்றவர்களுக்கு எடுத்து ஓதுவதும் ஆகும். இது ரிஷிகளைப் போற்றுவதற்கு ஒப்பாகும். நூல்களை ஓதுதல் பிரமயக்ஞமாகும். பித்ருயக்ஞம் மூன்றாவதாக முக்கியத்துவம் பெறுகின்றது. மனிதன் வாழ்ந்து வரும் உடலுடன் கூடிய வாழ்க்கையில் தம்முன்னோர்க்கும் கடப்பாடுடையவன் ஆகின்றான். எனவே, அவர்களைக் குறித்து நாம் வழிபடுதல் வேண்டும். உயிரோடிருக்கும் பெற்றோருக்குப் பணிவிடை நாள்தோறும் செய்வதும் இதன்பாற்படும். நான்காவதாகிய நரயக்ஞம் மக்களது பசியைப் போக்குதல், பிணியை நீக்குதல், வாழ்க்கையைப் பண்படுத்துதல், கல்வியைப் பெருக்குதல் இவை யாவற்றையும் உள்ளடக்கியது. ஐந்தாவதாகிய பூதயக்ஞம் ஆடு, மாடு முதலிய உயிரினங்களைப் பேணிவருதலைக் குறிக்கும். இந்த ஐவகை யக்ஞத்தில் மனிதன் உறுதியாக ஈடுபடுமிடத்து ஆத்மீக நலம் கிட்டுகின்றது.

ஒருவன் ஆன்மீக மேம்பாடு அடைய விரும்பின் பிறப்பு, இறப்பு என்ற பெருங்கடலில் மூழ்காது தன்னைத் தானே உயர்த்திக்கொள்ளுதல் வேண்டும். தன்னை இழிவுறுத்தலாகாது. ஏனெனில் தானே தனக்கு நண்பன், தானே தனக்குப் பகை என்று கீதை உபதேசிக்கின்றது. (கீதை 6.5). ஆத்ம மேம்பாட்டுக்குத் தியானம் ஒரு சிறந்த சாதனையாகக் கீதை குறிப்பிடுகின்றது. மனதைத் தியானத்தில் நிறுத்தி உள்ளத்தை அடக்கிய யோகி, இறைவனிடத்தில் முக்திநிலையில் நிறைவு பெறுகின்ற சாந்தி எய்துகிறான். (6.15) இறைவனை பக்தியுடன் வழிபடுபவர்

க்குப் புத்தியோகம் கைவரப்பெற்று இறைவனை அடைகின்றனர். இறைவன் அவர்களுக்கு அருள்கொண்டு அந்தக்கரணத்தில் வீற்றிருந்து மெய்ஞ்ஞானச் சுடர்விளக்காய் அறியாமை என்னும் இருளை அகற்றிவிடுகின்றார். (கீதை 10-10-11). இறைவனை அடைந்தவனுக்கு மறுபிறப்பில்லை என்பது கீதையின் போதனை. அனைத்துத் தர்மங்களையும் இறைவனுக்கென்றே அர்ப்பணஞ் செய்து அவனைச் சரணடைதல் வேண்டும். அப்பொழுது இறைவன் அனைத்துப் பாவங்களில் இருந்தும் எம்மை ஈடேற்றுவான், கவலையும் ஒழியும் (கீதை 18.66) என்ற உபதேசம் ஆத்மீக மேம்பாட்டுக்கு மிகவும் உறுதுணையாக அமைவதாகும்.

மகாபாரதத்தில் கீதையைப் போன்று ஆத்மீக சிந்தனைகளை நல்குவது ஸநத்-சுஜாதீயம் என்ற ஒப்பற்ற தத்துவப் பகுதியாகும். ஸநத் சுஜாதர் என்ற பிரம்ம ஞானி திருதராட்டிரனுக்குப் பிரம்மத்தின் தத்துவத்தை உபதேசித்த வாயிலாக எழுந்ததே ஸநத்-சுஜாதீயம். ஆத்மீகத்தாகம் உள்ளவர்களுக்கு இது ஒரு சிறந்த வரப்பிரசாதம். மரணத்தைப்பற்றிய உண்மை இதில் விளக்கப்படுகின்றது. வாழ்க்கையை நன்கு அறிய முயல்பவன் மரணத்தை உள்ளவாறே அறியவேண்டும். பிறப்பையும் இறப்பையும் இரு எல்லைக்கோடுகளாக அமையப்பெற்றதே வாழ்க்கை. வாழ்க்கையை ஆராய்பவன் முன்னைய இரண்டினைப்பற்றியும் தெளிவடைதல் அவசியமாகும். கடோபநிடதம், கீதை முதலியவை மரணம் பற்றிய தெளிவை ஏற்படுத்துவதுபோல, இப்பகுதியும் மரணத்தைப்பற்றிய விடயத்தில் முக்கியத்துவம் பெறுகின்றது. நாம் இறைத்தன்மை பெற்றவர்கள். சத், சித், ஆனந்தம் என்ற நிலைகளை மறவாது வாழ்தலே நமக்கு இயல்பான வாழ்க்கையாகின்றது. இதனை மறத்தலே மரணம். அறியாமையே பிறப்புக்குக் காரணம். அகங்காரமே மரணத்திற்கு அடிகோலும் அடிப்படையான பெருந்தீங்கு எனக் குறிப்பிடப்படுகின்றது. அகங்காரத்தில் தோன்றும் மரணத்தைக் கடக்க ஞானத்தில் நிலைபெறவேண்டும். ஞானம் கைவரப்பெற்றவன் மரணதேவதையைக் கண்டு அஞ்சுவதில்லையென உபதேசிக்கின்றது ஸநத்-சுஜாதீயம்.

உடல் உயிரோடு இருக்கும்போதே ஆற்றவேண்டிய நற்கருமங்கள் பற்றி நாயன்மார்கள் வற்புறுத்தியுள்ளனர். நாம் பிறப்பதும் இறப்பதும் எப்போது நிகழும் என்பதை யாரும் நிச்சய

மாக கூறமுடியாது, இந்த உடலில் இறைவன் ஆன்மாவை வைத்ததன் நோக்கம் பிறப்பிறப்பென்னும் உலையில் உருக்கி உருக்கி ஆன்மாவைச் சூழும் கழிம்பறுத்தலேயாம். இப்பிறவி நிலையில்லை. இதோ சாவு வருகிறது. நாளை வீணாக்காமல் இறைவனை வணங்கவேண்டும். உயிருள்ளபோதே நாம் திருவருளுக்குப் பாத்திரராகவேண்டும் என்பது அடிக்கடி வற்புறுத்தப்படுகின்றது. பிறவிப்பிணி நீங்குவதற்குச் சம்பந்தர் சிறந்த வழி கூறுகின்றார். 'எந்தையே எம்பெருமானே அப்பனே ஆட்கொள்', என்று ஆர்வமுடன் இறைஞ்சி முழுமுதல்வராகிய இறைவன் திருவடிகளில் அன்றாடம் அர்ச்சிக்கவேண்டிய மலர்களைத் தலையாரச் சுமந்து சென்று அர்ச்சித்து வழிபடுவதும் இறைவனது அதியற்புதமான பெருமைகளைச் செவியாரக் கேட்டுச் சிந்தித்து மகிழ்வதும் அவனது திருநாமங்களை நாவார உள்ளம் உருக உச்சரித்து வழிபடுவதும் சிறந்த வழிபாடாகும் என்பதை,

நீநாளும் நன்னெஞ்சே நினைகண்டாய் யாரறிவார்
சாநாளும் வாழ்நாளுஞ் சாய்க்காட்டெம் பெருமாற்கே
பூநாளுந் தலைசுமப்பப் புகழ்நாமஞ் செவிகேட்ப
நாநாளும் நவின்றேத்தப் பெறலாமே நல்வினையே

எனக் குறிப்பிடுகின்றார்.

மணிவாசகரின் திருவாசகமாகிய தேன் பிறவித்துன்பம் நீக்கும் மருந்து. மனிதவாழ்வில் அல்லல்கள் அனைத்தும் அறியாமையால் விளைவன. தொல்லையிரும் பிறவி நீங்க வழிவகுப்பது திருவாசகத் தேன் ஆகும். சிவபுராணத்திலே,

சிறந்தடியார் சிந்தனையுள் தேனூறி நின்று
பிறந்த பிறப்பறுக்கும் எங்கள் பெருமான்

எனப் போற்றுகின்றார்.

பிறந்து இறந்து மீண்டும் பிறந்து பரிதவிக்கின்ற மாக்களாகிய எமக்கு ஆத்மீக ஞானியாகவும் வழிகாட்டியாகவும் திகழ்பவர் மாணிக்கவாசகர். அவர் தரும் திருவாசகம் சிவநெறி காட்டும் உயர் தனிவழி. இந்த உடம்பினுள் உள்ள உத்தமனைக் கண்டு பிறவிப் பயனைப் பெற்றுவிடவேண்டும். அப்பயனைப் பெறாது வீணே உடம்பைச் சுமந்து அலைதல் அறிவுடைமையாகாது. உடம்பு உள்ளபோதே உடம்பினாலாய பயனைப் பெற்றுவிட்ட உத்தம ஞானிகள் இந்த உடம்புடன் வாழ்வதை விரும்புவ

தில்லை. மணிவாசக சுவாமிகள் இந்த உடம்புடன் இருப்பது பற்றிப் பொறுக்கவில்லையே என்ற பொருளில் 'ஆற்றேன்' எனக் கூறுகின்றார்.

வேற்று விகார விடக்குடம்பின் உட்கிடப்ப ஆற்றேன்

என உரைக்கின்றார்.

இந்த உடம்பினாலாய பயனாகிய சிவபோகத்தைப் பெற்று உய்வதற்கு மணிவாசகர் கூறும் வழிகள் குறிப்பிடத்தக்கன:

ஆமாறுஉன் திருவடிக்கே அகங்குழையேன் அன்புருகேன்
பூமாலை புனைந்தேத்தேன் புகழ்ந்துரையேன் புத்தேளிர்
கோமான்நின் திருக்கோயில் தூகேன் மெழுகேன் கூத்தாடேன்
சாமாறே விரைகின்றேன் சதுராலே சார்வானே.

எனப் பாடுகின்றார். உலகிலுள்ள உயிர்கள் உய்யும் பொருட்டு ஆறுவழிகளைக் கூறுகின்றார். உனது திருவடியை நினைந்து உள்ளம் குழையவேண்டும். மனம் தழலிடைப்பட்ட மெழுகுபோல உருக வேண்டும். நல்ல மலர்களை மாலையாகத் தொடுத்துத் துதிக்க வேண்டும். உனது புகழை இனிது ஓதவேண்டும். உனது திருக்கோயிலைக் கூட்டி மெழுக வேண்டும். ஆனந்த மிகுதியால் ஆடவேண்டும் என்பது மணிவாசகர் காட்டும் ஆத்மீக வழிகளாகும்.

காரைக்காலம்மையார் இறைவன் தாள் சேரும் நிலையில் கிட்டும் அனுபவத்தை அற்புதத் திருவந்தாதியில் குறிப்பிடுமிடத்து,

இனியோம்நாம் உய்ந்தோம் இறைவன் தாள் சேர்ந்தோம்
இனியோர் இடர்இல்லோம் நெஞ்சே - இனியோர்
வினைக்கடலை ஆக்குவிக்கும் மீளாப் பிறவிக்
கனைக்கடலை நீந்தினோம் காண்

எனக் கூறுகின்றார்.

வள்ளுவரும் இதேநிலையை,

பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தார்
இறைவன்அடி சேரா தவர்.

எனக் குறிப்பிடுகின்றார்.

இவற்றால் பிறவிப் பெருங்கடலை நீந்துவதே ஆத்மீக வாழ்க்கையின் முக்கிய நோக்கம் என்பது பெறப்படுகின்றது.

இந்து சமய மரபிலே ஆத்மீக வாழ்வுக் கேற்ற வழி வகைகள் எண்ணற்றவையாக உள்ளன. அவற்றில் ஏதாவதொன்றைப் பற்றுக் கோடாகக் கொண்டு ஆத்ம நலம்பெற எவருக்கும் வாய்ப்புண்டு. பிறவிப் பயனைப்பெற எமது உடலைப் பயன்படுத்துவதே சிறந்த முயற்சியாகும். உடம்பினுள் உள்ள ஆத்மாவைக் காண முயல்வது பெருஞ்சாதனையாக அமைவதோடு விடுதலைக்குரிய வழியாகவும் அமைவதாகும். இப்பிறவியை உரிய வாய்ப்பாகக் கொண்டு ஆத்மீக வாழ்வில் மேன்மை அடைதல் வேண்டும் என்பதைச் சமயத் திருநூல்களும் அனுபூதிமான்களின் அருள் வாக்குகளும் எடுத்தியம்புகின்றன.

ஆத்மீக வாழ்வு பற்றி அன்று முதல் இன்றுவரை வளர்ச்சி பெற்ற கருத்துக்கள் எமது சிந்தனைக்கு என்றென்றும் விருந்தாக அமைவதோடு வாழ்வை வளம்படுத்துவனவாகவும் உள்ளன.

## உசாவியவை


உபநிஷத் சாரம் — ஈச-கேன - கட உபநிஷத்துக்கள், அண்ணா (உரை), ஸ்ரீ ராமகிருஷ்ண மடம், சென்னை. 1964.

காரைக்காலம்மையார் பிரபந்தங்கள் — (அம்மையார் திருமுறை), திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடம், ஸ்ரீ வைகுண்டம். 1957.

கிருபானந்தவாரி, திருவாசகத்தேன், திருப்புகழமிர்தம் காரியாலயம், சென்னை. 1959.

கோபாலகிருஷ்ணன், ப., இந்துசமய மரபில் தர்மம்—சில சிந்தனைகள், திருமதி தயாபரசுந்தரி ஸ்ரீ நடராஜ் நினைவு வெளியீடு, யாழ்ப்பாணம். 1988.

சங்கரப்பிள்ளை, பொ., மரணத்திற்குப் பின், குமரன் பதிப்பகம் சென்னை. 1985.

சுந்தரமூர்த்தி சுவாமிகள் தேவாரம் சைவசித்தாந்த சமாஜ வெளியீடு, சென்னை. 1980.

சுப்பிரமணியம், ஏ. வி., ஆன்மீக விளக்கு. 'கலைஞன் பதிப்பகம், சென்னை, 1980.

சுவாமி விவேகானந்தர், ஆன்மீக வாழ்வு, ஸ்ரீ ராமகிருஷ்ண மடம், சென்னை. 1987.

சின்மயதீபம், சுடர் 1, 'சான்றோர் வாக்கும் சாதாரண மனிதனும்' பிரம்மச்சாரி வியக்தாஜி, சின்மயா மிஷன், கொழும்பு.

திருக்குறள், பரிமேலழகர் உரை, பூம்புகார் பிரசுரம், சென்னை. 1976.

பரமசாமிக்குரு, சிவஸ்ரீ மு., சிவார்ச்சனு சந்திரிகா தீபிகை, திருக் கணித நிலையம், மட்டுவில். 1989.

கட்டுரைகள்:

'சைவசித்தாந்தத்தில் வினை', இரத்தினம் செட்டியார், முரு. பழ., சிங்கப்பூர் ஸ்ரீமாரியம்மன் கோவில் மகாகும்பாபிஷேக மலர், சிங்கப்பூர். 1971. பக். 135 - 147.

'ஒழுக்கமுடைமை' ஸ்ரீமத் சுவாமி சித்பவானந்தர், தர்மசக்கரம்' சக்கரம் 12, ஆரம் 10, ஸ்ரீ ராமகிருஷ்ண தபோவனம், திருச்சி.

'இந்துமதத்தின் பொதுவான அடிப்படைக் கொள்கைகள்', சுவாமி விவேகானந்தர், தர்மசக்கரம், சக்கரம் 13, ஆரம் 8, ஸ்ரீ ராமகிருஷ்ண தபோவனம், திருச்சி.

# இறப்பிற்கு முன்னும் பின்னும்

# 11

இந்துக்களைப் பொறுத்தவரை சமயம் என்பது வாழ்க்கையின் ஓர் அம்சம் என்றோ பொழுதுபோக்குச் சாதனம் என்றோ கருதப்படுவதில்லை. அது மனிதனது பூரண வாழ்க்கையிலும் வியாபித்து நிற்கவேண்டுமெனக் கருதப்படுகின்றது. வாழ்வின் பலவேறு அம்சங்களை முரண்பாடின்றி ஒருங்கிணைப்பதும் வாழ்க்கைக்கு வழி காட்டுவதும் அடிப்படைக் கருத்துக்களையும் குறிக்கோளையும் தெளிவு படுத்துவதுமே சமயம் என்ற நம்பிக்கை நிலவி வருகின்றது. மனிதனைப் பொறுத்தவரை உடற்பற்றுக் காரணமாய் பல்வேறு துயரங்களுக்கு உள்ளாகின்றான். இத்துயரங்களிலிருந்து மீள்வதற்கு உடலுணர்வை வெல்வதும் உடலை மீறிய ஆன்மீக உணர்வை வளர்ப்பதும் அவசியமாகின்றன. பரம் பொருளை வழிபடவும் வாழ்க்கையின் சகல அம்சங்களையும் திடமனதுடன் நிறைவேற்றவும் கருவியாயுள்ளது உடம்பு. நாவலர் பெருமான் இதனை வற்புறுத்துமிடத்து, 'இந்தச் சரீரம் நமக்குக் கிடைத்தது. நாம் கடவுளை வணங்கி முத்தியின்பம் பெறும் பொருட்டேயாம்' என இரண்டாம் பால பாடத்தில் குறிப்பிடுவது கவனித்தற்குரியது. சமய நெறி நின்று ஒழுகுபவன் உள்ளத்திற் கொண்டிருக்க வேண்டிய இலட்சியத்தினை நாவலர் பெருமானின் கூற்றுத் தெளிவுபடுத்துகின்றது. இத்தகைய இலட்சியத்தினை அடைய மனம், வாக்கு, காயம் ஆகிய திரிகரண சுத்தியுடன் ஆற்றக் கூடிய நல்வினைகளே சமயக் கிரியைகள். மனிதன் கருவிலே தோன்றி இறக்கும் வரை நிகழும் கிரியைகள் பூர்வக் கிரியைகள் என்றும் இறந்த பின் செய்யப்படும் கிரியைகள் அபரக்கிரியைகள் என்றும் சுட்டப்படுகின்றன.

மனிதனது பூர்வ வாழ்வில் செய்யப்படும் கிரியைகள் அவனது சமய அனுபவத்திற்கும் ஆன்மீக விடுதலைக்கும் வழி வகுப்பதைப் போன்று அபரக்கிரியைகள் அவனது ஆத்ம சாந்திக்கு இன்றிய மையாதவையாகின்றன. ஒருவன் இறந்தபின் அவனது நன்மை கருதி அவனது பிள்ளைகள் முதலியோரால் செய்யப்படும் கிரியை களே அபரக்கிரியைகள். அபரம் என்றால் ''பிந்தியது'' என்று பொருள்படும். இவ்வபரக்கிரியைகளைச் செய்வதனால் இறந்தவரது ஆன்மா பாசங்களினின்று நீங்கிச் சிவத்துவம் அடையும் என்பது நம்பிக்கையாகும். அபரக்கிரியைகளுள் தகனக் கிரியை, அஸ்தி சஞ்சயனம், அந்தியேட்டி, ஏகோதிட்டம், சபிண்டிகரணம், மாசியம், சிராத்தம் என்பன குறிப்பிடத்தக்கன. இவை உத்தரக்கிரியை, சிராத்தக்கிரியை என இரு வகையாக நடைபெறும். இவ்விரண்டினுள் உத்தரக் கிரியைகள் இறந்தவுடன் அவ்வச் சந்தர்ப்பத்தில் நடைபெறுவன. சிராத்தக் கிரியை வருடமொரு முறை இறந்த திதியிற் செய்யப்படுவதாகும்.

இந்து மரபின்படி இறந்த ஒருவனுக்குச் செய்யும் அபரக் கிரியைகளில் அவனது மூத்த மைந்தனுக்குப் பெரும்பங்குண்டு. ஏனையோர் அவனோடு இணைந்து கிரியைகளில் ஈடுபடுவர். தர்மக் கோட்பாட்டின் படி ஒருவன் செய்த நல்வினை, தீவினைக்குத் தக்க தாகவே அவனுக்குரிய பிள்ளைகள் வந்து சேர்வர். தனது வாழ் நாளில் தனக்குக் கிடைத்த சரீரத்தினால் நல்வினைகளைச் செய்த வன் அபரக்கிரியைகளின் பலனைப் பெறுவான். அதற்கேற்ப அவனது நல்வினைப் பயன் காரணமாய் அக்கிரியைகளைச் செய்யத் தக்க புதல்வரையும் பெற்ற பாக்கியத்திற்குரியவனாவான். அத் தகைய புதல்வர்கள் இறந்தவர்களுக்குச் செய்யும் கிரியைகள் அவர்களுக்கு நன்மையளிப்பதற்குரியவையாகின்றன. வடமொழியிலே மைந்தனுக்குரிய பெயர் 'புத்திரன்' என்பதாகும். 'புத்' என்பது நரகத்திற்குரிய பெயர். 'திர' என்றால் 'நீக்கத்தக்கவன்' எனப் பொருள் கொள்ளலாம். எனவே 'புத்திரன்' என்ற பெயர் 'நரகத்திற்குச் செல்லும் வேதனையினின்று நீக்கத்தக்கவன்' என்ற பொருளைக் கொண்டுள்ளமை கவனித்தற்குரியது. இந்த உயர் நோக்கத்தை அடிப்படையாகக் கொண்டே இந்து சமய மரபில் இறந்தோருக்கென ஆற்றப்பட வேண்டிய கிரியைகள் தவறாது செய்யப்பட வேண்டிய கடமையாக வலியுறுத்தப்பட்டுள்ளன. இது பிதிர்க் கடன் என்றும் 'பிதிர் யக்ஞம்' என்றும் சிறப்பித் துக் கூறப்படுகின்றது.

மரணச் கிரியையில் தீமை நீங்கி நன்மையுண்டாவதற்குரிய கிரியைகள் இடம் பெறுவதோடு சரீரசுத்தி, ஆன்மசுத்தி ஆகியவற்றை நோக்கமாகக் கொண்டும் கிரியைகள் நிகழ்வன. சரீரத்தைச் சுத்தி செய்வதற்கென அபிடேகமும் சிவாக்கினியாற் சுடுதலும் நிகழும். ஆன்மசுத்திக்காகச் செய்யப்படும் கிரியையே அந்தியேஷ்டி எனக் கூறப்படுகின்றது. 'அந்திய' என்பது இறுதியான என்ற பொருளிலும் 'இஷ்டி' என்பது யாகம் என்ற பொருளிலும் வரும். எனவே, இறந்தவர்க்காகச் செய்யும் 'இறுதி யாகம்' என அந்தியேஷ்டியைக் கொள்ளலாம். இதனைச் செய்வதால் சமய அனுஷ்டானங்களில் நேர்ந்த குறைகள் தீரும்.

பிதிரர் உறையுமிடம் 'பித்ருலோகம்' எனச் சமய நூல்கள் சுட்டுகின்றன. ஒருவன் இறந்தவுடனேயே 'பித்ருலோகம்' சென்றடைவதில்லை. பிறிதோர் பிறப்பும் உடனடியாக எடுத்துவிடுவதுமில்லை. இறந்து போனவரது சீவன் ஒரு வருடம் பிரயாணத்தின் பின்னர்தான் 'பித்ரு' ஸ்தானத்தை அடைகின்றது என்ற நம்பிக்கையும் நிலவுகின்றது. இந்நோக்கம் நிறைவேறும் வரை ஒரு வருடகாலத்தில் அந்த ஆன்மாவின் திருப்திக்காக மாதா மாதம் பல சடங்குகள் இடம்பெறுவன. இந்து சமய சாத்திரங்களின் படி ஒரு சீவன் வைதரணி என்ற நதியைக் கடந்துதான் யமலோகம் செல்லவேண்டும் எனக் கூறப்படுவது போல, கிரேக்க சமய வரலாற்றின்படியும் (Mythology) ஒரு குறிப்பிட்ட நதியினைக் கடந்தே மறு உலகம் செல்ல வேண்டுமென்ற நம்பிக்கை நிலவுகின்றது. இந்து, கிரேக்க சமய மரபுகளை ஒப்பீட்டடிப்படையில் ஆராயுமிடத்து இத்தகைய ஒற்றுமையான நம்பிக்கைகளை அவதானிக்க முடிகின்றது. இறப்பிற்குப் பின்னுள்ள நம்பிக்கைகள் பற்றி இந்துசமயத் திருநூல்களில் பல்வேறுபட்ட கருத்துக்கள் காணப்படுகின்றன. இவ்வரிசையில் தொன்மையான சமய இலக்கியமாகிய இருக்குவேதம் குறிப்பிடத்தக்கது. இவ்வேதத்தில் உள்ள பத்தாம் மண்டலத்தில் ஏறக்குறைய ஐந்து பாடல்கள் இறப்புப் பற்றியும் இறப்புக்குப் பின் உள்ள வாழ்வு பற்றியும் எடுத்துக் கூறுகின்றன, (இ. வே X; 14—18). இறப்புப்பற்றி ஒரு பாடல் தனியாகவே உள்ளது. (இ, வே. X: 14). இப்பாடல் இறப்போடு தொடர்புடைய பல நம்பிக்கைகளைக் கூறுகின்றது. இறந்த உடலை அக்கினியின் மூலம் தகனம் செய்யும் முறை சிறப்பாகக் கொள்ளப்பட்டதை அறிய முடிகின்றது.

இம்முறையே இறப்புக்குப் பின்னுள்ள நிலைபற்றிய தெய்வீக வரலாற்றுக்கும் அடிப்படையாக அமைகின்றது. இறந்த உடலை அக்கினியே பிதிரரும் தேவரும் உறையும் மறு உலகுக்கு எடுத்துச் செல்வதாக இப்பாடல் கூறும். தகனக்கிரியையின் போது இறந்த உடலுக்கு பறவை, மிருகங்கள், எறும்பு அல்லது பாம்பு ஆகிய பிராணிகளால் யாதேனும் ஊறு விளைவிக்கப்பட்டிருப்பின் அதனை நீக்குமுகமாக அக்கினியும் சோமனும் வழிபடப்படுவர். மறு உலகுக்குரிய பாதை மிகவும் நீண்டதென்றும் இப்பாதையால் இறந்தோரைச் சவிதா என்ற தெய்வம் அழைத்துச் செல்வதாகவும் பூசன் என்ற தெய்வம் பாதுகாப்பதாகவும் கூறப்படுகின்றது. தனது மூதாதையோராகிய பிதிரர் சென்ற வழியே படிப்படியாகச் சென்று இறந்தவரது ஆன்மா ஒளியுடன் கூடிய உலகுக்குச் செல்வதாகவும் அங்கு யமனுடன் விளங்கும் பிதிரர்களைச் சந்திக்கும் என்றும் இப்பாடல் கூறும்.

*இருக்கு வேதத்தின்படி யமனே இறப்பிற்குரிய தெய்வம். யமன்தான் முதன்முதலாக இறந்தோருக்குரிய பாதையை வகுத்தவனுவான். இறப்பின்போது வழங்கப்படும் அவிர்ப்பாகத்தை ஏற்றுக் களிப்புறும்படி யமன் கூவியழைக்கப்படுவன். யமனோடு வருணன் என்ற தெய்வமும் அவிர்ப்பாகத்தை ஏற்றுக் களிக்கும்படி அழைக்கப்படுவன். தமது முன்னோர் சென்ற பாதையால் முன்னேறிச் செல்லும் படியும் சுவர்க்கத்தில் வாழும் பிதிரரோடும் யமனோடும் சென்று இணையும் படியும் இறந்தவர்களைக் குறித்துக் கூறும் வாசகங்கள் இப்பாடல்களில் உள்ளன. இறந்தவனுக்கு யமன் இளைப்பாறுவதற்குரிய இடத்தினை அளித்துள்ளதால் இறந்தவனுக்கு எவ்வித தீங்கும் இழைக்காது விடும்படி அசுரர்கள் கேட்கப்படுவதும் குறிப்பிடற்குரியது. இறந்தவர் செல்லும் பாதையை யமனின் இரு நாய்கள் பாதுகாப்பதாக நம்பப்பட்டது.

இருக்கு வேதத்தில் பிதிரரைக் குறித்துப் பத்தாம் மண்டலத்தில் பாடல்கள் இடம்பெறுகின்றன. (இ.வே. X: 15, X: 54). இவர்கள் மூன்றும் உலகாகிய சுவர்க்கத்தில் வாழ்பவராகக் குறிக்கப்படுகின்றனர். இவர்களுக்குத் தொடக்கத்திற் சென்ற மூதாதையர் என்றும் தொன்மையான பாதையால் சென்றவர்கள் என்றும் பின்னர் இறந்தோருக்கு அவர்கள் தம்முடன் சேரும் வகையில் பாதை வகுத்தவர்கள் என்றும் பெயர் குறிப்பிடப்படு

கின்றது. பிதிரர் தமது உணவை அவிர்ப்பாகமாகப் பெறுவர். இந்த அவிர்ப்பாகத்தினால் வழிபடுவோரைப் பாதுகாப்பதாகவும் நம்பப்பட்டது. மனித நிலையில் அவர்களுக்கெதிராகச் செய்த எந்தப் பாவத்திற்காகவும் தமது வழித்தோன்றல்களைத் துன் புறுத்தாதிருக்கும்படி வேண்டப்படுவர். நல்ல வளத்தோடும் பிள்ளைப் பேற்றோடும் நீண்ட ஆயுளுடனும் வாழ்வதற்காக அவர்களது ஆசியைப்பெறும் வகையில் அவரவரது மக்களால் பிதிரர்கள் வழிபடப்படுவர். பிதிரர்களுக்குரிய வழிபாட்டில் மங்களகரமான திக்குகள் மாறியும் வலப்புறத்தால் அமையும் விடயங்கள் இடது புறமாகவும் அமையும். பிதிரர்களுக்குரிய திக்கு தெற்கு. எனவே இவர்கள் தென்புலத்தார் என்று குறிக்கப்படுவர். அவர்களுக்குரிய அவிர்ப்பாகக் கிரியை தெற்குப்புறம் நோக்கியே செய்யப்படும் என்பதை இருக்குவேதம் குறிப்பிடுகின்றது.

இருக்கு வேதத்தில் இடம் பெறும் யமன் என்ற தெய்வத்தோடு தொடர்புடைய பாடல்களும், இறந்தோர் பற்றிய குறிப்புக்களைக் கொண்டுள்ளன. ஏறக்குறைய மூன்று பாடல்கள் இருக்குவேதத்தில் யமனுக்கென உள்ளன. இறந்தோரை ஆட்சி செய்பவனாக யமன் சித்திரிக்கப்படுவன். எனவே, இவனுக்கு "யமராஜன்" என்ற பெயர் சிறப்பாக அமைகின்றது. யமனுடைய பாதையே மரணம். இவன் பிதிரர்களுக்குத் தலைவன். யமனோடு சேருவதற்கு இறந்தவர் நல்வினைப் பயன்களோடும் வழிபாட்டினால் ஈட்டிய பலன்களோடும் செல்லவேண்டுமென வற்புறுத்தப்படுகின்றது. இந்த நல்வினைப் பயன்களை இஷ்டாபூர்த்தம் என இருக்கு வேதம் குறிப்பிடுகின்றது. ஒருவனது நல்வினைத் தேட்டமே இறப்பின் பின் மறு உலகில் உயர்ந்த பேற்றினை நல்கும் என்ற ஆழ்ந்த நம்பிக்கைக்கு இருக்குவேதத்தில் இறப்புப் பற்றிய பாடலில் இடம்பெறும் இக்குறிப்புச் சிறந்த சான்றாக அமைகின்றது. இறந்த பின் தாம் பெற்ற நல்வினை தீவினைக்கேற்பப் பிறிதோர் இடத்தில் இன்பத்துடனோ அன்றி, துன்பத்துடனோ தொடர்ந்து இருக்கும் நிலை ஆன்மாவின் அழிவற்ற தன்மை பற்றிய நம்பிக்கையையே சுட்டி நிற்கின்றது. உடலைவிட்டு நீங்கிய நிலையிலேயே மனிதன் மறுமையில் விடுதலை அடையக் கூடியதாயினும் இறந்த உடல் ஒருவனது எதிர்கால வாழ்வைப் பொறுத்த மட்டில் முக்கியத்துவம் பெறுவதாக வேதகாலத் தெய்வ இயலிலிருந்து அறிய முடிகின்றது. இறப்பின் பின் உள்ள நிலைபற்றி

இருக்கு வேதம் கூறும் சிந்தனைகளின் வளர்ச்சியாகவே கடோப நிடதம் அமைகின்றது. உபநிடதங்களுள் இவ்வுபநிடதம் மிகவும் முக்கியத்துவமுடையது. இவ்வுபநிடதத்தில் இடம்பெறும் நசிகே தனுடைய கதையிலிருந்து இறப்பின் பின் ஆன்மாவின் நிலை பற்றிய கருத்துக்கள் தெளிவு பெறுகின்றன. நசிகேதன் யம உலகுக்குச் சென்று யமனிடம் ஆன்ம விசாரணை செய்கின்றான். யமன் அவனுக்கு இதுபற்றி உபதேசிக்கையில், சுவர்க்கத்திற்கோ மோட்சத்திற்கோ செல்வதற்குப் போதுமான நல்வினைகள் இல் லாதவன் இறப்பின் பிடிக்குள் விழுந்து சம்சாரச் சுழற்சியில் அவதியுறுகின்றான் என்றும் மீண்டும் மீண்டும் உடலோடு மறு பிறவியடைகின்றான் என்றும் எவனொருவன் தன்னைக் கட்டுப் படுத்துகின்றானோ அவனே உயர்நிலையை அடைகின்றான் என்றும் கூறுகின்றான். உபநிடதங்கள் சத்தியத்தை முறையாக உணர்ந் தவனே மோட்சத்தையும் முடிவில்லா அமைதியையும் மாற்ற மில்லா இன்பத்தையும் அடைவான் எனக் கூறுகின்றன.

உடல் உயிரோடு இருக்கும்போதே ஆற்றவேண்டிய நற்கரு மங்களைப் பற்றி நாயன்மார்களும் வற்புறுத்தியுள்ளனர். மனித உடலின் நிலையாமையைப் பற்றி சுந்தரர், 'தோற்ற முண்டேல் மரணமுண்டு' என்றும், 'வாழ்வாவது மாயமிது மண்ணாவது திண் ணம்' என்றும் கூறிப்பிடுகின்றார், இவ்வுடல் உயிருடன் இருக்கும் போதே செய்தற்குரிய நல்வினைகளைச் செய்தல் வேண்டும் என் பதை.

பறியேசுமந் துழல்வீர் பறிநரி கீறுவ தறியீர்
குறிகூவிய கூற்றங் கொளும் நாளால் அறம் உளவே

என்ற பாடலால் வற்புறுத்துமிடத்து சுந்தரர் இலட்சியத்துடன் கூவிக்கொண்டு வரும் யமன் உயிரைக் கொண்டு போகும் நாளில் அறம் செய்ய் முடியுமா? என வினவுகின்றார். தாட்கள் விரைவாகச் செல்ல யமதூதர்களும் வருவதற்கு முன்னமே விரைந்து சென்று சிவபெருமானுக்கு அடிமைப்பட்டுப் பிழையுங் கள் என அறிவுறுத்துகையில் '...நாளோடிய நமனார் தமர் நணு காமுனம் நணுகி ஆளாயுய்மின்..' எனக் கூறுகின்றார்.

மீளாத் துயருக்கு நிலைக்களனாகவுள்ள பிறவியை வேண்டேன் என்று கூறுமிடத்து,

மணமென மகிழ்வர் முன்னே மக்கள் தாய்தந்தை சுற்றம்
பிணமெனச் சுடுவர் பேர்த்தே பிறவியை வேண்டேன் நாயேன்·

எனக் குறிப்பிடுகின்றார். சுந்தரர் பிறவா நிலைச் சிறப்பினையும் பிறப்புண்டேல் அப்பிறப்பில் உடம்பாற் செய்ய வேண்டிய நல் வினைகளின் முக்கியத்துவத்தினையும் வலியுறுத்துவது இங்கு குறிப்பிடத்தக்கது.

மனிதனது உயிர் பிரிந்தபின் அவ்வுடல், தகிக்கப்படும் இடமே சுடலை. இறந்தோரது உடல் சுடலைக்குக் கொண்டு செல்லப்பட்டவுடன் அங்கு நிகழ்வது சுடலைக் கிரியையாகும். காரைக்காலம்மையார் அருளிச் செய்த பிரபந்தங்களுள் திருவாலங்காட்டு மூத்த திருப்பதிகம் சுடலையைப் பற்றியும் அதில் இறைவன் நின்றாடும் பாங்குபற்றியும் சித்திரிப்பதிலிருந்து சைவ மரபில் அதற்கும் ஒரு தெய்வீக முக்கியத்துவம் வழங்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. காரைக்காலம்மையார் திருக்கயிலையினின்றும் பேய் வடிவுடன் இறைவன் ஆணைப்படி திருவாலங்காட்டினை அடைந்தபோது அங்கு தாம் கண்ட காட்சியின் நிலையை உள்ளவாறே பாடியருளிய இத்திருப்பதிகத்தில்,

புந்தி கலங்கி மதிமயங்கி
இறந்தவ ரைப்புறங் காட்டி லிட்டுச்
சந்தியில் வைத்துக் கடமை செய்து
தக்கவர் இட்டசெந் தீவி ளக்கா
முந்தி அமரர் முழவின் ஓசை
திசைகது வச்சிலம்(பு) ஆர்க்க ஆர்க்க
அந்தியில் மாநடம் ஆடும் எங்கள்
அப்பன் இடம்திரு வாலங் காடே.

எனக் குறிப்பிடுமிடத்து ஈமக்கிரியைகளுக்கு நிலைக்களனாகவுள்ள சுடலையை நினைவு படுத்துகின்றார். காடு, சுடலை, ஈமமிடு சுடுகாடு, புறங்காடு போன்ற பெயர்கள் அம்மையாரின் மூத்த திருப்பதிகத்தின் இடம் பெறுவன.

சுடலைக் காட்சியினையடுத்துத் திருவிரட்டை மணிமாலையில் 'இறந்தபின் சுடலையைச் சேருமுன் சிவபெருமானின் திறத்தினை ஆழ்ந்த கருத்துடன் இன்புடன் கேட்பாயாக' என அறிவுறுத்துமிடத்து,

உத்தமராய் வாழ்வார் உலந்தக்கால் உற்றார்கள்
செத்தமரம் அடுக்கித் தீயாமுன் – உத்தமனாய்
நீளாழி நஞ்சுண்ட நெய்யாடி தன்திறமே
கேளாழி நெஞ்சே கிளர்ந்து

எனக் கூறுவர்.

வேண்டுதல் வேண்டாமை இலானடி சேர்ந்தார்க்கு
யாண்டும் இடும்பை இல.

எனக் குறள் கூறும் கருத்துக்களும் இங்கு ஒப்புநோக்கற்பாலன. பிறவிப் பெருங்கடல் நீங்குவதற்கு இறைவன் திருவருளை உடல் சுடலையைச் சென்றடையும் முன்னரே வலிந்து பெற்றுய்தல் வேண்டும் என்ற கருத்தினைச் சமய நூல்கள் வற்புறுத்துகின்றன. அவற்றுள் காரைக்காலம்மையாரின் பிரபந்தங்கள் குறிப்பிடத்தக்க முக்கியத்துவத்தினைப் பெறுகின்றன.

பிரஸ்தானத்திரயத்துள் ஒன்றாகிய கீதையும் இறப்புப் பற்றிய சிந்தனைகளைத் தெளிவுபடுத்துவதில் முக்கியத்துவம் பெறுகின்றது. கீதையின் இரண்டாம் அத்தியாயத்தில் கிருஷ்ண பரமாத்மா உபதேசிக்கும் கருத்துக்களும் இறப்பினையும் அதற்குப் பின்னுள்ள நிலையினையும் தெளிவுபடுத்துவன. மரணம் என்பது உயிரைப்பற்றியதல்ல. உடலுக்குத்தான் மரணம் ஏற்படுகின்றது. உயிர் எனப்படும் ஆன்மா அழிவில்லாதது. உடலுக்கு அழிவு திண்ணமாக ஏற்படுகின்றது. இளமை, முதுமை என்ற நிலைகளைப்போல மரணம் என்பதும் ஒருநிலையேயாகும். இதனை எண்ணிப் பார்க்கும் அறிவாளி சாக்காட்டினைக் கண்டு வருத்தப்படமாட்டான். இவ்வாறு இறப்பு, இறவாமை பற்றிப் பகவான் உபதேசிக்குமிடத்து உடலுக்கு ஏற்படும் மரணம் ஆன்மாவின் முன்னேற்றத்தில் ஒரு நிலையாகும் என்பது தெளிவாகின்றது.

மரண பயத்தை நீக்கும் வகையிலும் கீதையில் உபதேசிக்கப்படுகின்றமை கவனித்தற்குரியது. பயத்தை நீக்குவதே தத்துவ அறிவின் முதல் நோக்கம். 'கர்மயோகத்தினை ஓரளவு கடைப்பிடித்தாலும் சம்சாரச் சூழல் என்னும் பேரச்சத்திலிருந்து உன்னைக் காப்பாற்றிவிடும்' என்ற உபதேசமும் குறிப்பிடத்தக்கது. 'பயமற்ற பெருநிலையே மோட்சம்' எனப் பிருஹதாரண்யக உபநிடதம் கூறும். ''நாமார்க்கும் குடியல்லோம் நமனையஞ்சோம் நரகத்தி லிடர்ப்படோம்'' என நாவுக்கரசர் கூறுவதும் பயநீக்கம் கருதியேயாகும்.

பிறப்பினின்றும் விடுதலை பெறக் கீதை கூறும் பிறிதோர் வழியும் இங்கு குறிப்பிடற் பாலது. அது கர்மயோகத்தினைப் பின்பற்றி ஒருவன் கர்மசந்நியாசியாக வாழவேண்டு மென்பதை வற்புறுத்துகின்றது. கருமத்தின் பயனாகவே புண்ணியமும் பாவமும் தொடர்கின்றன. இவற்றின் காரணமாகவே மனிதன் பிறப்பு, இறப்பு என்னும் சம்சார பந்தத்தில் சிக்கி அல்லற்படுகின்றான் இத்துயரிலிருந்து மீள்வதற்காகவே கருமயோகத்தின் சிறப்பு வற்புறுத்தப்படுகின்றது. சாதாரண கருமத்திற்குப் புண்ணிய பாவமென்னும் தளைகள் உண்டு. பலனில் ஆசை வைக்காமற் செய்யப்படும் கருமத்திற்குத் தளைகள் கிடையா. பயன் கருதாமலே கருமத்தைச் செய்யும் சாதகனுக்கு எவ்வித தளைகளும் விலகிப் போவதால் சம்சாரத்தில் துன்புறும் அவலநிலை ஏற்படுவதில்லை. இறுதியில் அவன் இறைவனடி சேர்வான். கருமப்பல தியாகத்திற்கு ஒருவன் பற்றற்ற உள்ளம் கொண்டவனாகவும் இருத்தல் அவசியம். இன்பத்திலும் துன்பத்திலும் மாறாத தன்மையுடையவனே கருமயோகி எனக் கீதை காட்டுகிறது இவனே ஆசையை அகற்றியவன் எனவும் அது கூறும். இன்ப துன்பங்களை ஒப்ப நோக்குதல் இருவினை ஒப்பாகும். இந்நிலையைப் பெரியபுராணம்,

> கேடும் ஆக்கமும் கெட்ட திருவினர்
> ஓடும் செம்பொனும் ஒக்கவே நோக்குவார்

எனச் சிறப்பிக்கின்றது.

மனநிலை பண்படைவதற்கு கருமயோகம் துணைநிற்கின்றது. "கடமையைச் செய்; பலனை எதிர்பாராதே" என்ற கீதை உபதேசத்தில் உயர்ந்த தத்துவப் பொருள் அடங்கியுள்ளமை உய்த்து உணரற்பாலதாகும். இத்தகைய உபதேசங்கள் ஆஸ்திகரின் உள்ளத்தில் எழும் மரணபயத்தினை நீக்குவதற்கு அருமருந்தெனத் துணைபுரிந்து வந்துள்ளமை கவனித்தற்குரியது.

சமய சாஸ்திரங்களில் இறந்தவர்களது உடலுக்குச் செய்யும் காரியம் பிரேதசம்ஸ்காரம் எனச் சுட்டப்படுகின்றது. சமஸ்காரம் என்ற சொல்லும் இங்கு சிந்தனைக்குரியது. சம்ஸ்காரம் என்றால் 'நன்றாக ஆக்குவது' என்பது பொருளாகும். இறந்த பின் பிரேதத்திற்குச் செய்யும் சேவை மிக உயர்ந்த கைங்கரியமாகக் கூறப்படுகின்றது. இறந்த உடலை அடக்கமோ அன்றித் தக

னமோ செய்வது மிகவும் அவசியமான கடமையென வற்புறுத்தப்படுகின்றது. அதற்கேற்ற ஒழுங்குகளைச் செய்வதும் இன்றியமையாதது. சீவாத்மாவுக்குப் பதினாறு கலைகள் உண்டென்றும் அவற்றுள் உடம்பும் ஒரு கலை என்றும் எனவே உயிர் போன பின்னும் ஒரு கலையாக உள்ள அந்த உடலை ஈஸ்வர அர்ப்பணமாக்கவே பிரேத சம்ஸ்காரம் தேவைப்படுகிறது என்ற கருத்தும் இங்கு கவனித்தற்குரியது. இதிலிருந்து உடலின் முக்கியத்துவம் உணரப்படுகின்றது. 'காயமே கோயிலாக' என அப்பரின் வாக்கும் உடலின் பெருமையைக் கூறும். அறம், தர்மம் ஆகிய நல்வினைத் தேட்டத்திற்குச் சாதனமாக அமைவது உடலேயாகும்,

திருமூலரும் திருமந்திரத்தில் யாக்கை நிலையாமை பற்றிக் கூறுகின்றார். யோக நெருப்பினால் தவத்தீயினால் ஒளிவிடும் உடம்பு திடீரென்று அழியாது; நம் தெய்வ முயற்சிக்கு நெடிது உதவும் என வற்புறுத்தி, விரத ஞானங்களால் உடம்பொடு கூடிய இல்வாழ்க்கையை ஒளிபெறச் செய்யுங்கள் என உணர்த்துமிடத்து.

பண்டம் பொய்க் கூரை பழகி விழுதலால்
உண்டவப் பெண்டிரு மக்களும் பின்செலார்
கொண்ட விரதமு ஞானமு மல்லது
மண்டி யவருடன் வழிநட வாதே எனக் கூறுகின்றார்.

நல்வினைத் தேட்டத்திற்கு உடல் காரணமாக அமையும் சிறப்புப் பற்றியே இறந்தபின் உடலுக்குரிய சம்ஸ்காரங்கள் முறையாகச் செய்யப்பட வேண்டுமென்பதை இந்து சமய நூல்கள் வற்புறுத்துகின்றன.

உலகின் ஏனைய தேசங்களில் வாழும் பல்வேறு இன மக்களிடையே இறப்புக்குப் பின் இடம்பெறும் சமயச் சடங்குகள் முக்கியத்துவம் பெறுகின்றன. பிரேத சம்ஸ்காரம் பெரும் சமயச் சடங்காகவே அமைந்துவிடுகின்றது. ஒருவன் நன்மைகளைத் தன் சரீரத்தால் செய்த காரணத்தினாலேயே உயிர் பிரிந்த பின்னும் அந்தச் சரீரத்திற்கு இறுதி மரியாதை செலுத்தும் மரபு இருந்து வருகின்றது. சைவசித்தாந்தத்தின்படி எமது தீவினைப் பயன்களைப் போக்கிக் கொள்வதற்கு என இறைவன் தநு, கரண, புவன போகங்களைத் தந்தருளியுள்ளார் என்ற நம்பிக்கையுள்ளது. எனவே, ஓர் உடல் இறைவன் தந்த ஒரு பிரசாதமாகவே அமைகின்றது. இக்காரணம் பற்றியே மானிடப்பிறவி உயர்ந்ததாகச்

சிறப்பிக்கப்படுகின்றது. அத்தகைய உடலைக் கரணங்கள் ஒய்ந்த பின்னும் அதற்குரிய மரியாதை வழங்கி இறைவனிடம் இறுதியாக வேள்விப் பொருளாக்கும் வகையில் அக்கினியில் தகனம் செய்யப்படுகின்றது. இதைச் செய்யவேண்டிய பொறுப்பு இறந்தவரது நெருங்கிய உறவினர்களைச் சார்ந்ததாக அமைகின்றமை குறிப்பிடத்தக்கது.

புராதனத் தமிழ் மக்களிடையே நிலவிய நம்பிக்கைகளுள் இறந்தவர்களுக்குச் செய்யும் இறுதிச் சடங்குகள் வீரவணக்கம் தோன்ற வழி வகுத்தது என்பது அறிஞர் கருத்தாகும். தென்னகத்தில் காணப்படும் பெருங்கல் வளைவுப் புதைகுழிகள் (Megalithic Monuments) மூலம் இறந்தவரை அடக்கம் செய்வதில் அச்சமுதாயத்தினர் எத்துணை சிரத்தை காட்டினர் என்பதை அறிய முடிகின்றது. பெருங் கற்களைக் கொண்டு வட்டமாக வளைக்கப்பட்ட இடங்களே அக்கால 'மயானங்கள்' எனலாம். இவற்றை நோக்கும்போது மிகப் பழைய காலத்திலிருந்தே இறந்தவரை அடக்கம் செய்வதிலும் அவர்களது தேவைக்காகப் பொருள்களைப் படைப்பதிலும் பண்டைக்கால மக்கள் காட்டிய ஈடுபாட்டினை அறிய முடிகின்றது. புராதன மனிதன் நடைமுறை அநுபவத்தின் அடிப்படையில் அவன் உடம்பு வேறு உயிர் வேறு எனப் பிரித்தறியும் நிலையில் இல்லை. உடலையும் உயிராக மதித்த நிலையிலேயே தாழி, கல்லறை முதலியவற்றுள், ஆயுதங்கள் உணவுப் பொருட்கள், கலன்கள் ஆகியவற்றை வைத்திருக்க வேண்டுமென அறிஞர் கருதுவர். இவ்வகையில் புராதன மூதாதையர் வழிபாடு சிறப்புப்பெறுகின்றது. பழந்தமிழர் வழிபாட்டு முறைகளில் ஒன்றாகிய வீரவணக்கம் பண்டைத் தமிழரின் இழவு வினைகள், பிரேத அடக்க முறை முதலியவற்றுடன் தொடர்புடையதாக அமைந்துள்ளதாக அறிஞர் குறிப்பிடுகின்றனர்.

இத்தகைய நம்பிக்கையின் அடிப்படையிலேயே இந்துசமய மரபிலும் தகனத்தின்பின் அஸ்தியைச் சேர்த்துத் தீர்த்தம் சிறப்புப் பெற்ற இடங்களில் கரைத்துத் தெய்விக நிலையை அடையச் செய்யப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. அதனையடுத்துச் செய்யப்படும் பாஷாண பூசை உள்ளிட்ட ஏனைய கிரியைகளாலும் ஆன்மாவானது சிவபதவியை அடையத்தக்கதாகின்றது இத்தகைய கிரியைகள் ஆன்மாவுக்குத் திருப்தியையும் சாந்தியையும் அளிப்பன என்ற நம்பிக்கையும் நிலவுகின்றது. பிரபூதபலி பிண்ட வடி

வில் இறந்தாரை வழிபடுதல், பிதிர் வடிவமாக ஆக்கும் சபிண்டீகரணம், தானம் போன்றவைகளும் ஆன்மாவுக்குரிய பலனை நல்குவன. இறந்தவர்க்கென நிகழும் கிரியைகள் ஒவ்வொரு மாதத்திலும் நாற்பத்தைந்தாம் நாளிலும் ஆறும் மாதத்திலும் வருடக் கடைசியிலும் இடம்பெறத் தக்கன. இதனைத் தொடர்ந்து வருடந் தோறும் இடம்பெறுவது சிராத்தமாகும். அவரவர் இறந்த நாளாகிய சிராத்தத்தை விட அமாவாசை, பூரணை ஆகிய நாட்களிலும் பிதிரர்களுக்குரிய வழிபாடு நிகழும்.

இவ்வாறாக இந்து சமய மரபில் இறந்தவர்களுக்கென நிகழும் கிரியைகள் அவரவரது ஆன்மாவைப் புனிதப்படுத்திச் சாந்தியடையவும் திருப்திகொள்ளவும் துணைபுரிவன. கிரியை செய்வோர் சிரத்தையோடும் அன்போடும் செய்யவேண்டிய சிறப்புக் கருதியே சிராத்தம் என்ற பெயரும் பொருத்தமாக அமைந்துள்ளது. சிராத்தம் செய்யும்போது எள்ளும் தண்ணீரும் இறைத்தல் இறந்த பிதிர்கள் நற்கதியையும் திருப்தியையும் அடைவதற்காகச் செய்யப்படுவதாகும். இந்நாளில் ஏழைகள், அநாதைகள் ஆகியோருக்கு உணவளித்தல், சிராத்த முடிவில் குருவின் ஆசிபெறுதல் ஆகியவை முக்கியமாகும். விவாகம் போன்ற மங்கள காரியம் நடைபெறும்போது அக்குடும்பத்துக்கு முன்னோரது ஆசிவேண்டிப் பிதிரர் வழிபாடும் தானம் வழங்கும் மரபும் உள்ளது. இவ்வகையால் செய்யப்படும் கிரியைகள் பிதிரர் சாபத்தை நீக்கி நல்வாழ்வு பெற வழிவகுக்கும் என்ற நம்பிக்கையும் காணப்படுகிறது. இந்து சமய மரபில் அபரக்கிரியைகள் ஒருவனது ஆன்ம ஈடேற்றத்திற்குத் துணைபுரியும் காரணத்தால் காலங்காலமாகச் சிரத்தையோடு மேற்கொள்ளப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கதாகும். ஒவ்வொரு தலைமுறையையும் இணைக்கும் சிறந்த சாதனமாகவும் இக்கிரியைகள் விளங்கி வருகின்றன.

**உசாவியவை**

இருக்கு வேதம், தாமோதரபட்டர், ஸ்ரீபாத சர்மா (பதி), 1957.

காரைக்காலம்மையார் பிரபந்தங்கள், *(அம்மையார் திருமுறை)* திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடம், ஸ்ரீ வைகுண்டம். 1957.

சுந்தரமூர்த்திசுவாமிகள் தேவாரம், சைவசித்தாந்த மகாசமாஜ வெளியீடு, சென்னை. 1935.

திருக்குறள், வரதராசன், மு. (உரை). தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், திருநெல்வேலி. 1976.

திருமந்திரம், உலகநாத முதலியார், வி. (பதி), சென்னை. 1934.

திருநாவுக்கரசர் தேவாரம், திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடம், ஸ்ரீ வைகுண்டம். 1957.

அருணாசலம், ப., திருமந்திரக் கோட்பாடு, பாரி புத்தகப்பண்ணை, சென்னை. 1982.

கைலாசபதி. க., பண்டைத் தமிழர் வாழ்வும் வழிபாடும், பாரி நிலையம், சென்னை 1966.

சிவபாதசுந்தரம் சு., சைவக்கிரியை விளக்கம், (3-ஆம் பதி.), சைவபரிபாலன சபை, யாழ்ப்பாணம். 1928.

சுப்பிரமணியம், ஏ. வி. ஆன்மீக விளக்கு, கலைஞன் பதிப்பகம், சென்னை. 1980.

தங்கம்மா அப்பாக்குட்டி, சைவக் கிரியைகளும் விரதங்களும், மலேசிய இந்து சங்க மாதர் வெளியீடு, தெல்லிப்பழை, 1977.

மகாகவி பாரதியார், பகவத்கீதை, (மொ. பெ.), 2-ஆம் பதி, பூம்புகார் பிரசுரம், சென்னை. 1977.

ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி சங்கராச்சாரிய சுவாமிகள், தெய்வத்தின் குரல் (3-ஆம் பகுதி), கணபதி, ரா, (தொகுப்பு), சென்னை. 1982.

Mecdonall, A. A., **A Vedic Reader** (6th Ed.), Oxford University Press, Madras. 1965.

Radhakrishnan S., **The Bhagavadgita** (Trans) (5th Ed.), Blackie & Sons, (India) Ltd., New Delhi. 1976.

# பிழை திருத்தம்

| பக்கம் | பந்தி | வரி | பிழை | திருத்தம் |
|---|---|---|---|---|
| 2 | 1 | 16 | பாட்டின் | பண்பாட்டின் |
| 3 | 2 | 17 | மாற்றங்களுமே | மாற்றங்களுடே |
| 5 | 1 | 2 | பதர்வம் | பர்வதம் |
| 7 | 1 | 15 | வாழ்க்சை | வாழ்க்கை |
| 8 | 1 | 10 | லிக்கிரகவியல் | விக்கிரகவியல் |
| | | 11 | வரலாற்றில் | வரலாற்றியல் |
| 11 | 2 | 2 | இந்திர | இந்திரனே |
| 13 | 17 | — | 1.174 | 1:164 |
| 20 | 2 | 11 | பொடுள் | பொருள் |
| 21 | 4 | 4,5 | உத்தாகார, ஞகமம் | உத்தரகார- ஞகமம் |
| 22 | 5 | 1 | சித்தாத | சித்தாந்த |
| 23 | 4 | 3 | சாக்திர | சாத்திர |
| 24 | 3 | 1 | வேதத்திள் | வேதத்தின் |
| 25 | 2 | 1 | பாடல்14 | பாடல் |
| 36 | 2 | 1 | நூல்களிது | நூல்களினது |
| 42 | 1 | 3 | இராமபீா | இராமபிர |
| 45 | 2 | 8 | கெய்வதஞல் | செய்வதஞல் |
| 47 | 5 | 1 | அடிக்குறிப்புகள் | உசாவியவை |
| 76 | 3 | 2 | 10 ஸ்ரீவைஷ்ணவ | 108 ஸ்ரீவைஷ்ணவ |
| 87 | தலைப்பு | | மரவு | மரபு |
| 89 | 2 | 15 | கட்டப் | கட்டடப் |
| 92 | 3 | 2 | சிவசாரியன் | சிவாசாரியன் |
| 96 | 1 | 4 | இதற்குத் | இதற்கு |
| | | 9 | சமய | வேத |
| 99 | 2 | 2 | பரப்பதும் | பரப்பப் |
| 101 | 1 | 2 | திருக்களிற்றுப் பாடியார் | திருக்களிற்றுப் படியார் |
| 105 | 5 | 2 | கக்கிரனும் | சுக்கிரனும் |
| 108 | 2 | 3 | குகு | குரு |
| 109 | 3 | 10 | த்திய | சத்திய |
| 112 | அடிக்குறிப்பு | 4 | பாடியார் | படியார் |
| 113 | அடிக்குறிப்பு | 27 | சுவேதாஸ்வர | சுவேதாஸ்வதர |
| 137 | 2 | 5 | கூறிப்பிடு கின்ருர் | குறிப்பிடுகின்ருர் |